
672
காவேரி
விரோதி - கார்த்திகை NOVEM. 1949.
4/- அணா
G. Kunju

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்

விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும் சரி, போர்ன்-வீடா அதிக நன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனால் அதிகசக்தியும் பெறுகின்றனர். குழந்தைகள் அதன் சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டியளவு கலந்து பருகவும்.

Cadbury
THE TREE OF HEALTH

-ஆரோக்கிய விருக்ஷம்-

CFY-1 TAM

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய் தபால் பெட்டி நெ 251 கல்கத்தா தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - DEC 1949
MADRAS



I A C
TRADE MARK

தி டாடா அயர்ன் &
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:
23 B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினுலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம், சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

198040

ரூ. 300 இனும்



இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (C. K.)

HOSHIARPUR.



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A. Lingha Chetty Street, G. T., MADRAS.

TAKEN FOR GRANTED..

பதார்த்தங்களின் சுவை குன்றுமல் சிறந்த தயாரிப்புக்கு ஈடற்ற சாதனம். பெண்டிர் யாவரும் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

வீட்டுத்தேவைக்காக பிரத்யேக லீவர் மூடியுடன் காற்றுப் புகாத 2, 5 பவுண்ட் டின்களில் எல்லா முக்ய வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்.

காமதேனு

சிறந்த சமையல் சாதனம்.

தயாரிப்பவர் :—

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை, சேலம்.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

திருச்சிராப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜண்டுகள் :-

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்,

120, அரமனைக்காரத் தெரு,

மதராஸ்.

கிளை ஆபீஸ் :—

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்,

48. காமாக்ஷி ஜோஸ்யர் தெரு, கும்பகோணம்.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல், போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0
தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI
Ayurvedha Sasthri (K. M.)
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25

Stockists:
Messrs. APPAH & CO., 286, Netaji Subhas Chandra Bose Road, Madras.

பொருளடக்கம்

விரோதி மலர் 9 | கார்த்திகை இதழ் 4

பண்டித நேருவின் புதிய பொறுப்பு 7

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 9
ராமய்யா

செவிலி 12
விசுவம்

இதயத் துடிப்பு 16
என். எஸ். சுப்பராயன்

நில மீன் 25
ராமன்

புத்தக விமர்சனம் 30

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 34
கே. சுந்தரம்மாள்

எனது ஆக்ஸ்போர்ட் பிரயாணமும் ஸ்டிராட்போர்ட் பிரயாணமும் 46
லீலா கோபாலன்

கல்யாணி 50
ஆர். எஸ்.

பெண்களுக்குப் பிரத்தியேகமானது 56
ஷிபாலி சௌத்ரி—சாரி

ஹரித்வார் யாத்திரை 59
சாரி

சாக்கடைக்கு வந்த யோகம் 65
கா. இ. நாகராசன்

பட்டண் பெருமை (தொடர் கதை) 69
கே. எம். முன்ஷி

விதியின் விளையாட்டு 89
கி. ஸந்தானம்.

அவன் அடைந்த சன்மானம் 97
நஜ்மா

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 70,00,000

★

கிளைகள்: { பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, நாகபுரி.

★

பிரதம ஏஜண்டுகள்:

ஏ & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

காவேரி

விரோதி மலர் 9	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	கார்த்திகை இதழ் 4

பண்டித நேருவின் புதிய பொறுப்பு

"தோன்றில் புகழோடு தோன்றுக" என்று கவி கூறினாரல்லவா? அமெரிக்க மக்கள் அதைத் திருத்தி, தோன்றிடில் நேருபோலத் தோன்றுக என்றார்களாம். அமெரிக்க மக்கள் தங்கள் உள்ளங்களை அவர்பால் பறிகொடுத்துவிட்டனர் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இதில் நமக்கு வியப்பு ஒன்றும் இல்லை. நேருவைக் கண்டு அவர் பேச்சைக் கேட்டவர்கள் அவர்பால் ஓர் அலாதிக் கவர்ச்சி கண்டு இழுக்கப்படாமலிருக்க முடியாது.



இன்று நேருவின் அறுபத்தொன்றாவது பிறந்த தினம். பம்பாயில் வந்து இறங்குகிறார். அமெரிக்க மக்கள் ஒலித்த கோஷங்கள் இன்னும் அவர் காதில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். அச் செவிக்கு இந்திய மக்கள் செய்யும் பேராரவம் எத்தகைய வித்தியாசத்தையோ இன்பத்தையோ அளிக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை.

அமெரிக்க மக்கள் பண்டித நேருவைப் புகழ்ந்தது தங்களைப் புகழ்ந்ததே என்று ஒவ்வொரு இந்தியனும் எண்ணிப் பெருமிதமடைகிறான். மஹாத்மாவிற்குப் பிறகு சுதந்திர இந்தியாவின் கௌரவத்தைத் தாங்கி வெளிநாடுகளில் செல்ல யாருக்கேனும் அருகதை உண்டா என்றால் மக்கள் நேருவைத்தான் குறிப்பிடுவார்கள். பாரத தேசத்தின் தந்தை மஹாத்மா காந்தி. அதன் தவப் புதல்வன் ஜவாஹர்.

ஜவாஹர் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனின் விருந்தினராகச் சென்றார். அவர் அவர் அழைப்பிற்கிணங்கிச் சென்றார். ஏன்? அரசியல் சம்பந்தமற்ற சுற்றுப் பிரயாணம்தான் இது என்று சொல்லப்பட்டதென்னவோ உண்மை. ஸ்நேக முறையில் செய்யப்பட்ட பிரயாணம் என்றும் கூறப்பட்டதல்லவா? ஆனால் அமெரிக்கப் பத்திரிகைகள் இதை அப்படி நினைக்கவில்லை.

இதுவரை அமெரிக்கர்களுக்கு வெளிநாட்டு விஷயங்களில் ருஷ்யா தான் முதல் ஸ்தானம் வகித்தது. பிறகு ஐரோப்பா; கடைசியில் ஆசியா. இன்று நிலைமை மாறிவிட்டது. கடைசியாகக் கருதிவந்த ஆசியா இன்று முக்கியத்வம் அடைந்துவிட்டது. ருஷ்யாவில் வெடித்த அணுகுண்டு, ஜர்மானியில் ஏற்பட்டுள்ள பிளவு, சைனாவில் கம்யூனிஸ்டுகள் அடைந்த வெற்றி, மலேயா, பர்மா, இந்தோசைனா, இந்தோனேஷ்யா இங்கெல்லாம் நிகழ்ந்து வரும் மாறுதல்கள், இந்தியா அடைந்து வரும் முக்கியத்வம் இவை எல்லாம் அமெரிக்கர்களைக் கலக்கி விட்டன. ஆசியா யார் பக்கம் உள்ளதோ அவர்களுக்குத் தான் வரும்

காலத்தில் வெற்றி என்று கண்டு கொண்டது அமெரிக்கா. ருஷ்யா இதை ஒரு வகையில் உணர்ந்து காரியங்கள் செய்து வருகின்றது என்பதும் தெளிவாகவே அமெரிக்கர்களுக்குக் கிலி பிடித்து விட்டது. ஒரு காலத்தில் பிரிட்டிஷ் வலையில் சிக்கி இந்தியாவைப் பொருட்படுத்தாது இருந்த அமெரிக்கா இன்று ஆசியாவிலேயே பலம் பொருந்தியதாக உள்ள இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள ஆசைப்படுவது இயல்பு. எனவே தான் நேருவுக்கு அழைப்பு, வரவேற்பு எல்லாம். அமெரிக்க மக்கள் நேருவின் பிரசங்கங்களைக் கேட்டு இவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள் என்று ஜனாதிபதி ட்ருமனே எதிர்பார்த்திருக்க மாட்டார் என்பது திண்ணம்.

நேருவின் அமெரிக்க சுற்றுப்பிரயாணம் உலக சமாதானத்திற்கு அடிகோலும் என்று எதிர்பார்க்க இடமுண்டு. வெறும் உறவாடச் செய்யப்பட்ட பிரயாணம் என்ற பிரகடனத்தை அரசியல் ஞானமுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நேருவும், இந்தியா உலக சமாதானத்தில் கண்ணும் கருத்துமாக உள்ளது என்றும், அதற்காக அது எதையும் செய்யத் தயார் என்பதையும் விளக்கியிருக்கிறார்.

இது வரை இந்தியத் தலைவராக விளங்கிய நேரு, ஆசிய நாடுகளின் மாணிக்கமாக விளங்கிய நேரு, உலக சமாதான கர்த்தாவாகவும் இனி உழைக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. ஏற்கனவே உள் நாட்டுப் பிரச்னைகள் அவர் மூளைக்கு ஓய்வே கொடுப்பதில்லை. புதிய பொறுப்பு வேறு ஏற்பட்டு விட்டது.

உள் நாட்டில் நேரு பிறந்த தினம் வெகு விமரிசையாக உற்சாகத்துடன் நடக்கிறது. எனினும் மக்களின் உள்ளங்களில் கவலை பாய்ந்து நிற்கிறது. அகவிலை உயர்வு தாங்க முடியவில்லை. எங்கும் பற்றுக் குறை. ஆட்சி முறை செவ்வனே நடக்கவில்லை என்ற குறை. எங்கே சென்றாலும் கம்யூனிஸ்டுகள் தொல்லை வேறு. பொருளாதார நெருக்கடி வேறு. எல்லாம் மக்களைக் கலக்கி வருகின்றன. நேரு தம் 61ஆம் வருஷத்திலும்கூட மன அமைதியுடன் இருக்க இடமில்லை. நாட்டுப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவர் வெளி நாட்டு அனுபவத்தை முழுவதும் பயன்படுத்திச் செப்பனிட்டாலொழிய, கவலைக்கிடமதிகமாகிவிடும். அவர் முயற்சி வெற்றி காண வேண்டுமென்றும், இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் திடகாத்திரத்தையும் அருள வேண்டுமென்றும் வேண்டிக் கொள்வோமாக.



அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இன்றைய தினம் கிடைத்த பத்திரிகைகளில் ஒரு விசேஷ அறிவிப்பைக் கண்டோம் — அது என்னவென்றால் ஸர்தார் படேலினுடைய க்ஷேமத்தையும் ஆரோக்யத்தையும் கருதி, அவருடைய மகன் ஸ்ரீமான் தயாபாய் படேல் என்பவர் பம்பாயில் ஒரு மஹா எக்கியத்தை (யக்ஞம்) பதினொரு தினங்களுக்கு நடத்தி வைப்பதாகவும் நமது மாகாணத்திலிருந்து அநேக சாஸ்திரிகள் அதில் பங்கெடுத்துக் கொண்டிருப்பதாகவும், சூர்ய நமஸ்காரம், விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், 1008 ஆஹுதிகள் அடங்கிய மஹா மிருத்தியுஞ்சயஹோமம் முதலியவைகளை நடத்திவைப்பதாகவும் அறிகிறோம், இவைகளுக்குப் பிரமேயமென்ன? சர்தார்ஜியினுடைய ஜாதகப் பிரகாரம் சில கிரகங்கள் நீசத்தன்மையை உடையவர்களாக இருந்து அவருடைய தேக சுகத்துக்குத் தீங்கை விளைவிப்பதால் அந்தக் கிரகங்களைச் சாந்தி செய்யும் பொருட்டு எக்கியம் நடக்கிறதாம். இதைப் படித்தவர்கள் அனைவரும் வெகு திருப்தி அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஸர்தார்ஜியினுடைய க்ஷேமத்தை வேண்டி, தெய்வத்தைப் பிரார்த்திப்பவர்கள் இந்தியாவில் மாத்திரமல்ல, இதர தேசங்களிலும் அநேக கோடிக்கணக்கான ஜனங்களுண்டு. சென்ற காலத்தில் அவர் செய்த தியாகத்துக்கும், தற்காலத்தில் அவர் செய்து வரும் தேசத்தொண்டுக்கும், வருங்காலத்தில் அவராலாகக் கூடிய மகத்தான தேச உத்தாரணத்துக்கும், பொது ஜனங்களில் நூற்றுக்கு நூறுபேர் ஜபதபங்கள் செய்யத் தயாராயிருப்பார்கள். இதைப்பற்றிச் சிறிதேனும் அபிப்பிராய பேதம் கிடையாது. ஆனால் அவருடைய க்ஷேமத்தைக் கருதி செய்யப்படும் சடங்குகளின் அனுஷ்டான முறையைப்பற்றித்தான் சிலவித சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

முதலாவது சந்தேகம், நமது தலைவர்கள் சம்பந்தப்பட்டவரையிலாவது சோதிடம் என்பதை ஒரு சாஸ்திரமாக ஏற்றுக்கொண்டு அதைக் கைப்பற்றிப் பரிசோதித்து அதின் மூலம் பலவிதமான கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும் பெருக்கி வைப்பது ஹிந்துக்களின் தர்மத்துக்கு மேன்மையா, தாழ்மையா என்பது. சோதிடமென்பது ஒரு திட்டமான சாத்திரம் என்று சொல்வது தவறுதலாகும். முதலாவது கிரகங்களின் நிலைகளை நிர்ணயிப்பதற்கு வெகு நிறுத்தமான மணிக்கணக்கு அவசியமென்பதாக அறிகிறோம். இரண்டாவது எந்தெந்த நிலைகளில் எந்தெந்தக் கிரகங்கள் எவ்வெவ்விதமான லக்ஷணங்களைக்கைப்பற்றுகிறார்களென்பது கேவலம் அநுபவசித்தமாகச் சொல்லத் தகுந்ததேயொழிய, நிச்சயமாகச் சொல்லத் தகுந்ததல்ல. பல்லாயிரம் வருஷங்களாக ஏற்பட்ட அனுபவங்களைச்சோதிடர்கள் உட்கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களில் பெரும்பாலார் எத்தன்மையுடையவர்கள்? மூட வைத்தியர்களே ஒழிய, பெரிய ஞானிகளுமல்ல, யோக்கியமான சாத்திரிகளுமல்ல. பஞ்சாங்கக் கட்டுகளைக் கையிலேந்தி, சிலபாடல்களையும் சுலோகங்களையும் மனப்பாடமாகப் படித்து வைத்திருக்கும் மூடவைத்தியர்கள் அநேகர்,சோதிட சாத்திரிகளாக விளங்கி வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சொல்லும் குறிகள் யதார்த்தமாயிருக்கலாம். எனினும் அவர்களுடைய வாக்குகளெல்லாம் சுத்த வாக்குகளென்றும், விதித்திடும் அனுஷ்டானங்களெல்லாம் பொருந்தியவை யென்றும் கைப்பற்றுவது அநேக சமயங்களில் அசந்துஷ்டியைப் பெருக்குவது மாத்திரமல்ல, விபரீதத்தையும் விளைவிக்கின்றன. நம் மத்தியில் அநேக இடங்களில் இத்தகைய சம்பவங்களைக் காணலாம். சோதிட ஆராய்ச்சியிலீடுபட்டு அநேகர் முயற்சி வழுவி "நம் மாலாவது இனி ஒன்றுமில்லை. நமது கிரகசாரம் நம்மை விடாது" என்று விபரீதமாக மனத் தளர்ச்சியடைவதைக் கண்டுள்ளோம். அது போலவே, செய்யத்தகாத காரியங்களிலும், சூதாட்டம், பந்தயம் இத்தகைய துன்மார்க்க வழிகளிலும் செல்லுபவர்கள், பல முறை அடிபட்டும், கஷ்டங்களை அனுபவித்தும், சோதிடக்

குப்பையில் நம்பிக்கை வைத்து மேன்மேலும் படுகுழியில் விழுவதையும் பார்க்கிறோம். ஆகவே, சோதிடம் நிர்ணயமுள்ள சாத்திரமாயிருக்கலாம், கணிதம் தப்பிப் போயிருக்கலாம்: சோதிடமும், கணிதமும் இரண்டும் நிர்ணயமாயிருக்கலாம், ஜாதகம் அபத்தமாயிருந்திருக்கும்; சோதிடம், கணிதம், ஜாதகம் மூன்றும் நிர்ணயமாயிருக்கலாம், குறி சொல்லுபவன் அயோக்கியனுயிருப்பான். அதவா, இவை நான்கும் சரியாயிருக்கலாம்; ஊழ்வினையின் பயனுக, தெய்வ சங்கல்பம் மாறிவிடலாம். இதுவல்லவோ முக்கியமாகக் கருதவேண்டிய விஷயம். உலகத்தில் நடந்துவரும் சம்பவங்கள் அனைத்திற்கும் கர்த்தாவானவன் ஒருவனே என்கிற கொள்கை ஏற்படும் பக்ஷத்தில், அவனுடைய சிப்பந்திகளான கிரகங்களின் சேஷ்டைகளைக் குறித்துக் கவலைப்பட்டு என்ன லாபம்? அவர்கள் சிரேஷ்டர்களாயிருந்தென்ன; நீசர்களாயிருந்தென்ன?

அம்மாஞ்சியும் நானும் சுத்த சமுசயவாதிகள், சர்வ சந்தேகிகள். எந்தச் சமயத்திலும் எந்த விஷயத்திலும் எங்களுக்குச் சந்தேகம் குடிகொண்டுள்ளது. நாமறியாத சக்தியொன்று நம்மைச் சூழ்ந்திருப்பதாகவும், அச் சக்தி, ஆதி சக்தியென்றும் மாத்திரம் நாங்கள் நம்புகிறோம். அதற்கு எந்தவிதமான பெயர் வேண்டுமென்றாலும் கொடுக்கலாம்; பொருத்தமுண்டு. ஆனால் பெயர் என்ன வைத்தாலும் சக்தி மாத்திரம் ஒன்றே என்றும், அதை அணுகுவதற்கு மார்க்கம் ஒன்றே யென்றும், அந்த மார்க்கத்திலுள்ள அனுஷ்டானங்களுக்கு மூன்றே வகை யென்றும், அவையாவன: நம்பிக்கை (faith) அகங்காரத் துறவு அல்லது மனத்தாழ்மை, (humility) அன்யோன்ய பரிமாற்றம் (reciprocity) இவை மூன்றே யென்றும் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில் கிரக பலன்களுக்கும் கிரக தோஷங்களுக்கும் இடமே ஏற்படவில்லை. அவைகளைக் குறித்து யோசிக்கும்பொழுது எங்களுக்குப் பலவிதமான சந்தேகங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

ஒரு ஜில்லாவில் கலெக்டர் அவர்கள் ஒரு விதியை ஏற்படுத்தின பிறகு அவரின் கீழ் உத்தியோகமாயிருக்கும் தாசில்தாரோ, அல்லது சிரஸ்ததாரோ அதை மாற்றமுடியுமா? அதவா அவர் மாற்றினும் அதற்குப் பரிகாரம் என்ன? கலெக்டரிடமல்லவோ முறையிடவேண்டும். அப்படி முறையிட்டால் தவறுதலாக ஏற்பட்ட விதியை ரத்து செய்வதோடு, மேற்கொண்டு அநீதியான நடவடிக்கை எடுக்காதவாறு சிப்பந்திக்கு எச்சரிக்கை இடுவாரல்லவா? பயந்து கொண்டு தாசில்தாரிடமே சென்று முறையிட்டால் ஒருமுறை இடங்கொடுத்தாலும், மற்றொரு முறை நிர்ப்பந்திக்க மாட்டாரென்று நிச்சயமில்லையே! இது தவிர, சிப்பந்திகள் நிர்ப்பந்தங்களுக்குப் பயந்துகொண்டு அநியாயங்களை வெளிப்படுத்தாமல் அங்கேயே சரிக்கட்டிக் கொண்டு விட்டதாகக் கலெக்டர் அறிந்தால் அவருக்கு இரு தரத்தார் மீதும் கோபமுண்டாகுமல்லவா? ஆகவே உலக வாழ்க்கையிலீடுபட்ட நமக்கு, வாழ்க்கை நடையில் எத்தகைய அனுஷ்டானம் பொருத்தமோ, அதுவே தான் தப நிலையிலும் பொருத்தம். ஜபமும் தபமும் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய அனுஷ்டானங்களேயொழிய, கிரஹங்களுக்கு அல்ல என்பது எமது கொள்கை.

சுக துக்கங்களென்பது மானிட வாழ்க்கையில் சகஜம். சுகப்படும் போது ஜப தபத்தில் ஈடுபடாமலிருப்பதும் சகஜம்; சகஜம் என்று மாத்திரம் சொல்லுவோமே ஒழிய, நெறி என்று ஸ்தாபிக்கவில்லை. துக்கப்படும்போது தெய்வத்தைத் தொழுது பிரார்த்தித்து வேண்டிக் கொள்வது சர்வ சகஜம். பிரார்த்தனையில் அடங்கியது, வினயம், சந்தாபம், திருத்தம், விரதம், யாகம், எக்கியம். துக்கங்களை அனுபவிக்கும் ஒருவனே இவைகளைச் செலுத்த வேண்டும். இவைகளைச் செலுத்தும் முறையில் இவனுடைய மனதிலுள்ள சுத்தமும் கிலேசமுமே தெய்வத்துக்கு அடுக்குமே ஒழிய, வேறு ஒரு வஸ்துவும் அடுக்காது. மற்றொருவர் செய்தால் ஏற்காது! பாலும், கனியும், பருப்பும், நெய்யும் கலந்து நைவேத்யம் செய்த மாத்திரத்தில் கிரக தோஷங்கள் மாறி, அஷ்ட ஐசுவரியமும் கிடைத்து விடுமென்கிற கொள்கை சடங்கு சம்பந்தமாக ஏற்பட்ட சாத்திரக் குப்பைகளினுல் பெருகி

விட்டது. ஒரு ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்த பிறகு சர்க்கரைப் பொங்கலும் வடையும் வைத்தால்தான் தெய்வத்துக்குச் சந்துஷ்டி ஏற்படும் என்கிற கொள்கை சாத்திரமா, சாத்திரக் குப்பையா? கோபால கிருஷ்ண பாரதியைக் கேளுங்கள். பதில் சொல்லுவார்! திருவிசை நல்லூர் அய்யாவாளைக் கேளுங்கள், அல்லாவிடில் சதாசிவ ப்ரும்மேந்திரத்தைக் கேளுங்கள். அவர்களும் செவ்வனே எடுத்துச் சொல்லுவார்கள். இத்தகைய ப்ரும்மஞானிகள் எடுத்துரைத்திருந்தும், அவர்களின் தத்துவங்களை உட்கொள்ளாது, சடங்குகளையே பெரிதாகக் கருதி, வேதங்களையே அவைகளுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு, நீதிநெறி வழுவி, நமது மதத்தின் புனிதத்தைக் கைவிட்டுவிட்டோமே என்பது தான் வருத்தம்.

நமது தேசத்தில் எங்கே பார்த்தாலும் பழுதான நடவடிக்கைகள் அதிகரித்திருக்கின்றன வென்றும், உத்தியோகஸ்தர்கள் அநேகர் லஞ்சம் வாங்குகிறார்களென்றும், பங்கீடு ஸம்பந்தமான நிர்வாகத்தில் லஞ்சம் சமர்ப்பிக்காமல் ஒன்றும் நடப்பதில்லை யென்றும் முறையிடுகிறோம்! இதற்கு முக்கிய காரணமென்ன? நமது வாழ்க்கையிலேயே இருக்கிறது! ஏதாவது ஒரு வஸ்துவைச் சமர்ப்பிக்காமல் ஒருவரையும் சந்திக்கலாகாது என்பது நமது கொள்கை! ஒரு குழந்தையைப் பார்க்கச் சென்றால் வெறுங்கையுடன் போகலாகாது என்போம்! ரொம்பவும் சரி. வயோதிகரைக் காணச் சென்றால் வெறுங்கையுடன் செல்லலாகாது என்போம்! இதுவும் சரி. முதல் கூறியதில் ஆதரவு, இரண்டாவது கூறியதில் அன்பு. ஆனால் கோவிலுக்குச் சென்றால் வெறுங்கையுடன் செல்லலாகாது என்கிறோம்! பழம், பாக்கு, வெற்றிலை, சூடம், புஷ்பம் முதலியவைகளை எடுத்துச் செல்லவேண்டுமாம். இவை எதற்காக? அன்பா, ஆதரவா, அர்ப்பணமா, கட்டணமா? ஒன்றுமில்லை! ஆகமத்தால் ஏற்பட்ட அதிகப்பிரசங்கம்! மானஸீக பூஜை யென்பது ஒதுங்கி, ஆகமபூஜை யென்பது ஏற்பட்டவுடன் இந்த அனுஷ்டானம் முன் வந்துவிட்டது. ஆகவே, சனீச்வரனைப் பிரீதி செய்ய எள்ளையும், நல்லெண்ணெயையும் வீசுகிறோம். ஒரு சமயத்தில் சனி பகவான் சிரேஷ்டன் என்கிறோம். மற்றொரு முறை அவன் நீசன், பிரஷ்டன் என்கிறோம். அங்காரகன், ஏழாவது கிரஹத்திலிருந்தால், அந்த ஜாதகம் தோஷ ஜாதகமென்கிறோம். ஒரு குழந்தை மூலா நக்ஷத்திரத்தில் பிறந்தால் 'ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்' என்கிறோம். "மூலத்தின் மாமியார், மூலையிலே," என்கிறோம். அத்துடன் அந்தப் பெண் குழந்தை அதமம், தள்ளுபடி! இந்த வாக்கியங்களையும் கொள்கைகளையும் கைப்பற்றி, சும்மா விருப்பார்களா? அதுவுமில்லை! பரிகாரத்துக்கு ஆரம்பிக்கிறோம்! பரிகாரமென்றால் என்ன? ஆங்கிலத்தில் propitiation என்பார்கள். அதாவது லஞ்சம் கொடுப்பதென்பது! இப்படி நமது கிரஹங்களுக்கே வழிகாட்டி விட்டால் நமது உத்தியோகஸ்தர்கள் சும்மாவிருப்பார்களா! பங்கீடு எப்போது நமக்கு வந்ததோ அப்பொழுதே ஏழரை நாட்டான் சனி பிடித்தது எனலாம். ஆகவே அந்தத் தோஷத்தை நிவர்த்தி செய்யச் சடங்குகள் துவக்கவேண்டியது தானே? சடங்குகளுக்கு ஏற்பட்ட பரிகாரங்களும் கொடுக்கவேண்டியதல்லவோ? நாம் படித்த படிப்பு இதுதானே, இதைப்பற்றி ஏன் முறையிட வேண்டும்?

உணவு நெருக்கடியில் திவாகரனை நிந்திக்காமல் தெய்வத்தைத் துதி செய்து, தினந்தோறும் தொழுது, அதாவது உணவுப்பெருக்கை முன்னிட்டு, யாக எக்கியங்கள் (அதாவது உணவு விருத்திக்கு வேண்டிய விவசாய முன்னேற்றத்தை) நடத்தினால், நமது முன்னேற்றம் ஏற்படும்! சோதிடத்திலிருந்து உணவுப் பெருக்குக்கு வந்தது இந்த வியாசம். இது எப்பொழுதும் அம்மாஞ்சியின் வழக்கம். ஏதோ ஒரு இடத்தில் கையைப் பிடிப்பான். வெகு தூரம் சுற்றி வந்து எங்கேயோ ஒரு மூலையில் விட்டு விடுவான். இதற்கு நானென்ன செய்வது?



செவிலி

விசுவம்

செங்கமலம் மலைத்து நின்று விட்டாள். கோமளத்தின் சொற்கள் அவள் செவியினூடே புகுந்து அவள் அந்தரங்கத்தைத் தொட்டு விட்டன.

எதிர்பாராத உத்தரவு! எப்படித்தான் சகிப்பாள்? இவ்வளவு காலம் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்த குழந்தையை எப்படிப் பிரிந்து போவாள்?

"என்னடி சொல்றது புரியலையா?" என்றது கோமளத்தின் குரல்.

"புரியாமலென்ன? புரிந்ததால்தால் தான் இவ்வளவு கலக்கம்!"

* * *

விக்டோரியா ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதியில் முதல் வகுப்பு அறையொன்

றில் கோமளம் படுத்திருக்கிறாள். பக்கத்தில் ஒரு சிறு தொட்டிலில் ஒரு குழந்தை உதைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது. கோமளத்தின் கணவன் சீனிவாசன் கவலையோடு கட்டிலருகில் நின்று கொண்டிருக்கிறான். நர்ஸ் ஒரு பெண்ணுடன் வருகிறாள்.

வந்தவள் செங்கமலம்.

செங்கமலம் பிரசவித்து நான்கு நாட்கள் ஆகியிருந்தன. ஆனால் பாவம் குழந்தை இறந்து விட்டது.

கோமளத்திற்குக் குழந்தை பிறந்து இரண்டு நாட்களாகின்றன. அவள் ஜன்னி கண்டு இறக்கும் நிலைமையில் இருக்கிறாள்.

கோமளத்தின் குழந்தைக்குப்பால்கொடுக்க ஒருத்தி வேண்டும். செங்கமலத்தின் பாலைப் பருக ஒரு குழந்தை வேண்டும்.

செங்கமலம் கோமளத்தின் குழந்தை பாலுவுக்குச் செவிலித் தாயானாள்.

எவ்வளவு அக்கரையோடு குழந்தையை வளர்த்தாள். பெற்ற மனத்தைவிட அவள் மனத்தில் அதிக வாத்சல்யம் இருந்தது. செங்கமலத்தின் அக்கரையையும் அன்பையும் கண்ட கோமளம் சந்தோஷப்பட்டு, பாலுவை முற்றிலும் அவளிடமே ஒப்படைத்து விட்டாள்.

கோமளம் கொஞ்சம் படித்தவள்; பணம் படைத்தவள்; நாகரிகமான வாழ்க்கை நடத்துபவள். நாள் முழுவதும் வேலையிருந்து கொண்டே இருக்கும். ஷாப்பிங், வாக்கிங், மீட்டிங், விஸிட்டிங் எல்லாம் வேளை தவறாமல் செய்து வந்தாள், குழந்தையைக் கவனிக்க மட்டும் நேரமில்லை. எனவே செங்கமலமே பாலுவுக்குச் சகலமும் ஆய்விட்டாள். பாலு அவளையே தாயெனக் கருதி வளர்ந்து வந்தான்.

செங்கமலம் நான்கு மாதக் கர்ப்பிணியாயிருந்தபோது அவள் புருஷன் ஆறுமுகம் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டான். செங்கமலம் எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை. சம்பளமும் உடுப்பும் அவன் மனதை மிகவும் கவர்ந்து விட்டன.

செங்கமலம் தகப்பன் வீட்டிலிருந்து வந்தாள். மாதாமாதம் பணம் வரும். தகப்பனும் மகளும் சுகமாக இருந்து வந்தனர்.

செங்கமலத்துக்கு ஒன்பது மாத கர்ப்பம். அவள் தகப்பன் விஷ ஜ்வரத்தால் இறந்து விட்டான். செங்கமலம் அனாதையானாள்! தரும ஆஸ்பத்திரியில் பிரசவித்தாள். அவள் துரதிர்ஷ்டம் குழந்தை பிறந்தவுடன் இறந்து விட்டது.

பாலுவின் அன்பில் தன் துக்கத்தை மறந்திருந்தாள் செங்கமலம்.

பாலுவுக்கு 8 மாதங்களாயின. ஆறுமுகம் பட்டாளத்திலிருந்து விலகி வந்து விட்டான். வெகுகாலம் பிரிந்திருந்த மனைவியைக் காண ஆவலாய் ஓடிவந்தான். தான் மீத்துக் கொண்டு வந்திருந்த பணத்தில் கிராமத்தில் ஒரு சிறியவீடு கட்டிக்கொண்டு ஏதாவது தொழில் செய்து, தன் மனைவியோடு வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

செங்கமலத்துக்கு ஒரு சோதனை. ஒரு புறம் கணவன். மறுபுறம் தான் பாலூட்டி வளர்த்த பாலு. கணவனைக் கூடி வாழ வேண்டுமானால் குழந்தையைப் பிரிய வேண்டும். குழந்தை வேண்டுமானால் கணவனைப் பிரிந்திருக்க வேண்டும்.

அன்புமிக்க கணவன். அருமையாக நடத்துவான். ஆசையோடு அழைக்கின்றான். எப்படி மறுப்பது?

அன்புடன் வளர்த்த குழந்தை. இன்னும் பால் குடிக்கிறது. கணம் காணாவிட்டால் கத்தி விறைத்து விடும். எப்படிப் பிரிவது?

கணவன் இவ்வளவு காலம் பிரிந்திருந்தவன் இன்னும் கொஞ்சகாலம் தனியாயிருக்கலாம். பால் குடிக்கும் குழந்தையை விட்டுச் செல்வது தகாது. ஆகவே குழந்தை பாலை மறந்தவுடன் வந்து விடுவதாகச் சொல்லி, கணவன் உத்தரவு கேட்டாள்.

ஆறுமுகம் இஷ்ட மில்லாமல் ஒப்புக் கொண்டான்.

மீண்டும் இரண்டு மாதங்கள்.

எங்கும் பண நெருக்கடி. கோமளத்தின் குடும்பத்தில்கூட. செலவைக் குறைக்கத் திட்டம் போட்டாள் கோமளம். குழந்தை பெரியவனாகிவிட்டான். இனியும் எதற்காகச் செவிலிக்குச் சாதம் போட்டுச் சம்பளம் கொடுக்கவேண்டும்? அவளை நிறுத்திவிடத் தீர்மானித்தாள் கோமளம்.

தன் தீர்மானத்தைச் செங்கமலத்திடம் சொல்லியும்விட்டாள்.

* * *

செங்கமலம் மலைத்து நின்றுவிட்டாள். கோமளத்தின் சொற்கள் அவள் செவியினூடே புகுந்து அவள் அந்தரங்கத்தைத் தொட்டுவிட்டன,

எதிர்பாராத உத்தரவு! எப்படித்தான் சகிப்பாள்? இவ்வளவு காலம் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்துவந்த குழந்தையை எப்படிப் பிரிந்து போவாள்?

"என்னடி சொல்றது புரியலையா?" என்றது கோமளத்தின் குரல்.

"புரியாமலென்ன? புரிந்ததால்தான் இவ்வளவு கலக்கம்!"

இடிந்துபோய் நின்ருள் செங்கமலம். மறு நாட்காலையிலிருந்து நின்று கொள்ளும்படி உத்தரவு பிறந்து விட்டது. கோமளம் சென்று விட்டாள்.

குழந்தை பாலு ஓடி வந்து செங்கமலத்தின் காலைக் கட்டிக் கொண்டான். வாரியணைத்து எடுத்துக் கொண்டு கொல்லைப் புறம் சென்ருள். சலிக்கும் வரை பாலுவின் முகத்தில் முத்தங்கள் கொடுத்தாள். சலித்ததா! சலிக்குமா? இறைக்க இறைக்க வற்ருத ஊற்றல்லவா தாயுள்ளம்? வாத்ஸல்யம் ஊற்றுப் பெருக்கெடுத்து, குழந்தையின் மேல் பொழிந்தது.

கனவு போலிருந்தது. கணவன் குரல் காதில் ஒலித்தது செங்கமலத்துக்கு.

''கண்மணி செங்கமலம்! உனக்காகத்தானே உன்னைச் சுகமாக வைத்துக் கொள்ளப் பொருள் தேடத்தானே—நான்பட்டாளத்தில் சேர்ந்தேன்! அங்கு ஒவ்வொரு நிமிஷத்தையும் உன்நினைவிலேயே கழித்தேனே! உன்னை நினைத்துக் கொண்டே ஓடோடியும் வந்தேன்; ஆனல் நீ என்ன செய்கிருய்? உனக்கு என்மேல் எள்ளளவு பிரியம் இருந்தால் இப்படி என்னைத் தனியே விடுவாயா? யாரோ பெற்ற குழந்தையை என்னைவிட அதிகமாக நேசிக்கிருயே? இது நியாயமா செங்கமலம்!"

"ஆம்! நியாயமில்லைதான்" என்று எதிரொலித்தது அவள் மனச்சாட்சி.

மீண்டும் கணவன் குரல்!

"என்னதான் உன்பாலுண்டு வளர்ந்தாலும் அது உன்குழந்தையாய் விடுமா? பைத்தியமே! குழந்தை வளர்ந்தபின் உன்னைத் தாயென மதிக்குமோ? பைத்தியமே!"

செங்கமலம் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள். உணர்ச்சி வெள்ளத்தை உள்ளே அடக்கிக் கொண்டாள்,

பாலுவையும் அவ்வீட்டையும் விட்டுச் சென்று விட்டாள் செங்கமலம்.

இருபது மைல்களுக்கப்பாலுள்ள கிராமத்தில் தோப்பின் நடுவே புதிய சிறுவீடு. அதில் கணவனுடன் குடித்தனம் செய்கிருள் செங்கமலம். லட்சிய இல்லறவாழ்வு நடத்தக் கனவுகாண்கிருன் ஆறுமுகம். மனைவியைத் தன் அன்பால் அபிஷேகம் செய்கிருன்.

இருந்தும் செங்கமலத்தின் உள்ளத்தில் நிம்மதியில்லை. பாலுவைப் பார்க்க வேண்டுமென்ற தணிக்க முடியாத ஒரு ஆசை அவளை இரவு பகலாய் வாட்டியது. கண்டபொருள்களிலெல்லாம் பாலுவின் உருவம், கனவெல்லாம் பாலு மயம்.

எப்படியோ இரண்டு மாதங்களைக் கழித்து விட்டாள். இனி ஒருமுறை பாலுவைப்



பார்த்து வந்தாலன்றி அவளுக்கு நிம்மதியிருக்காது. கணவனிடம் சொன்னாள். அவன் உத்தரவு கிடைத்தது. பறந்துவந்தாள் பாலுவின் வீட்டிற்கு——இல்லை., தன் பழைய வீட்டிற்கு.

பாலுவும் செங்கமலமும் ஒருங்கே இழந்த சுவர்க்கத்தை மீண்டும் அடைந்தனர்.

பாலு செங்கமலத்திடம் தன் புத்தாடைகளையும் புதிய நகைகளையும் காண்பிக்குமாறு கோமளத்தை நச்சினான். செங்கமலம் பாலுவைச் சிங்காரித்துச் சீராட்டினாள். பகல் கணமாகக் கழிந்தது. இரவு பாலு நகைகளைக் கழற்ற மறுத்து, செங்கமலத்தினிடமே தூங்கி விட்டான். இரவு கழியக்கழிய, செங்கமலத்துக்குக் கவலையதிகரித்தது. விடிந்தால் சென்றுவிடவேண்டுமே.

விடியற்காலம்.

பாலு தூங்கவில்லை.

''அம்மா''

''என்னடா கண்ணு!''

''போகாதே......என்னை விச்துத்து'' மழலை மொழிந்தது குழந்தை.

''போகல்லேடா கண்ணு... தூங்கு...''

''மாத்தேன்...''

செங்கமலத்தின் மனம்கரைந்தே விட்டது. கண்ணீர்தானே சொரிந்தது. ஆவேசத்தோடு குழந்தையை எடுத்தணைத்துக் கொண்டு வெளிச்சென்றாள். பாவம்! தாயுள்ளம் தான் செய்யும் பெருந்தவறையுணரவில்லை.

காலையில் கோமளத்தின்வீடு அல்லோலகல்லோலப்பட்டது, செவிலியையும் குழந்தையும் காணவில்லை. குழந்தையின் நகைகளுக்காக (?) அதைத்திருடிக்கொண்டு ஓடிவிட்டாள் செவிலி செங்கமலம்!

செங்கமலத்தின்மேல் பிராது கொடுக்கப்பட்டது. போலீஸ் அதிகாரிகள் அவள் வீட்டுக்குச் சென்றனர். வீட்டை நெருங்கியதும் அதிகாரியின் காதுகளில் விழுந்த வார்த்தைகள் செங்கமலம் குற்றத்தை ருசுப்படுத்தின.

''இந்த ஊரைவிட்டுப்போய் விடலாம், இல்லாவிட்டால் பிடித்து விடுவார்கள்,'' இது செங்கமலம் புருஷனிடத்தில் சொன்னது.

செங்கமலம் கையும் மெய்யுமாகப் பிடிக்கப் பட்டுவிட்டாள்.

விசாரணையில் செங்கமலம் வாயைத்திறக்கவில்லை, குழந்தையையும் நகைகளையும் திருடியதற்காக அவளுக்கு இரண்டுவருஷம் கடுங்காவல் கிடைத்தது.

நல்லபரிசு! வாத்சல்யத்திற்கு நல்ல வெகுமதி!!

மாதவிடாய் :

சகோதரிகளே ! எமது ''சும்பகி—ரேசனி'' என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100 க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0

கர்ப்பத்தடை :

''தம்பதி—சகா'' நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு :: ரூ. 4-4-0

6 மாத காலத் தடைக்கு :: ரூ. 2-0-0

(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் ''மதன விலாஸ் ரஸாயனம்'' சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2—8—0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல்வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த ''ஸம்ஸந்தி''. ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள் !

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)

70, Cornwallis Street, CALCUTTA-6.

இதயத் துடிப்பு

என்.எஸ்.சுப்பராயன்

சரோஜா என்ற பெயருக்கு ஏற்ப அவளது கன்னங்கள் ரோஜாவின் இதழ்களை வென்று விடும்! கருநீல விழிகளின் ஆழம் கற்பித்த கடவுளுக்கே தெரியாது! கொண்டல் ‘தன்னை வெல்ல யாரும் இல்லை’ என்று ‘வெற்றி முழக்கம்’ செய்துகொண்டிருந்த காலம் என் சரோஜாவின் அழகான அளகத்தால் தடைப்பட்டு நின்றது! அவளுக்கு விற்புருவங்கள் இல்லை எனினும் புருவங்களின் அழகை எதற்கு ஈடாக வர்ணிப்பதென்பது எவருக்கும் தெரியாத புதிராகும்! பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டதல்ல எங்கள் திருமணம்! எங்களாலேயே நிச்சயிக்கப்பட்டுப் பெரியோர்களுக்குப் பிறகு அறிவிக்கப்பட்டது! அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, அவளை அருகே நிறுத்திப்பார்த்து ஆனந்தித்துவிட்டு, 5 வருடப் படிப்பிற்காக அசலூர் சென்று விட்டேன். திருமணமே வேண்டாமென்று திடமாகச் செய்திருந்த என் தீர்மானத்தைத் தகர்த்தெறிந்த பெருமை அவளது இதழ்க் கடையிலே தோன்றும் புன் முறுவலுக்கும், அவளது கேசங்களின் சுருளுக்கும் ப்ரத்யேகமானதாகும்!

வைத்தியக் கல்லூரியில் வகையாகத் தேர்வுகளில் தேர்ச்சிபெற்று ஐந்து வருடங்கள் மறைந்ததும் அன்று தான் ஊர், உற்ருர், உறவினர் இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தேன். என்னுடைய வரவினுல் யார் யாருக்கு மகிழ்ச்சி உண்டாகியிருக்குமென்று இங்கு அட்டவணை எடுக்கவேண்டிய அவசியமில்லை! என்னுடைய பதினேழாவது ஆண்டில் சிரும்சிறப்புமாக நடந்தேறிய திருமணத்திற்குப்பின் இன்றுதான் என்னையும், என் சகதர்மிணியையும் ஒன்ருக ஒரு இடத்தில் விடுத்து அவரவர் மனம் விட்டுப்பேசச்சந்தர்ப்பம் அளித்த நன்னுள்! ஐந்து வருடங்கள் கூட எனக்கு ஒரு பெரிதாகத்தோன்றவில்லை. என்னுடைய மனவெழுச்சிகளில் அந்த ஐந்து வருடமும் அரை விஞடியாக மாறிவிட்டன!

உற்ருர், உறவினர் கூடியிருந்தனர். சாந்தி முகூர்த்தம் என்று ஊரெல்லாம் என் தங்கையும் மற்ருேரும் அழைத்துவந்தனர். பகல் மணி இரண்டிருக்கும். மாடியில்போய் அலங்கரிக்கப்படவிருந்த கட்டிலில் சிறிது கண்ணயரலாமென மாடியை நோக்கிச் சென்றேன். கட்டிலில் இருந்த இரண்டு தலையணைகள் ஏதோ பேசிக்கொள்வதுபோல் எனக்குப் பட்டது! என்னவென்று கூர்ந்து கவனித்தேன்.

“இந்த மெத்தையில் தான் இன்று இரவு இதோ இருக்கும் வாலிபன் சயனிக்கப் போகிருன்” என்றது ஒன்று மற்றதைப்பார்த்து!

அதற்கு மற்றது, “போடி! போ! பைத்தியமா உனக்கு? அந்த மெத்தையை விட அவள் உடல் மென்மையாக இருக்கும்பொது அவனுக்கென்ன பைத்தியமா மெத்தையில் படுக்க?”

“அய்யோ! எனக்கு வெட்கமாகவிருக்கு. இதோ பார், அந்த மனுஷன் திரும்பிப் பார்த்துப்படுக்கிருன்! நாம் பேசிக் கொண்டதைக் கேட்டுவிட்டான் போலிருக்கிறது!” என்றது முதலில் பேசிய தலையணை!

“கிரீச்! கிரீச்!”

குருவிகள் இரண்டு, ஆணும் பெண்ணுமாகக் கூடிக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தன!

என்னுடைய நினைவெல்லாம் அன்று இரவின் வைபோகங்களைப் பற்றியதாகவேயிருந்தது. நாம் எப்படி நடந்துகொள்வது? முதலில் யார் பேசுவது? அவளை, ‘சரோ’ என்பதா? “ரோஜா” என்பதா? அல்லது “சரோஜா” என்பதா? என்று நினைத்தபொழுது எனக்கே என்னை அறியாமல்சிரிப்பு வந்து விட்டது. அவளும் இப்பொழுது கீழே திட்டமிட்டுக்கொண்டுதானே இருப்பாள்! அவள் என்னை எப்படிக் கூப்பிடுவாள்? ஐந்து வருடங்களில் அவளிடம் தான் என்ன மாறுதல்! எப்படி வளர்ந்து விட்டாள்! “வைத்தியக் கல்லூரிப் படிப்பினுல் என்னுல் நாட்டிற்கு நல்ல சேவை செய்ய முடியு

மென்று நினைத்தபொழுது அவள்,என் சரோவும் என் அருகிலிருந்து எனக்கு வேண்டிய உதவிகளைப் புரிவாள்'' என்று நினைக்கவும் மனமானது குதூகலத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்டது!

அன்று இரவை எந்தவிதமாக வர்ணிப்பதென்பது மேல்நாட்டுக் கவிகளுக்கும் கூடத் தெரியாது என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. என்னுடைய கற்பனை மனதிற்குள்ள திறன் எந்தக்கவிக்கும் இருக்க முடியு

மென்று சொல்வதற்கில்லை! அன்று இரவு நெருங்க, நெருங்க, என்னுள்ளமும் இன்பக் கேணியில் மேல் நோக்கி ஏறிக் கொண்டேயிருந்தது! எதிர்பார்த்த இரவும் எதிர் கொண்டு வந்தது! கெட்டிமேளம் முழங்கியது! கட்டில்கள் கனஜோராக அலங்கரிக்கப்பட்டிருந்தன! கம்மென்று எங்கும் வாசனைத்திரவியங்களின் ஏகாதிபத்ய ஆட்சி நடந்துவந்த இன்பபுரி போன்ற அவ்வறையில் என்னையும் 'அவளையும்' தவிர, இரவில் அடைக்கலம் புகுந்த அந்த இரண்டு குருவிகளும் மேலே தங்கள் இன்ப உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தன!

'அவள்' என் அறையினுள் வருமுன் 'நாணம்' என் அறைக்குள் வந்து புகுந்து கொண்டாள்! 'அவளை விரட்டி விடலாம்' என்ற தைரியம் எனக்குப் பிறந்த பொழுது, 'பயம்' என்ற பைசாசம் நாணத்தைத் தேடி உள்ளே எட்டிப் பார்த்தாள். 'அவளையும் போக்கி விடலாம்' என்று நான் நினைத்த பொழுது, 'பிடிவாதம்'என்ற பீடை முன்னே நின்று 'ஸ்ட்ரைக்' செய்யத் தொடங்கினாள். அவளை வெல்ல ஐம்புலன்கள் அடங்கிய 'அட்வைசரி கமிட்டி'யில் பிரேரேபணைகள், தீர்மானங்கள் நிறைவேறிய பின் 'அவளும்' தன் கட்சி தோற்றுவிட்டபடியால் தானாகவே வெளியே சென்றுவிட்டாள்! கடைசியில் கிடைத்தது கனிந்த பழம்!

"சரோ! வாயேன், ஏன் இன்னும் உன்னைவிட்டு இந்த வெட்கம் தொலையல்லே?" என்றேன் முதலில் நான்.

பதிலில்லை.

இரண்டு மாம்பழத் துண்டு எடுத்து என்னுடைய பக்கம் மெதுவாக நீட்டினாள்; குனிந்த தலை நிமிரவில்லை.

வாங்கி என் வாயில் போட்டுக்கொண்டே "என்ன புளிப்பு! இது மாம்பழமா?" என்றேன்.

"புளிக்காது. அசல் 'கிரேப்'!" என்றாள் அவள். கலீரெனச் சிரிப்பு. அவளது கண்கள் வரை கன்னங்கள் போய்த் திரும்பின!

கோத்ரெஜ் வத்னி டாயிலெட் சோப்

Godrej Vatni

ரிஜிஸ்டர்டு

இத்துடன் சிறிய ('பேபி') சைஸ்

(தாய்நாட்டைச் சார்ந்தது)

மற்றவர்கள் வாக்களிக்கும் எல்லா நன்மைகளையும் அது வழங்குகிறது. இந்தச் சுத்தமான பச்சை நிறச் சோப்பை இன்றே வாங்குங்கள். இதனால் நீங்கள்—கடைசி தேசல் வரையிலும்-அதனுடைய தூய்மையான மணம் கமழும் நுரையினால் அதிக குதூகலமடைவீர்கள். இத்துடன் குழந்தைகளின் சருமத்திற்கும் ஒரு போஷாக்குப் போன்றது—இதத்தையும், தூய்மையையும், அழகையுமளிக்கிறது.



6 அணா

ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்பான

100 சதம் தூய்மைக்கும், மிருகக் கொழுப்பற்றதென்பதற்கும் உத்தரவாதமானது

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்
மதராஸ்: 164, பிராட்வே;
கொச்சின்: 6/36, கல்வத்தி.

பால் கூஜாவை எடுத்துப் பால்விட்டு ஒரு டம்ளரை என்னிடம் நீட்டினாள்.

"பழமும், பாலும் கூடாது" என்றேன்.

"உங்கள் வைத்தியப் பரீட்சையில் அப்படி சொல்லியிருக்கிறதோ?" என்றாள் சரோஜா.

"இப்பொழுது பரீட்சை செய்து பார்க்க வேண்டும்" என்றேன் குறும்புச் சிரிப்புடன்!

குனிந்த தலை நிமிர்ந்தது. புன்னகை ஒன்று நெளிந்தோடியது அவளது இதழ்க் கடையிலே!

மெதுவாக என்னருகே வந்தாள். ஒரு கையால் அவளது தோள்களை மெதுவாகப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் அவளது தலையை வருடலானேன். அவளது கண்கள் ஆயிரம் வார்த்தைகளை அள்ளி வீசின! அவளது கண் இமைகளின் அசைவில் எத்தனையோ இந்திர ஜாலங்களெல்லாம் நிறைந்திருந்தன! குருவிகள் தூங்கிக்கொண்டிருந்தன. மேலே அவள் நோக்கியபோது நானும் மேலே நோக்கினேன். அவள் என்ன நினைத்தாளோ என்னவோ, என்மேல் மெதுவாகச் சாய்ந்தாள்! அவளை அப்படியே தாங்கி அணைத்துக்கொண்டேன். மின்சாரம் போன்ற ஒரு சக்தி எங்களை ஒரு வினாடி திகைப்படையச் செய்துவிட்டது! அந்நிலையில் எவ்வளவு நேரமிருந்தோமென்று இருவருக்கும் தெரியாது. மீண்டும் கண்விழித்தபோது 'அவள்' என்னை விட்டுவிட்டுக் கீழே இறங்கிப் போய்க்கொண்டிருந்தாள். கடிகாரம் மணி 5 என்று எனக்கு அறிவித்து விட்டு ஓய்ந்தது!

"பறவை பறந்து விட்டதா?" என்று நினைத்தபடியே மேலே நோக்கினேன். அவைகள் மோன நித்திரை செய்துகொண்டிருந்தன!

*   *   *

காலச் செம்படவன் அதற்குள் வாழ்க்கைக் கடலில் இரண்டு வருட மீன்களைப் பிடித்து விட்டான்! என்னுடைய வாழ்க்கை ஓடமும் அதன்வழியே, புயலின்றி மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. நான் என்னுடைய வைத்தியத் தொழிலை வழுவூரில் தான் துவக்கி வைத்தேன். வழுவூர் தான் நான் பிறந்து வளர்ந்து, படித்த ஊர். அங்கே சொந்த வீடும், சிறிது நிலமும், சில தோட்டங்களுமிருந்தபடியால், வழுவூரையே என்னுடைய தொழிலுக்கு முதலிடமாகத் தேடிக்கொண்டேன். வழுவூரில் எனக்கு நல்ல 'ப்ராக்டீஸ்' இருந்தது. ஒரு நாளைக்கு ஆயிரம் நோயாளிகளைப் பார்க்க வேண்டிருக்கும். முனிசிபல் ஆஸ்பத்திரியில்தான் நான் வேலை பார்த்து வந்தேன். ஏழை, எளியவர்களிடம் எனக்கு என்றுமே மிகுந்த சிரத்தை உண்டு. அந்தச் சிரத்தை, நாளாவட்டத்தில் என் மனதிலே வேரூன்றி வளர ஆரம்பித்து விட்டது. 'நீண்டகாலமாக நினைத்திருந்த என் கனவுகளெல்லாம் நிறைவேறும் வேளை வந்து விட்டது' என்று நினைக்கும் காலம் என்னை எதிர்நோக்கி அழைத்தது. என்னுடைய தொழிலால் பலதரப்பட்டவர்களைச் சந்திக்கவும், பழகி வரவும் ஏதுவானதாயிருந்தபடியால், அது என் சரோஜாவிற்குப் பிடிக்கவில்லை. என்னிடம் சில நாட்களாக அவள் பழகும் விதமே எனக்கும் கட்டோடு பிடிக்க வில்லை.

வாழ்க்கைத் தேரில் எங்கோ பழுது ஏற்பட்டு விட்டது! செப்பனிடுவதற்குத் தகுந்த தச்சனைத் தேடியது என் உள்ளம்! பெரிய கப்பலில் சிறிய ஓட்டை விழுந்தாலும், அந்தக் கப்பலை எப்படி கவிழ்த்து விடுகிறதோ, அதே மாதிரி எங்கள் மணவாழ்க்கையில் மாறி மாறி இன்பமும் துன்பமும் தோன்றிய வாறேயிருந்தன! என்ன வெல்லாமோ திட்டமிட்டிருந்த என் உள்ளம் திசை தெரியாது தவிக்கும் கப்பலைப்போல் படாதபாடு பட்டது! ஆசைக் கோட்டைகள் ஆயிரம் கட்டியிருந்தேன். ஆர்வத்தியால், அன்புக் கலத்தில் இன்ப உணவைச் சமைக்க நினைத்திருந்தேன்! ஆனால் அது அவிந்து விட்டது பொறாமை, என்னும் சூறாவளியில்! சேற்றைச் சந்தனமாக நினைத்து விட்டாள் என் சகதர்மிணி! ஆனால் அதே சமயத்தில் சந்தனத்தின் நறுமணம் இருந்த இடந்தெரியாமல் போய் விட்டது! பொறாமைக் கண்களுக்குப் புலப்பட்டதெல்லாம் புதுமையாகவும், விநோதமாகவுமே இருந்தன!

இந்த உலகமே இப்படித்தான் போலும்! தண் குளிர்த்தடாகமிருக்க, கானலை நாடித்தான் போவார்கள் போலும்! சந்தேகமென்ற 'பிள்ளைப் பூச்சி' சகதர்மிணியின் உள்ளத்தில் புகுந்து துளைத்துக் கொண்டேயிருந்தது! ஊரில் காலரா தொத்து வியாதி பரவியிருந்தபடியால் என்னுடைய வேலைக்கு முடிவேயில்லாமலிருந்தது. எப்படியெனில், இரவு பகல் என்று பாராமல், ஏழை, பணக்காரன் என்ற பாரபட்சமில்லாமல் இரக்கத்தின் பேரில், என் வாழ்க்கையிலேயே ஒரு பெரும் நம்பிக்கை வைத்து இறைவனைப் பணிவதற்கு ஈடு இணையாக இந்தத் தொண்டையே நினைத்தபடியால் என்னையே நான் வெறுத்துக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டது. இதுதான் இன்றைய உலகம்! நாம் ஒன்று நினைத்து ஒரு காரியம் செய்ய முற்படவும் இறைவன் வேறுவிதமாக நினைத்து விடுகிறார்! விதி, விதி என்று வீதியிலே போகிற

சனியனை விலைக்கு வாங்கிய கதி! மலரும் மணமும் போலவும், மதவும் மயக்கமும் போலவும், உளியும் சிற்பியும் போலவும், உல்லாசமாக வாழ்ந்த எங்கள் வாழ்வுப்பூங்காவில் கோட்டான்கள் குடியேறத் தொடங்கிவிட்டன! நினைக்கவில்லை நடக்குமென்று. நடந்து விட்டது. பின்.......வருந்திப்பயன்?

வறுமையால் வியாதிக்கு இடமளித்து, அல்லலுற்று, வருந்தும் எண்ணற்ற உயிர்களைப் பிழைக்கச் செய்யும் பெரும் பணியே எனக்கு மனச் சந்துஷ்டியையும, ஆனந்தத்தையும் அளிக்க வல்லதாக அமைந்தது!

எந்தச் சுவையையும் ஒரு அளவோடு ருசித்தால்தான் அதன் சிறப்புக் குன்றாது நிலவியிருக்கும். அளவுக்கு மீறினால்.................? வாழ்க்கைத் தோட்டத்தில், குளிர்ந்த தென்றலாக இருந்த என் சரோஜா, குத்தூசியாக மாறுவாள் என்று நான் நினைக்க வில்லை! எந்த ஜன்மத்தில் செய்த புண்ணியமோ, இன்று வயிற்றுக்கு வாடாமல், வருவோருக்கு 'இல்லை' என்று சொல்லாமல், எத்தனையோ மக்களின் நல்லாசியைப் பெற்று வாழ்கிறோம். இதுவே பேரின்பம். கிடைத்த அளவு போதும் என்ற பெரும் மனது எனக்கும், என் இல்லாளுக்கும் அளித்திருப்பது பற்றி நாங்கள் இருவரும் அடிக்கடி சொல்லிக் கொள்வதுண்டு.

*   *   *

"வர, வர நீங்கள்......

''ஆமாம்' என்ன செய்கிறது! நேரமாகிறது வீட்டிற்குவர. அதைத்தானே சொல்கிறாய்?" என்றேன்.

"அதைப் பற்றித் தான் தினமும் சொல்லியாகிறதே. என் உயிர் இருக்கும் வரை இந்தத் தொல்லையும் இருக்கும்." என்று அழுதுக் கொண்டாள்.

"என்ன சரோ! ஏன் அழுறே? நான் என்ன செய்யட்டும்? இங்கே உனக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். அங்கே கேள், எத்தனை உயிர்களைக் காக்க வேண்டியிருக்கிறதென்று......உனக்குத் தெரியாதா? ஊரிலே வியாதியின் கடுமை அதிகமாகி விட்டபடியால், அநேகமாக எல்லோரும் ஊரைவிட்டே வெளியேறி விட்டனர். இன்னும் சிலர் எங்கே போவது என்ற பிரச்னையிலிருக்கிறார்கள். என்னால் எல்லா உயிரையுமே காப்பாற்ற முடிகிறதா? என்னால் இயன்ற அளவு அந்தப் பழநி ஆண்டவர் பேரில் பாரத்தைப் போட்டு, சிரத்தையோடு கவனிக்கிறேன். ஏதோ நான் பார்த்த கேஸ்கள் எல்லாம் நன்மையாகவே முடிகின்றன. இன்று, ஒரு பெண்.....பாவம் இரட்டைப் பிரசவம்; மிகவும் கஷ்டப்பட்டு விட்டாள். லேடி டாக்டர் சுகுணாதான் 'ட்ரீட்' பண்ணினாள். என்ன செய்வது? எல்லாம் அநுபவித்துத்தான் தீரவேண்டும். கஷ்டமே இல்லாமல் கனி கிடைக்குமா? கதிரேயில்லாமல் விளைந்த மணி கிடைக்குமா? மழையேயின்றி மக்கள் வாழ முடியுமா? இரவும் பகலும் எப்படி மாறி மாறி வருகிறதோ, அப்படியே துன்பமும் இன்பமும், புயலும் அமைதியும், பிறப்பும் இறப்பும், வாலிபமும் மூப்பும், வறுமையும் செல்வமும். வாழ்க்கையின் லட்சியம் நிறைவேற வேண்டுமானால் என்னுடை வைத்தியத் தொழிலில் வகையான வழிகள் எத்தனை எத்தனையோ! நீ பேதைப் பெண். பிரிவை நினைத்து வருந்துகிறாய். பிரிவும் பின்பு கிடைக்கப் போகும் பேரின்பத்திற்கு அஸ்திவாரமாகும்! இருட்டேயில்லை என்றால், ஜோதியின் சிறப்பு எப்படி உயரமுடியும்? இருட்டும், வெளிச்சமும் எப்படி உலகையேமாற்றி அமைக்கின்றனவோ, ஏன், இன்றைய உலகே இருட்டிலேதான் உருண்டு செல்கிறது! அதற்கேற்ற வெளிச்சம்......... ஆமாம், அந்த ஜோதி மறைந்து விட்டது..... காந்தி என்னும் ஜோதி! அந்தத் தெய்வப் பிறவியின் மறைவு தேசத்திலே பிளவை உண்டாக்கி விட்டது பார்த்தாயா! அன்னாரின் சகதர்மிணி உலகிற்கே தாயாக விளங்கிய உத்தமி அன்னை கஸ்தூரிபாய் அந்த ஒளிச்சுடரின் தூண்டுகோல்!

"சரோ.........என்னவோ......என் மனவெழுச்சிகளை யெல்லாம் மடைதிறந்தாற்போல் இன்று உன்னிடம் கொட்டி விட்டேன். உன் மனத்தையும் புண் படுத்தி விட்டேன், வா, இப்படி உட்கார். இவ்வளவு நேரமும் நின்று கொண்டாயிருந்தாய்?"

"என் வீட்டிலேயும் ஒரு ஜீவன் தன் உயிரையெல்லாம் ஒரே இடத்தில் கட்டி மூட்டையாக வைத்திருக்கிறதே என்ற நினைவு இருந்தால்தானே.........எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றினாராம்! இந்தப் பெருமைப் பத்திரம் வாசித்துக்கேட்டு, என் காது புளித்து விட்டது! ஆயிரம் பேர்களைக் காப்பாற்றும் திறன் படைத்தும் அருமை மனைவிக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்ல அன்பில்லை! வேறு என்ன சொல்ல முடியும். நீங்கள் என்னை உண்மையாக நேசித்தால் தானே......"

பின்பு வழக்கம்போல வந்து நின்றது முத்துப்போன்ற கண்ணீர்த் துளிகள்! கருத்திலே புகுந்து விட்டது அவளது ஏக்கக்குரல்! அவள் அழுகை என்னைஎன்னமோ செய்தது. எண்ணற்ற எண்ணச் சுழல்கள் என் மனக்

STERILINE

ஸ்டெரிலைன்

மாதவிடாய் கோளாறுகள் உங்கள் வாழ்க்கையின் ஆரோக்யத்தையும், இன்பத்தையும் பாதிக்கின்றன இனி துயரப்பட வேண்டிய அவசியமில்லை. நவீன ஆராய்ச்சிகளின் விளைவான 'ஹார்மோன் எஸ்ட்ரின்' எனும் மருந்தின் சக்தி நிறைந்த ஸ்டெரிலைன் உங்கள் தொல்லைகளை நீக்க, சுலபமான முறை அளிக்கிறது. இன்றே ஸ்டெரிலைன் உட்கொள்ளத் தொடங்கவும். ஆரோக்கிய வாழ்வு மீண்டும் உங்களைத் தேடி வரும்.

'ஸ்டெரிலைன்' 3 விதங்களில் கிடைக்கிறது.

சிறிய பாட்டில் —	விலை ரு. 8.
பெரிய பாட்டில் —	... ரு. 15.
ஸூபர் ஸ்டெரிலைன்	... ரு 15.
பெரிய சைஸ் —	... ரு. 25.
நீண்ட நாளைய கேஸ்களுக்கு	... ரு. 45.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்

ELLIS & MARTYN

Kothari Mansion, Opp. G. P. O.
Post Box No. 414 (C. V.)
Fort, BOMBAY-1.

குட்டையில் தோன்றி மறைந்தன! என்னைத்தவிர அவ்வேளையில் ஆறுதலாக அவளுக்கு இரண்டு வார்த்தை சொல்ல யாரிருக்கிறார்கள்? என்னிடம் அவள் கொண்ட அன்பினால் அள்ளி வீசும் சொற்களை அமுதமென நினையாது ஆலகால விஷமாக நினைப்பது என்னே மதியீனம்! ஆறுதல் வார்த்தைகளையும், இன்ப மொழிகளையும் என் வாழ்விலேயே முதல் தடவையாக அன்று அவளிடம் அள்ளி வீசினேன். அமைதியின் உதயம்தொடங்கியது! ஆயினும் 50 சதம் சமாதானந்தான் செய்ய முடிந்தது. சரோவுக்கு வளைகாப்பு, சீமந்தம் என்ற வரிசையான வைபோகங்கள் வழுவாது நடந்தேறின! மைத்துனன் மகாதேவனின் வரவுதான் எங்களுடைய இன்பப்படகிற்கு எதிர்ப்பட்ட புயல்போல அமைந்தது! நிறைமாத கர்ப்பிணியான சரோவை அழைத்துப்போகச் சரோவின் தந்தையிடமிருந்து கடிதங்களுக்கு மேல்கடிதங்களாக வந்த வண்ணமாக இருந்தன. பிறகு மகாதேவனே நேரில்வந்து விட்டான் சரோவை அழைத்துப்போக. அப்பொழுது தான் நானும் 'பிரிவு' என்பது பெரும் துன்பத்தைத் தர வல்லது என்று அறிய முடிந்தது. ஆயிரம் அலுவல்களினால் உடலும், உள்ளமும் சோர்ந்து போயினும், வீட்டிற்குள் நுழைந்ததும். என் வீட்டிற்கு விளக்கேற்ற வந்த கிருஹலக்ஷ்மியாக விளங்கும் சரோவின் வதனம் கண்டால், பட்ட கஷ்டங்களும், சிரமமும் பறந்துவிடும். அவளது மோகனப் புன்சிரிப்பில் என்னையே எனக்கு மறந்துவிடும்! அவளது இனிய உபசரணையில் எனக்கு இவ்வுலகமே மறந்து விடும்! ஆனால்......? அவள் என்னைவிட்டுப் பிரிந்து போயின்......?

என்னிடம் அன்போடு சண்டை போட யாரிருக்கிறார்கள்? என் சோர்வைத் தீர்க்கவும், உபசரிக்கவும் வேறு எந்த உள்ளத்திற்குத்தான்முடியும்? என் உள்ளத்தந்தியை மீட்ட என் சரோவையன்றி வேறு யாரால் முடியும்? தினம் அவளது இதய கீதத்திற்கு ஏற்றபடி எனது மன வீணை இசைக்கும் பின்னணியுடன் எங்கள் 'இன்பநாடகம்' தொடங்கும்!

சரோவுக்கும் என்னை விட்டுப்பிரிய மனமில்லை. ஆனால் அவளது பெற்றோர்கள் தங்கள் வீட்டிலேதான் பிள்ளைப்பேறு நடக்க வேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்றார்கள்! இறுதியில் அவளை அவளுடைய பிறந்த வீட்டிற்கே அனுப்பச்சம்மதித்தேன். வேறுவழி?

கார்டு கையில் பச்சைக்கொடியை எடுத்து விட்டார். முதல் 'விசிலும்' கொடுத்து விட்டார். அவளது மென்மையான கைகளை வரு

டியவாறே அவளருகே நின்று கொண்டிருந்தேன். எங்களிருவர் கண்களிலும் நீர்த்துளிகள் தோன்றி ஒருவர் முகத்தை மற்றவருக்கு மறைத்தன! "இப்படி எத்தனை நாட்கள், நம் தலையில் இவ்வளவு பேரையும் இழுத்துப் போகவேண்டுமென்று எழுதியிருக்கிறதோ"! என்று என்ஜின் நினைத்துப் பெருமூச்சுப் போல 'உஸ்' என்றுவிட்ட சப்தம் என் உள்ளத்திலும் புயலை அள்ளிவீசியது!

* * * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாளென்றாலும் எனக்கு அலுவல்கள் இருந்தே தீரும். காலை ஆகாரம் ஆனபின்பு கையில் பேபருடன் என் அறையில் சிறிதுநேரம் அமர்ந்தேன். சரோஜா என்னைப்பிரிந்துபோய் சரியாக மாதங்கள் இரண்டு ஓடிவிட்டன. எப்படியோ அவளை இரண்டுமாதம் பிரிந்திருந்துவிட்டேன்! தபால்காரன் அன்றுதான் அவளுடைய கடிதத்தைக் கொடுத்துச் சென்ருன். அதில் அவள் தன் அன்பை அப்படியே பேனுவில் உள்ள மசியில் கொட்டியிருந்தாள்! பேப்பரில் என்சிந்தனையைச் செலுத்தினேன். அதிலே பலதரப்பட்டச் செய்திகள் "அதிசயக்கனவுகள்" "கோரமான விபத்துக்கள்" "விசித்திரஉலகம்" என்றுஎன்னுள்ளே சொல்லிக்கொண்டேன். முதல் நாளிரவு முழுவதும் தூக்கமேயில்லை. ஒரு 'ஆபரேஷன் கேஸ்'. "அந்தப்பெண் நோயாளி பிழைக்க வேண்டுமே" என்று என்உயிரையும் லட்சியம் செய்யாமல் அவளுக்கு ஆபரேஷன் செய்தேன். அதைப்பற்றிய சிந்தனையில் இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன. காற்று குளு, குளுவென வீசியது. இனிமையாகப் பக்கத்துத்தெரு சாயா ஹோட்டலிலிருந்து இசைவாணியின் கீதம் ஒலித்துக்கொண்டிருந்தது!

* * *

"என்னசார், ஓட்டமும் பிடியுமா இருக்கேள்? 'டாக்டர்' பிரசவிச்சாச்சோ?" என்று எதிர் வீட்டுக்காரர் அனந்தராமசர்மாவைக் கேட்கிருர்.

"குழந்தைக்கு வலி எடுத்துடுத்து. 'லேடி, டாக்டரிடந்தான் போறேன்" என்ருர் சர்மா.

"சீக்கிரம் போங்கோ. இப்போதான் வர வழியிலே கண்டேன் 'டிஸ்பென்சரி' யைப் பார்த்துப் போறதை" என்ருர் எதிர்வீட்டுக்காரர்.

'லேடிடாக்டர்'வருகிருர் என்பது அவரது 28ஆம் வருஷமாடல் கார் கொடுத்த விசித்திர சப்தத்திலிருந்து விளங்கியது!

கவலை ததும்பிய முகத்துடன் கன்னத்தில் கையூன்றி வாசல் திரட்டில் அமர்ந்திருந்தார் சர்மா. தாயார் பிரசவ அறையில் இருந்தாள் தன் பெண்ணிற்கு உதவ. சரோஜாவின் அருகில் லேடி டாக்டர் நின்று கொண்டு ஏதோ மருந்து கலந்து கொண்டிருக்கிருர். வீடே அல்லோல கல்லோலப்பட்டது.

"சற்று முன்பே கூப்பிட்டனுப்பக் கூடாதா? ஏன் இவ்வளவு தாமதித்தீர்கள்" என்று சரோஜாவின் தாயாரிடம் 'லேடி டாக்டர்' கேட்டார்.

"தடாரென" சத்தம் கேட்டுக் கண் விழித்தேன்! நான் இருந்த அறையின் பக்கத்து ஹாலில் உள்ள உளுத்துப்போன உத்தரக் கட்டை ஓடிந்து கீழே விழுந்ததால் 'தடார்' என்று சப்தம் உண்டாகியது என்று இரண்டு நிமிஷங்களில் தெரிய வந்தது. "கீச்,கீச்" என்று அந்தக் கட்டையைச் சுற்றிச் சுற்றி இரு குருவிகள் பறந்தவண்ணமாயிருந்தன. அப்பொழுதுதான் முட்டையிலிருந்து இப் பூவுலகைக் காண வந்திருக்கும் இரண்டு குஞ்சுகளில் ஒன்று கட்டையினடியில் அகப்பட்டு நசுங்கி உயிரை விட்டிடும் தறுவாயிலிருந்தது. மற்றென்று கட்டையருகில் தத்தி, தத்தி வந்துகொண்டிருந்தது. இரண்டு குஞ்சுகளையும் சுற்றி அவைகளின் பெற்றோர்கள் "கிரீச், கிரீச்" என்று கத்தித் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்த வண்ணமிருந்தன! அந்தக் காட்சி என் மனதிலே என்னவோ செய்தது. வேதனையோடு வருந்தும் அப்பறவைகளின் கதியை நினைக்க என் உள்ளம் வெகுண்டது. நான் கண்ட கனவும் பூர்த்தியாகவில்லை. பிரசவம் ஆனதோ, இல்லையோ என்பதும், சுகப்பிரசவமா, சரோஜாவின் தேகநிலை எப்படியிருக்கிறதென்பதும் தெரிவதற்குமுன் பாழாய்ப்போன கனவும் பட்டென முடிந்துவிட்டது. இயற்கையும், என்னிடம் போட்டி போட்டுக்கொண்டு சிருஷ்டித்த காட்சியும். கண்ட கனவும் என் கருத்தைக் குழப்பிய வாறு இருந்தன. நினைக்கக்கூடாததெல்லாம் மனம் நினைத்தது. "கண்ட காட்சிதான் காணுமற்போன கனவின் முடிவோ?" என்று கூட நினைக்கும்படியாகிவிட்டது! என் சரோவின் எதிர்கால......என் வாழ்க்கையின் எதிர்காலம்......? என்றெல்லாம் பலதரப்பட்ட எண்ணச் சுழல்களில் என் மனம் போராடிக் கொண்டிருந்த நிலையில்,

"ஸார் தந்தி" என்ற குரல் கேட்டு வாசலுக்கு விரைந்தேன்.

தந்தியைக் கையில் வாங்குமுன் மனத் தந்தி அடித்துக்கொண்டது! கைகளும் தந்தி அடிப்பது போல நடுங்கின! ஒரு கணம் ஒரு திகைப்புத் தோன்றியது. உடைத்துப் பார்க்க உள்ளத்திலே ஆவல் உந்தித் தள்ளு

கிறது. "தந்தியில் விஷயம் எப்படியிருக்குமோ" என்று நினைக்கும்போது கைகள் தந்தியை உடைக்கவே மறுக்கின்றன. இரண்டு நிமிஷங்கள் இப்படியே கழிந்துவிட்டன. கைகள் தாமாகவே கவரைக் கிழித்ததும், கண்கள் விரைந்து தந்தியைப் பார்வையிட்டன. அப்பொழுது என் 'இதயத் துடிப்பை' எண்ணவும் முடியாது!

"அவள் மறைந்துவிட்டாள். வருந்த வேண்டாம்" என்றிருந்தது தந்தியில்.

ஒரு நிமிஷம் என் ஹ்ருதயமே நின்று விட்டதுபோலத் தோன்றியது! என்னுடைய நெஞ்சு அடித்துக்கொண்டவேகம் என்னை வியப்படையச் செய்தது. பிறகு என்ன நடந்தது என்று என் நண்பர் நாராயணசர்மா எனக்குச் சொன்னபோதுதான் தெரியவந்தது!

தந்திப் பியூன் செய்த தவறு எனது வருத்தத்தைப் பன்மடங்காக்கிவிட்டது! தந்தியில் என் விலாசத்திற்கும், பக்கத்து வீட்டிற்குப் புதிதாகக் குடிவந்திருக்கும் படடைரக்டருக்குமுள்ள வித்தியாசத்தை அறியாது! "டைரக்டர்" என்பதற்கு "டாக்டர்" என்று தந்திச் சேவகன் நினைத்து என்னிடம் கொடுத்துவிட்டான்! என்னுடைய அப்பொழுதைய மன நிலையில் விலாசத்தைக்கூடச் சரியாக வாசித்துப் பாராமல் தந்தியைப் பெற்றுக்கொண்டேன். அதை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு பொத்துக்கொண்டு வருகிறது! குழம்பிய மன நிலையில் கவரையும் உடைத்துவிட்டேன்! தவறான தந்தியும், கண்ணெதிரே கண்ட குருவியின் காட்சியும் என் 'இதயத் துடிப்பினை' அதிகமாக்கின; உள்ளம் அலைபாயச் செய்துவிட்டன.

சிறிது நேரம் கழிந்தது.

மீண்டும் தந்திச் சேவகன் வந்தான்!

"என்னப்பா, இப்போதானே தந்தியைக் கொடுத்துட்டுப் போனே, மறுபடியுமா?" என்றேன் வியப்போடு.

"இல்லீங்க. அது 'டைரக்டருக்'குங்க. உங்க தந்தி இதுதானுங்களே" என்று ஒரு தந்தியை என்னிடம் நீட்டினான். அதை உடைத்துப் பார்த்ததும், அதில் என் இதயம் மகிழும் இன்பகீதம் ஒலித்துக்கொண்டிருந்தது!

"இரண்டு ஆண் குழந்தைகள். தாயும் குழந்தைகளும் சுகம். புறப்பட்டு வரவும்" என்றிருந்தது!

"அப்பாடா! ஒரு பெரிய விசாரம் விட்டது, அப்பப்பா, என்ன ரகளை பண்ணிவிட்டான் இந்தத் தந்திச் சேவகன்!" என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

அப்பொழுது மேலே புதிய கட்டையில் கூடுகட்டி வாழ அக் குருவிகள் இரண்டும் தங்களுக்கு உயிருடன் கிடைத்த அந்த ஒரு குஞ்சைக் கவ்விக்கொண்டு மேலே பறந்தன!

ஆரோக்கியமான, சிறந்த, ருசியான, உணவிற்கும், ஊறுகாய்களுக்கும் அவசியமானது?

எங்கள்
டெக்கான் குவீன்
மார்க்
மிஸ்கி
பெருங்காயமே
காரம், குணம், மணம், ருசி இவைகளில் உயர்ந்தது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

நாராயணதாஸ் கேஸர்தாஸ் & சன்ஸ்,
17, கோவிந்தப்பநாயக்கன்தெரு, மதராஸ்.

ஹெட் ஆபீஸ்:- வட்காடி, பம்பாய். பிராஞ்சு:- பெரியகடைத்தெரு கும்பகோணம்.

நிலமீன்

ராமன்

இரவு பத்து மணி இருக்கும். மாரியப்பனும், முருகனும், மரக்கலங்களைக்கரையில் கொண்டு வந்து போட்டுவிட்டு, வலையையும் ஒரு ஓலைக் கொட்டானில் அன்று விழுந்த மீன்களையும் எடுத்துக் கொண்டு குப்பத்தை நோக்கி நடந்து வருகிறார்கள்.

பரிபூர்ண கிரணங்களுடன் திங்கள் வானத்தில் சஞ்சரிக்கிறான். அவனுக்குக் கிழே ரோகிணி ஒரு மின் மினிப் பூச்சிபோல் பிரகாசிக்கிறாள். குப்பத்தில் அனேகமாக அமைதி நிலவுகிறது. பெரும்பாலான குடிசைகளுக்குக் கதவே கிடையாது. இலை மறைவு காய் மறைவு என்பதுபோல், ஏதோ அந்த மணல் குன்றில், இயற்கை அன்னை அமைத்த சோலை நடுவில், மழைக்கு ஒரு குடும்பம் ஒதுங்க வேண்டிய இடம்தான் வாழ்க்கை இருப்பை நினைவூட்டும் வீடு.

ஆண்களுக்குப்பகலில் பெரும்பாலும், வானமும், அலைகடலும், மரக்கலமும் வாழ்க்கையின் உடன் பிறந்தவர்கள். பெண்களுக்கோ சமீபத்திலுள்ள நகரத்தில் மீன் விற்பதும், மற்றக்கீரை, தனியா, புஷ்பம் விற்பதும்தான் தொழில். கனத்த மழைக் காலங்களில் சமீபமுள்ள கனவான்களின் வீட்டுத் திண்ணை தங்குமிடம்.

இந்தச் சோலையில் சுமார் நூறு குடிசைகள் இருக்கும். சில வீடுகளில் தீபம் ஏற்றும் வழக்கமே கிடையாது. ஒரு சில வீடுகளில் அலைகடலிலிருந்து திரும்பும் ஆண்கள் வந்து உணவு அருந்தும்போதுமட்டும் காய் விளக்கு ஏற்றுவது வழக்கம்.

அன்று பூர்ணிமா. தென்னை மரங்களினூடே சந்திரனின் கிரணங்கள் ஒரு சில குடிசைகளின் மேல் விழுகின்றன. மீனைச் சுமந்து மாரியும், முருகனும் வரும் போது சந்திரனின் கிரணம் மரத்தின் ஓலையினூடே புகுந்து சற்று மீன் கூடையில் விழுந்தது. இருட்டும் வெளிச்சமும் கலந்த சோலையில் இப்படி ஒளியைக் கண்ட ஒரு மீன் கூடையிலிருந்து துள்ளியது. இதைப் பார்த்த மற்றொரு மீன் யோசனை செய்ய ஆரம்பித்தது. 'நம்முடன் அடைபட்டுக் கிடந்த இந்தமீன் துள்ளிக்குதித்து விட்டது. பாவம்! இந்நேரம் அது உயிரற்றதாயிருக்கும்: இல்லை; அதன்கதி என்னவாயிருக்குமோ? பாவம்! பாவம்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

இப்படி கூடையிலிருந்து துள்ளிய மீன் முருகன் மடியில் மாட்டிக் கொண்டது. இதற்குள் மாரியின் குடிசை வரவே, வலையைப் போட்டு விட்டு, மீன் கூடையைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, முருகன் தன் குடிசைப் பக்கம் நடக்கலானான்.

இரண்டு அடிகள் வைப்பதற்குள் கோடி வீட்டுக் குமரப்பனின் குடிசையில் ஓர் மின் வெட்டுப் போலுள்ள வெளிச்சத்தைக் கண்டான். அவன் மனம் துள்ளிக் குதித்தது. ஏன்? 'ஒருகால் குமரப்பனும் அப்பொழுது தான் வந்து உணவு உண்ணும் நேரமாயிருக்கும்; இப்ப நாம் போனால், அவர் மகள் அவருக்குச் சாதம் போடவெளியில் வருவாள். நாமும் பேச்சுப் பராக்காக அவளைச் சற்றே பார்க்கலாம். இந்த நிலா வெளிச்சத்தில், 'ஆத்தாடி! என்ன நல்லாயிருக்கும்கரேன்!' 'எனக்கு சோறுகூட வாணாம் போலிருக்கு! 'ஒருக்கா சாப்பிட குந்திக்கோன்னு குமரப்பன் சொல்லிட்டா இன்னுமென்ன வேணும் நமக்கு! அய்யாடி!' என்று நினைத்தானோ?

இந்த நினைப்பில் எழுந்த மனக்களிப்புடன், தன் மனக் குதிரையையும், நடைக் குதிரையையும் தட்டி விட்டான். தன் உணர்ச்சி வேகத்தில் 'ஐயாடி' என்று தன் துடையில் கையைத் தட்டினபோது அவன் மடிப் பக்கத்தில் ஏதோ 'ஜில் என்று தென்பட்டது! உடனே சற்றுத் துழாவலானான். அவன் கையில் ஒரு சிறிய மீன் மலர விழித்துக் கொண்டு நின்றது.

நிலா வெளிச்சத்தில் அதன் கண்கள் 'பளிச், பளிச்,' என்று மின்னின. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'மீன் எப்படி வந்தது? இவ்வளவு தூரம் கடலிலிருந்து வந்து விட்டோம். கூடையும் மாரியின் குடிசையில் இருக்கிறது. அதுவும் மடியில் எப்படி கவ்விக் கொண்டது.'

இதற்குள் நிலா வெளிச்சத்தில் அதன் உடலின் இயற்கை வெள்ளியும் சேர்ந்துமின்னவே, அவன் கண்களையும் மனதையும் ஓர் கவர்ச்சிக் குள்ளாக்கிவிட்டது அந்த மீன். மீனின் அழகைப் பார்த்துக்கொண்டே கும ரப்பன் குடிசைப் பக்கம் வந்து விட்டான் முருகன்.

* * *

ஏதோ கால் சத்தம் கேட்கிறதே? என்று சற்றுத் திடுக்கிட்டவளாய், காவேரி உற்றுக் கவனித்தாள். தந்தையின் கால் ஓசையில்லை. 'மற்று யாராக இருக்கலாம்? வேறு, யாராவது வாலிபர்கள், இந்தப் புகை விளக்கின் வெளிச்சத்தைக் கண்டோ? அல்லது, அப்பாரு இல்லாததைத் தெரிந்தோ? கெட்ட எண்ணத்துடன் வருகிறார்களோ?' என்று நெஞ்சும் மார்பும் படபடக்க, மீனைத் துக் கலங்கினாள். 'இவ்வளவு நாட்கள் அப்படி ஒன்றும் நடக்கவில்லை! நானும் பெரிய வளாகி ஒரு ஆறுமாச காலம் ஆகிறது! நானே அனுவசியமாய் வெளியில் ஒரு இடத் துக்கும் போவதில்லை? பகலில் கூட ஆண் பிள்ளைகள் மீன்பிடிக்கச் சென்ற பிறகுதான் வீட்டு வேலை செய்கிறேன்! ஊர் பெண்களுடன் வம்பு பேசுவதுகூடக் கிடையாது, பக்கத்துவீட்டுக் கிழவியுடன் வேலையில்லா நேரத்தில், வீட்டுக்குள்ளேயே குந்திக்கிட்டு ஏதாச்சியும், பேசிக்கிட்டிருப்பேன். அப்பாரு நித்தோம் சீக்ரம் வந்துடுவாரு, இன்னிக்கி என்னவோ நேரமாவுது? கிழவிகூட உறங்கிடுச்சு. இருட்டி, பத்துநாழி ஆயிடுச்சு.

'பயமா இருக்குதுன்னு தீவத்தைப்பொருத்திவச்சேன்: இந்தப் பையனுக பார்த்துக்கிட்டு வராங்களாக்கும்? எவன் வந்தாலும் சரி! வெளியே போய் நான் பார்க்கப்போவதில்லை. அப்படியா! 'சீட்டி கீட்டி' அடிச்சாங்களாக்கும்: கேக்கப்போறதில்லே! அப்பாரு வந்தப்புறம் அவுங்ககிட்ட சொல்லி ஊருக்கு எச்சரிக்கை செய்யச் சொல்லணும். அப்படியா மீறி வந்திட்டா? 'ஐயோன்னு!' கத்திடுறேன்!, என்று பலவிதமாய் எண்ணிக் குழப்பமடைகிறாள்.

* * *

இதற்குள் முருகன் அவள் வீட்டு வாசல் முன் பக்கம் வந்து சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரும் அங்கில்லை. கையில் மீன் துடித்துக்கொண்டிருந்ததை மறுபடி மடியில் வைத்துக்கொண்டான். அவன் மனம் இப்பொழுது துடிக்க ஆரம்பித்தது. நாம் என்ன காரியம் செய்து விட்டோம்? யாராவது கண்டால்? கதி என்ன வாகும்? நேரே வீட்டுக்குப் போகாமல் வெளிச்சத்தைக் கண்டு ஏமாந்து வந்துவிட்டேன்! காவேரி என்ன நினைத்துக்கொள்வாள்? வீட்டில் பெரியவர்கள் இல்லாதபோது வந்ததே பிசகு. இப்பொழுது திரும்பி வீட்டுக் குப் போகவேண்டும்: போனால், போகும்வழியில் யாராவது பார்த்துக்கேட்டால்? என்ன சொல்வது? மாரியின் வீடு அந்த மூலை; எங்கள் வீடோ வடக்குக் கோடி; இப்பொழுது நானிருப்பதோ கிழக்குக் கோடி. நல்லாயிருக்கிறது. எப்படி? எதற்காக வந்தேன்? யாரைக் கூப்பிடுவது? குமரப்பண்ணன் இல்லாட்டி, காவேரியுடன் எப்படிப் பேசுவது? இருட்டில் அதுவும் தனியாயிருக்கும் வயசுப் பிள்ளையிடம்; இளந்தாரியாகிய நான் எப்படி கூப்பிட்டுப்பேசுவது? காவேரி பயந்த பிள்ளை; நல்லபிள்ளையுங்கூட. ஏதாவது கூச் சலிட்டால்? என்ன செய்வது? திரும் பலாமென்றால் திரும்பவும் பயமாயிருக் கிறது? என்ன செய்வேன்?' என்ற மனக் கலக்கம்.

நிலாவோ பட்டுப்போல் காய்கிறது. மீன் மடியில் துள்ளுகிறது! வீட்டினுள் ஒரு சிறிய தீபம் சந்திரன் ஒளிமாதிரி குடிசைக் குள் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. இருவர் துடிக்கிறார்கள். ஒருவன் காதலின் வேகத் தால் துடிக்கிறான்—ஒருத்தி—அவள் பெண்மை வெட்கத்தாலும் பயத்தாலும் துடிக்கிறது.

சற்று முருகன் அண்ணாந்து மேல்வானை நோக்கினான். அங்கே சந்திரன் உல்லாசமாய், சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறான். அவன் கீழ் ரோகிணி பின்தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறாள். சுற்றுமுற்றும் பார்த் தான். குப்பத்தின் அமைதி; குளிர்ந்த தென்னஞ்சோலையின் காற்று, அதன் நிழல்களினூடுபாயும் சந்திரனின் ஒளி. நூறு கஜ தூரத்தில் அலைகடல். முழங்கும் அலைகள். சற்று உற்றுக்கவனித்தான்: சந்திரனின் இன்பக் கிரணத்தைக் கண்டோ? - ரோகிணியின் பொறுமையைப் பார்த்தோ? கோழையின் மனத்தை அறிந்தோ? இல்லை, இன்பத்தின் எல்லையை உணர்ந்தோ? காதலின் கனிவைக் கண்டோ? இன்பக் கூத்தாடுவது மாதிரி ஓர் தோற்றம்.

ஓர் அலை கரையில் மோத மற்ற ஒரு அலை எதிர்த்துவர இரு அலைகளும் நீர்ப்பரப்பில் சந்திக்கின்றன. உடனே ஒரு சத்தம், அது சேர்க்கையின் சத்தமோ? அல்லது, இன்பத்தினால் ஒருவரை ஒருவர் தழுவியபின் ஆனந்தத்தில் கூறும் இன்மொழியோ? அது மட்டுமா? அந்த அலை மோதியதிலிருந்து கிளம்பி உதிரும் நீர்த்திவலைகள் பழையபடி தண்ணீரில் கலக்கும்போது, ஒரு சலசலப்பான சத்தம்! இது மகிழ்ச்சியில் ஏற்படும் ஆனந்தச்

சிரிப்பின் ஒலியாக முருகன் மனதில் மாறிவிட்டது.

ஆசையின் வேகம் மனதைத் தூண்ட, மகிழ்ச்சி உடலை அலைக்க, இன்பக் களிப்பு கண்முன் காட்சியளிக்க, மீனின் மின் ஒளியும், துடிக்கும் உடலுருவும், நினைவுக்குவர, தன்னை மறந்து, 'காவேரி! அப்பாரு எங்கே?' என்று வாய் திறந்து தாழ்ந்த குரலில் கேட்டான். அவனுக்கு மயிர்க் கூச்சலெடுத்தது.

இந்த அமைதியினூடு காற்றில் மிதந்து வந்த சொல்லின் உருவம் சரேலென காவேரியின் மனதில் புகுந்து கொண்டது! அவள் ஓர் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டாள், கணையாழியைக் கண்ட சீதைபோல!

அந்தச் சத்தம் அவள் மனதில் பதிந்திருக்கும் அழகனின் குரல்! அவள் விரும்பும் ஒரு தனி மனிதனின் குரல்! துடி துடித்த மனம் துள்ளிக் குதித்தது! வெளியில் போகச் சற்றே தயங்கினாள்.

"எவ்வளவு பிரியமிருந்தாலும், தனிமையில், இரவில், பேச்சுக் கொடுக்கவோ? பழகவோ? நல்லநேரமில்லை! அதுவும், நமக்கு அழகல்ல! நம்ம அம்மா, அப்பாரு எல்லாரும் எப்படி இருந்தவங்க! இருந்தாலும் அவரு வந்து கேக்கிறாரு; பதில் பேசாட்டி, ஏதாச்சியும் நினைத்திட்டால்? இந்த நேரத்திலே என்ன அவசரமோ?' என்கிற எண்ணங்கள் நொடிக்குள் அலைபாய்ந்தன, அவள் உள்ளத்தில். பயத்தால் உடம்பு நடுங்குகிறது.

இருந்தாலும், "என்ன சமாசாரம்?" என்று கேட்டு விட்டு,

"அப்பாரு இல்லே; வரநேரம்." என்று சொல்லி நிறுத்திக் கொண்டாள்.

அலைகள் மோதிவிட்டன! எண்ணத்திவலைகள் பறந்து கிளம்பின! இருவர் உள்ளத்திலும் ஒரு அமைதி! ஒரு தனி ஆனந்தம்! பந்தயத்தில் குதிரை ஜயித்ததைக்கேட்டு ஆனந்திப்பது மாதிரி, சமீபத்தில் இருவர் ஒருவரை ஒருவர் பார்க்காமல் சத்தத்தை மட்டும் கேட்ட சந்தோஷம்! இதைக்கேட்டவுடன் தான் முன்கொண்ட சந்தேகங்கள் நினைவுக்குவர, சற்று மனக்கலக்க முற்றவனாய், பதில் கூற வேணுமென்ற முறைக்கு, 'காலையில் வந்து கண்டு கறேன்:' என்று கூறி அவ்விடம் விட்டு நகர முயன்றான் முருகன்.

காவேரி மனதுக்குள் இன்பம் துள்ள, ஏதெல்லாமோ எண்ணமிடலானாள்: "ஏன் வந்தார்? காலையில் என்ன கேட்கவருவார்? குரலில் களைப்புத்தோன்றுகிறதே! கடலிலிருந்து இப்பத்தான் வருகிறாரோ? என்னவோ? தெரியவில்லையே! சாப்பிட்டாரோ என்னவோ? வெந்தயக் கீரை பருப்பு கடைந்திருக்கிறேன். அவருக்கு பிடிக்குமென்று அம்மாயி சொல்லுமே!"

* * *

பழையபடி நாலடி தன் வீட்டை நோக்கி நடப்பதற்குள் மடியிலுள்ள மீனின் நினைவு வந்தது முருகனுக்கு. உடனே அதை மறுபடியும் கையில் எடுத்தான். அது துடித்துக்கொண்டிருந்தது.

அதே நிலாவெளிச்சத்தில் மின்னும் தோற்றம்! 'கடலில் இன்பமாய் விளையாடிக் கொண்டிருந்த நீ என் மடியிலும், கையிலும் சிக்கிக்கொண்டு இப்படி கஷ்டப்படுகிறாயே? நீ என் மடியில் வந்த அதிர்ஷ்டம் நான் இன்று காவேரியுடன் பேசும் பாக்கியம் கிட்டியது! நீ சுயேச்சையாய், உன் தாய் பிள்ளைகளுடன் எப்படி மகிழ்ந்து சஞ்சரித்துக் கொண்டிருப்பாயோ, அதே மாதிரி, நாங்களும் சஞ்சரிக்க விரும்புகிறோம். ஆனால், எங்கள் வாழ்க்கையில் கட்டுப்பாடு என்ற வலை இருக்கிறது. உன் சுயேச்சை வாழ்க்கையை வீணாக்க நாங்கள் எங்கள் வலையை வீசி உங்களைப் பிடிக்கிறோம்; கொல்கிறோம்; தின்று களிப்படைகிறோம். ஆனால் நீங்கள் அனுபவிக்கும் சுதந்திரம் எங்களுக்குண்டா?

'எவ்வளவு ஆசையாய் அவள் வீட்டிற்குப் போனேன். ஹூம்........ஏதோ......கொஞ்சம்......மகிழ்ச்சி தான்! இதற்குக் காரணம் நீயும் இந்த அலைகடலுமே! ஆம்! காதலுக்கும் துடிப்புண்டு! நீ கடலைக் கூடுவது போல் நாங்கள் கூடினால் இன்பம் உண்டு! கடலில் அலை அசையும், காதலில் மனம் இசையும்! அலை கடலைக்கலைக்கிறது; ஆசை காதலைக் கூட்டுகிறது! உன்னால் என் இன்ப வலை இணைக்கப்பட்டது; இல்லையேல், என் தொழில் முறைப்படி உன்னைக் கறி சமைத்துத் தின்றிருப்பேன். என் காதலி சொல் கேட்ட உன்னை உன் இருப்பிடத்தில் சேர்த்து விடுகிறேன்!' என்று 'விர்' என்று கடலை நோக்கி நடந்தான் முருகன்.

கடலைக் கண்டவுடன் மீனும் மகிழ்ந்தது! சற்று நேரம் மீனைப் பழையபடி சந்திர ஒளியில் பார்த்துவிட்டுக் கடலில் விட்டுவிட்டான்!

கொஞ்ச தூரத்தில் கரையில் ஆள் நிற்பதைப் பார்த்து, கட்டுமரத்திலிருந்தே, 'யாரடா இது? இந்நேரத்திலே? கடல்லே குதிக்கவா வந்தே?' என்று குமரப்பன் சத்தம் கொடுத்தான். அதைக் கேட்டவுடன், முருகனும் சற்றுத் தெளிவான குரலில், 'நான்



" நிலாவொளியில் சோறு பரிமாறினுள் "

தான்! முருகன்! இப்பத்தான் நானும் மாரியும் வந்தோம்; கட்டுமரத்தை அவுத்துப் போட்டுட்டு வீட்டுக்குப் போனான். நான் தொலையிலே ஏதோ, நீங்க யாரோ, வருவதைப் பார்த்துச் சற்றுப் பொறுத்து வாரேனுட்டு சொல்லி, நின்னுக்கிட்டிருக்கிறேன்;' என்றான். இதற்குள் குமரப்பனின் கட்டுமரமும் கரைக்கு வரவே அதையும் கழற்ற உதவி செய்து விட்டு, குமரப்பனுடன் வீட்டை நோக்கி நடக்கலானான் முருகன்.

போகும் போது குமரப்பன் முருகனைப் பார்த்து, 'நீ ஏன் நம்ம வீட்டுப் பக்கமே வருவதில்லை? காவேரி இருக்காள் என்ற வெட்கமா என்ன? உனக்கு அவளைச் சிறு பிள்ளையிலிருந்தே தெரியாதா? எனக்கும் தனியாக இப்படிப் போய் கடல்லே மீன் பிடித்துவரக் கஷ்டமாயிருக்குது; நீ கூட்டாளி வந்தா, எனக்கும் நல்லது தான்!' 'என்று சொல்லி, 'வா, ஊட்டுக்குப் போயி, சோறு தின்னுட்டு உங்க ஊட்டுக்குப் போகலாம்' என்று அழைத்தான்.

தகப்பன் பக்கத்திலிருக்கும் தன் காதலனுக்கு அன்று இரவு நிலா வொளியில் சோறு பரிமாறினாள் காவேரி. இடையிடையே சோறும், தண்ணீரும், வெஞ்சனமும், பரிமாறும் காவேரியின் நிழல் முருகனின் மேல் படவும், முன் நடந்த நிகழ்ச்சி எல்லாம் நினைவு படுத்திக் கொண்டு 'அந்தக் கடல் மீன் இந்த நில மீனைத் தந்ததே' என்கிற பூரிப்பில் சாப்பாட்டைச் சுவைத்தான்.

இவைகளையெல்லாம் வானில் சஞ்சரிக்கும் ரோகிணி கண்டு, சந்திரனிடம் "பார்த்தீர்களா! குடிசை வெளிச்சம் செய்ததை? அங்கு நீலக் கடல்; இங்கு நில மங்கை; இவள் நீலத் துகிலுடுத்து நில வொளியில் நல்விருந்தூட்டுகிறாள்! அங்கு கடல் மீன்; இங்கு நில மீன் விழியாள்! பார்த்தீர்களா இன்னும்! கடலில் கிடைத்த மீன் கடலில் கலக்க, நிலத்தில் வீசிய வலையில் நில மீன் சிக்கியதை? கலைமதியாகிய நீங்கள் வீசும் வலை கடலைக் களிப்புறச் செய்தது; வலைஞன் வீசிய வலை என் மனதில் களிப்பூட்டுகிறது!"

கலைஞன் வீசிய வலையும், வலைஞன் வீசிய வலையும், வீண் போகாது தான்!



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி,
24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.
பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

புத்தக விமர்சனம்

திருப்பாதுகமாலை

[ஆசிரியர்: ஸ்ரீ. ஆர். கேசவ ஐயங்கார் எம்.ஏ., பி.எல். கிடைக்குமிடம்: பாலாஜி ஸிண்டிகேட், தெற்கு மூன்றும் வீதி, புதுக்கோட்டை. விலை தெரிவிக்கப்படவில்லை.]

ஓர் ஆயிரத்தெட்டுப் பாக்களைக் கொண்டுள்ள இந் நூல், கவிதார்க்கிகஸிம்ஹம் முதலான சிறந்த பட்டங்களால் அறிஞர் அனைவரும் போற்றிப் பாராட்டப் பெறுமவராகிய, ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸம்ஸ்கிருதத்திலே அருளிச் செய்துள்ள ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தின் மொழிபெயர்ப்பு.

இறைவன் ஆண்டவன். உயிர் அடிமை. அருட்கடலாகிய இறைவனை, உயிர் அன்புடன் அடிமை செய்தலால் அடையும் நிலையே பெரும்பேறு.

இவ்வாறு மெய்யடிமை புரிந்து மேம்பட்டவர்களுள் முதன்மை பெற்றவர் வேதந் தொகுத்துத் தமிழ்ப் பாடல்செய்த விமலராகிய நம்மாழ்வார். அப் பெரியாரே பாதுகா மூர்த்தியாக விளங்குகிறார். அவரை முன்னிலையாக்கி, அவர் தம் அருஞ் சிறப்புக்கள் இறைவன் திருப்பாதுகத்தின் அருஞ்சிறப்புக்களுடன் ஒற்றித்து மிளிரும் வண்ணம் பாக்கள் தொகுக்கப் பெற்றிருப்பதை அன்பர் ஓதியுணர்ந்து உய்வு பெறுதல் வேண்டும்.

முதனூலிலேயுள்ள பத்ததி முறைகளும் பாடல் தொகையும் அவ்வாறே இத்தமிழ் வழி நூலின்கண்ணும் அமைந்துள்ளன.

சித்திர பத்ததி இயன்ற அளவு படங்களுடன் காணப்படுகிறது. ஒரு சாரார் 'மிறைக்கவி' என்னும் சித்திர கவிகளையும் பொன்னேபோற் போற்றிக்கொள்ளவேண்டும் என்னும் கருத்து இதனால் நன்கு தெரிகிறது.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸம்ஸ்கிருத பாஷையிலே பற்பல அரிய நூல்களை அருளியுள்ளார். அங்ஙனமே தமிழ் மொழியிலும் இன்சுவைப் பாடல்கள் செறிந்த பல நூல்களை அருளியுள்ளார். அவர் நூலை மொழிபெயர்ப்பதென்பது எளிய செயலன்று. அப்பேராசிரியரிடத்துப் பேரன்பு பூண்டுள்ளவராகிய ஸ்ரீ ஆர். கேசவ ஐயங்கார் அவர்கள் தமிழ்ப் பயிற்சி யொன்றே பெற்றுள்ளவர்க்குப் பயன்பட மிக முயன்று இந்நூல் செய்துதவியது அரிதினும் அரிய உதவியாகும்,

செய்யுட்கள், சொல் நோக்கும் பொருள் நோக்கும் தொடை நோக்கும் நடை நோக்கும் துறை நோக்கும் முதலான பல் நோக்கும் அமைந்துள்ளன. நூலின் கண் நுழைந்து நோக்குவார்க்கே இவை விளங்கும்.

பாதுகா தத்துவத்தை விளக்கும் ஆங்கிலக் கட்டுரை ஒன்று இந் நூலின் முன்னே சேர்க்கப் பெற்றிருப்பதும் பயன் தருவதாகும்.

இந் நூலாசிரியர் தம் விண்ணப்பத்திற் குறித்தவாறு இதற்குத் தமிழுரை அடுத்த பகுதியிலே உதவுதல் எல்லோருக்கும் துணை புரிவதாகும்.

தருமபுர ஆதீனக் கோயில்கள்.

ஆதீன வெளியீடு எண் 192.

[எழுதியவர்: வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், கிடைக்குமிடம்; ஞான சம்பந்தப் பதிப்பகம், தருமபுரம். விலை குறிக்கப்படவில்லை.]

இந்நூல், தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாமலராய் (17—5—1949) வெளியிடப் பெற்றுள்ளது.

இதனுள், ஆதீன மடாலயத்தைப் பற்றியும் அதன் சார்பிலுள்ள இருபத் தெட்டுக் கோயில்களைப்பற்றியும் பல செய்திகள் ஏற்றபெற்றி எழுதப் பெற்றுள்ளன.

இதனை எழுதியவர் 384 பக்கங்களுள்ள இந்நூலை இருபத்து நான்கு நாட்களுள் எழுதி முடித்ததாகத் தம் முகவுரையிலே பொறித்துள்ளார்.

திருச்சி மௌன மடத்தைப்பற்றி எழுதியுள்ள பகுதியிலே, "சிராப்பள்ளி" என்ற பெயர்க்காரணம் குறிக்கப் பெற்றிருப்பது சுவை பயப்பதாயினும் நன்கு ஆய்ந்து கொள்ளப்படவேண்டியதாம்.

இந்நூலுள் கோயிலமைப்பு முதலாகக் கல்வெட்டுக்கள் இறுதியாக வரைந்து காட்டப்பட்டுள்ளன. தல புராணச் செய்திகளும் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளன.

அழகு வாய்ந்த இருபத்தேழு படங்கள் இந்நூலை அணி செய்கின்றன.

ஒவ்வொரு கோவிலுக்கும் இப்போது எவ்வளவு காலபூசை நிகழ்கின்றன வென்பதையும் எவ்வளவு சொத்துக்கள் உள்ளனவென்பதையும் தெளிவுறக் குறிப்பது நலந்தருமென்பது எம் எண்ணம்.

விரைவிற் செய்ததனால், பிழைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாதீனத்தாரின் மற்ற வெளியீடுகளைப் போலவே இந்நூலும் நல்ல காகிதத்திலே கண்கவர் தோற்றமுடையதாக அச்சியற்றப் பெற்றுள்ளது. அன்பர்கள் ஓதியுணர்ந்து பயன்கொள்ளத் தக்கது.

கம்பரச ஆராய்ச்சி

[ஆசிரியர்: ஸ்ரீ கு. பாலசுந்தர முதலியார். கிடைக்குமிடம்: கம்பர் பதிப்பகம் 28, முத்து கிருஷ்ணன் தெரு, கொண்டித் தோப்பு; சென்னை 3. விலை ரூ. 3/-]

முதல் கோணல் முற்றும் கோணல் என்பது எங்கே? அண்ணாத்துரை எழுதிய கம்பரசத்தில் என்பதை நன்குவிளக்குகிறார் இந்தக் கம்பரச ஆராய்ச்சியாளர். தமிழறிஞர் அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

காய்கறிப் பயிர் முறை

[ஆசிரியர்: ச. கு. கணபதிஐயர் பி. ஓ. எல். பிரசுரம்: கலைமகள் காரியாலயம். மயிலாப்பூர். சென்னை. விலை ரூ. 2—8—0]

'காய்கறிகளை அதிகமாகப் பயிர் செய்யுங்கள்' என்று அரசியலாரே ஊக்கம் அளித்து வரும் இந்தச் சமயத்தில் அவற்றைப் பயிர் செய்யும் முறைகளைப் பற்றிக் கூறும் இந்நூல் ஆவலுடன் வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. தோட்டக் கலையில் ஊக்கமுள்ள யாவரும் இந்நூலைப் படித்துப் பார்ப்பது நல்லது.

"லிப்கோ" தமிழ் முறைகள்

(S. S. L. C. 1950. Tamil-Part II)

[கிடைக்குமிடம்: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி. விழுப்புரம். விலை ரூ. 2—4—0]

எஸ். எஸ். எல். ஸி. தமிழ் மாணவர்களுக்குகந்த தமிழ் உரை நூல். விரிவாகவும் தெளிவாகவும் எளியநடையில் மாணவர்களுக்குப் பெரிதும் துணை புரியும் வகையில் மிக முயன்று அமைக்கப்பட்டுள்ளது.

வைராக்யம்

[ஆசிரியர்: "வஸந்தன்" பிரசுரம்: கலைமகள் காரியாலயம். மயிலாப்பூர். சென்னை. விலை ரூ. 2—4—0]

சுவாரஸ்யமான நவீனம். "வைராக்யத்தில்" உடலழகுடன் உள்ளத்தழகு படைத்த கதாநாயகி மனோரமா தேச சேவையில் தீவிரமாக ஈடுபடுகிறாள். அவளுக்கும் அவள் காதலனுக்கும் பல வித இன்னல்கள் ஏற்படுகின்றன. ருசி குன்றாது பல மர்மங்களை விளக்கி மங்களமாக முடிக்கிறார் ஆசிரியர்.



Sastry & Sastry

JEWELLERS

33, EAST MADA STREET,

MYLAPORE P.O., MADRAS - 4.

ஸரளமான நடையும், நல்ல சம்பாஷணைகளும் பரபரப்பான சம்பவங்களும் சேர்ந்து இந்த நவீனத்தை அலங்கரிக்கின்றன.

மாப்பிள்ளை வேட்டை

[ஆசிரியர்: ஸ்ரீ ரஞ்சன் பி. ஏ. எம். லிட். பிரசுரம் 'பேசும் படம்' விலை ரூ. 2—0—0]

பொழுதுபோக்குக்காக எழுதப்பட்டாலும், கடைசிவரை சுவாரஸ்யம் குறையாமல் படிக்கவேண்டிய ரஞ்சனுடைய முதல் நாடகம்.

என்ன வாழ்க்கை இது?

[ஆசிரியர். ஸி. ஆர். மயிலேறு, எம். ஏ. பிரசுரம்: நாஷனல் பிரிண்ட்டர்ஸ் & ட்ரேடர்ஸ் லிமிடெட். சிதம்பரம். விலை ·ரூ 1—8—0]

ஐந்து ஓற்றையங்க நாடகங்கள். ரஸிக்கும் படியாகவும் படிப்பினை புகட்டுவனவாயும் இருக்கின்றன. நாடகங்களை நடிப்பதில் திறமையுள்ள இவ்வாசிரியர் எளியதும் இனியதுமான ஒருதமிழ் நடையைக் கையாளுகிறார்.

வீட்டு வைத்தியர்

[ராஜன் எழுதியது. (இரண்டாம் பதிப்பு) பிரசுரம்; கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை—விலை ரூ 6.]

பிரசித்தமான வீட்டு வைத்தியர் என்ற நூல் இப்பொழுது இரண்டாம் பதிப்பில் மருந்து முறைகளில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளையும் அனுஷ்டானங்களையும் இணைத்து வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தகைய நூல் ஒவ்வொரு இல்லத்திலும் இருப்பது அவசியம். அலோபதிக் முறை நாட்டில் தினே தினே பரவிக்கொண்டு வருகிறது. கிராமங்களில் கூட இப்பொழுது பெரும்பாலும் இந்த வைத்திய முறை தான் ஓங்கி நிற்கிறது. வெள்ளையர்கள் புகுத்திய மாறுதல்களில் அலோபதிக் வைத்திய முறையும் ஒன்று. வெள்ளையர் ஆட்சி ஒழிந்ததென்றாலும் அவர்கள் வகுத்த முறைகள் மாறவில்லை. நாட்டிலுள்ள பல அரிய கலைகள், கைத்தொழில்கள் ஆதரவற்று அழிந்தன; அழிக்கப்பட்டன. இனி அவைகளை மீட்க முடியுமா என்று ஏங்கும்படி ஆக்கி விட்டார்கள். வைத்தியத் துறையிலும் நம் புராதன முறைகள் புதைக்கப்பட்டு வருகின்றன. நாட்டு வைத்தியர் க்ஷீணித்து மறைந்து வருகிறார். ஆங்கில அலோபதிக் வைத்தியம் படை எடுத்து அவர்களைக் கிராமங்களிலிருந்தும் விரட்டி வருகிறது.

கை மருந்து மறைந்து விட்டது. ஆங்கில மருந்து வீடுகளில் புகுந்து இடம் தேடிக் கொண்டு விட்டது. எனவே இந்த நவீன அலோபதிக் முறையை மக்கள் புரிந்துகொள்வது அவசியம். டாக்டரைக் கூப்பிட்டாலும் பொதுவாக வியாதியின் தன்மையை நாம் புரிந்து கொள்வது அவசியம். வைத்தியக் கல்லூரிகளில் படிக்காத மக்கள் இப்புத்தகத்தை அவசியம் படிக்கவேண்டும். ஆங்கிலம் படித்தவர்கள்கூட விஷயங்களை எளிதில் புரிந்துகொள்ள இப்புத்தகம் மிகவும் உதவும். வெறும் எட்டுச்சுரைக்காயாக மட்டுமில்லாது 40 வருட ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டும் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்தும் எழுதப்பட்ட இந்நூல் வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் என்பது திண்ணம்.

தேசீய வைத்திய முறையில்· அக்கரை கொண்டு பழைய நூல்களையும் நாட்டின் பல்வேறு பாகங்களில் உள்ள அனுபவ ஞானத்தையும் கொண்டு இத்தகைய ஓர் நூல் எழுதப்படுமானால் எவ்வளவு சிறந்ததாக இருக்குமென்று சொல்லத் தேவையில்லை. அரசியலில் தேசீயத்திற்குப் பாடுபட்ட டாக்டர் ராஜன் வைத்திய முறையிலும் தேசீயம் தேவை என்பதை உணர்ந்து, நம் பழைய முறைகளைச்சேகரித்து, செப்பனிட்டு இதைப் போன்ற ஓர் நூலை எழுதுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

பாக சாஸ்திரம்

ஓர் வைணவ குடும்ப ஸ்திரீயினால் தம் அனுபவத்தை ஒட்டி எழுதப்பட்டது. ஹிந்து மத சம்பிரதாயப்படி, இல்லங்களில் தயாரிக்கப்படும் பிரஸாதங்கள், குழம்பு, ரஸம், கறிகாய் வகைகள், பக்ஷணங்கள்—இவைகள் தயாரிப்பது எப்படி என்பதை எளிய நடையில் தம் பெயரை வெளியிடாத ஆசிரியை தம் தோழிகளுக்கும், ஏனைய குடும்பபாரம் வகிக்கும் பெண்களுக்கும் பயன்படும் பொருட்டு எழுதியுள்ள இச் சிறு நூல் வரவேற்கத் தக்கது. வைணவ பாணியில் எழுதப்பட்டிருப்பினும், விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் சுக்கு வெல்லம், தீபாவளி மருந்து போன்ற கை மருந்து தயாரிக்கும் வகைகளையும் சில்லறை வியாதிகளைப் போக்க நமது முன்னோர்கள் வெற்றிகரமாகக் கையாண்டுவந்த சில முறைகளையும் ஆசிரியை எடுத்துரைத்திருக்கிறார். அனுபவ ஞானத்தில் உள்ள இத்தகைய முறைகளை ஒழுங்குபடுத்திப் பிரசுரிப்பது அவசியம். ஆசிரியை பாக சாஸ்திரத்தைப் பிரசுரித்தது மாதிரி, குடும்ப வைத்திய முறைகளையும் சேகரித்துப் பிரசுரிப்பார்களானால் மிகவும் இக்காலப் பெண்களுக்குப் பயன் தரும்.

பிரதியின் விலை அணா 8. கிடைக்குமிடம் "ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்" ஸ்ரீரங்கம். ஒவ்வொரு குடும்பத்திலும் இப்புத்தகம் அவசியம் இருக்கவேண்டும்.

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை
உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!

Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202-203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி,

ஹைதராபாத் (டெக்கான்)

டெப்போ:— கோயம்புத்தூர்.

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

அத்தியாயம்—6

ஆனந்த பைரவியின் அருமையான இசை சிவன்கோவிலில் அர்த்தஜாம பூஜையை அறிவிக்கும் சமிக்ஞையாக நாதஸ்வரத்திலிருந்து சுகபாவமாகக் காற்றில் மிதந்து வந்து, அப்பொழுதுதான் கண்ணை விழிக்கும் லீலாவின் காதில் ஒலித்தது என்றாலும் அதை லக்ஷியம் செய்யாமல், "சங்கர்" என்று அழைத்த வண்ணம் திரும்பினாள். பக்கத்தில் நாற்காலியில் கோபால் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும்,

"சங்கர் எங்கே?" என்றாள்.

"அவனுக்கும் நமக்கும் தற்சமயம் முப்பது மைல் தூரத்தை இடைவெளியாக உண்டாக்கிவிட்டது ரயில்வண்டி" என்று சங்கர் வைத்திருந்த கடிதத்தை எடுத்து அவள்கையில் கொடுத்துவிட்டு, "இந்தப்பாலை முதலில் சாப்பிட்டு விட்டுப் பிறகு கடிதத்தைப் படி" என்று பால் டம்ளரை அவள் பக்கமாக நீட்டினான்.

" அந்தச் சமயம் அவள் நாக்கு உலர்ந்து அண்ணத்தில் ஒட்டிக்கொண்டபடியால் மறுக்காமல் வாங்கிச் சாப்பிட்டாள். பிறகு கடிதத்தைப் படித்தாள், எழுந்துஉட்கார்ந்து கொண்டு.

அவளையே உற்றுநோக்கிய வண்ணமிருந்தான் கோபால். அவள் தரையை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள். இருவர் வாயும் மௌனத்தைக் கடைப் பிடித்ததே தவிர, மனம் மேலே பேசவேண்டியதற்கு ஆதாரம் தேடிக் கொண்டிருந்தது.

தாலூகா ஆபீஸ் மணி பதினொன்று அடித்த சப்தம் கேட்டதும், திடுக்கிட்டவளாக, "ஐயோ பதினொன்று அடித்து விட்டதே கோபால்! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. தாங்கள் ஏன் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள். மாமி இல்லாததினால் வழக்கப்படி உங்கள் வீட்டிற்கு இன்று என்னால் வரமுடியாது போலிருக்கிறது. தனிமைக்கு இனி பயந்து என்ன செய்வது.? அதனால் எனக்குப் பயமில்லை; சென்றுவாருங்கள்" என்றாள்.

"இந்த நிலைமையில் உன்னைத் தனியாக விட்டுச் சென்றால் என்னைப்போல் படித்த முட்டாள் ஒருவரும் இருக்கமுடியாது. இதோ அம்மா வந்து விடுவாள். அவள் வந்த பின்பு செல்லுகிறேன். வீட்டிற்குச் சென்று விட்டால்மட்டும் உறக்கம் கண்ணைத் தழுவுமா?" என்றான்.

பதில் நீண்டமூச்சு வெளிப்பட்டது.

"லீலா, நீ என்ன நினைத்தாலுமே அதைப் பற்றி நான் கவலைப்படப்போவதில்லை. என் கடமையை நான் சொல்லியாக வேண்டியது அவசியமாகிறது. 'விதி, விதி' என்று சொல்லி அதற்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் நடந்துவிட்டான் சங்கர். நான் முழுவதும் அதையே நம்பவுமில்லை; வெறுக்கவும் இல்லை. உன் விஷயத்தில் அவனால் ஏற்பட்ட களங்கத்தை என்னால் மாற்ற முடியும் என்று நம்புகிறேன். அவனை விட நீயும் நானுமே பால்யமுதல் பழகிவந்திருந்தாலும் 'தாய் தந்தையற்றபெண்' என்று இரக்கமான பாசம் உன்மீது ஏற்பட்டதே தவிர வேறு எவ்விதமான சலனமும் தோன்றினதில்லை. அதனால் வெறுப்பின்றி உன்னை ஏற்கமுடியும். எங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற உனக்கு மனமிருக்கும் பக்ஷத்தில், விருப்பம் தோன்றாவிட்டாலும் வெறுப்பில்லாமலிருந்தால் என்னை ஏற்றுக் கொள், அல்லது உன்மனம் இடமளிக்கவில்லையென்றால் கடமைக்காகச் செய்ய வேண்டாம். பிறகு உனக்கு என்னால் எவ்விதமான உதவி தேவையோ அதைச் செய்யப் பின்வாங்காத சகோதரனாக நடந்து கொள்ளுவேன்" என்றான்.

"கோபால் உங்கள் நன்றிக்கு வந்தனம். வாழ்க்கைப் பாதையில் ஏற, முதல் அடிவைக்கும் பொழுதே வழுக்கி விழுந்த அபாக்கியவதி நான். இனி எனக்கும், இல்வாழ்க்கைக்

கும் வெகு தூரம். ஏதோ என்னைப் போன்ற அனாதைகளுக்குத் தொண்டு செய்வதில் என் வாழ்நாள் அர்ப்பணமாகத் தங்களாலான உதவி செய்யுங்கள். பகவான் உங்கள் வாழ்க்கை வனத்தில் மணமுள்ள சுகந்த மலர் புஷ்பிக்க அனுக்கிரஹம் செய்யட்டும்'' என்று ஏதோ தொடர்ந்த வக்கியம், ''கோபால்!'' என்ற மி. மாமியின் குரல் கேட்டு, தடைப்பட்டு நின்றது.

“லீலா, கண் விழித்து விட்டாயா?” என்று பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

அடங்கியிருந்த ஆர்வத்தீ, கனிந்து புகையவே, “மாமி!” என்று அவள் மடியில் முகத்தைப் புதைத்த வண்ணம் மறுபடி தேம்பலானாள்.

“லீலா! அழாதேயம்மா. உன் கண்ணீர் என் குடும்பத்தையே எரித்து விடுமோவென அஞ்சுகிறேன். ‘பாவி, துரோகி இம்மாதிரி யாவான்’ என்று கனவிலும் எண்ணவில்லை. வீணாக உன்னையும், என்னையும் ஊர்வாயில் விழும்படி செய்துவிட்டான். சிரிப்பார் முன் இடறிவிழுவதுபோல், ‘அவள் என்ன கெட்ட எண்ணத்துடன் இப்படிப் பழக அனுமதித்திருக்கிறாளோ?’ என்ற சொல்லை என் காதினால் கேட்டேன். பெரியோர் வகுத்த கோட்பாட்டை அநாகரிகமென்று இகழ்ந்தேன். இப்பொழுது அதுவே உண்மையான நாகரிகமென்று தோன்றுகிறது. இப்பொழுது ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நீ எனது நாட்டுப்பெண் என்பது அன்றையிலிருந்து ஏற்பட்டது. சங்கரானாலென்ன?

கோபாலானுலென்ன? அடுத்த வாரத்தில் கல்யாணத்தை நடத்தி விடுகிறேன். அவன் உத்யோக நிமித்தம் சிலவருஷங்களுக்குக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதாம். தாயற்ற லீலாவைக் கல்யாணமில்லாமல் வைப்பது என்பது சரியல்ல வென்று இக் கல்யாணம் நடைபெறுகிறதென்று ஊர் வாயை மூடி விடலாம். நீ என்ன சொல்லு கிருய். மேலே கோபாலும், நீயும் சேர்ந்தே சென்னை சென்று படிக்கலாம்'' என்ருள்.

சட்டென எழுந்து உட்கார்ந்து கொண்டாள். தேம்பல் நின்றது. "மாமி, பெண்தானே பெண்ணுள்ளத்தை அறியமுடியும்? நீங்களே இவ்விதம் சொன்னுல் நான் யாரிடம் முறையிடுவது? உங்கள் நாட்டுப் பெண்ணுக வரும்பாக்கியம் இருந்தால் சங்கரின் மனைவியாகத்தான் வரமுடியும். எல்லாம் அறிந்த உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லுவது அனுவசியம். கோபாலை வஞ்சித்து வாழ்க்கை நடத்த நான் எப்படிச் சம்மதிப்பேன். ஊர்க்காரர்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும். உங்கள் குடும்ப கௌரவம் காப்பாற்றப் படும்படி அவர் சென்றது மேலே சொன்ன காரணத்திற்காக என்று சொல்லி விடுங்கள். பரிக்ஷை முடியுமட்டும் அவர்கள் என்ன தூற்றினுலும் பொறுத்துக் கொள்ளுகிறேன். இவ் விஷயமாக ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. என்னுல் உங்கள் குடும்பத்திற்கு யாதொரு குறைவும் வராது என்பதை இறந்து தெய்வமாக விளங்கும் என் பெற்ருேர்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். பரிக்ஷை ரிஸல்ட் தெரிந்தவுடன், ஆசிரியர்பயிற்சிப்பள்ளியில் சேர்த்து விட்டீர்களானுல் அந்த உதவியை என் ஆயுள் உள்ளமட்டும் மறவேன். 'கல்யாணம்' என்பதை என் காதில் விழாதவாறு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்ருள்.

"சரி, உன்னிஷ்டப்படியே செய்து விடுவோம். இந்த விஷயத்தைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் பேசுவதில்லை யென்று நானும் உறுதி சொல்லுகிறேன், நீயும் அவ்விதமேசெய். என்னுல் எந்தவிதமான உதவி செய்ய முடியுமோ, நீ எதை வேண்டுகிருயோ அதைத் தட்டாமல் செய்கிறேன்; கவலைப்படாதே. இனி கண்ணீர் விடாதே, அந்தப் பாவியை நினைக்காதே என்று நான் சொன்னுல் உன்மனம் கேட்கப் போகிறதோ? இல்லை. என்மனம்தான் அவனை மறக்குமா? அவனுடைய 'விதி' ஒன்றிருக்கிறதே அதன் துணை நீங்கள் ஒன்று சேர அனுமதிக்கும். சரி இத்துடன்விடு. உன்னுல் நடந்துவர முடியுமா? இல்லையானுல் நான் இவ்விடம் படுத்துக்கொள்கிறேன்'' என்ருள்.

"இல்லை; இப்பொழுது உடம்பு ஒன்றுமில்லை. உங்களுடன் வருவதற்கு ஆக்ஷேபணையில்லை. ஆனுல் தனிமையை விரும்புகிறது என் மனம்''

"அது தப்பு. இந்த நிலைமையில் உன்னைத் தனியாக விடுவது கூடாது. வா போகலாம். வழக்கம்போல் நடந்தால்தான் ஊராரின் கண்களிலிருந்து தப்பமுடியும்'' என்ருள்.

"சரி வருகிறேன்'' என்று எழுந்திருந்தாள்.

"கும்பல்கூடி இடும்புகள்பேசிட கோலங்கொண்டாயேடி கிளியே, நான் பெற்ற மானே'' என்று பாடிய வண்ணம் மணி பத்தரையே ஆயிற்றென்ருலும் பங்குனி மாதத்து ஆவிபறக்கும் புழுதி மண்ணையும் லக்ஷியம் செய்யாமல் கோடி வீட்டு வாசலில் பத்துப்பெண்பிள்ளைகள் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு நேராக நின்றுகொண்டு பட பட வென்று சிப்ளா கட்டையைத் தட்டினுன் வயது முதிர்ந்த பிச்சைக்காரனொருவன்.

"பிச்சைக்கார கட்டேலே போவானுக்கு இருக்கிற திமிரைபார்த்தாயோன்னே? நாம் பேசுகிற இடத்தில் வந்து நின்றுகொண்டு இந்தப் பாட்டைப் பாடுகிருன்'' என்ருள் காமாக்ஷி.

"ஐயோ பாவம்! அவனையேன் வைகிருய். அவன் வயிற்றைக் கழுவ இந்தக் கடும் வெய்யிலில் நின்று பாடுகிருன். அது நம்மைப் பார்த்துப் பாடுகிருனென்று நாமேன் நினைத்துக் கொள்ள வேண்டும்'' என்ருள் லக்ஷ்மி.

"அடி மீனு, அரிசியைப் போட்டு விரட்டு இவனை'' என்ருள் காமாக்ஷி.

அந்தச் சமயம் எதிர் வீட்டுவாசலில் கார் வந்து நின்றது. கார் உள்ளிருந்த கோபாலன் ஹாரன் செய்தான். அடுத்த கணம் லீலா நன்ருக உடுத்திக்கொண்டு காரின் பின்ஸீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அடுத்த கணம் கார் விர்ரெனப் புறப்பட்டுச் சென்றது.

"என்னடீது. பெரியவன் எங்கோ உத்யோகம் ஏற்கப் போகிருன். அதற்காக மூன்றுவருஷம் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதாம். அவன் வந்த பிறகுதான் இந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ளுவான் என்று சொல்லிக் கொண்டார்கள். மூனுமாதமாக வெளியிலேயே தலைகாட்டாமல் பள்ளிக்கூடம் விட்டால் வீடு, வீடு விட்டால் பள்ளிக்கூடம் என்றி

ருந்தாளே, இன்று இவனுடன் கார் சவாரி கிளப்பி விட்டாளே. அண்ணன் அனுப வித்ததைத் தம்பியும் ருசி பார்க்கிருனு?" என்ருள் காமாக்ஷி.

"இன்று வரை ஒரு தடவைகூட கோபால் இவ்விடம் வந்து ஒருவரும் பார்த் ததில்லே? பரிக்ஷையே முடிந்து விட்டது. எப்படியும் மி. மாமி நாட்டுப் பெண்ணுக வேண்டும் லீலா. சங்கரானுலென்ன, கோபா லானுலென்ன, என்று கோபால் கட்டிக்கி றேன் என்று சொல்லியிருப்பான்" என் ருள் மீனு.

"ஆனுலும் பெண்ணிற்கு இத்தத் துணிச் சல் ஆகாது" என்ருள் பாட்டி.

"அது சரி. இந்தப் படை படைக்கிற வெய்யலில் எங்கே போகிருர்கள்?" என் ருள் விசாலம்.

"எங்கேயாவது பக்கத்து டவுனில் சினிமா கினிமா பார்க்கப் போவார்கள்" என்ருள் அலமேலு.

"ஏன் இப்படியெல்லாம் விசாரிக்காமல் மனம் போனபடி பேசுகிறீர்கள்? இன்று பள்ளிக்கூடத்தில் வருஷாந்தரக் கொண்டாட் டமல்லவா? இந்த வைபவத்திற்குத் தலைமை வகிக்க உலகம் போற்றும் உத்தமி கான மோஹினி காதம்பரி தேவி அவர்களை வரும் படி எவ்வளவோ பிரயாசை செய்து அழைத்திருக்கிருர்கள். அவர்கள் பன்னிரண் டரை வண்டியில் வருகிருர்கள், மி. மாமி கார் தருவதாகச் சொல்லியிருந்தாள். ஹெட் மிஸ்டர்ஸும், லீலாவுமாக அவர்களை வர வேற்க ஸ்டேஷன் செல்வதாக நேற்றே ஏற்பாடு. வண்டி ஓட்டுவதற்காகக் கோபால் போகிருர். இதுதான் விஷயம்" என்ருள் அதுவரை பதுமை போல் நின்று கொண் டிருந்த, லீலாவுடன் பரிக்ஷை எழுதின அவளது உயிர்த்தோழி பத்மா.

"அது யாருடி காதம்பரி! பேரைப்பார்த் தால் கிறிஸ்தவச்சி மாதிரியில்லையே" என் ருள் மீனு.

"நம்ம ஜாதிக்காரி தான். கணவன், அழகா யில்லையென்று வேறு கல்யாணம் செய்து கொண்டுவிட்டானும். பக்கத்தில் குடியிருந்த தம்பதிகளின் முயற்சியினுல் வடக்கேசென்று ஒரு பெரிய வித்வானிடம் வீணைபயின்ரு ளாம். பாட்டும் வீணையும் ரொம்ப அற்பு தமாம். எவ்வளவோ வித்வ சபையிலும், சமஸ்தானங்களிலும் வீணை வாசித்துப் பாடி மெடல்கள் வாங்கியிருக்கிருளாம். இங்கிலீ ஷில் பிரசங்கம் செய்தாளானுல் கேட்டுக் கொண்டேயிருக்கலாமாம். ஆங்கிலேயர் கூட மலைத்துப் போவார்களாம். அவ்வளவு நன்ருக இங்கிலீஷ் பேசுவாளாம். சம்ஸ் கிருத ஸ்லோகம் தானுகவே அவளுக்கு உதயமாகுமாம். ஸ்ரீ சங்கராச்சாரியாரிடம் ஸ்லோகம் சொல்லிப் பரிசு பெற்ருளாம். இவ்வளவிற்கும் ஒரு ஸ்கூலிலும் படிக்க வில்லை. ஒரு பரிக்ஷையும் எழுதவில்லை. எல்லாம் அழைத்துச் சென்றவர் சொல்லிக் கொடுத்ததுதானும். அஞ்சலிதேவி ஆசிர மம் என்று பிரசித்தமாக இருக்கிறதே, அதில் தான் முதன் முதலாகப் பரத நாட்டி யம், வீணைக்கச்சேரி இவைகள் செய்தா ளாம். எங்கள் ஹெட் மிஸ்டர்ஸும் அந்த ஆச்ரமத்தில் கொஞ்ச நாட்கள் இருந்தா ராம். அப்பொழுது இருவருக்கும் ரொம்ப பழக்கமாம். இவர் போய்க் கேட்டுக்கொண் டதினுல் ஒத்துக் கொண்டாளாம். இன்று கொண்டாட்டத்தில் பேசுவார்களாம். காலை அவளின் வீணைக்கச்சேரி. பிறகு லீலாவின் பரத நாட்டியத்திற்கு அவள் பதம் பாடப் போகிருளாம். அதற்கு ஒத்திகை பார்க்கவே லீலாவை முதலில் அறிமுகப்படுத்தி வைக் கிருர் ஹெட்மிஸ்டர்ஸ். மி. மாமி அவளு க்கு வேண்டிய சகலவித ஸௌகரியங்களை யும் தான் ஏற்றுக் கொள்வதாகச் சொல் லியிருக்கிருர். விஷயம் இது. நீங்கள் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசுகிறீர்கள்" என்று முடித்தாள் பத்மா.

"இதெல்லாம் யார் கண்டா? என்னமோ சொன்னு. அப்படி ஒண்ணும் குத்தமாக ஒருவரும் பேசிவிட வில்லை" என்று முற்றுப் புள்ளிவைத்தாள் காமாக்ஷி.

* * *

"வாருங்கள்! வாருங்கள்! காதம்பரி தேவி! என்று இன்முகத்துடன் அன்புடன் வரவேற்ருள் மி. மாமி, காரிலி ருந்து இறங்கிய காதம்பரி தேவியை.

"நமஸ்காரம்; உங்களைப்பற்றி கல்யாணி (ஹெட்மிஸ்டர்ஸ்) மிகவும் சிலாகித்துப் பேசினுள். உங்களிடம் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி ஈசனுக்கு நன்றி செலுத் துகிறேன்" என்று சொல்லியவாறு லீலா பின் தொடர உள் நுழைந்தாள் காதம்பரி தேவி.

"உங்களை யெல்லாம்விட நான் என்ன செய்து விட்டேன்? முதலில் கை, கால் அலம்பிக் கொண்டு சாப்பிட வாருங்கள். பிறகு பேசலாம்" என்ருள் மி. மாமி.

நடு ஹாலில் யாவரும் ஒன்ருக விருந் துண்ண உட்கார்ந்தார்கள்.

"இன்று நீங்கள் வீணைவாசித்துப் பாடிய போது அத்தனை ஜனசமுத்ரத்தில் ஊசிவிழுந் தால்கூடக் கேட்கும்படியான நிசப்தம் நில

வியது, ஆச்சர்யம். உங்களுடைய அபூர்வ சக்தியே அவ்விதம் செய்தது'' என்றாள் மி. மாமி.

"லீலாவிற்கு இவ்வளவு நன்றாகப் பரத நாட்டியம் ஆடவருமென்று எனக்குத் தெரியவே தெரியாது. உங்கள் பாட்டும், அவள் ஆட்டமும் அதியற்புதம்'' என்றே சொல்ல வேண்டும்'' என்றார் மி. மாமா.

"லீலாவிற்குப் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுத்ததினால் இவ்வளவும் வந்துவிடவில்லை. இயற்கையான கற்பனாசக்தி தனியே பரதநாட்டியம் பயிலச் செய்து விட்டது. கல்யாணி பதம் பாடக் கேட்டபொழுதுகூட எனக்கு இஷ்டமில்லை; அரை மனதுடன் ஒப்புக்கொண்டேன். நேற்று ஒத்திகை பார்க்கும் பொழுதுதான் ஆச்சரியமடைந்தேன். பதம் பாட மிகவும் ஆவலாய் இருந்தது. புத்திசாலி. அடக்கமான பெண். லீலாவை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவளுக்குப் பரீக்ஷை பாசாவதுபற்றிச் சந்தேகமே இல்லை. மேலே என்ன செய்யப் போகிறீர்கள்?''

"அவள் என்ன சொல்லுகிறாளோ? அதைப் பொறுத்தே நடக்கும்.''

"நான் எங்கும் எப்பொழுதும் என் மனதிற்குச் சரியென்று தோன்றுவதைக் கடமை என்று சொல்லி விடுவேன். அதனால் ஏற்படும் நிந்தாபநிந்தனையையும் லக்ஷியம் செய்யமாட்டேன். பெண்கள் உத்யோகம் ஏற்பதானால்தான் மேலே படிக்க வேண்டும். வாழ்க்கைக்கு உபயோகப் படக்கூடியது, S. S L. C. வரையிலுள்ள படிப்பே போதுமானது. லீலாவிற்குக் கல்யாணம் செய்விப்பதானால் இனிமேல் படிப்பு வேண்டாம். அறிவுவிசாலமாகக் கூடியதும், உலக அனுபவம் பெறக்கூடியதுமான நூல்களை வீட்டிலிருந்தே, ஏன் குடும்பம் நடத்திக் கொண்டே படித்து வந்தால் போதும். உங்கள் உத்தேசம் எப்படி?'' என்றாள் காதம்பரி.

"அந்தப் பாபி இப்படி மோசம் செய்வான்'' என்று தெரிந்திருந்தால்..............'' என்று முடிக்கு முன், மி, மாமா, கோபால் லீலா மூவரின் கண்களும் மி. மாமாவை எரித்து விடுவன போல் பார்த்தன. சட்டெனச் சமாளித்துக் கொண்டு, "அதுதான், சாம்பு சாகாமலிருந்தால் லீலாவை எவ்வளவு உன்னதமாக வளர்ப்பான். நமக்கு அவளைப்பற்றிய கவலையில்லாம விருந்திருக்கும். இப்பொழுது நமது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடந்தாலும், ஊர் வம்பிற்குப் பயந்து, துணிந்து எதையும் செய்ய முடியவில்லை என்றார்'' மி. மாமா.

"தம்பதிகளாகிய உங்களைப் பற்றி எல்லோரும் அமிதமாகப் புகழ்கிறார்கள். இரண்டு நாள் பழக்கத்தில் உங்கள் குணம், செய்கை யாவும் எனக்கு மிகவும் பிடித்து விட்டன. அதனாலேயே துணிவாகப் பேசுகிறேன். அனுசிதமானால் மன்னித்து விடுங்கள். பணம், ஏற்றத்தாழ்வு இவைகளைக் கவனியாமல் லீலாவைக் கோபாலுக்குக் கல்யாணம் செய்து விட்டால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும். இருவரும் ஏற்ற ஜோடிகள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் ஒருவேளை முன்னதாகவே அந்த ஏற்பாடு முடிவாய்விட்டதென்றாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை''

"இது வரை கல்யாண விஷயமான சிந்தனையே ஏற்பட வில்லை. உங்கள் வாக்கு பொன் மொழியாகப் பலித்தால் எங்களுக்கு மிகவும் சந்தோஷம்'' என்றாள் மி. மாமி.

"ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் மனம் வைத்தால் நடப்பதற்குத் தடை ஏது? கோபாலைப்போன்ற கணவன் லீலாவிற்கும், லீலாவைப்போன்ற மனைவி கோபாலுக்கும் கிடைப்பது துர்லபம் இல்லையா? அதனால் அவர்களுக்குள் ஆக்ஷேபமே எழுவதற்கு இடமில்லை. பின் காரணம்?'' என்றாள் காதம்பரி.

"நம் இஷ்டம், செயல் இவ்வளவையும் தாண்டி, பிராப்தம் என்பது தனியாக இருக்கிறது. மேலும் நமக்கு ஜோடி என்று தோன்றுகிறது. அவர்களின் மனம் எப்படியோ? எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ? யார் கண்டது? அவர்களின் இஷ்டத்திற்கு மாறாக ஒன்றும் நடக்காது. அவ்வளவுதான் நான் சொல்லமுடியும்'' என்றாள்.

"இவையெல்லாம் இருக்கட்டும். தானே நடக்கிறது போல் நடக்கட்டும். என் நண்பன் ராகவன் அவன் காலேஜ் வருஷக் கொண்டாட்டத்தில், 'பெண் கல்வியின் அவசியமும், அளவும்' என்ற விஷயம்பற்றித் தங்களைப்பேசும்படி அழைக்கிறான். தங்களுக்கு ஸௌகரியப்படுமா?'' என்று பேச்சை வேறு திக்கில் திருப்பினார் மி. மாமா.

இரவு படுக்கை லீலாவின் வீட்டில் வைத்துக்கொள்ளுவதாகக் காதம்பரி சொன்னதற்கு ஒப்புக்கொண்டாள் மி. மாமி.

நார்கட்டிலில் விரித்திருந்த படுக்கைமீது அப்பாடா வென்று படுத்துக் கொண்ட காதம்பரி தேவி, "லீலா' இப்படி என் பக்கத்தில் உட்கார். உன்னிடம் சில விஷயங்கள் பேசவேண்டுமென்று தோன்றுகிறது'' என்றாள்.

பக்கத்தில் உட்கார்ந்தவளை அன்புடன் அணைத்தவாறு, "உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. பகவான் பெற்றவரைப் பிடுங்கிக்கொண்டாலும், நல்ல பொறுமையையும், பார்ப்போரைக் காந்தம்போல் தன் வசப்படுத்தும் அருமையான குணமும் கொடுத்திருக்கிறார்."

"என்ன அக்கா ரொம்ப புகழுகிறீர்களே. உங்கள் மனதிற்குப் பிடித்ததினால் நான் பாக்யசாலிதான் என்று தெரிகிறதே தவிர இப்புகழுக்கு நான் சற்றும் பாத்ரவதியல்ல."

"பாத்ரவதி யென்பதையும் அல்லவென்பதையும் எப்படிச் சொல்ல முடியும்? அது போகட்டும். நான் கேட்கப் போவதற்கு லஜ்ஜைப்படாமல் உண்மையான பதிலைச் சொல்ல வேண்டும்"

"உங்கள் முகத்தைப் பார்த்த பிறகு என் விஷயம் அன்னியமாகவே தோன்றவில்லை. தயங்காமல் சொல்லுகிறேன்"

"அந்த மாமி பேசின தோரணையானது, நீயோ, கோபாலோ ஆக்ஷேபனை சொல்லுவதாகத் தெரிகிறது. நபர் யார்?"

"நபர் நான் தான்"

"காரணம்?"

"துறவி போன்ற தங்களிடம் இவ்வித மான விஷயங்களைப் பற்றிப் பேசுவது அநுசிதம்தான். ஆனால் பெண்தானே பெண்ணுள்ளம் அறிய முடியும்?"

"நீ பின் சொன்னது முற்றிலும் உண்மை. முன் சொன்னது தவறு. துறவியானால் என்ன? போகியானாலென்ன? எவரும் எந்த விஷயங்களையும் அறிந்து தெளிவது தான் உத்தமம். எனக்கு எல்லாவித அநுபவமும் உண்டு, உன்மனதைத் தயங்காமல் சொல்லு."

"தனது தூய்மையையே பிரதானமாகக் கருதும் ஓர் பெண்ணுள்ளம், ஆயுளில் ஒரே ஒருவரிடத்தில் தானே அன்பு செலுத்த முடியும்? மேல் போக்காக அன்பாகத் தோன்றலாம் சிலரிடம். ஆனால் உள்ளன்பு என்பதற்கும், பிரேமை என்பதற்கும் ஒருவர் தானே பாத்ரமாக முடியும். நீங்கள் இதை ஒத்துக் கொள்ளுகிறீர்களல்லவா?"

இக் கேள்வி காதம்பரியின் பழைய சம்பவங்களை நினைவிற்குக்கொண்டு வந்ததினால் பதில் பேசாமல் லீலாவை உற்றுப் பார்த்த வண்ணமிருந்தாள்.

சற்று நேரம் மௌனம் நீடிக்கவே "ஏன் அக்கா, நான் சொன்னதில் தவறு ஏதாவது தென்படுகிறதா? சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்களே?"

"தவறு பெண்ணுள்ளத்தின் பிரதிபலிப்பல்லவா இவ்வாக்கியம்.? கடந்துபோன ஓர் நிகழ்ச்சியை நினைப்பூட்டின உனது சொற்கள். அதனால் மௌன நிலை ஏற்பட்டது, அவ்வளவே. அது போகட்டும். அந்தப் பாக்கியவான் யார்? இப்பொழுது எவ்விடமிருக்கிறான்?"

"அவருக்கும் எனக்கும் நடுவில் அநேக நூறு மைல்கள் ஏற்பட்டு விட்டன,"

"அப்படியானால் எப்பொழுது திரும்புவதாகச் சொன்னான்?"

"விதி அனுமதித்த பொழுது"

"அதுவரை காத்துக் கொண்டிருக்கப் போகிறாயா?"

"ஜன்மானு ஜன்மமானாலும் காத்திருக்கத் தயார்; ஆனால்"

"ஆனால் என்ன?" சொல்லு லீலா தயங்காமல்.

"தாம்பத்திய வாழ்க்கை என்பது இந்த ஜன்மாவில் இல்லை. ஏன் இருவரும் சந்திப்பது என்பதுகூட மரண தேவதையின் முன்னாகவே ஏற்படும் என்ற நிலைமை"

"ஏன் அப்படி? உன்னை வெறுக்கமுடியுமா? அப்படிப்பட்ட சந்தர்ப்பம் தான் என்ன?"

"வெறுக்கவா? பிரிய இருவருக்கும் மனமில்லை"

"அப்படியானால் பெற்றோர்கள் தடுத்து விட்டார்களா?"

"அதுவும் இல்லை. என்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக · தங்கள் பிள்ளையில்லையென்று விடுதலை வாங்கிவிட்டார்கள்."

"அப்படியானால் காரணம்தான் என்ன?"

"அதை வெளியிடுவதில்லையென்று அவரிடம் பிரமாணம் செய்திருக்கிறேன். அதற்காக என்னை மன்னிக்க வேண்டும்"

"சரி, அது போகட்டும், அவன் யார்? எந்த ஊர்? எப்படி சந்தித்தீர்கள். மி. மாமிக்குத் தெரியுமா?"

"எங்கிருந்தோ வந்தார். ஒருவருஷம் இவ்வூரில் தங்கினார். மீ. மாமிக்குக்கூட தூரத்து உறவினர். மில்லில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். மாமியின் சிபார்சில் எனக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுத்தார். அதில் எழுந்தது இந்த நிலைமை. எவ்வளவு நாட்கள் இந்த ஹாலில் உட்கார்ந்து கொண்டு லைலா மஜ்னூன், ரோமியோ ஜூலியட் இவர்களின் காதற் கதைகளைப் பற்றிச் சர்ச்சை செய்திருப்போம். அவரையறியாமலேயே அவராக ஒரு வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டு விட்டார். அதிலிருந்து விடுபட, மரணம், அல்லது கண் காணாது மனித சமூகத்தினின்றும் பிரிந்து வாழ்க்கை நடத்துவதுதான் என்ற தீர்மானத்திற்கு வந்தார். இரண்டையும் என் மனம் ஒப்பவில்லை.மூன்று நான்குமணி நேரத்துத்தர்க்கம் அழுகையில் கடைசியாக அவருக்கு விடுதலை அளிப்பதே மேல் என்று தோன்றியது. விதிவசத்தினால் வில்லங்கத்திலிருந்து விடுபட்டு விட்டால் மறுபடி சந்திப்பது என்று முடிவில் விடையளித்தேன். மி. மாமிக்கும் இதுபற்றி மிகவும் வருத்தம். எவ்வளவோ எடுத்துச் சொன்னார். பிரயோஜனமில்லை. கடைசியில் என் நன்மைக்காகவே இவ்விஷயத்தைப் பற்றிய உண்மையை வெளியிடுவதில்லையென்று அவர்களும் நானும் பிரமாணம் செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது உங்களிடம் சொன்ன அளவுகூட ஒருவரிடமும் பேசுவதில்லை. உங்களைப்

பார்த்ததும் என் சகோதரி போன்ற பாசம் ஏற்பட்டதினாலும், உங்களாலே எனக்கு ஒருவழி வகுக்க வேண்டுமென்பதினாலேயே சொன்னேன். இது விஷயமாக மி. மாமி முதலிய யாவரிடத்திலும் தயவு செய்து தாங்கள் ஒன்றுமே கேட்கக் கூடாது. இந்தக் காரணத்தினாலேயே அவர்கள் அவ்விதம் பேசினார்கள். நான் அவருடன் மிகவும் நெருங்கிப் பழகினேன் என்பது தெரிந்திருந்தும் கோபால் என்னை ஏற்றுக் கொள்ள முன் வந்தார். நான் என்ன செய்யட்டும். என் மனம் இடமளிக்கவில்லை. நீங்களே சொல்லுங்கள். எப்படி மனம் வரும்.?"

"உண்மைதான் லீலா, உண்மைதான்." என்று நீண்ட மூச்சுக்கிடையில் சொல்லி விட்டுத் தொடர்ந்து, "ஆனால் நீ என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய் ?" என்றாள் காதம்பரி.

"உங்களைப் பார்க்கு முன்பு, ட்ரைனிங் பாஸ் செய்துவிட்டு, ஆண்பிள்ளை சகவாசம் கூடிய மட்டும் இல்லாததும், மனம் சாந்தி பெறவும், பெண்களுக் கேற்றதுமான உபாத்தியாயினித் தொழிலை மேற்கொள்ளலாம் என்று நினைத்தேன். இப்பொழுது உங்கள் கூடவே வந்து நீங்கள் காட்டும் பாதையில் நடக்கலாம் என்று உத்தேசிக்கிறேன்."

"நீ நினைப்பது சரி, ஆனாலும் இந்தப் பருவத்தைத் தனிமையில் கழிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும். பிரிவினால் சற்று விரக்தி தோன்றுவது சகஜம்தான். என்னைக் கேட்டால் நீ கோபாலை மணம் செய்து கொண்டாயானால் மனம் நாளடைவில் சாந்தி பெற்று விடும் என்பதே. தூய்மையான அன்பிற்குப் பாத்திரமாக விளங்குபவர் ஒருவராகத்தான் முடியும். இருந்தாலும் கால மானது மனதின் தன்மையைச் சில சமயம் மாற்றியமையும்படி செய்து விடுகின்றது. உறுதியும், தைரிய மனப்பான்மையும், சகிப்புத் தன்மையுமிருந்தால்தான் நாம் துணிந்து தனித்து வாழமுடியும், அவைகளின் துணையினால் தான் இன்று கான மோஹினி காதம்பரியாக விளங்குகிறேன். இல்லையேல் வெறும் காமாக்ஷியாக ஓர் அடுக்களைக்குள் அடைந்து கிடப்பேன் உலகின்முன் நிற்க முடியாமல்"

"நான் உங்களை ஒன்று கேட்கலாமா?" என்றாள் இடைமறித்து.

"தாராளமாகக் கேள்"

"தாங்கள் சற்றுமுன் சொன்னதிலிருந்து, தாங்கள் இந்நிலைமைக்கு வர மிகவும் பிரயாசைப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. உங்கள் தமையனின் முயற்சி போற்றத்தகுந்ததே. சகோதர பாசம் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? குடும்பத்தையே உதறி விட்டாரே! அவராவது உடன் பிறந்தவர். அவ்வுத்தமி அயல் வீட்டுப் பெண்தானே? என்ன தாம்பத்ய ஒற்றுமை. பார்த்தாலே பாவம் தீர்ந்து விடும்"

"லீலா! உன் புகழுரை முற்றிலும் பொருந்தும். உண்மையை அறிந்தாயானால் இவை கொஞ்சமே என்று நினைப்பாய். அவர் என் தாய் வயிற்றில் உடன் பிறக்கவில்லை. பாரதத்தாயின் தவப்புதல்வராக உடன் பிறந்தவர். என் கதை முழுவதும் கேள். வியப்படைவாய்" என்று சுதர்மன் பிரிவு வரை சொல்லி முடித்தாள். தொண்டை கரகரத்து வார்த்தை தடைப்பட்டு நீண்ட மூச்சாக வெளிவந்தது.

"பிறகு அவரைப் பார்க்கவே இல்லையா?" என்றாள் லீலா.

"இல்லை" யென்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

"எவ்விடமிருக்கிறா ரென்பதாவது தெரியுமா?"

"ஐந்து வருஷமாக அவரைப் பற்றிய தகவலே கிடைக்கவில்லை. நானும் மறந்து விட்டதாகவே நினைக்கிறேன். ஆனால் ஏதாவதொரு சமயம் மனம் கட்டில் அடங்காமல் புறப்பட்டு விடுகிறது. அவர் சென்று மூன்று வருஷம்வரை அப் பக்கத்திலேயே சுற்றிய வண்ணம் தேசப் பணியில் ஈடுபட ஆரம்பித்தேன். மாதம் ஒரு கடிதம் வந்து கொண்டிருந்தது. பிறகு ஆறுமாதத்திற்கு ஒரு முறை, பிறகு எப்பொழுதோ. தற்சமயம் ஐந்து வருஷமாக நானும் மாகாணம் மாகாணங்களாக வசித்து வருகிறேன். அவரைப்பற்றிய தகவலே இல்லை. எனக்கும் வெளியுலகத்துத் தொடர்பு அதிகமாக அதிகமாக அவரைப் பற்றிய நினைவு அதிகமாகத் தோன்றுவதில்லை. நீ சற்று முன் சொன்னாயே 'உள்ளன்பு என்பது ஒரே ஒருவரிடம் தான்' என்று, அது அவ்வளவும் அக்ஷரத்திற்கு அக்ஷரம் உண்மை. எங்கோ ஓர் மூலையில் அச்சுடர் மங்கிய பிரகாசத்துடன் இருந்து கொண்டுதானிருக்கும். கால சக்திக்கு அதைத் தூண்டாமல் தடுக்க முடியும். அதனால் தான் நீ கோபாலை ஏற்கும்படி சொன்னேன். ஆனால் உன் மனம் தற்சமயம்தான் கிறேப்பட்டிருக்கிறது. புண் ஆறக் காலம் ஆகவில்லை. போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம். தற்சமயம் என்னுடன் சுற்றிக் கொண்டிருந்தாயானால் மனதிற்குச் சற்று அமைதி ஏற்படும். பிறகு

அஞ்சலிதேவி ஆச்ரமம் வெகுவாக முன்னேறியிருக்கிற படியால்,.................இந்த ஊரில் புதிதாக ஸ்தாபித்திருக்கும் சுகர் ஞச்ரமத்தில் உன்னைக் காத்யாயினிக்கு உதவியாக இருக்க ஏற்பாடு செய்கிறேன். கொஞ்ச காலம் அவ்விடமிருந்தாயானல் பிறகு சமயம் போல் நடந்துகொள்ளலாம். ஆனல் மி. மாமி. உன்னை என்னுடன் அனுப்பச் சம்மதிப்பாளா?"

"சம்மதிக்கமாட்டார்கள் என்பது உண்மை. ஆனலும் நீங்கள் சொல்லுங்கள். நானும் மன்ருடி உத்தரவு வாங்கி விடுகிறேன். நாளையே உங்களுடன் புறப்படத் தயார். உங்கள் புரோகிராம் என்ன?"

"அண்ணுவின் பிள்ளைக்குக் கல்யாண ஏற்பாடு செய்கிருர்கள். அதற்கு நிச்சய தாம்பூலத்திற்கே நான் வரவேண்டுமென்று அண்ணு மன்னி சொல்வது இயற்கை. பெண் வீட்டுக்காரர்களே சொல்லுகிருர்கள். அதனல் முதலில் அவ்விடம் சென்றுவிட்டு, பிறகு ....,சமஸ்தானத்திற்குச் செல்லவேண்டும்"

"அப்படியானல் உங்கள் அண்ணு மன்னி இப்பொழுது உங்களுடனில்லையா?"

"இன்றுவரையில் என்னுடன்தான் இருக்கிருர்கள் என்றலும் இரண்டு வருஷங்களாக நான் போகுமிடமெல்லாம் வருவதில்லை. அக்காவும் ஆச்ரமத்தை விட்டு வந்துவிட்டாள். பட்டணத்தில் ஒருபங்களாவில் அவர்களெல்லோரும் இருந்து வருகிருர்கள். அதனல் நான் அதைத் தலைமையிடமாகச் செய்து கொண்டு சுற்றுகிறேன். கல்யாணமாகி விட்டால் நாட்டுப்பெண் பிள்ளை என்று குடும்பத்துடன் இருக்கட்டுமென்று நினைக்கிறேன்; பால்யத்தில் மாதாபிதாக்களைப் பிரிந்த முரளி இப்பொழுதாவது ஒன்று கூடி வாழட்டும் என்று மூன்று மைல்களுக்கப்பாலிருக்கும் காந்தி நிகேதனம்' என்ற ஆச்ரமத்தில் அக்காவும் நானுமாக இருந்து கொண்டால் நான் வெளியூர் செல்லும் சமயங்களில் அவளுக்கு உதவியாக இருக்கும் என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்.

"அப்பா! உங்கள் துணிவு ஆச்சர்யம் என்றே சொல்லவேண்டும்."

"ஆச்சர்யமா? புரட்சி என்று சொல். சமூகத்தின் பெரிய புரட்சிகரமாகவே கிளம்பினேன்: அவ்வுத்தம தம்பதிகளின் அளப்பரிய தியாகத்தினல் இன்று புரட்சியில் வெற்

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்

K.T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

றிக்கொடி நாட்டியவளானேன், இத்தம்பதிகளாவது எனக்காக முயன்று லக்ஷியத்தைக் கடைப்பிடிக்க, தியாகம் செய்தார்கள். இவரின் தமையன் அவர் மனைவி இருவரையும் குளிர்ச்சியான நேரத்தில் நினைக்கவேண்டும். நடுவில் கொஞ்ச நாட்கள் வறுமையின் வசப்படநேர்ந்தது. அச்சமயத்தில், ஏன்? எதற்கு? என்ற கேள்வியில்லாமல் பணம் அனுப்பி வந்தார் அவ்வுத்தமர். அவராகிலும் உடன் பிறந்த பாசம் என்று சொல்லலாம். அவர் மனைவி? ஒரு சமயம் ஓர் ஊரில் அவரும் உத்யோகமாக இருந்தார், நாங்களும் அவ்விடமிருக்கவேண்டியதாயிற்று. எல்லாரும் ஏக குடும்பமாகவே இருந்தோம். ஓர்விதமான மனத்தாங்கலோ, குற்றமுள்ள வார்த்தைகளோ நடந்தது கிடையாது, 'ஓடிப்போனவள்' என்ற பட்டம் கொஞ்ச காலம்தான் நிலைத்திருந்தது. இப்படி அநேக விஷயங்கள் சொன்னால் பொழுதே விடிந்துவிடும்.''

"இப்பொழுதும் உங்கள் கணவர் மற்றொருத்தியுடன் சுகமாக இருக்கிறாரா?"

"அதையேன் கேட்கிறாய்? அவர் இவ்வுலகை விட்டுச் சென்று இரண்டு வருஷங்களாகின்றன. இரண்டு குழந்தைகளிருப்பதாகக் கேள்வி. சாக ஒருவருஷத்திற்கு முன் புத்தி ஸ்வாதீனமில்லாமலிருந்ததாகக் கேள்வி. அவர் இருந்தும், இறந்தும், ஒன்று போலவே தோன்றினதினால் திருமங்கலியத்தை மட்டும் எடுத்து விட்டேன். குங்குமமும் பூவும் எனக்கு என்றுமே உரித்தானவை. அதனால் அவற்றை அகற்றவில்லை."

"அதுதான் நியாயமான விஷயம். உள்ளொன்று புறமொன்றாக நடப்பது எவ்வளவு மதியீனம்? ஆனால் அதைத்தான் வரவேற்கிறது சமூகம்."

"பரவாயில்லையே, இச்சிறுவயதில் இவ்வளவு உலக அனுபவம் ஏற்பட்டிருக்கிறதே!''

"எல்லாம் என்னைப்போன்ற அனாதைகளுக்குத் தனியே வந்துதானே ஆகவேண்டும்.''

"சரி, நீ சொல்வது முற்றிலும் உண்மையே. அது போகட்டும். நீ என்கூடப் புறப்படுவதாகத் தீர்மானம் செய்துவிட்டாயா?''

"அதில் சந்தேகமென்ன?''

"நன்றாகச் சிந்தனைசெய். என்னைப் பின்பற்றுவதனால் பலர் பலவிதமாகப் பேசுவார்கள் என்பது உண்மையிலும் உண்மை. அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் துணிந்த கருமம் ஒன்றே கண்ணாக இருக்கத் தைரியம் வேண்டும்.

"அக்கா! வீண் பேச்சு எதற்கு? தங்களையே சதமென்று நம்பி வருகிறேன். நீங்கள் காட்டும் எந்தப்பாதையிலும் நடக்கத் தயங்கமாட்டேன். எந்தவிதமாகவேனும் இவ்வூரார் கண்களினின்றும் மறைந்துவிடவேண்டும். உங்களைப்பற்றி முன் காலத்தில் தூஷணையாகப்பேசியிருக்கலாம். தற்சமயம் பூஷணையாகவே யாவரும் பேசுகிறார்கள். உங்கள் தைரியத்தையும், பேச்சையும் கண்டு யாவரும் வியப்படைகிறார்கள். அதனால் தூஷணை பூஷணையாக மாறலாம். பூஷணை தூஷணையாக மாறலாம். இது காலத்தின் மாறுதலால் ஏற்படும் ஓர் தொற்று வியாதி."

"போட்டாயே ஒருபோடு. என் விஷயத்தில் அது கண்முன் அனுபவம். நாங்கள் ஏழு வருஷம் தான் தலைமறைவாக இருந்தோம். அப்பொழுதும் அண்ணாவின் நண்பர் கிட்டா என்பவருக்கும் பெரிய அண்ணாவிற்கும் மட்டும் எங்களிருப்பிடம் தெரியும். ஆனால் அவர்கள் வெளியில் சொல்லவேயில்லை. பெரியவர் பணம் அனுப்புவதும் அப்படியே. பிறகு ஒரு சமயம்.........இந்தச் சமஸ்தானத்தின் ராஜா பிறந்ததின வைபவத்தில் எனது வீணைக்கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. அப்பொழுது தான் சங்கீத விற்பன்னர்களாகிய பெரிய வித்வான்கள் சபை கூடி எனக்கு, "கானமோஹினி காதம்பரி'' என்ற பட்டமளித்தார்கள். அந்த வைபவத்திற்கு உத்யோக தோரணையில் பெரியவரும் வந்திருந்தார். அந்த ஒருவாரமும் எங்களுடன் தங்கினார். அப்பொழுது தான் முதல் முதலாகப் பழகினோம். சாத்வீக சம்பன்னர். உத்தம சீலர் என்றால் அவருக்கே பொருந்தும். அவ்வூர் மஹாராணி வேண்டுகோளுக்கிணங்கி மஹாராணி ஆதரவில் 'கான நிலையம்' என்ற விடுதி ஏற்படுத்தி, வயது வந்த பெண்கள், ஆங்கிலம், சம்ஸ்க்ருதம், பாட்டு, மூன்றும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தேன். எனக்கு உதவியாக மூன்று பேர்களை அஞ்சலி தேவி ஆச்ரமத்திலிருந்து அழைத்துக்கொண்டேன். அவருளொருத்தி தான் உங்கள் ஹெட் மிஸ்டர்ஸ் கல்யாணி. அதனால் தான் உங்களுக்குப் பரதநாட்டியம் பயிற்றுவிக்க முடிந்தது.

"அந்த இடத்தில்தான் அதிருஷ்ட தேவதை என்மீது கடைக்கண் வீக்ஷண்யம் அருளினாள். அதுவரை எங்கே சென்றாலும் மன்னி தான் சமையல் செய்வாள். அவ்விடத்தில் பண வரவு செலவு ஒன்றுமட்டுமே மன்னி செய்வதற்கு ஏற்பாடு செய்து மற்ற வேலைகளுக்கு ஆள்வைத்து, மன்னியின் மானேஜ்மெண்டில்தான் சகலமும் என்று வைத்து அடுப்பு வேலையினின்றும் விடுதலை பெற்

ருள் அவ்வுத்தமி. அண்ணுவும், அக்காவும் ஹரிஜனத் தொண்டில் ஈடுபட்டார்கள். சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று அன்ருடம் துணி துவைத்துக் கட்டுதல், குளித்தல், சேரியில் குப்பை இல்லாமல் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், சிறுவர் சிறுமியர்கள் தலையைச் சிவிப் பின்னல் போடுதல், அவர்களுக்குப் பள்ளிக்கூடம் செல்ல வசதியளித்தல் இவைகளைச் செய்வார்கள். சில சமயம் அண்ணுவே சேரியைக் கூட்டுவார். அக்காவே பின்னல் போடுவாள்; கும்மி அடிக்கக் கற்றுக் கொடுப்பாள். மஹாராஜாவின் ஆதரவில் ஹரிஜனங்களுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி நடத்திவந்தார் அண்ணு. ஒருமுறை கவர்னர் ஜெனரல் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தார். ஹரிஜன் காலனியைப் பார்வையிட்டார். என்னுடைய மேற்பார்வையில் தாங்கள் வேலை செய்ததாக அண்ணு ரிபோர்ட் எழுதியிருந்தபடியினுல், பாடுபட்டது அவர்கள், பதக்கப் பரிசு எனக்கு. அவர்களது தியாகத்தைப் பார்!

"எங்கள் விடுதியிலும் ஜாதிபேதம் பணக்காரர் ஏழையென்ற வித்தியாசமின்றியே போதிக்கப்படுவார்கள். சாப்பாடும் யாவருக்கும் ஒன்றுபோலவே. ஆனுலும் வயது முதிர்ந்தவர்களை இதில் கட்டாயப்படுத்துவதில்லை. அப்படி அவ்விடமிருக்கும் பொழுது தான் பெரியவரை அவ்வூருக்கு மாற்றினுர்கள். நாங்கள் யாவரும் ஒரு குடும்பமாக வசித்தோம். முரளி எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தான்.

"பெரியவர் இருந்தபடியால் எங்கள் ஊர் மனிதர்கள் அடிக்கடி வந்து போவார்கள். அப்பொழுது முதலில் மியூஸியம் பொருளைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள். நான் சகஜபாவமாகப் பேசி, பழைய உறவைப் பற்றிப் பேசாமல் குதூகலமாகவே நடப்பேன். பிறகு என்னை வானளாவப் புகழ்ந்து விட்டுச் செல்வார்கள். நாங்கள் கோபாலம் சென்றது முதல் சனிக்கிழமை தோறும் சாயங்காலம், சுதர்மனுவது, அண்ணுவாவது ராதாகிருஷ்ண விக்ரஹம், இராஜ இராஜேசுவரி விக்ரஹம் இரண்டு பேரையும் பூஜை செய்வார்கள். நான் பாடுவேன். இது எப்பொழும் தவருமல் நடந்துவரும். நான் வெளியூர் சென்ற சமயங்கூட அக்கவோ மன்னியோ யாராவது செய்தே திருவார்கள். அந்தச் சமயம் பாடும் பொழுது என்னையே மறந்த நிலைமை எனக்கேற்பட்டுவிடும். எங்கள் ஊர்க்காரர்களில் புத்தாம்பசலியாக உள்ளவர்கள்கூட இவ்விடம் வந்திருக்கும் பொழுது, பஜனை சமயத்தில் பக்தியுடன் உட்கார்ந்திருந்து விட்டு, பிரசாதத்தைக்கூட வாங்கிக் கொள்வார்கள்.

"உனக்குத் தெய்வீக சக்தி இருக்கிறதடி காமாக்ஷி! அதனுல் தான் உன்னை இவ்வளவு தூரம் முன்னுக்கு வரும்படி செய்ய அவன் ஒதுக்கினுன். உனக்கேற்றவனு அந்த மடையன்? பஜனை சமயம் நீ பாடும் பொழுது மனக்கவலையெல்லாம் மறந்து மனம்பரவசமடைந்து விடுகிறது. பகவானே நேரில் வந்து விட்டது போன்ற உணர்ச்சி தோன்றுகிறது என்று புகழ்ந்து விட்டும் செல்வார்கள்; இதெல்லாம் நீ சென்னபடி காலமாறுதல்."

"அது சரி, அந்தக் கான நிலயத்தை விட்டு விட்டு எங்கள் ஹெட்மிஸ்டர்ஸ் ஏன் வந்தார்கள்? நீங்களும் ஏன் விட்டீர்கள்? கான நிலயம் மூடப்பட்டு விட்டதா? காரணம்?"

"கான நிலயம் இன்றும் நடந்து வருகிறது. வருஷக் கொண்டாட்டத்திற்கு நான் எவ்விடமிருந்தாலும் தவருமல் சென்று விடுவேன். எனக்கு வெளியூர்களிலிருந்து அழைப்புக்கள் அடிக்கடி வரலாயின. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிமித்தம் வேறு சுற்ற வேண்டியிருந்தது. அந்த நிலைமையில் நிலயத்தின் பொறுப்பை ஏற்பது கஷ்டமாக இருந்தது. அதனுல் சுலோசனு என்பவளைத் தலைவியாக்கினேன். பெரியவரையும் மாற்றி விட்டார்கள். முரளிக்கும் காலேஜில் சேரவேண்டும். அதனுல் சென்னையை இருப்பிடமாகக் கொண்டு சுற்றலாம் என்றுதான் இந்த ஏற்பாடு செய்தேன். சுலோசனுவிற்கும் கல்யாணிக்கும் அபிப்பிராய பேதம் எழும்பினதினுல் கல்யாணி பிரிந்து விட்டாள்"

"இப்பொழுது முரளி என்ன செய்கிருன்?"

"ஆனர்ஸ் பாஸ் செய்து விட்டான். உத்யோகம் தேடிக் கொண்டிருக்கிருன். பெரியப்பா, கல்யாணமாகப் போகும் மாமனுர் இருவரும் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர்கள். வேலை கிடைப்பது பற்றிச்சந்தேகமே வேண்டாம்" என்று செல்லும்பொழுது மணி இரண்டடித்தது. "லீலா, மணி இரண்டு. இனி தூங்கவேண்டும் விடிந்து பார்த்துக் கொள்ளலாம்"

"தூங்கவேண்டியது தான், நாளை என் பிரயாணம் நிச்சயம்" என்று எழுந்திருந்தாள் லீலா.

"ஏனம்மா, காதம்பரிதேவி! லீலா என்னவோ சொல்லுகிருளே உண்மைதானு?" என்று ஹாலில் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஸ்னனம் செய்த தலையை ஆற்றிக் கொண்டிருந்த காதம்பரியிடம் கேட்டாள் மி. மாமி.

"ஆமாம் மாமி! ஆனுல் உங்கள் உத்தரவில்லாமல் ஒன்று செய்ய முடியுமா? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"அவள் கோபாலைக் கல்யாணம் செய்துகொள்ளுவதற்குச் சம்மதமில்லை என்பதற்கு என்ன காரணம் சொன்னாள்?"

"உள்ளதை, நடந்ததைச் சொன்னாள்?"

"என்ன நடந்ததாகச் சொன்னாள்?"

"உங்களின் தூரத்து உறவினன் ஓர் பையன் இவ்வூரில் வந்து ஒருவருஷம் தங்கினதாகவும், உங்கள் அனுமதியின்மேல் ட்யூஷன் சொல்லிக் கொடுத்ததாகவும், இருவருக்குமிடையில் காதல் வளர்ந்ததாகவும், திடீரென்று ஏதோ காரணத்தினால் கல்யாணம் செய்துகொள்ள முடியாமல் போய்விட்டதாகவும், அவனைக்கல்யாணம்செய்துகொள்ளாததற்காக அவனின் பெற்றோர் மனம் வருந்தி அவனிடம் விடுதலைப் பத்திரம் வாங்கிவிட்டதாகவும்,நீங்கள்கூட அவனுக்கு எவ்வளவோ சொன்னதாகவும், அவன் அவைகளைப் பொருட்படுத்தாமல் அவளையும் வெறுக்காமல் 'விதியிருந்தால் சந்திப்போம்' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டானாம். அவன் தன்னை விட்ட காரணத்தை ஒருவரிடமும் சொல்லுவதில்லையென்று பிரமாணம் செய்திருப்பதினால் என்னிடம் சொல்லவில்லை. என்றாகிலும் அவன் வந்தாலுமே, அல்லது ஆயுள் முழுவதும் சந்திக்காமலே போனாலுமே, தான் வேறு ஒருவரையும் ஏற்க முடியாது. என் மனம் இடமளிக்கவில்லை என்று சொன்னாள். நானும் சரியென்றே நினைத்தேன்."

"அம்மாடி" என நீண்ட மூச்சு விட்டுவிட்டு "நானே படிக்க ஏற்பாடு செய்கிறேனே" என்றாள்.

"இந்த மாதிரி மன நிலைமையில் என்னோடு சுற்றினால் கொஞ்சம் சாந்திபெற முடியும். அதனால் கொஞ்சம் விட்டுப்பிடியுங்கள்.பிறகு அவள் பிரியப்பட்டால் உங்களிடமே அனுப்பி விடுகிறேன். அல்லது ஆச்ரமத்தில் தங்கவிரும்பினால் அவ்விடம் ஏற்பாடு செய்கிறேன். அவள் காதலின் உறுதி மெச்சத் தகுந்தது. அதனால் அவள் விஷயத்தில் நாம் அனுகுணமாகவே நடந்துகொள்ள வேண்டும்."

"சரி உங்கள் சொற்படி அனுப்புகிறேன். ஆனால் அடிக்கடி அவள் க்ஷேமத்திற்குக் கடிதம் போடவேண்டும். சில மாதங்களுக்கு ஒருமுறையாவது என்னை வந்து பார்த்துப்போக வேண்டும்" என்று சொல்லும்பொழுதே துக்கத்தினால் அவள் தொண்டை கம்மினது.

கடைசியில் புறப்படும் பொழுது, மி.மாமி மாமா இருவரையும் நமஸ்காரம் செய்துவிட்டு, "என்னை மனச்சாந்தி பெறும்படி ஆசீர்வதித்து அனுப்புங்கள். என்றும் உங்கள் குடும்ப கௌரவத்தைப் பாதிக்கும்படியாக நடந்துகொள்ளமாட்டேன். நிச்சயமாக அடிக்கடி வர்து செல்லுகிறேன்" என்றாள்.

"லீலா! உனக்கு மங்களமுண்டாகட்டும். உன்னைப் பற்றி நான் எவ்வளவோ மனக்கோட்டை கட்டினேன். உன் தகப்பனுக்குச் செய்த நன்றியாக உன்னை என் குலவிளக்கேற்றும், நாரி ரத்னமாக்க விரும்பினேன். விதியின் சித்தம் வேறாக அமைத்து விட்டது. உன்னை மேலே எவ்வளவு வேண்டுமானாலும் படிக்க வைக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் உன் மனம் நிம்மதியாயிருந்தால் தானே எதுவும் செய்ய முடியும்? ஸ்ரீமதி காதம்பரிதேவியவர்களின் மீதுள்ள நம்பிக்கையினாலும், பிரியத்தினாலும், அவரது அளப்பரிய குணத்திற்காகவுமே உன்னை அனுப்பிவைக்கிறேன். அடிக்கடி இவ்விடம் வந்து போ" என்று சொல்லும் பொழுதே மி. மாமா கண்களில் நீர் துளித்தது.

"லீலா! உனக்கு நான் சொல்ல என்ன இருக்கிறது? உன்னைப் பிரிவது என் ஜீவனே பிரிவது போலிருக்கிறது. பணத்தைப்பற்றிக் கவலைப் படாதே. கையில் கொடுத்தது இருப்பு நிதியாக இருக்கட்டும், மாதம் மாதம் அனுப்புகிறேன். அதைத் தவிர வேண்டும் பொழுது தயங்காமல் எழுது, அனுப்புகிறேன். பகவான் எவ்விதமாகவாவது உன் மனோபீஷ்டம் கைகூடச் செய்யட்டும். இந்தப் பாதை சென்றால் ஒருசமயம் உன் குறை நீங்க இடமேற்படலாம் என்று நம்பிக்கையினாலேயே அனுப்புகிறேன். உன்னை எவ்விதமான உன்னத ஸ்தானத்தில் வைத்து நடத்த வேண்டுமென்று நினைத்திருந்தேனென்பதை உன்மனமும் என்மனமும் அறியும். உன் தாயின் மிருத தேகத்தின் முன் சபதம் எடுத்தேன். அதை நிறைவேற்ற அவளே வழிகாட்ட வேண்டும். சென்றுவா" என்றாள் மி. மாமி. இருவர் கண்களிலும் மடை திறந்தாற்போல் கண்ணீர் பெருகிற்று. சட்டென லீலாவை ஆவி சேர்த்தணைத்து முத்தமிட்டு விட்டாள் மி. மாமி.

"ஆஹா! எத்தகைய அன்பு! இப்படிப்பட்ட தம்பதிகள் இருப்பதினால் தான் மழை பெய்கின்றது போலும். லீலா பாக்யசாலி தான்" என்றது காதம்பரியின் மனம்.

"மாமி! மாமா! கோபால்! பவானி! வருகிறேன்" என்று லீலாவண்டிக்குள் ஏறினாள். கோபால் ட்ரைவர் ஆசனத்தில் அமர்ந்தான். காதம்பரி தேவி விடைபெற்று ஏறியதும் பூம், பூம், என்ற ஹாரன் சப்தத்துடன் வண்டி சென்றதானது தெருவின் இருபக்கமும் நின்று பார்க்கும் ஜனங்களை நோக்கி "இனிமேல்லீலாவைப்பற்றிப்பேச ஒன்றுமிருக்காது" என்று சங்கநாதம் செய்வது போன்றிருந்தது லீலாவின் மனதிற்கு. (தொடரும்)

எனது ஆக்ஸ்போர்ட் பிரயாணமும் ஸ்டிராட்போர்ட் பிரயாணமும்

லீலா கோபாலன்

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல், புலவரிலே கம்பர் திருவள்ளுவர் இளங்கோ போல்” என்று தமிழ்ப் புலவர்களைப்பற்றி, புகழ் பரவி இருப்பது போல் இங்கிலிஷ் மக்களுக்குள்ளே கவிஷேக்ஸ்பியர் மிகவும் பெயர் பெற்றவர். ஷேக்ஸ்பியரின் எண்ணற்ற கவிதைகளை. நாம் பள்ளிக் கூடங்களிலும் காலேஜுகளிலும் படிக்கிறோம், நாடகங்களாப் பார்க்கிறோம். ஏன், சினிமாவிலும் தான் கண்டு, களிக்கிறோம். அவ்வளவு பிரக்யாதி பெற்ற கவியின் பிறந்தஇடம் ஸ்டராபோர்ட்— ஆன் அவென் என்ற கிராமம்.

வழக்கமாகக் கோடைக்காலத்தில் விடுமுறைக்குப் புறப்படும் இந்நாட்டுமக்களும் அயல் நாட்டுப் பிரயாணிகளும் இந்த இடத்திற்குச் சென்று பத்து நாட்களாவது தங்காமல் இருக்கமாட்டார்கள். எல்லோரையும் கவர்வது போல் இந்தச் சிறியகிராமம் எங்கள் கவனத்தையும் சென்றமாதம் தூண்டிவிட்டது.

லண்டனுக்குச் சுமார் 100 மைலுக்கு அப்பால் உள்ள இவ்விடத்திற்கு, காலை 8 மணிக்கெல்லாம் காரில் புறப்பட்டோம். நாலைந்து நண்பர்கள் பேச்சுத்துணைக்கு, சாப்பிடுவதற்குப் பலவித பலகாரவகைகள், மனதுக்கு உற்சாக மூட்ட வழிநடுவே பச்சை பசேலன்ற இயற்கை காட்சிகள். ஒருமனிதன் சந்தோஷம் அடைய என்ன வேண்டும்? நகரத்தை விட்டுக் கொஞ்ச தூரம் சென்றதும் ஜனக்கூட்டம் குறைந்து, வழவழப்பான தார் ரோடில் கார்திருப்பியதும் திடீரென்று எல்லோருக்கும் உற்சாகம் கிளம்பி விட்டது. வயல் வெளிகளிலும் அவைகளில் கவலை இன்றித் திரியும் பசுக்களையும் பல வித வர்ண ஜாலங்களை அள்ளித் தெளிக்கும் பூக்களையும் பார்த்து லண்டனிலும் குளிர்காலமே வராமல் இருக்கக் கூடாதா என்று தோன்றியது. ஏப்ரில் மாதம் முதல் நவம்பர்வரைதான் பூக்களையும் செடிகளையும் பச்சையாக இங்கே காண முடியும்.

சுமார் 2 மணிநேரம் பிரயாணம் செய்துவிட்டு ஆக்ஸ்போர்ட் என்கிற மாணுக்கர்களின் பிரசித்திபெற்றநகரத்திற்கு வந்து சேர்ந்தோம். நம் தாய்நாட்டிலிருந்து வருஷத்திற்கு ஆயிரக்கணக்கான மாணவர்களும் மேல்படிப்புக்கு ஆசைப்படும் உத்யோகஸ்தர்களும் சர்க்காரின் செலவிலோ அல்லது பிரத்யேகமாகவோ ஆக்ஸ்போர்ட் கல்லூரிகளில் படிக்க வருவது எல்லோருக்கும் தெரியும். அந்த ஆச்ஸ்போர்ட் நகரத்தில் மொத்தம் 20 கல்லூரிகள் இருக்கின்றன. சில முக்கியமானவைகளின் பெயர் பால்லியால், ப்ரேஸ்நோஸ், மாக்டலீன், க்ரைஸ்ட்சர்ச், குவீன்ஸ் முதலியன. இந்தக் கல்லூரிகள் எல்லாம் 13ஆவது நூற்றுண்டைச் சேர்ந்தவைகளாம். தனித்தனியாகக் கல்லூரிகள்நடத்தப் பட்டாலும் எல்லோரும் மிகவும் ஒற்றுமையுடன் உழைப்பார்கள். ஒவ்வொன்றும் மிகவும் அருகிலேயேகட்டப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கென்று 4 காலேஜ்கள் இருக்கின்றன, இவைகள் தற்காலத்தில் தான் கட்டப்பட்டிருந்தாலும் மிகவும் பிரபலம் அடைந்து வருகின்றன.

கல்லூரிகளைத் தவிர, அவைகளில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படும் அண்டர்— கிராஜுவேட் என்பவர்களுக்கு நான் — கலிஜியேட் டெலிகஸி (Non—collegiate delegacy)என்ற ஒன்றுநடத்தப்படுகிறது. இதில் பாடம் போதிக்கும் முறை எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும், ஆனால் தங்குவதற்கு மட்டும் ஹாஸ்டல் வசதி கிடையாது.

நம் தேசத்தில் உள்ள காலேஜ்களுக்கும் இங்குள்ளவைகளுக்கும் அநேக வித்

யாசங்கள் காணப்படுகின்றன. ஹாஸ்
டல் வாசம் என்றால் பாடம் நடக்கும்
இடங்களை எல்லாம் விட்டுத் தனியாக
அமைக்கப்பட்டிருக்கும் அல்லவா? இங்கு
மாணவர்கள் பாடம் நடக்கும் காலேஜ்
கட்டிடத்திலேயே மேல் பகுதிகளில்
அதாவது மாடிகளில் வசிக்கிறார்கள்.
தனித்தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கும்
படுக்கை அறை, சாமான்கள் வைத்துக்
கொள்ளத் தனி இடம், மற்றப்படி சிநேகி
தர்கள் வந்து பேசுவதற்கு உட்காரும்
அறை இவைகள்தான் மாணாக்கரின்
இருப்பிடம். மேற் சொன்ன அறைகள்
எல்லாம் அருமையான மரச்சாமான்
களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மிகவும்
சிரத்தையுடன் ஒவ்வொரு பாடத்தைப்
பற்றிப் பேசுவார்கள். மாணவர்கள் விரும்
பினால் மற்றக் கல்லூரிகளில் நடக்கும்
பாடங்களைக் கேட்கவும் செல்லலாம்.
ரஷ்யாவிற்கு இந்திய ஸ்தானீகராகச்
சென்றிருக்கும் ஸர். எஸ். ராதாகிருஷ்
ணன் ஆக்ஸ்போர்டு கலாசாலையொன்றில்
தத்துவ சாஸ்திர பாடம் கற்பிக்க நிய
மிக்கப்பட்டிருந்தது உங்களுக்குத் தெரிந்
திருக்கலாம்.

ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு
ஆசிரியர் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பார்.
ஆசிரியர்தான் எந்தப் புஸ்தகம் படிக்க
வேண்டும் எந்தப் பாடங்களில் கவனம்
அதுசமயம் செலுத்தவேண்டும் என்றெல்
லாம் புத்தி கூறுவாராம். இந்தியக் கல்
லூரிகளில் பலவித உயர்ந்த புஸ்தகங்க
ளைப்படித்து விட்டு ஆக்ஸ்போர்டில் புதி
தாக, பிறகு சேர்ந்த மாணவன் எதாவது
ஒருதலையங்கத்தில் தான்படித்தறிந்த பல
விதமான ஆசிரியர்களின் சொற்களைப்
போட்டுப் பிரமாதமாக எழுதி விட்ட
தாக மார் தட்டி வருவானாம். ஆனால் அவ
னுடைய ஆசிரியர் பிறர் எழுதிஇருப்ப
தையே உபயோகம் செய்வதில் பிரயோ
ஜனம் இல்லை, தன் சொந்தக் கற்பனா சக்
தியை உபயோகித்து மேலேவிருத்திபெற
வழியைக் காணவேண்டும் என்றுவழி
காட்டுவாராம். வந்து சேர்ந்து கொஞ்ச
காலம் செல்லும்வரை மாணாக்கனுக்கு
ஒன்றும் பிடித்தமில்லாமல் இருக்குமாம்.
ஆக்ஸ்போர்ட் கலாசாலைகளில் மேல் படி
ப்புக்குவரும் ஒவ்வொருவரும் அறிவாளி
களாய்த்திரும்ப முடியுமா, அப்படி செய்
கிறார்களா என்றெல்லாம் நீங்கள் கேட்
கலாம். அந்தக்கலாசாலைகளில் எல்லாம்
படித்துப் பட்டம்பெறும்பாக்யம் எனக்கு
இல்லாவிட்டால்கூட அவைகள் எல்லாம்
ஒருமனிதனின் அறிவை விருத்திசெய்ய
எவ்வளவு சிறந்த முறையில் நடத்தப்படு
கின்றனஎன்று தெரிய வந்தது. இந்தியா
வைப்போல் பற்பல இடங்களில் காலேஜ்
கள் கட்டப்பாடமல் இங்கு அநேகமாக
ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டப்பட்டி
ருப்பது விசேஷம். ஆக்ஸ்போர்ட் மிகப்
பெரிய பட்டணம் இல்லை. படிப்பிற்கு
வசதியாகச் சுற்றிலும் இயற்கைக் காட்சி
யும் சுத்தமான புதியகாற்றோட்டமும்
இருக்கின்றன. அந்தச் சிறிய நகரத்திற்
குள்ளேயே எண்ணற்ற குடி வகைகள்
விற்கும் "பப்ஸ்" இருக்கின்றன. மாண
வன் கெட்டுப்போக வேண்டுமென்றாலும்
வழி இருக்கிறது. இந்த விஷயத்தில் அவ
ரவர் மனத்தில் கட்டுப்பாடுதான் வேண்
டுமே தவிர, பிறர் புத்தி சொல்வதில் பிர
யோஜனம் காணமுடியாது.

ஆக்ஸ்போர்ட் பட்டணத்தை விட்டுக்
கிளம்பிய நாங்கள் ஸ்டிராட்போர்ட்என்
கிற இடத்திற்குச் சரியாகப்பகல் 2மணிக்
கெல்லாம் வந்து சேர்ந்தோம். சிற்றுண்டி
களை முடித்துக்கொண்டு நாங்கள் வந்த
காரியத்தைக் கவனிக்கத் தயாரானோம்.
இந்தச் சிறிய கிராமம் அவென் (Aven)
என்கிற நதிக் கரையில் இருக்கிறது.
இங்கிலாந்தின் புகழ் பெற்ற கவி ஷேக்ஸ்
பியர் பிறந்த இடம் என்பதற்காகத் தான்
இந்தக் கிராமம் பட்டணமாக மாறத்
தொடங்கி இருக்கிறது. இந்த இடத்தில்
தான் உலகம் பூராவும் உலாவி வரும் சில
நாடகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.
அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் நதி
யும் தாழ்ந்த கூரைகள் உள்ள கற்கட்ட
டங்களும் குறுகிய தெருக்களும் கவியின்
அநேக காவியங்களுக்குப் பக்க பலமாக
நின்றதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

மக்கள் நதியில் பிரயாணம் செய்து
சிறிது நேரம் களிப்புறுவதற் கென்று
மோட்டார் படகுகள் இருக்கின்றன.
ஆளுக்கு ஒரு ஷில்லிங் கொடுத்தால் நதி
யில் கொஞ்ச தூரம் சென்று வரலாம்.
குளுகுளு வென்ற தென்றலில் இயற்கைக்
காட்சிகளை அனுபவித்துக் கொண்டு நாம்

செல்லும்போது ஷேக்ஸ்பியர் ஏன் இந்த மாதிரி சாந்திநிலவும் இடத்தில் கவிதை கள் எழுத முடியாது, நமக்கே ஏதாவது எழுத வேண்டும் என்று தோன்றுகிறதே என்று எண்ணத்தான் வேண்டியிருக் கிறது. ஆனால் அப்படி பிரமாதமாக எழுத வில்லையே என்று கேட்கிறீர்களா? எல்லோருமே கம்பனாகவும் ஷேக்ஸ்பிய ராகவும் மாறிவிட்டால் உலகம் சும்மா இருக்குமா?

சுற்றிவளைந்த பல தெருக்களையும் வழி நடுவே உள்ள கேவுக்களையும் ஜனக்கூட் டத்தையும் தாண்டிப் போனால் கவி பிறந்தவீடு காணப்படுகிறது. பழையகால த்து வீடுதான். தாழ்ந்தகூரை. கரடு முர டான பாராங்கல்தரை. நடுநடுவே அந்தக் காலத்தில் உபயோகப் படுத்தப் பட்ட மரச் சாமான்கள் கையும் காலும் ஜீர் ணித்து ஆனால் மிகவும் பாதுகாப்புடன் ஜனங்கள் சீண்டாமல் வைக்கப் பட்டிருக் கின்றன. பலகண்ணாடி அலமாரிகளில் கவியின் பழைய எழுத்துக்களும் செய்திப் பத்திரிகையின் துண்டுகளும்கூட பார் வைக்கு ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின் றன. வீட்டின் பின்புறம் அழகான தோட்டம். கோடைக்கால மாதலால் ஆப் பிள் செர்ரிஸ் முதலியபழங்கள் பழுத்துக் குலுங்குகின்றன. எங்கள் கூட வந்த நண் பர் ஆக்ஸ்போர்ட் கலாசாலையில் படித்துப் பட்டம்பெற்றவர். கவியின் நாடகங்க ளின் பல பகுதிகளை ஒப்புவிக்கத் தொடங் கிவிட்டார்.

அந்தப் பழையகாலத்து வீட்டை நன் ருகக் கவனித்துப் பார்த்த உடன் நம்மன தில் பல நூற்றுண்டுகளுக்கு முன் இருந்த வாழ்க்கை விபரம் பளிச்சென்று தென் படுகிறது. இச்சிறிய கரடு முரடான வீட் டில் பிறந்து வளர்ந்த கவியின் உள்ளம் மட்டும் தெளிவாகப் பலவித காவியங் களை அருமையாக எழுதியது எவ்வளவு ஆச்சரியம்? மாடமாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் வளர்ந்து மனதைச் சிந்தனையில் செலுத்த ஆயிரக்கணக்கான வசதிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் தற்காலத்தில் ஒருவராவது அருமையான கவிதைகள் புனைய முடியுமா? ஏழ்மைக் கும் கவிக்கும் எதோ ஒற்றுமை இருக்கத் தான் செய்கிறது.

மேற்சொன்ன கவியின் பிறந்த இடம் அவரது நாடகங்களையே தொடர்ந்து நடத்தி வரும் நாடக சாலையினுல் இன் னும் பிரபலமடைந்து வருகிறது. ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இந்த நாடகசாலையில் கவியின் நாடகங்கள் எல் லாம் தினம் ஒவ்வொன்ருக நடைபெறும், விடுமுறைக்கு ஏற்பாடு செய்யும் மக்கள் பலமாதங்கள் முன்பே எல்லா நாடகங் களுக்கும் பதிவு செய்து கொண்டுதான் தவருது கண்டு மகிழ்வார்கள். திடீ ரென்று நாம் பார்க்கப் போனுல் இடம் கிடைக்காது.

இந்த நாடகசாலை புதிதாகக்கட்டப்பட் டிருப்பதால் இதன் புதுமையும் கவியின் பிறந்த இடத்தின் பழமையும் போட்டி போட்டுக்கொண்டு அவென் நதியில் தன் பிரதிபிம்பத்தைக்காண்பித்துக் கொண்டு பழமைக்கும் புதுமைக்கும் வித்யாசமில் லாமல் ஆயிரக்கணக்கான மக்களைத் திருப்திசெய்கிறது. மக்கள் என்ருல்ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் காண முடியாது. மனிதன் ஒவ்வொருவனுக்கும் சந்தோஷிக்க உரிமைஉண்டு. நாடகங்கள் பார்க்கச் சக்தி இல்லாவிட்டால் அந்தக்கி ராமத்தையும் கவியின் பிறந்தவீட்டையும் காணலாம் என்று எவ்வளவோமக்கள் வருகிருர்கள். இங்கிலாந்து மக்களோடு அல்லாமல் உலகமக்கள் யாவருக்கும் மகிழ்வூட்டும் இந்தக்கவியின் பிறந்த இடம் என்றும் புகழ்பெற்றுவரும் என்ப தில் சந்தேகமில்லை.

வீட்டில் தயாரித்த

பனீர் கட்லெட்

டால்டாவில் செய்தால்

சுவைமிக்கதாயிருக்கும்!

5 கப் பாலை கொதிக்கவைத்து சில சொட்டுகள் எலுமிச்சஞ் சாறை பிழியவும். பால் பிரிந்ததும் அடுப்பிலிருந்து எடுத்து தனியாகவைக்கவும். உறைநீர் தெளிந்ததும் வடித்துவிட்டால் கெட்டியான பனீர் கிடைக்கும். (புளித்துப்போன பாலிலிருந்தும் மேற்கூறியபடி பனீர் எடுக்கலாம்). பனீரை மஸ்லின் துணியில் கட்டித்தொங்கவிடவும். சுமாருக உலர்ந்ததும் பச்சைமிளகாய் அல்லது மிளகு, பொடித்த சீரகம், ருசிக்குத் தகுந்த உப்பு இவைகளை கலக்கவும். கலவையின் மேல் பளு வைத்து சமமாக பரத்தவும். பனீர் கெட்டியானதும் சதுரம் சதுரமாக கத்தியால் நறுக்கவும். குழிவு குறைந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி சதுரக்கட்டிகளை சீக்கிரமாக பொரித்தெடுக்கவும். பனீர் கட்லெட்களை பொரித்த வெங்காயம், எலுமிச்சந்துண்டுகள் இவையோடு சூடாக பரிமாறவும். இதைப்போட்டு குழம்பு தயாரித்து சாப்பிட்டால் மிக ருசியாயிருக்கும்.



எந்த உணவுகள் எளிதில்
ஜீரணமாகின்றன?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM 100-23 TM

கல்யாணி

ஆர். எஸ்.

பாட்டு முடிந்தது. அதைத் தொடர்ந்து எழுந்த கரகோஷம் ஓய்வதற்குச் சில நிமிஷங்கள் ஆயின. முன் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருவர் எழுந்து நாலடி முன்னால் வந்து,

“கல்யாணி ராகம் பாடுவீர்களா?” என்று கேட்டார்.

பாடிக் கொண்டிருந்தவருடைய முகம் சற்று மாறியது. வாடிய முகத்துடன் “கல்யாணி ராகம் பாடுவதை நான் விட்டு வெகு காலம் ஆகிவிட்டது. மன்னிக்க வேண்டும்” என்று சமாளித்துக் கொண்டார். கச்சேரி முடியுமட்டும் மறுபடி அந்தப் பழைய களை அவருடைய பாட்டில் காணப் படாமலே போயிற்று.

* * *

“கல்யாணி ராகம் பாடமாட்டீர்களா?” என்று அவர் கேட்டது அவர் மனத்தை உலுக்கியது. அன்று இரவு ரயிலில் தனியாக உட்கார்ந்து பிரயாணம் செய்ய ஆரம்பித்தபோது பழைய ஞாபகங்கள் அவர் நினைவுக்கு வரத் தொடங்கின.

2

சிதம்பரத்தில் ஒரு வித்வானிடத்தில் அவர் அப்போது சங்கீதம் கற்றுக் கொண்டிருந்தார். வருஷத்துக்கு நாலைந்து தடவைகள் ஊருக்கு வருவதுண்டு. வெள்ளம் வரும் சமயங்களில் கொள்ளிடத்தைப் படகில் தான் கடக்க வேண்டும். அக்கரையில் எப்போதும் அவர் வீட்டு வண்டி வந்து நாலு மைல்களுக்குப்பால் இருக்கும் கிராமத்துக்கு அழைத்துச் செல்லும்.

ஒரு தடவை அப்படி அவர் போனபோது படகு அக்கரைக்குப் போயிருந்தது. திரும்பி வர, கால் மணியாவது ஆகும். அப்போது 'கல கல' வென்று ஒரு சிரிப்புச் சப்தம் கேட்டது.

யாரோ ஒரு பெண்ணும் அவள் தாயாரும் கட்டுச் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் நடுநடுவே காக்கைகளுக்கும் சாதம் போட்டுக் கொண்டிருந்தாள். அப்படிப் போடும் போது ஒரு தடவை அது வெகு அருகாமையில் விழுந்து சுந்தரேச்வரன் மேல் தெறித்தது.

“கல்யாணி! இது என்ன விளையாட்டு?” என்று அவள் தாயார் கடிந்து கொள்வது அவன் காதில் விழுந்தது.

படகு வந்தது. பிரயாணிகள் இந்த மூன்று பேர் தான். ஏறி உட்கார்ந்தார்கள். நதியில் படகு ஜலத்தைக் கிழித்துக் கொண்டு போகுமல்லவா? அந்தப் பெண் அதை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்தாள். படகின் ஒரு பக்கத்தில் தலையிலிருந்து ஒரு பூவை எடுத்துப் போடுவாள். அது ஜலத்தோடு வருவதைப் பார்க்க இன்னொரு கோடிக்குப் போவாள். அப்படி ஒரு தடவை ஓடும் போது கால் தடுக்கித் தண்ணீரில் விழத் தெரிந்தாள். சுந்தரேச்வரன் சட்டென்று அவள் கையைப் பிடித்துத் தாங்கினான்.

“அடி பெண்ணே! இதென்ன விஷமம்? ஆற்றில் விழுந்திருப்பாயே?” என்றாள் அவள் தாயார்.

கல்யாணியோ கல கலவென்று சிரித்தாள். “உங்களுக்கு நீந்தத் தெரியுமா?” என்று கேட்டாள். அவன் “தெரியும்” என்றதும் “அப்படியானால் அதற்குள் ஏன் பிடித்துக் கொண்டீர்கள்? ஆற்றில் விழுந்த பிறகு எடுத்திருக்கக் கூடாதா?” என்று கூறி மறுபடியும் சிரித்தாள்.

சுந்தரேச்வரன் அவளைக் கூர்ந்து நோக்கினான். கல்யாணி அப்படி ரொம்ப சிவப்பு இல்லை. கொஞ்சம் மாநிறம். அவளுடைய பெரிய கண்கள் முக்கியமாக எல்லோரையும் கவரக் கூடியவை. அன்பும் ஆவலும் கலந்த பார்வை. உடம்பிலே பொங்கிவரும் இளமையை அவள் அலட்சியமாக ஏற்றுக் கொண்டிருந்தாள். அவன் உடல் சிலிர்த்தது. தன் வாழ்நாளிலேயே அது காறும் அம்மாதிரி உணர்ச்சி ஏற்பட்டதில்லை என்று உணர்ந்தான்.

கல்யாணி தலையைக் குனிந்து கொண்டாள்.

3

அதற்குப் பிறகு ஒரு கச்சேரிக்குப் போகும் படியான சந்தர்ப்பம் சுந்தரேச்வரனுக்கு

ஏற்பட்டது. அங்கே கச்சேரி செய்து கொண்டிருந்தவளைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. மேடையில் அமர்ந்து கச்சேரி செய்து கொண்டிருந்தவள் கல்யாணிதான். அவள் இருப்பது சிதம்பரம் தான் என்றும் அவனுக்குத் தெரிய

198040.

வந்தது. சிதம்பரத்தில் அவளுடைய கச்சேரி எங்கே நடந்தாலும் அங்கே அவன் ஆஜராகி விடுவது வழக்கம். அப்போதெல்லாம் அவள் தன்னையே பார்த்ததாகவும், புன் முறுவல் செய்ததாகவும் அவனுக்குப் பிரமை உண்டாகும். ஒரு நாள் கல்யாணியின் தாயாரைச் சந்தித்தான். துணிந்து "உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டு வைத்தான். அவள் வீதியின் பெயரைச் சொல்லி, "ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாருங்களேன் பிள்ளை!" என்றாள்.

அதற்குப் பிறகு ஒரு நாள் அல்ல. அடிக்கடி சுந்தரேசுவரன் அங்கே போய் வருவதுண்டு. கல்யாணிக்குச் சங்கீதத்தில் நல்ல ஞானம் இருந்தது. சுந்தரேச்வரனும் அவளுக்குச் சளைத்தவனல்ல. போட்டி போட்டுக் கொண்டு பாட ஆரம்பித்தார்களானால் குரலின் நயமும் பாட்டுக்களின் அழகும் மெருகு ஏறிக்கொண்டே போகும். வெறும் தேகசம்பந்தமான ஒரு பந்தம் எப்போதும் சாசுவதமாக இருக்குமோ என்னமோ? ஆனால் அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்த சங்கீதம் அவர்கள் உள்ளங்களை ஒரு வழிப் படுத்துவதாக இருந்தது. ஒருவருடைய சங்கீதத்தில் மற்றவர் உள்ளத்தைப் பறி கொடுத்தார்கள்.

அதில் இருவருக்கும் பிடித்தது கல்யாணி ராகம் தான். அதை எடுத்துவிட்டால் இருவருக்கும் பொழுது போவதே தெரியாது. சிலசமயம் பாடிக்கொண்டேயிருக்கும்போது சாயங்காலம் முடிந்து இரவு இருள் சூழ்ந்து விடும். "மணி என்ன" என்று அவன் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படியாக இருக்கும்.

"சிதம்பரம் என மனம் கனிந்திட" என்று அவள் பாட ஆரம்பிப்பாள். அவனுடைய மனமும் கனிந்து போகும்; உணர்ச்சி பெருகும். முன் மாடத்தின் வழியாகத் தெரியும் கோபுரத்தின் பிரகாசமான விளக்குகள் அவன் உள்ளத்தைத் தூண்டிவிடும். மெய் மறந்து போவான்.

"மோகாந்தகாரம் அதில் மூழ்கியே—
இன்னும்
மோசம் போகாதே என் மூட நெஞ்சமே!"

என்ற இடத்தை அவள் பாடும்போது அவள் கண்களில் அவளை யறியாமல் நீர் துளிக்கும். அவன் பார்க்காத வண்ணம் அவள் அதைத் துடைத்துக் கொள்வாள்.

ஊரில் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர்களை ஒன்று சேர்த்த பந்தம் பட்டு நூலைப்போல மிருதுவாகவும் கடினமாகவும் இருந்தது. அவனுடைய சங்கீதப் படிப்பும் முடிவடைந்தது. ஊருக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்தது.

"நீங்கள் போட்டோ எடுத்துக்கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள் கல்யாணி.

"ஓ! எடுத்துக்கொண்டிருக்கிறேனே!" என்றான் சுந்தரேச்வரன். "அப்படியானால் எனக்கு ஒன்று கொடுங்கள்; சீக்கிரம் கொடுக்கவேணும்" என்றாள்.

மறுநாளே அவன் கொண்டு வந்து கொடுத்தான்.

"நாளைக்கு ஊருக்குப் போகிறேன் கல்யாணி! இதுவரை எத்தனையோ தடவை போய் இருக்கிறேன். ஆனால் இது கடைசித் தடவை. இனிமேல் சிதம்பரத்துக்கு நான் எதற்கு வரப்போகிறேன்?" என்றான். உணர்ச்சி மிகுதியினால் அவன் குரல் கம்மியது. அவள் கண்கள் கலங்கின.

"இதெல்லாம் என்ன கல்யாணி? நீ கூட என்னை மறந்துவிடவேண்டும். நான் எப்படியிருக்கிறேனோ என்னமாயிருக்கிறேனோ என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்காதே. தெய்வீகமான ஒரு காரணம் நம்முடைய உறவை ஏற்படுத்தியது. அதன் முடிவுக்கு நாம் வந்துகொண்டிருக்கிறோம் கல்யாணி! எனக்குச் சந்தோஷமாக விடைகொடு" என்றான்.

அப்படியெல்லாம் வேதாந்தம் பேசினவனுக்குக்கூட மறுநாள் ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் இருதயம் ஏன் அப்படி பதைபதைத்தது?

4

எத்தனையோ வருஷங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. சுந்தரேச்வரனின் பாட்டுப் பிரசித்தமாகிக்கொண்டு வந்தது. ஆனால் ஒவ்வொரு கச்சேரியிலும் சிகரமாக இருந்தது அந்தக் கல்யாணி ராகம்தான். அந்தராகத்தை எடுக்கும்போதே அவனுக்குக் குதூகலமான பழைய ஞாபகங்கள் வந்தன. வெண்ணிலாவைப் போன்ற அவள் முகம் நினைவுக்கு வந்தது. அருவி ஒலி போன்ற அவள் குரல் அவன் செவியில் ஒலித்தது. இருள் சூழும் நேரத்தில் அவள் கல்யாணி ராகத்தை லாவகமாகப் பாடிய கணக்கற்ற விதங்கள் அவன் சிந்தனையைச் சூழ்ந்தன. அவனுடைய குரலிலும் கல்யாணி ராகம் அமுதமாகப் பொழிந்தது. அவளுடன் சேர்ந்து பாடிய எவ்வளவோ கல்யாணி

ராகப் பாட்டுக்கள் அவன் நினைவுக்கு வந்தன. புதிது புதிதாக அவர்கள் கவனம் செய்த நிரவல்களெல்லாம் அவனுடைய நினைவுக்கு வந்தன.

ஒவ்வொரு வித்வானையும் ஒவ்வொரு ராகத்தைக் குறிப்பிட்டு அழைப்பதுண்டல்லவா? அதைப்போல அவனுடைய பெயரிலும் கல்யாணி ராகம் இணைந்துகொண்டது. அவனுடைய மனம் குதூகலித்தது. அதற்குக் காரணம் முழுதும் அந்த ராகத்தின் பெயரே என்றும் அதுவும் அது அவன் நினைவில் அவன் அறியாமல் குடிகொண்டுவிட்ட ஒரு பெண்ணின் பெயராய் இருப்பது தான் என்றும் சொல்லவேண்டியது இல்லையல்லவா?

* * *

அதற்குப் பிறகு எவ்வளவோ தடவைகள் சிதம்பரத்தைக் கடந்து போக வேண்டிய சந்தர்ப்பங்கள் அவனுக்கு ஏற்பட்டன. அப்போதெல்லாம் அவனுக்குக் கல்யாணியின் நினைவு ஏற்படும். கடலூருக்குப் போய், கனவிலிருந்து விழித்துக்கொள்வான்.

பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஒரு விஷயம் அவர் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தது. இத்தனை நாளும் அந்தக் குறுகிய காலத்தில் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப அனுபவம் ஏதோ விதிவசமாக நிகழ்ந்தது என்று அவர் நம்பினார். அந்த வாழ்க்கைக்கும் தற்கால வாழ்க்கைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று திடமாக நம்பினார்.

“அந்த நம்பிக்கை ஒரு வேளை பொய்யோ? விதிவசம் என்பதெல்லாம் வெறும் பிரமையோ? தம்மிடத்தில் முழுமையும் பற்று வைத்திருந்த கல்யாணியைக் கைவிட்டது குற்றமோ?” என்று நினைப்பார்.

“அவள் யாரோ? நாம் யாரோ? அது சங்கீத சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு உறவு அல்லவா? அதற்கு மனத்தில் வேறு எந்த அர்த்தம் கற்பித்துக்கொண்டாலும் அது குற்றம் தானே. தவிர அவள் தாசி குலத்தவள் தானே? நம் ஒருவருடைய நினைவு தானா அவளுக்கு?” என்றும் நினைப்பார்.

“உண்மையாக அவள் என் விஷயத்தில் அப்படி நடந்துகொண்டிருப்பாளா? என்னை மறந்து விட்டிருப்பாளா? அந்தப் பிணைப்பு அவ்வளவு எளிதில் விட்டுப்போகக் கூடியதா? ஒன்றும் புரியவில்லையே!” என்று மனம் கலங்குவார்.

அந்தக் கலக்கம் தெளியும்படியான சந்தர்ப்பமும் வந்தது!

5

சிதம்பரத்திலேயே ஒரு கச்சேரி செய்ய அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அன்று கச்சேரியில் அற்புதமாகக் கல்யாணி ராகம் பாடியபோது அந்தப் பேதையின் நினைவும் வந்தது. கச்சேரி முடிந்ததும் முன் எவ்வளவோ தடவைகள் போன வழியை நினைவில்வைத்துக்கொண்டு நிலாவெளிச்சத்தில் அவள் வீட்டுக்கு நடந்து சென்றார்.

வீட்டு வாசலை நெருங்கியபோது மல்லிகையின் மணமும், ஊதுவத்தியின் வாசனையும் அவருக்குப் புலனாயின. உள்ளே போனார். ஒரு சிறிய அறை. அதில் ஒரு கட்டில். அதில் யாரோ ஒரு நோயாளி படுத்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அதற்குமேல் சுவரில் ஒரு மாடம் இருந்தது. அதில் ஒரு சிறிய புகைப்படம் மலர் மாலையினால் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. எதிரில் குத்துவிளக்குப் பிரகாசமாய் எரிந்தது. பக்கத்தில் ஊதுவத்தியின் புகை எழுந்து மறைத்தாலும் அந்தப் படம் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. மறுபடியும் உற்றுப்பார்த்தார். அது அவருடைய புகைப்படம் தான். பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் ஊருக்குப் போவதற்குமுன்னால் கல்யாணியிடம் அவர் கொடுத்தது. அந்தப்பேதையின் நினைவில் இன்னும் இந்தப் பாவியின் உருவம் இருக்கிறதா? ஆஹா! அப்படியானால் அவளைப்பற்றி அவர் கொண்டிருந்த எண்ணம் எவ்வளவு தவறானது?

“கல்யாணி!” என்று கூப்பிட்டார். பதில் இல்லை. மறுமுறை “கல்யாணி!” என்று கூப்பிட்டார். லேசாகக் கண்ணிதழ் பிரிய, படுக்கையில் இருந்த நோயாளி “யாரது?” என்று கேட்டாள்.

“யாரங்கே?” என்று கேட்டுக்கொண்டே அங்கே அவள் தாயாரும் தள்ளாடிக்கொண்டே வந்தாள். கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்துவிட்டு “தம்பியல்ல?” என்று வியந்து போனாள்.

“கல்யாணி உனக்கென்ன? நீயோ இந்த நிலைமையில் இருக்கிறாய்? உன் உருவம் எப்படி இது மாதிரி மங்கிப் போய்விட்டது? பொன்னைப்போல இருந்த மினுமினுப்பு இந்த மாதிரி எப்படி ஆகிவிட்டது?” என்று உருகினார்.

அவள் இதழ்க்கடையில் லேசாக ஒரு புன்னகை தவழ்ந்தது. “நீங்களா ஸ்வாமி! நீங்



கள் இன்று இங்கே வருகிறீர்களென்று கேள்விப்பட்டேன். ஆனால் நான்—இந்தப்பாவி—இங்கே இன்னும் இருப்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்பவில்லை. ஒரு தடவை நீங்களே "என்னை மறந்துவிடு!" என்று கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே? அதை எப்படி—எதற்காக மீறுவது? ஆனால் அதைத் தவிர எனக்கு வேறொரு தடையும் இருந்தது. நீங்கள் முன்னே என்னுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தபோது என்னால் உங்களுக்குக் கெட்டப்பெயர் ஏற்பட்டது. அதை மறுபடியும் ஏற்படுத்த எனக்கு இஷ்டமில்லை. அதனால் உங்களுடைய படத்தைப் பார்த்து ஆறுதலடைவதுடன் நின்றுவிட்டேன். உங்களுடைய கல்யாணி ராகத்தைப்பற்றி எல்லோரும் பிரமாதமாகப் பேசிக்கொள்கிறார்கள். அது விஷயத்தில் எனக்கு ஒரு பெருமை உண்டு. அந்த ராகம் உங்கள் குரலில் மொட்டாக அரும்பி மலர்ந்தது எனக்குத் தெரியும். முதன்முதலில் அடிக்கடி அதைக் கேட்ட பெருமை எனக்கு உண்டு. இதை எண்ணி அடிக்கடி அர்த்தமில்லாத பெருமை கொள்வேன்.

" ஆனால்—ஆனால் உங்களைப் பிரிந்த பிறகு கல்யாணி ராகத்தை என்னால் பாடவே முடியாமல் போய்விட்டது. அதை எடுத்ததும் உங்கள் நினைவு வந்து சூழ்ந்துகொண்டது. உணர்ச்சி பெருகியது. பாட முடியாமல் குரல் கரகரத்துப் போயிற்று. என் கச்சேரிகள் குறைந்துபோயின. என் உடலும் தேயத் தொடங்கியது. ஆனால் என் நெஞ்சில் ஒரு நம்பிக்கை தளிர்விட்டது. எப்படியும் சாவதற்கு முன்னால் உங்களைப் பார்த்துவிடுவோமென்ற நம்பிக்கை இருந்தது. அது இன்று பலித்துவிட்டது. இனிமேல் நான் நிம்மதியோடு இறந்துபோவேன்." அவளால் மேலே பேசமுடியவில்லை. அதிகம் பேசினதால் உடலில் அயர்ச்சி தோன்றியது.

"கல்யாணி ! கல்யாணி ! என்னைவிட்டுப் போய்விடாதே ! நான் பெரிய பாவி. நீ என்னை நினைத்து உருகின போதெல்லாம் நான் அந்த நாட்களை நினைத்துச் சந்தோஷமாக இருந்தேன். உன்னுடைய துயரத்தை அறிந்துகொள்ளாமல் நீ என்னை மறந்து போயிருப்பாய் என்றுகூட நினைத்தேன். நீ உயிர் பிழைத்து என்னோடு வந்து மறுபடி வாழாமல் போனால், மறுபடி வந்து என்னுடைய சங்கீதத்துக்கு உயிர் கொடுக்காமல் போனால் நான் அந்தப் பாவத்துக்கு எப்படி பதில் சொல்வேன்?"

அவள் கண்களில் நீர் பெருகியது. முகம் மலர்ந்தது. அவளுடைய தலையை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு அவர் சொன்னார்;

"நீ பிழைத்து விடுவாய் கல்யாணி! பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் இதய பூர்வமாக நீ என்னை மணந்து கொண்டாய். இன்று நான் உன்னை மணந்து கொள்கிறேன். இன்று தான் அது முற்றுப் பெற்றது. இது அற்ப ஆசை காரணமாக எழுந்த தேக சம்பந்தமான விவாகமல்ல கல்யாணி! ஆத்மீகசம்பந்தமான விவாகம்" என்று சொன்னார்.

அவள் முகத்தில் பூரண திருப்தி ஏற்பட்டது. ஆனால் அவர் நம்பிக்கை பொய்த்துவிட்டது. இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் கல்யாணி மறைந்து போனாள். அந்தப் புனித சடலத்துக்கு ஒரு சொந்த மனைவிக்குப் புருஷன் செய்யக் கூடிய மரியாதைகளுடன் அவர் கிரியைகள் செய்தார்.

அதற்குப் பிறகு அவரால் கச்சேரிகளில் கல்யாணி ராகம் பாடமுடியாமல் போயிற்று. அவருடைய குரலில் அந்த ராகம் எழாமலே போய் விட்டது. எப்போது அந்த ராகத்தை எடுத்தாலும் அவருக்கு அந்தப் பேதையின் உருவம்தான் ஞாபகத்துக்கு வந்தது. தவிர அவள் தன் நினைவினால் எந்த ராகத்தைப் பாட முடியாமல் உருகினாளோ அந்த ராகத்தைத் நான் குதூகலத்துடன் விஸ்தாரமாகப் பாடியதைவிட-இனிமேல் பாடுவதைவிட-பெரிய துரோகம் ஒன்றும் இருக்கமுடியாது என்றும் அவர் கருதினார்.

* * * *

இந்தப் பழைய ஞாபகங்கள் இப்போது நினைவுக்கு வந்ததும் அந்தவேளையில் திடீரென்று பனிபெய்து உலகத்தை மறைத்தது போல அவருக்குத் தோன்றிற்று. தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த மரங்கள் அதன் பின்னால் கண்சிமிட்டும் நக்ஷத்திரங்கள் எல்லாம் ஒரு கொடிப் பொழுது மங்கி மறைந்தன. உண்மையில் பனி பெய்யவில்லை. தம் கண்ணில் தளும்பிய ஜலம்தான் அப்படிப் பனிப்படலத்தைப் போல மறைத்தது என்று தெரிந்து கொண்டு அவர் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

பெண்களுக்குப் பிரத்யேகமானது!

ஷிபாலி சௌத்ரி — சாரி

சுசீலாவின் தபால் பெட்டி

அக்கா! பட்டு அல்லது நூல் புடவையில் இருந்து காப்பி சிந்தின கறையை எப்படி எடுப்பது என்று சொல்ல முடி



யுமா? நான் துவைத்துப் பார்த்தேன், போக வில்லையே? சீதா.

பதில்: கறையை மாத்திரம் க்ளிஸரினில் நனைத்து, அதில் நன்றாய் ஊறும் பிரகாரம் தேய்த்து 2, 3 மணி சாவகாசம் வைக்கவும். பிறகு அதன் மேல் சோப்புத் தடவி ஜலம் தெளித்து ஒரு பழைய பல் துலக்கும் பிரஷ்ஷினால் தேய்த்து எடுக்க வேண்டும். பிற்பாடு புடவையை லக்ஸ் போட்டுத் துவைத்து இஸ்திரி போடவும்.

புல் தரையில் உருண்டு புரளுவது குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டு

என்றாலும், அம்மா அப்படி நினைப்பதில்லை. துணிகளில் படியும் புல் கறையை நீக்குவது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது? அக்கா, நீ ஒரு வழி சொல்லேன்.
பாமா.

பதில்: இதைச் செய்து பார். ஒரு வேளை பலன் அளிக்கக்கூடும். கறை படிந்த இடத்தை மாத்திரம் ஒரு தட்டில் பரப்பி, மெதிலேடெட் ஸ்பிரிட் (Methylated Spirit) பூசிப் பார். (இது சீக்கிரம் நெருப்புப் பிடிக்கும்; அடுப்பு, தீக்குச்சி இவைகள் சமீபம் கொண்டு போக வேண்டாம்.) அல்லது காடி-Vinegar-யை உபயோகிக்கலாம். இவை இரண்டுமே துணியில் உள்ள பச்சை நிறத்தை இளக்கும். மற்றதைச் சூடான சோப்பு நீரினால் தேய்த்து எடுத்து, அலசி விடவும்.

வெண்ணெயைப் புதிதாக வைக்க

எல்லோருக்குமே Frigidaire என்கிற ஐஸ் பீரோ வைத்துக் கொள்ளக்கூடிய அதிர்ஷ்டம் இருக்க முடியாதல்லவா? உங்களுடைய வெண்ணெயை உருகிப்போகாமல் குளிர்ச்சியாய் வைத்து வைக்க ஒரு எளிய உபாயம் இதோ—வெண்ணெயை ஒரு பீங்கான் ஜாடியில் போட்டு இதை



ஒரு பெரிய கிண்ணத்தில் நிறுத்தி, ஜாடியை ஒரு சுத்தமான பூந் தொட்டியால் மூடி விடவும். பிறகு கிண்ணத்தில் 2, 3 இஞ்சு குளிர்ந்த தண்ணீர் ஊற்றி ஒரு குளிர்ச்சியான இடத்தில் வைத்து, தினம் ஒரு முறை ஜலத்தை மாற்றவும்.

அழகுக் குறிப்புக்கள்

யாருக்குத்தான் முகம் பள பள வென்று வசீகரமாய் இருப்பதில் ஆசை இராது?

பழுத்த ஒரு தக்காளிப் பழத்தை நறுக்கி முகத்தில் 2, 3 தடவை தேய்த்துப் பூசவும்; சாறு நன்ருய்க் காயட்டும். ஒரு மணி நேரம் கழித்து, இளஞ் சூடான ஜலத்தினுல் கழுவி, மிருதுவான துணியினுல் முகத்தைத் துடைக்கவும். சிறிதளவு கோல்டு கிரீம் (Cold cream) முகத்தில் தடவி, அதிகப்படியானதை மஸ்லின் துணியினுல் துடைத்து எடுத்து விட வேண்டும். இம்மாதிரி ஒரு மாதம் தவருமல் செய்தால் தோல் பளபளப்பாயும், தெளிவாயும் காணப்படும்.

அழகிய கைகள்:—

கைகளின் அழகைப் பராமரிக்க,

இந்நாட்களில் பெண்கள், தங்கள் வீட்டு வேலையைத் தாங்களே செய்து கொள்கிருர்கள். சமையல் வேலையில் ஈடு



படும் மிருதுவான கரங்களில் அழுக்கேறி, கறை படிந்து அவைகளின் மேன்மை கெட்டுப்போகிறது. இந்த லோஷ

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,

பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,

Parekh Mansion, Sandhurst Road (West),

BOMBAY 4.

ணைப் பிரதி தினமும் காய்கறி நறுக்கிச் சமைத்து முடித்த பிறகு உபயோகித்தால், கைகள் எப்பொழுதும் போல் அழகுடன் விளங்கும்.

கிளிசரின்—2 அவுன்சு

2 எலுமிச்சம் பழத்தின் சாறு

1 டேபிள் ஸ்பூன் தண்ணீர்.

இவைகளை ஒரு சீசாவில் போட்டுக் குலுக்கித் தினமும் உபயோகிக்கவும். கெட்டியாக இருந்தால், இன்னும் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளலாம்.

தையல் வேலை

ஷாபிங் போகும் பெண்ணுக்குத் தகுந்த பெரிய பை. அழகான வர்ணத்தில் நீங்களே தைத்துக் கொள்ளலாம்.

வேண்டியதெல்லாம்: (1) 14" அகலம் 20" நீளம் ஒரு சாக்கு; இன்னொரு

கால் கஜம், அடியில் கொடுப்பதற்காக. (2) பழம் புடவைகளின் கரைகள்; இவை கெட்டி நிறத்தில் சாதாவாக இருந்தால் நன்றாயிருக்கும். (3) 10" அகலமுள்ள ஒரு வட்டமான அட்டை; இவ்வளவே.

தைக்கும் விதம்:—3" தூரத்தில் ½" அகலமுள்ள புடவைக் கரைத் துண்டு

களை மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை என்று மாறி மாறி, சாக்கில் வைத்துத் தைக்கவும். 11" அகலமுள்ள இரண்டு சாக்கு வட்டங்கள் கத்தரித்து ஓரத்தை ஒன்றாய்ச் சேர்த்துத் தைக்கவும். 5" பாக்கி இருக்கும்போது அட்டையை நுழைத்து, சேர்த்து முழுவதும் தைத்து விடவும். 20" நீளமுள்ள துண்டைச் சுருக்கி இந்த வட்டத்தைச் சுற்றி வைத்துத் தைத்து, உங்களுக்கு இஷ்டமான பிரகாரம் கைப்பிடி போட்டுக் கொள்ளவும். புடவைக்கரை இல்லாவிட்டால் Bias Binding உபயோகிக்கலாம்.

வெளியூர்க் கடிதம்—IV

ஹரித்வார் யாத்திரை

சாரி

பிரியமுள்ள——க்கு,

போன கடிதம் எழுதியபோது நான் அவசரமாய் ஹரித்வார்-யாத்திரை கிளம்பிக் கொண்டிருந்தேன். பழைய காலத்தில் பிரயாண வசதிகள் குறைவாய் இருந்தபோது, காசி, ஹரித்வாரம் என்று புறப்படுகிறவர்கள், யாத்திரை முடித்து க்ஷேமமாய் ஊர் வந்து சேர்வது துர்லபமாம். "காசிக்குப் போறேன்" என்று வீட்டில் உள்ள பெரியவர்கள் பேச்செடுத்தால், விடைகொடுத்து அனுப்பும் உறவினர் கண்ணும் கண்ணீருமாய், இனிக் காணவே போவதில்லை யென்கிற நிச்சயத்தோடு வழியனுப்புவார்களாம். இந்தக் காலத்தில் ஏழு தினங்களில் சீமை சென்று திரும்பி வரும் அதிசயத்தைப் பார்க்கும் நமக்கு, இது கேலிக்குரிய விஷயமாய்த்தோன்றலாம். எனினும், ஹிமாலயத்தில் யாத்திரை செல்பவர், ஓரளவு இயற்கையோடு போராடியே திரும்பவேண்டி யிருக்கிறது என்பதை நான் சிறிது உணர்ந்தேன்.

பல வருஷங்களாய் ஹிமாலயத்தைக்காண ஆவல் கொண்டிருந்த எனக்கு, மலையைத் தரிசித்துத் திரும்பிய பிறகு இக் கடிதத்தின் மூலமாக என் அனுபவங்களை உனக்கு விவரிக்க முயலும்போது, தகுந்த சொற்களே கிடைக்கவில்லை. மனது நிரம்பிய திருப்தியை எப்படி வர்ணிப்பது? இந்தக் கடிதம் என் முந்திய யாத்திரைக் கடிதங்கள் போல் விளக்கமாக இல்லாமற்போனால் என்னை மன்னித்து விடு.

டில்லியிலிருந்து ஒரு நாள் இரவு ரயிலில் கிளம்பி அதிகாலையில் ஹரித்வாரில் கண் விழித்தேன். இமய மலையையும் முதன் முதலாக அங்கே தரிசித்தேன்! ரயிலடிப் பிரயாணிகள் தங்கும் அறையில் சாமான்களை விட்டுவிட்டு, விடுதி தேடிக்கொண்டு புறப்பட்டோம். வழக்கமாய், நம்ம பக்கத்து ஜனங்கள் மதராஸி தர்மசாலைக்குப் போவார்கள். இது கங்கைக் கரையில் மூன்று மாடிக் கட்டிடம். யாத்ரீகர்க்கு வேண்டிய இடவசதி, சமையல் செய்யப் பாத்திரங்கள்—மூன்று தினங்கட்கு இலவசமாய்த் தருகிறார்கள்.

எங்களுக்கு அதற்கு அடுத்தாற்போல் ஆனந்தமயி பாடசாலையில் தங்க வசதி கிடைத்தது. இதை நடத்தும் அம்மையாரைப்பற்றிச் சில விஷயங்கள் சொல்லாமல் மேலே எழுத மனம் வரவில்லை. அவருக்குப் புருஷன் கிடையாது; ஒரே புதல்வர் ராணுவத்தில் வேலை செய்து திடீரென்று இறந்து போனாராம்.

முதலில் பள்ளிக்கூடத்தை ஏழைப் பெண்களுக்கென்று இலவசமாய் ஆரம்பித்து நடத்திவந்த அம்மை, தற்சமயம் 250 பெண்கள் படிக்கும் இந்த ஸ்தாபனத்திற்குத் தம் சொந்தக்கட்டிடத்தை எழுதிவைத்து, ரிஜிஸ்டர் செய்து, ஸ்தாபனத்தையே நகர பரிபாலன சபையிடம் ஒப்படைத்து விட்டார். கட்டிடத்தில் ஒரு சிறிய பகுதியில் அம்மையார் குடியிருந்து கொண்டு, பள்ளியை இப்போதும் மேற்பார்வை பார்க்கிறார்; அனேக ஏழைப்பெண்களுக்குக் கல்விபயிலத் தம் கையிலிருந்து பண உதவி செய்கிறார். இந்த விருத்தாப்பியத்திலும், பொது விஷயங்களில் அவருக்குள்ள தெளிந்த அறிவும், அக்கரையும் வியக்கத்தக்கவை.

10 வகுப்புக்களும் 15 உபாத்யாயினிகளும் கொண்ட இந்தப் பள்ளி நமது உயர்தரப் பாடசாலைபோல் நடக்கின்றது. வித்யா வினோதினி என்கிற பட்டம் பெற்றால் நமது மெட்ரிக், S. S. L. C., பரீட்சையில் தேறிய மாதிரி. ஆனந்தமயி அம்மையின் களை பொருந்திய முகம், கம்பீரமான உருவம், அவருடைய சுறுசுறுப்பு என் மனதைவிட்டு அகலவில்லை.

பள்ளிக்கூடத்தில் சௌகர்யமான ஓர் பகுதியை ஒழித்துத் தந்து அவர் எங்களை உபசரித்தார். சாமான்களைக் கொணர்ந்து அங்கே போட்டுவிட்டு, சமையலுக்கும் ஏற்பாடு செய்த பிறகு ஹரி. கி. புடி என்கிற ஸ்நான கட்டத்திற்குப் புறப்பட்டோம்.

ஹரித்வார் ஏதோ சிறிய ஊர் என்று தோன்றுகிறதல்லவா? அப்படியில்லை. தெருக்கள் என்னவோ சந்தும் பொந்துமாக இருந்தபோதிலும், ஊர் பெரிது. பல பெரிய கட்டிடங்களைக் கொண்டது. இரண்டு மலைத் தொடர்க்கு மத்தியிலிருந்து கங்கை பிரவாகிப்பதால் ஹரித்வார் என்று பெயர் வந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை நாலா பக்க மும் உயர்ந்த மலைத்தொடர்கள். கங்கை நீரின் குளிர்ச்சியோ ஐஸ் மாதிரி இருந்தது. பனி உருகிப் பெருகும் நீர் தானே? கங்கை யின் வேகமும், ஆழமும் அசாத்தியமானவை.



ஹரி. கி. புடி

ஸ்நான கட்டங்கள் பிரும்மாண்டமானவை. தீவுகளும், பாலங்களும், பளிங்குப்படிகளும், கடியாரக்கோபுரமும், (Clock-Tower), கதை காலக்ஷேபம் நடைபெறும் விஸ்தாரமான சிமிண்டு மேடைகளும் நதியை ஒட்டி ஒரு பெரும்பட்டணம்போல் அமைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கட்டிவைத்தவர் அந்தப் பொல்லாத மனுஷர்-ஸ்ரீபிர்லா தான் என்று தெரிந்து கொண்டேன்! கணக்கேயில்லா மல் தர்மசாலைகள் யாத்ரீகரின் தேவை களைக் கவனிக்கக் காத்திருக்கின்றன. வட இந்தியாவில் ஒவ்வொரு குறிப்பிட்ட ஸ்தா பனமும் தங்கள் பிரத்யேக கர்மங்களை லக்ஷி யம் பிசகாமல் நடத்திவருவது போற்றத் தக்கது.

நதிக்கரையில் கூட்டத்தில் கலந்தும், பல முறை பனிக்கட்டி ஜலத்தில் முழுகித்திளைத் தும், நீந்தத்தெரிந்தவர் நீந்தியும், சதாகால மும் நடைபெறும் ஹரி-பஜனையைச் சிறிது கேட்டும் சிலமணி நேரங்களைப் போக்கினேம். இதே இடத்தில் மாலை வேளையில் பிரதி தினமும் பிரகாசமான விளக்குகள் போட்டு, கங்கைக்கு ஹாரத்தி செய்கிருர்கள். மணி அடிக்கும்' ஓசை, கொட்டுமுழக்கம், பேரிகை, ஜனங்களின் பஜனைக் கூக்குரல், ஜனக்கூட்டம் இவைகட்கு மத்தியில் நிகழ்ந்த அந்த ஹாரத்தி ஏதோ கனவில் கண்ட சம்பவம் போல் இன்று தோன்றுகிறது.

புனித கங்கைநீரைப் பூஜைக்காக எடுப்ப வர், நதியைப் படகில் கடந்து அக்கரை சென்று, அங்குள்ள உத்தர கங்கையில் எடுத்து வரவேண்டும்.

அன்று பிற்பகலைச் சுற்றுப்புறமுள்ள பல ஸ்தாபனங்களைப்போய்ப் பார்ப்பதில் கழித் தோம். அதில் முக்யமானது காங்கிரி குருகுலம். ஹரித்வாரில் இருந்து 4மைல் தூரத்தில் கங்கைக் கரையில் உள் ளது. ஆர்ய சமாஜத்தார் நடத்தும் பள்ளிக்கூடம், 7 வயதுமுதல் 11 வய துக்குட்பட்ட பையன்களை எடுத்துக் கொள்கிருர்கள். சிறுவகுப்பில் இருந் தே வடமொழிப் பயிற்சி, ஹிந்துமத தர்மம், வேதம், உபநிஷத்துகளைக் கற்றுக் கொடுத்துப் பிறகு உயர்தரக் கல்வியும் போதிக்கப்படுகிறது. அவ ரவர் தேர்ச்சிபெறும் விஷயங்களுக் குத் தகுந்தமாதிரி வைத்யாலங்காரா, (Medicine) வேதாலங்காரா (philosophy) என்று பட்டங்கள் அளிக்கப் படுகின்றன. கல்விபயிலும் வருஷங் களில் மாணக்கர்களை அவர்களே பல இடங்களுக்கு Excursion அழைத்துப் போவதுதவிர, விடுமுறைக்கென்று, அவரவர் இல்லத்திற்கு அனுப்புவதில்லை. இது ஒரு நிபந்தனை.

ஒரு ஆசிரியர் அங்கேயே வளர்ந்து, படித் துப் பட்டம்பெற்று, தற்சமயம் கல்லூரியில் பாடம் கற்பிக்கிருர். கனவுகளைப்பற்றி நமது சாஸ்திரங்களில்உள்ளவிஷயங்களை ஆராய்ச்சி செய்து, தாம் கண்டுபிடித்துள்ள விசேஷங் களை ஒருபுத்தகரூபமாக வெளியிட்டிருக்கி ருர். இவர்போல் இன்னும் அனேகம் பேர் தங்கள் வாழ்நாட்களை இம்மாதிரி பணியில் செலவிடுவதை அங்கே காணமுடிகிறது.

அனேக ஏக்ரா கொண்ட நிலத்தில் சாகு படி, பால்பண்ணை, ஆசுபத்திரி, தபால்ஆபீஸ் என்றெல்லாம் சௌகரியங்களை ஏற்படுத்தி, தாமே நடத்துகிருர்கள். தற்காலத்திற்கு ஏற்ற ஹாக்கிமுதலிய ஆட்டங்கள் ஆடுவதும் அவர்கட்குள் பாண்டு வாத்யகோஷ்டி ஏற் படுத்தியிருப்பதும், நீந்தப் பயிற்சி பெறும் குளங்களும் ஆசிரியர்கள் வசிக்கும் விடுதிகளும் அழகாய் அமைந்திருப்பதையும் கண்ணுற் றேன்.

நவீன இந்தியாவில், இந்தியப் பண்புக்குத் தகுந்த இந்தியக் கல்வி இக் கல்லூரியில் போதிக்கப் படுவது மிக மிகப் பொருத்த மென்று தோன்றுகிறது. நமது சர்க்கார் இந்த ஸ்தாபனத்தில் கவனம் செலுத்தி, தகுந்த ஆதரவு அளிக்க வேண்டும்.

பெண்களுக்கென்று இவர்கள் நடத்தும் பிரத்யேகமான பள்ளிக்கூடம் கன்யா குரு குலம் என்கிற பெயருடன் ரூர்க்கி என்கிற இடத்தில் உள்ளது. இதில் ஹைஸ்கூல் வரையில்தான் கல்வி போதிக்கப் படுகிற தாம்.



ஹரித்வார் ஸ்நான கட்டம்

திரும்பும் வழியில் கன்க்ஹால் என்கிற இடத்தில் ராம கிருஷ்ண மிஷன் சேவாசிர மத்தைப் போய்ப் பார்த்தேன். கேதார்நாத், பத்ரி நாராயண யாத்திரைக்கு வரும் கணக் கற்ற யாத்ரீகரின் வைத்ய உதவிக் கென்று 1901-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சிறு குடிசை தற்சமயம் 50 படுக்கைகள் கொண்ட விஸ்தாரமான ஆசுபத்திரியாகிவிட்டது.

ஹரித்வாரில் 12 வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் கும்ப மேளாவிற்கு வரும் ஆயிரக்கணக்கான ஸாதுக்களுக்கு இவர்கள் புரியும் இலவச வைத்திய உதவி போற்றத் தக்கது. உண்மையில் காஷாயந்தரித்து தன் னலமற்ற சேவைக்குத் தங்கள் வாழ்வை அர்ப் பணம் செய்த, இந்த அறிவாளிகளின் லக்ஷி யங்கள் எவ்வளவு மேன்மை யானவை! நாக ரிகமே புக வழியில்லாத மலைக் காட்டில் புனித கங்கைக் கரையில் வியாதிஸ்தரைப் பராமரித்து, சமைத்து, துவைத்து, தேய்த்து, பெருக்கி, மெழுகி, மௌனமாய் இவர்கள் புரியும் எண்ணற்ற பணியின் உயர்வுக்கு வணங்குகிறேன்.

எங்களை இந்த இடங்களுக்குத் தம் வண் டியில் அழைத்துப் போன மனிதரைப் பற்றி உனக்குச் சொல்லவில்லையே. இவர் பாகிஸ் தானத்தில் இருந்து ஓடி வந்த அகதி: பஞ் சாபி ஹிந்து. அங்கே ஓர் நல்ல உத்யோகத் தில் இருந்தவர். இந்தியாவில் சர்க்காரின் உதவியால் ஒரு வண்டி குதிரை வாங்கிக் கொண்டு, வாடகைக்கு வண்டி ஓட்டிப் பிழைக்கிறார்! தம் வேலையில் துளியாவது அதிருப்தி காண்பிக்க வேண்டுமே? கிடை யவே கிடையாது. சிரித்த முகமாய் உயர்ந்த ஆங்கிலத்தில் எங்களோடு பேசி, கதைகள் சொல்லி, எங்களை அழைத்துச் சென்றதை நான் மிகவும் ரசித்தேன்.

ரிஷிகேச். மறு நாள் அதிகாலையில் புறப்பட்டு ரிஷிகேச் போவதாக ஏற் பாடு. இரவில் ஒரு மழை பிடித்துக் கொண்டதே, பாரு. அம்மாதிரி வேக த்தை நான் என்றும் கண்டதில்லை. ஆனந்த மயி பாடசாலையில் எங்கள் படுக்கை அறை கங்கைக் கரையைத் தழுவி அமைந்தது. இது என்ன, கங் கைப் பிரவாகத்தின் ஓசையையும் மிஞ்சியதாக அல்லவா இருக்கிறது; இயற்கையின் வேறு எந்தப் பயங்கர சக்தி கட்டுக்கு அடங்காமல் பிய்த்துக் கொண்டு விட்டதோ? எங்களைச் சுற்றியோ நாற்புறமும் தண்ணீர்ப் பிரவாகம். மேலிருந்தும் அகோர மழை பொழியவே, அச் சிறு கட்டிடமும், மனித சக்தியும் அர்த்த மற்றதாய்த் தோன்றின. பயங்கரமான இந்தச் சக்திக்கு எதிரே, அல்ப மனிதன் எம்மாத்திரம் என்று நினைத்தவாறு நித்திரையின்றி இரவைக் கழித்தேன்.

விடியற்காலம் மூன்று மணிக்கு மழை பளிச்சென்று விட்டது; சாளரத்தின் வழியே ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மினுக்கின— அப்பா— பிழைத்தோம்—நடந்து போய் ஸ்டேஷனை அடைந்து மலை மேல் செல்லும் கூலி வண்டியில் ஏறிக் கொண்டோம்.

வழியில் மூன்று நீண்ட சுரங்க வழிகளும் மலைக்காட்சியும் பார்க்க ரம்யமாயிருந்தன. பொழுது விடியும் தருணம் ரிஷிகேச் அடைந் தோம். முந்தியநாள் இரவு பெய்தபெருமழை யின் அடையாளம் இங்கேயும் தென்பட்டது; அதன்பலனைச் சீக்கிரத்திலேயே அனுபவிக்க வேண்டிவந்தது.

ரிஷிகேசிலிருந்து தான் பத்ரிநாராயண் பாதை புறப்படுகிறது. தற்சமயம் 40 மை லுக்கு மலைத் தொடரில் ஓரமாக மோட்டார் போகிறது. கீழே வலது புறத்தில் கங்கை நதி கனத்த வேகத்தில் ஓடுகின்றது. இந்தப் பாதையில் ஐந்து மைல் போனால் நதிக்கு அக் கரையாகிய மலைத் தொடருக்குப் போகும். லக்ஷ்மண் ஜூலா என்கிற ஸஸ்பென்ஷன் பிரிட்ஜ் வருகிறது—அதுவரையில் டாங்காவில் போய்த் திரும்புவதாக எங்கள் உத்தேசம்.

ஆனால்—மலையில் ஏறுமுன்பே குறுக்கிடும் ஒரு மலை ஆற்றில் இரவு பெய்த மழையினால்

ஏகமாய் ஜலம் போனதின் காரணமாய் அதைக்கடந்து எங்களை ஏற்றிச் செல்ல ஒரு வண்டிக்காரனும் முன் வரவில்லை! சாதாரண நாட்களில் அந்த இடத்தில் ஒரு பாதை போகுமாம். இன்ருே அதன் பேரில் நிறைய ஜலம் போகிறது என்ருர்கள். கடைசியில் நதியை நாங்கள் கால் நடையாய், தாண்டி விட்டால், அதற்கு முன்னும் அப்பாலும், பாலம் வரையில் தன் வண்டியில் அழைத்துப் போவதாக ஒரு ஸர்தார்ஜி சொன்னுர்.



லக்ஷமண் ஜூலா

என்ன பிரமாதம்? நம்மூர்களில் முழங்கால் அளவு ஜலம் போகும் வாய்க்காலைச் சிரமம் இல்லாமல் கடந்ததில்லையா என்று துணிந்து கிளம்பிவிட்டேன். நதிக்கரையில் வண்டி வந்து நின்றது. இரண்டு பர்லாங்கு அகலம், இடுப்பளவுக்கு ஆழம், அசாத்திய வேகமும் ஓசையும், உடல் மரத்துப் போகும் அளவு குளிர்ச்சியான தண்ணீர், காலில் இடறும் பெரும் பெரும் பாறைக்கற்கள்.........அம்மம்மா! என் மூளை சுழன்றது. என் உறவினர் ஒருவர் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, என்ன துணிச்சல் பாரு: தண்ணீரில் இறங்கி விட்டேன்.

* * * *

சரி, சரி, இனி அந்த ஆபத்தை விஸ்தரிப்பானேன்? எங்களுக்கு ஆயுசுகெட்டி; வழியில் ஓரிடத்தில் சமாளிக்க முடியாத வேகம்; ஒரு கணம் தடுமாறினேம்; எங்கள் உதவிக்காகப் பறந்து ஓடிவந்த ஒரு கூலி ஆள்-பாவம், அவனுக்கு இரண்டு அணுதான் கூலி!—எங்கள் வண்டிக்கார ஸர்தார் இவர்களுடைய சமயோசித தைரியத்தினுலும், பிடிப்பினுலும் சொட்டச் சொட்ட அக்கரையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதற்குப் பிறகு நாலைந்து தினங்கட்கு இரவில் படுத்துக் கண்ணை மூடினுல், ஜலத்தின் ஓசையும் ஆட்களின் 'ஸம்பாலோ ஸம்பாலோ' என்னும் எச்சரிக்கையும் காதில் கேட்பதுபோல் தோன்றின!

பிறகு குதிரையும், வண்டியோடு அங்கே கொண்டுவரப்பட்டது.லக்ஷ்மண் ஜூலாவைக் காணுமலேயே திரும்ப நேரிடுமோ வென்று பயந்த எனக்கு, அப்பொழுது பத்ரிநாராயணுக்கே போய்ச் சேர்ந்ததுபோல் உத்சாகம் தோன்றிற்று.

ஒரு மைல் வண்டியிலும் பிறகு கால் நடையுமாய், பாலத்தை அடைந்தோம். என் கைச்குள் எந்தச் சாமானைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தேன் தெரியுமோ? நடு ஆற்றில் நான் பொறுக்கி எடுத்த வட்ட வடிவான ஒரு நீல நிறக்கல்! சிரிக்காதே.

கங்கை ஓடும் வேகத்தில் இங்குள்ள பெரும் பாறைகள் கூட மழுப்பப் பெற்றுப் பெரிய பெரிய கூழாங்கற்களாக மாறிக் குவிந்துகிடக்கின்றன. இவைகளைச் சேகரித்து, உடைத்துச் சாலை செப்பனிட உபயோகிக்கிருர்கள். பல வர்ணங்களில் இவை எங்கும் தென்படுகின்றன. அங்குள்ளவற்றில் மிகச் சிறியதும், பழைய அரையணு அளவுமுள்ள ஒரு தகடைக்கல்லை நான் எடுத்து வந்தேன்.

டேஹ்ரி கட்வால் என்கிற பிரதேசத்தைச் சேர்ந்தது இந்த இடம். மலைப்பிரதேசம்; மலை ஜனங்களை ஏராளமாய்க் காணமுடியும். கட்வாலி என்கிற இவர்கள் பார்வைக்கு அழகாய், நல்ல சிவப்பு மேனியுடன் இருக்கிருர்கள். ஆனுல் மங்கோலியர் போன்ற சதுரமான முகம், சாய்ந்தகண்கள், தூங்கின பார்வை இவை இவர்களுடைய பிரத்யேக லக்ஷணம். இவர்கள் உயர் வகுப்புப் பிராமணர்கள் என்றும், சமையல் நன்ருய்ச் செய்வார்கள் என்றும், வெகு நாணயஸ்தர்கள் என்றும் கேள்விப்பட்டேன்.

லக்ஷ்மண் ஜூலாவை அடைந்தோம். அந்த இடத்தின் அழகை மனதில் சாவகாசமாய்ப் பதிய வைத்துக் கொள்ளச் சிறிது நேரம் உட்கார்ந்தேன். மலைத் தொடர்களின் உபரம்: சிகரங்களில் வந்து தேங்கி, பிரிய மனம் வாராதவைபோல், மிருதுவாய் அணைத்து அங்கேயே தவழும் மேகங்களின் பஞ்சு போன்ற தோற்றம்; அடர்ந்த காடு; மரங்களில் பட்சிகளும், வண்டுகளும் போடும் சத்தம்; ஆற்றின் வேகம், ஓசை; இயற்கையின் இவ்வற்புதக் காட்சியோடு நானும் சற்றுப் போட்டி

போட்டால் என்ன என்பது போல், மனித சக்தியால் உண்டான அந்த எஃகுப் பாலம்; இவைகளை என்றும் மறக்க முடியாது. வாஸ்தவமாகவே அங்கெல்லாம் நான் போயிருந்தேனோ, உண்மையாக நானா போயிருந்தேன்? என்று இப்பொழுது பிரமிக்கத் தோன்றுகிறது.

பாலத்திற்கு முன்னால், இக் கரையில் பாதை ஓரமாக லக்ஷ்மண்ஜி. கா. மந்திர் அமைந்திருக்கிறது. அதைப் பாதுகாப்பவர் ஒரு கட்வாலி பிராமணர்; சம்ஸ்கிருதம், சாஸ்திரம் நன்றாய்க் கற்றறிந்தவர் போல் இருக்கிறது. பாலத்திற்குக் காரணப் பெயர் வந்ததையும் அதன் பூரா கதையையும் எங்களை உட்கார வைத்துச் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

“ த்ரேதாயுக் மே பகவான் ராமசந்த்ர ஔர் லக்ஷ்மண்ஜி இஸ் தபோபன் பர்......” லக்ஷ்மண்ஜினே இத்னி கோர் தப் கியா கி...” “அப்னி பிரும்மஹத்தி...” “கேதார் காண்ட் மே லிகா ஹீவா ஹை கி”......இத்தியாதி.

அங்குள்ள நிசப்தத்தில், காலை முதல் பட்டினிகிடந்து ஆறு கடந்து வந்த சிரமத்தில், இவருடைய கதை சொல்லும் அமைதியான குரல் என்னைத் தூங்க வைத்து விடும் போல் இருந்தது!

லக்ஷ்மணர் இக்கரையிலும், ராமர் அக்கரையிலும் ராவணாதிகளைக் கொன்ற பிரும்மஹத்தி தோஷம் நீங்க, 212 வருடகாலம் நின்ற வண்ணம் தபஸ் செய்த தபோவனம் இந்த இடம். முற்காலத்தில் இளையவரைத் தரிசித்து, அக்கரை சென்று பகவானைத் தரிசிக்க ஒரு ரஸ்ஸிப் பாலம் உண்டாம். அதன் வழியில் சென்றவர் கயிறு அறுந்துபோய், கங்கையில் விழுந்து பரமபதமே அடைந்ததும் உண்டாம். இந்தியாவிலேயே சேஷாவதாரமென்று கருதப் படும் லக்ஷ்மணருக்கு, இந்த ஒரே கோவில் உண்டென்றும், இவரைத் தரிசித்துப் பாலம் தாண்டிச் சென்றவர்க்கு வாஜபேய யாகம் செய்த புண்ணிய பலன் கிடைக்குமென்றும் அவர் சொன்னார்.

பாலத்திற்கு அடியில் வளைவுகள் இல்லை; எஃகு கம்பியினால் இருபுறமும் மேலே இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது. ஊஞ்சல் போல் இருப்பதால் ஜூலாவென்கிற பெயர். அகலத்தில் 4,5 அடியும், சுமார் $1\frac{1}{2}$ பர்லாங்கு தூரமும் இருக்கும். கங்கைக்கு மேல் 40-50 அடி உயரத்தில் தொங்குகிறது. சரிமத்தியில் நடக்கும்போது பாலம் சிறிது அசைவது தெரிகிறது.

பண்டிட்ஜியிடம் விடைபெற்று நடையைக் கட்டினோம். பாலம் தாண்டியதும் மேலே செல்லும் பத்ரி நாராயண் பாதையில் பத்ரி, பத்ரி என்று சொல்லிக்கொண்டு பத்து அடி நடந்துவிட்டு, கீழ் நோக்கி நடக்க ஆரம்பித்தோம். பாதை முழுவதும் காட்டில், நிறைய கருவேப்பிலை மரம்! கம்மென்று வாசனை. வீண்போவது போன்ற நினைப்பில், இலைகளை ஒடித்து மூட்டை கட்டிக்கொண்டேன்.



லக்ஷ்மன் ஜூலா பாலம்

அனேக சாதுக்கள், மலையில் சிறு குடிசை போட்டுக்கொண்டு வசிக்கிறார்கள். ஒரு பெரியவரிடம் போனோம். எங்களை ஏற இறங்கப் பார்த்தாரே ஒழிய, வரவேற்கவில்லை. நாங்கள் உட்கார்ந்ததும், தாமாகப் பேச ஆரம்பித்து ஐந்து நிமிஷத்தில் ஈசுவர தத்துவத்தை எங்களுக்கு விளக்கிவிட்டார்! அவர் சொல்லும்போது எவ்வளவு எளிதாய்த் தோன்றிற்று. ஆனால் அவரைவிட்டு, பாதையில் நடக்கும்போதே மனது சர்ச்சையில் இறங்கிவிட்டதே. எது நல்லது? உலகத்தில் நம் சகோதரர்க்கு என்ன நேருகின்றது என்று அறியாமல், மலைக் காட்டில் அடைந்து கிடந்து, ஈசுவர தத்துவத்தை உணர்ந்திருந்தால் மட்டும் போதுமோ?

மூன்று மைல் கீழ்நோக்கி நடந்து ஸ்வர்க்காசிரமத்தை அடைந்தோம். யாத்திரை வரும் சாதுக்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இடமும், உணவும் அளித்து ஒத்தாசை செய்யும் பொருட்டு ஒரு பெரியவரால் ஆரம்பிக்கப்

பட்ட இடம். காலி கம்பளிவாலா என்பவர் ஆசிரமத்திற்கு ஏராளமாய்ப் பணம்சேர்த்து, கட்டிடங்கள் கட்டி, தர்மம் நீடித்து நடகக ஏற்பாடுகள் செய்தாராம். ஸதா கறுப்புக் கம்பளி ஒன்று போர்த்தியிருந்ததால் அவருக்கு இந்தக் காரணப் பெயர் ஏற்பட்டது. எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இங்கே யாத்ரிகர் நிர்விசாரமாய்த் தங்கலாம். இருக்க ஒரு அறையும், இரண்டுவேளை எளிய போஜனமும் இலவசமாய்க்கொடுக்கிறார்கள். இதேமாதிரி ஹிமாலயத்தில்எவ்வளவு தர்மங்கள் நடக்கின்றன!

இவ்விடத்தில் இருந்து அக்கரைக்கு நாவுகள் சென்றன. அதில் ஒன்றில் ஏறிவந்து சேர்ந்தோம். நடுக்கங்கையில் போகும்போது பளிங்குபோன்ற அந்தப் பனிக்கட்டி ஜலத்தை மூன்றுகை எடுத்துச் சாப்பிடத் தோன்றிற்று இந்தச் சமயத்தில் மழையும் தூற ஆரம்பித்தது. டாங்காவில் ஏறி முன்பு தாண்டிய ஆற்றங்கரைக்கு வந்து யதாப்பிரகாரம் ஒருவரை ஒருவர் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் இறங்கி, நதியைக் கடந்து வந்து சேர்ந்தோம்.

இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் பசுலோக் இருக்கிறது. அது என்ன இடம் என்று கேட்கிறாய்? காந்தி அடிகளின் சிஷ்யை மிஸ், ஸ்லேடு என்கிற மீராபென் அம்மைவசிக்கும் பசுப்பண்ணை. மேல்நாட்டில் பிறந்து வளர்ந்து, பாபுஜியின் ஆதரவில் அவர் கூடவே அனேகவருஷங்கள் இருந்து, -முன்பு அடிகள் தென்னிந்தியப் பிரயாணம் செய்த போது இவ்வம்மையும் கூட வந்திருந்தது உனக்கு நினைவில்லை?—அவர் சொற்படி ஹிமாலயத்தில் இருந்துகொண்டு அங்குள்ள காட்டுமாடுகள், பசுக்களைப் பராமரித்து, சாணத்தினால் Compost என்கிற எருவைத் தயாரிப்பதில் காலஞ்செலவிடுகிறார். அன்று அவரைப்போய்ப் பார்க்க அவகாசம் இல்லாமற்போனது, எனக்கு ரொம்பவும் குறையாக இருந்தது.

பஸ் ஸ்டாண்டை அடைந்ததும், அப்போழுதே கிளம்பிய ஒரு வண்டியில் புறப்பட்டு 11½மணிக்கு ஹரித்வார் வந்து சேர்ந்தோம். ஆனந்த மயிபாடசாலை ஸ்நானகட்டிடத்தில் ஸ்நானம் செய்து, போஜனம் முடித்துக் கொண்டபொழுது பகல் ஒரு மணி. இனி ஹரித்வாரில் பார்க்க இடம் ஒன்றுமில்லை. இரவில் புறப்படும் ரயிலுக்குக் காத்திராமல் பகல் 2 மணிக்குக் கிளம்பும் யு. பி. பிராட்வேஸ் பஸ்ஸில் பிரயாணப்படுவதென்று தீர்மானித்தோம்.

125 மைல் மோட்டார் பாதை. ரோடு நல்ல சிமண்டு போடப்பட்டு, ரூர்க்கி, மீரட், முசாபர் நகர் வழியாய்ச் செல்லுகிறது. ஜிலுஜிலுவென்று காற்றடிக்க, கங்கை—யமுனை கால்வாய்கள், பின்னல் போல் வழி முழுவதும் குறுக்கிட இந்தப் பிரயாணத்தை மிக்க ரசித்தேன். இரவு 7–30 மணிககு டில்லியைக் கண்டு பிடித்தோம்.

பிரிய—— என் ஹரித்வார் யாத்திரையை உனக்குச் சொல்லி முடித்து விட்டேன். அன்றிரவு உடல் அலுப்பினால் டில்லியில் நான் நித்திரை செய்தது போல் இனி ஒரு நாளும் தூங்கப்போவதில்லை. கண் விழித்ததும், சென்ற இரண்டுதினங்களும் உண்மையாகவே நிகழ்ந்ததோ என்று சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் எப்படிப் பொய்யாகிவிடும்? அதோ, கண்முன்னால் தெரியும் உத்தர கங்கை ஜலம் நிரம்பிய மூன்றுசொம்புகள் பொய்யா? உள்ளே சமையற்காரன் தயாரிக்கும் கருவேப்பிலைத் துவையலின்வாசனை மூக்கைத் துளைக்கிதே; நேற்றுக்காலையில் தபோ வனத்தில் நான் சேகரித்த கருவேப்பிலை யல்லவா அது? ஆம், இம்மாதிரி சின்னங்களே என் ஹிமாலய யாத்திரையை இனி நினைவூட்டும் சாதனங்கள். மதிப்பிட முடியாத மற்ற அனுபவங்கள், காட்சிகள், எண்ணங்களோ? களகளவென்று மனச் சுரங்கத்துக்குள் பத்திரமாய் வைத்துப்பூட்டியிருப்பேன்.

மற்றவை மற்றொரு கடிதத்தில்.

சாக்கடைக்கு வந்த யோகம்

நா. கி. நாகராசன்

நாம் கவனிக்காமலிருந்தாலும் தானுகவே தனது நாற்றத்தால் விளம்பரப்படுத்திக் கொள்ளும் சென்னை நகரச் சாக்கடைக்குச் சில நாட்களாக ஒரு யோகம் பிறந்திருக்கிறது. அதன் பெயர் பத்திரிகைகளில் அடிக்கடி அடிபடுகிறது. நமது நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யச் சாக்கடையும் உதவப் போகிறது. ஆகையால் அதன் பெயரைக் கேட்டாலே முகத்தைச் சுளிக்கும் நாம் அதுவும் தேச சேவையில் ஈடுபடப் போவதை எண்ணி அதன்மேல் மதிப்புக் கொள்ளலாம்.

சென்னை நகரின் கழிவுநீர் முழுதும் தற்போது தண்டையார் பேட்டையையடைந்து அங்கிருந்து கடலை யடைகிறது. அதைச் செம்பியம், திருவான்மியூர், கோடம்பாக்கம் இம்மூன்று இடங்களை அடையுமாறு பிரித்து அதைஅருகிலுள்ள வயல்களுக்குப் பாய்ச்சி, உணவுத் தானியங்களையும், காய்கறிகளையும் பயிரிடுவதென முடிவாகியுள்ளது. இதற்குச் சுமார் நாற்பத்தைந்து லட்சரூபாய் மூலதனம் தேவையாகுமாம். இதனுல் சுமார் 2,200 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். இவற்றில் வாழை, நெல், கம்பு, துவரை, வள்ளிக்கிழங்கு முதலிய உணவுப் பொருள்கள் பயிராகும்.

தற்கால நகரங்களின் சாக்கடை அமைப்பு மிகவும் விரிவானதும் சிக்கலானதுமாகும். நகரத்தின் வீடுகளிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் ஏராளமான கழிவுநீரும், மற்ற கழிவுப் பொருள்களும் அதை அடைகின்றன. இவற்றைத் தவிர மழை நீரும், தெருக்களின் கழிவு நீரும் அதிற் கலக்கும். சாக்கடை நீரில் உள்ள பொருள்களில் கரிமப் பொருளும் (organic matter), உலோகப் பொருளும் முக்கியமானவை. சாக்கடையின் ஓட்டத்தாலும் அதில் நடைபெறும் அழுகலாலும் அதிலுள்ள பொருள்கள் சிதைந்து சிறு துகள்களாகின்றன. எப்போதும் சாக்கடையில் நன்மை பயக்கும் நுண்ணங்கள் (Bacteria) உண்டு. இவை நீரிலுள்ள தாதுப் பொருள்கள் அழுகிச் சிதைய உதவுகின்றன. தகுந்த காற்றேட்ட மிருந்தால் இவ்வேலை தடையின்றி நடைபெறும். இவ்விளைவிற்குத் தேவையான ஆக்ஸிஜன் வாயு கிடைக்காவிடில் கழிவுநீர் பழையதாய்ப் போய்த் துர்நாற்றம் அடிக்கத் தொடங்கும். சாக்கடையின் துர்நாற்றமே உடலுக்குத் தீமை விளைவிக்கும் என நாம் நம்புகிறேம். இது தவறு. சாக்கடையின் தீமை அதன் நாற்றத்திலில்லை. அதில் சேர்ந்து வளரும் நோய் நுண்ணங்களே நமக்குத் தீமை விளைப்பவை. ஆகையால் சாக்கடை நீரை நமக்குத் தீமை தராதவாறு போக்குவதை விசேஷமாகக் கவனிக்கவேண்டியது அவசியம். முன்பெல்லாம் இதுவே நகரத்திற்குப் பெரிய தொல்லையாக இருந்து வந்தது. ஆனுல் இப்போது இதற்கான முறைகள் கண்டுபிடிக்கப்பட்ட பின் தொல்லை விளைத்த சாக்கடைப் பொருள்களைத் தீமை தராது போக்குவதுடன் இவற்றிலிருந்து ஊதியத்தை அடையவும் வழியேற்பட்டுள்ளது. இம் முறைகள் மேனுட்டு நகரங்கள் அனைத்திலும் வழங்கிவருகின்றன.

நகரங்களில் ஆங்காங்குச் சாக்கடை நீரைச் சீரான வேகத்துடன் குழாய்களின் வழியே அனுப்பும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 'பம்பு'களின் உதவியால் கழிவுநீர் மையமாகவுள்ள ஓர் இடத்திற்கு அனுப்பப்படுகிறது அங்கே அது இருமுறை வடிகட்டப்படுகிறது. அப்போது நீரிலுள்ள காகிதம், கந்தல், இலை முதலிய குப்பைகள் வடிகட்டப்படுகின்றன. இவற்றை வேருகத் தூளாக்கி மீண்டும் வடிகட்டிய நீரிலேயே சேர்த்து விடலாம். அடுத்தபடியாக அதிலுள்ள மணல், சிறுகற்கள் முதலியவற்றைப் பிரிக்கவேண்டும். இதைச் செய்யக் கழிவு நீரின் வேகத்தைச் சற்றுக் குறைத்து அதைச் சில தொட்டிகளின் வழியே அனுப்பவேண்

டும். அப்போது அதிலுள்ள கனமான துகள்கள் எல்லாம் அடியிற் படிந்து விடும். தொட்டிகளிற் படியும் மணல் முதலியவற்றை அவ்வப்போது மண்வெட்டிகளால் வெளியே எடுத்து அப்புறப்படுத்திவிடலாம். இதைச் செய்ய எந்திரங்களைப் பயன்படுத்துகிருர்கள். இப்போது மற்ற அசுதங்களையும் அழுகி வரும் தாவர விலங்குப் பொருள்களையும் கொண்ட கழிவுநீர் வெளியேறும்.

இதற்கடுத்தபடியாகக் கழிவு நீரிலுள்ள மெல்லிய துகள்களைப் பிரிக்க வேண்டும். இதற்காக அது சிறிது சாய்வான பக்கங்களையுடைய தொட்டிகளை அடைந்து அவற்றின் வழியே மிக மெதுவாகச் செல்லும். இத் தொட்டிகள் படிவிக்கும் தொட்டிகள் எனப்படும். இப்போது நுண்ணிய துகள்களாக நீரில் உள்ள பொருள்கள் சிறிதுசிறிதாய்ப் படியும். தொட்டிகளின் சாய்வான பக்கங்கள் பொருள்கள் படிய உதவுகின்றன. சுண்ணும்பு, துத்தநாகம், அன்ன பேதி முதலிய ரசாயனப் பொருள்களை நீரில் சிறிதளவு சேர்ப்பதால் படிதல் இன்னும் செம்மையாக நடைபெறும். இப்போது நீரிலுள்ள அசுத்தங்கள் பாதிக்குமேல் குறைந்திருக்கும். இவ் விளைவு சீராக நடைபெற வேண்டுமாயின் தொட்டிகளில் நீர் மிக அமைதியுடன் செல்லவேண்டியது அவசியம். தொட்டிகளிலிருந்து கழிவுநீர் வெளியேறச் சுமார் ஆறுமணி நேரம் பிடிக்கும்.

இவ்வாறு வெளிவரும் நீரில் இன்னும் ஓரளவு அழுகற் பொருள்கள் உள்ளன. இவை பயிர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பல சத்துக்களைக் கொண்டவை. ஆகையால் இந்நீரை நேரே வயல்களில் பாய்ச்சி விடலாம். பயிர்களின் உரமான பாஸ்பேட்டுகளும் (Phosphates) நைட்ரஜன் (Nitrogen) உப்புகளும் இந்நீரில் இருப்பதால் இதைக் கொண்டு பயிர்கள் செழித்து வளரலாம். நெல் முதலிய தானியங்களும், அவரை, கீரை, உருளைக் கிழங்கு முதலிய காய்கறி வகைகளும் அந்நீரால் செழிப்பதைக் கண்டிருக்கின்றனர்.

மேற்கூறிய முறையில் இந்தியாவில் கழிவு நீர்ப் பண்ணையைப் பற்றிய சோதனைகள் முதன் முதலில் டாடா எஃகுத் தொழிற்சாலை நகரான ஜேம்ஷெட்பூரில் நடைபெற்றன. எவ்வெவ்வகைப் பயிர்களுக்கு இந்நீர் ஏற்றது என்றும், இதைக் கொண்டு வளரும் பயிர்கள் உண்போரது உடல் நலத்தைப் பாதிக்கின்றனவா என்றும் அங்கே ஆராயப்பட்டது. கழிவு நீர்ப் பயிர்களை நன்ருகச் சமைத்து உண்டால் நீரிலுள்ள நோய் நுண்ணங்களால் நமக்குத் தீமை நேராது என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனுல் கால் நடைகளுக்குத் தேவையான புல் முதலிய தீனிகளை இவ்வாறு வளர்த்தல் முற்றிலும் தீங்கற்றதல்ல என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். ஏனெனில் சென்னைத் திட்டத்தின்படி அவற்றை வளர்க்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. மேலும், இம்முறையிற் பாசனம் செய்யும் போது கழிவு நீரின் நாற்றம் மறையாது. அது நாற்புறமும் பரவித் தொல்லை கொடுக்க வழியுண்டு.

ஆனுல் இதைவிடத் திறமையான முறையொன்று இப்போது வழக்கத்திற்கு வந்துவிட்டது. அதில், படிவிக்கும் தொட்டிகளிலிருந்து வரும் நீர் பெரிய குளங்களில் தேக்கப்பட்டு அதனுள் காற்றுச் செலுத்தப்படுகிறது. காற்றை உட்கொண்டு வளரும் நுண்ணங்கள் இதனுல் வளர்ந்து பெருகி நீரிலுள்ள பொருள்களைச் சிதைத்து எளிய பொருள்களாக்குகின்றன. இவ் விளைவின்போது சில வாயுக்கள் வெளிவரும். இவற்றுள் முக்கியமானது மீதேன், (Methane) என்னும் வாயு. இவ் விளைவை நிகழ்த்தும் நுண்ணங்களின் அளவு அதிகமானுல் விளைவும் துரிதப்படும். ஆகையால் செயற்கையில் நுண்ணங்களைப் பெருக்கி அவற்றை இவ் வேலையைச் செய்ய ஏவலாம். படிவிக்கும் தொட்டிகளிற் சேரும் நுண்ணிய சேற்றை வெளியே எடுத்து, சரியான அறைபதனில் அதன் வழியே காற்றைச் செலுத்திஞல் அதிலுள்ள நுண்ணங்கள் நன்ருக வளர்ந்து பன்மடங்காகப் பெருகும். இவ்வாறு நுண்ணச் செழுமை கொண்ட சேற்றைத் தேக்கும் குளத்தி லுள்ள நீரில் சேர்த்துவிட்டால், அதிலுள்ள நுண்ணங்களுடன் இப்புதிய நுண்ணங்களும் சேர்ந்து பொருட்சிதைவு

விரைவாக, நடைபெற உதவும். இதனால் நீரிலுள்ள பொருள்கள் மேலும் சிதைந்து எளிய பொருள்களாக மாறிவிடும். இதைப் பின்னொரு முறை படிவித்தால் தெளிவான, மணமற்ற நீரைப் பெறலாம். இதை ஆற்றிலோ, கடலிலோ கலந்துவிடுவதில் ஒருவகை அபாயமும் இல்லை.

இவ் விளைவின்போது வெளிவரும் வாயுக்கள் எரிந்து நல்ல வெப்பத்தைத் தரும் தன்மை வாய்ந்தவை. ஆகையால் அவற்றைச் சேமித்துப் பல வகைகளில் பயன் படுத்தலாம். கழிவு நீர்ப் பம்புகளை ஓட்டவும், இத்தொழிற் சாலையின் மற்ற எந்திரங்களை இயக்கவும் இது பயனாவதோடுகூட வீடுகளில் விளக்கெரிக்கவும், அடுப்பெரிக்கவும் பயன்பட்டு, இவ்வகையிலும் ஊதியத்தைத் தேடித் தருகிறது. லண்டனுக்கு அருகிலுள்ள மோக்டன் (Mogden) கழிவுநீர்த் தொழிற் சாலையிலுள்ள எந்திரங்களை இயக்கவே மாதத்திற்கு லட்சம் காலன் மண்ணெண்ணெய் தேவையாகும். ஆனால் இவ்வெந்திரங்களை அங்குத் தோன்றும் வாயுவின் உதவியால் ஓட்டுவதால் இச் செலவு முற்றிலும் மீந்துள்ளது.

தேக்கும் குளத்தில் எஞ்சியுள்ள சேற்றைத் தரையில் பரப்பினால் அது உலர்ந்து கட்டியாகிறது. இக்கட்டிகளில் மக்கிய தாவர விலங்குப் பொருள்கள் இருப்பதால் இவை நல்ல உரமாகப் பயன்படும். ஆகையால் இவை விவசாயிகளுக்கு விற்கப்படும். படிவிக்கும் தொட்டியிலிருந்து நேரே வயலிற்பாயும் கழிவு நீரை விட இவ்வகையிற் பெறும் உரத்தில் பயிர்ச் சத்துக்கள் அதிகமாக இருக்கும். ஆகையால் கழிவை இம் முறையிற் பயன் படுத்துவது இவ்வகையிலும் முதல் முறையைவிடச் சிறந்தது.

சென்னை நகரின் கழிவு நீரைப் பயன் படுத்த இந்திய சர்க்காரது கழிவுநீர் நிபுணர் டாக்டர் டலாடி (Dr. Talati) வகுத்துள்ள திட்டத்தின் முழுவிவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. ஆனால் அத்திட்டம் எவ்வாறிருப்பினும், வளரும் நகரத்தின் சுற்றுப் புறங்களில் கழிவு நீர்ப் பண்ணையால் துர்நாற்றமும் உடல் நலக் குறைவும் விளையாமற் பாதுகாப்பது அவசியம். கழிவுநீர்ப் பயிர்கள் அதை உண்ணும் மக்களுக்குச் சிறிதும் தீங்கு விளைவிப்பதில்லை என்ற உறுதியையும் ஆராய்ச்சி வாயிலாய் அடைந்த பின்னரே இத்திட்டத்தை நடைமுறையிற் கொண்டுவர வேண்டும். இதைத் தவிர இதில் செலவழியும் மூலதனம் சரியான ஊதியத்தை அளிக்குமா என்பதைக் கவனிக்க வேண்டிய தவசியம். ஆனால் ஒன்று, சாக்கடை நாற்றம் அடிக்கும் குடிதண்ணீரை அருந்திய பின்னரும் உயிர் வாழும் சென்னை நகர மக்களைக் கழிவு நீர்ப்பயிர்கள் அசைக்க முடியுமா என்று, யாராவது கேட்டால் அவர்களுக்குப் பதில் சொல்ல நான் தயாராய் இல்லை!

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

இன்னுமொரு சினிமா
நட்சத்திரம்
எஸ். மேனகா
லக்ஸ் டாய்லட்
சோப்பின் புதிய
பரிமளத்தை
புகழ்கிறார்!
அவர் கூறுவதாவது:
"புதிய பரிமளத்தோடுகூடின
லக்ஸ் டாய்லட் சோப்
எப்பொழுதையும்விட அதிக
ரம்மியமாயிருக்கிறது"
LUX
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்
LTS. 205-23 TM

பட்டண் பெருமை

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

பட்டன் அரசன் கர்ணதேவன் இறக்கும் தறுவாயில் இருக்கிறான். அந்தச்சமயம் பட்டணுக்கு அவன் அண்ணன் மகனான தேவப்ரஸாதும் அவன் மகன் திரிபுவனும் வருகிறார்கள், ஒரு பக்கம். மற்றொரு பக்கம் சந்திராவதி நகரிலிருந்து ஜைனயதி ஆனந்த சூரியும் வருகிறார்.

முஞ்ஜால் பட்டன் நகரின் மந்திரி; இளமையிலிருந்தே பழகிவந்த ராணி மீனல் தேவிக்குத் தக்க மதிப்புத் தந்து அதன் மூலம் பட்டன் ராஜ்யத்துக்குப் பலத்த அஸ்திவாரம் நாட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அவன் எண்ணங்களுக்கும், ஜைனயதியின் எண்ணங்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. ராணி பக்கம் மாறிவிடுகிறாள்.

அரசன் இறக்கிறான், ஜயதேவன் பட்டம் பெறுகிறான். முஞ்ஜால் மதுபுரிக்கு மாற்றப்பட்டு, கோட்டையதிகாரிப் பதவி ஜைனன் சாந்தி சந்திரன் வசம் விடப்படுகிறது.

தேவப்ரஸாதுக்கு ஒரே ஆத்திரம். வெகு நாளாய் இறந்துவிட்டாள் என்று கருதப்பட்ட மனைவி உயிருடன் இருக்கிறாள் என்ற தகவல் தெரிந்தது. ஆனால் எங்கே? என்ற கேள்விக்குப் பதிலைக் காணோம். மாமாவான முஞ்ஜாலிடம் தாய் வேண்டிச் சென்ற திரிபுவன் வெறுங்கையுடன் திரும்பிவிட்டான். இந்த நிலையில் தேவப்ரஸாதைச் சிறை பிடிக்க சூழ்ச்சியும் நடந்தேறிவிட்டது; இதை முஞ்ஜாலே திரிபுவன் மூலம் அறிவிக்க, இருவரும் வெளியேறும் சமயம், வைரத்தை மறந்து சந்திக்கின்றனர். மறுநாள் சேர்ந்து திட்டம் இட முடிவு செய்துகொண்டு முஞ்ஜால் பிரிய, தேவியைத் தேடி மீண்டும் வருகிறான் அரண்மனைக்கு தேவப்ரஸாத். மீண்டும் ராணியே எதிர்ப்பட்டு 'இங்கேயே இரு' என்கிறாள். அவன் சீறி எழுந்து பாய்ந்து அகழைத் தாண்டி வெளியேறுகிறான்.

ராணி இருவரையும் சேரவொட்டாமல் சூழ்ச்சி செய்கிறாள். திரிபுவனுக்கும் ஜயதேவனுக்கும் தகராறு. வீரர்கள் திரிபுவன்மேல் பாயும் சமயம் ராணி பார்த்து, திரிபுவன் தாய் ஹம்ஸாதேவியை அழைத்துக் "மகன் பிழைக்கக் கணவனிடம் செல்வேன்" என்று உறுதி வாங்கிக்கொண்டு விடுகிறாள். தேவியும் காயம்பட்ட மகனை இளங் காதலியான பிரஸன்னாவிடம் ஒப்புவித்துக் கணவனிடம் செல்கிறாள்.

ராணி ஒரு தவறு செய்கிறாள். இரவோடு இரவாய் மகனையும் பிரஸன்னாவையும் அழைத்துக்கொண்டு வெளியேறுகிறாள், முஞ்ஜாலை வழியிலேயே மடக்கும் எண்ணத்துடன். முஞ்ஜால் சிறை பிடிக்கப்படுகிறான். அவள் விக்ராட் வழியாக ஊர்வாத் திட்டமிட்டு மேலேறுகிறாள்.

இதனிடையே தப்பித்து வெளியேறிய பிரஸன்னா ஊருக்குத் தூது வரும் முரார் பாலனுடன் திரும்பி வருகிறாள். ஊதா மார்வாடி தனக்குத் தெரிந்த ரகசியத்தின்

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த ஸ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

உதவியால் ஊரைத் திரட்டி விடுகிறான். ஜைனர்களை அழைத்துவர வெளியேறி யிருக்கிறாள் என்று எண்ணிப் பட்டணமே திரண்டு வந்துவிட்டது.

அரண்மனையில் நுழைந்த ஊதா திரிபுவனிடம் சொல்லி, சுதவைத் திறந்து கொதித்துவரும் ஊர்வாசிகளைத் தர்பார் கூட்டிவிடுகிறான். கவி சாமல்பாரஹட்டின் பேச்சுக்கெதிரே சாந்தி சந்திரன் சொல்வது எறவில்லை. ஜனங்கள் திரிபுவனை அரசனாக ஏற்று, கோட்டையைச் சாத்தி விட உத்தரவும் ஆகிவிடுகிறது.

களைப்படைந்த திரிபுவன் தனக்குச் சிசுருஷை செய்யும் பிரஸன்னாவிடம் கோபம் தணியாமல் சீறுகிறான். அவள் மாளவ அரசியாவாள் என்றுகேட்டுக் கொதித்திருந்தான் அவன். பிறகு அவளுடன் இருந்த அந்தத் தேவி யார்? பிரஸன்னாவும் தன் கதையைச் சொல்லி, அன்பை வேண்டுகிறாள். அதற்கு அவளுடைய அத்தையிடம் உள்ள நன்றியும் அன்பும் பலி வேண்டப்படுகின்றன. அவளும் ஒத்துக் கொள்ளுகிறாள்.

அங்கே மண்டுகேசுவரத்திலிருந்து வெளியேற இருந்த தேவப்ரஸாதிடம் ஹம்ஸா சென்றடைய, அவன் மற்றதை மறந்து அவளுடன் காலம் கழித்துவிடுகிறான்.

முஞ்ஜாலைக் கைது செய்து ராணியை அனுப்பிவிட்டு, மண்டுகேசுவரம் வந்த யதி கோயில் கதவு சாத்தப்பட்டதை அறிந்து சாக்கடை வழியாக உள்ளே நுழைந்து கோயிலுக்கு நெருப்பு வைத்துவிடுகிறார்.

மேல் மாடியிலிருந்து தூங்கிய தேவப்ரஸாத் நடு இரவில் விழித்துக் கீழே இறங்க வழியின்றி, மனைவியை இடுப்பைக் கட்டிக் கொள்ளச் செய்து, கீழே ஓடும் ஸரஸ்வதி நதியில் குதித்துவிடுகிறான். இதை அறிந்த யதியும் கூடவே ஆற்றில் குதித்துவிடுகிறார்.

மேரளத்திலே தேவப்ரஸாதுக்கு உதவ வந்திருந்த வல்லபன், தேடிப் புறப்பட்டு வழியிலே கம்பீரமல்லன் மூலம் விஷயம் அறிந்து மண்டுகேசுவரம் வர, அங்கே கோவில் எரிவதைக் கண்டு, விரைவில் வருகிறான். அருகில் வர வர தேவப்ரஸாத் நீந்திச் செல்வதையும் துறவி பின் தொடர்வதையும் கேட்டுக் கோபம்கொண்டு நதிக் கரையூடே வருகிறான்.

குரு தேவரின் கட்டளை

தேவப்ரஸாத் ஸரஸ்வதி நதியில் குதித்த போது 'தப்பி விடலாம்' என்ற ஓர் நம்பிக்கை கிளைத்து எழுந்தது. நதியில் நீந்திக் கரை ஏறுவது ஒன்றும் பிரமாதமான காரியமில்லை. அந்தப்பக்கத்தில் தேவப்ரஸாத் பேரைக்கேட்டதும் உயிரையும் கொடுக்கக்கூடிய அநேக மனிதர்கள் வாழும் பல கிராமங்கள் இருந்தன. எங்காவது தங்கி, சுலபமாக மேரளம் போய்விடலாம்.

ஆனால் அவன் நதியில் குதித்தவுடன் ஹம்ஸாவின் நிலையில் சில மாறுதல் ஏற்படுவதைக் கண்டான். உயரத்தில் இருந்து குதித்ததன் காரணமாகவோ அல்லது குளிரின் இறுகிய அணைவைத் தாங்காமலோ ஹம்ஸா மயங்கி விட்டாள். அவள் கைகள் அவன் கழுத்துப்பிடியை விட்டு விட்டன. மண்டலேசுவரனின் சக்தியைக் கடவுள் பரிசோதிக்க எண்ணினார் போலும். இடது கையில் மயங்கி நின்ற மங்கையைத் தாங்கி வலது கையின் வலிவுகொண்டு தேவப்ரஸாத் நீந்த ஆரம்பித்தான். அவன் உள்ளம் ஆதார இயற்கையின் ஆவேசத் தன்மையுடன்காதல் கொண்டது; ஆகவே ஸரஸ்வதி நதியின் ஓட்டத்தில் முழுகி வெளியேறி, தயங்கி மேலேற, அவன் உள்ளம் பெருக் கெடுத்துக் கொண்டிருந்தது. நல்ல வேளையாக ஓட்டமும் அந்தப்பக்கமாக இருக்கவே அவன் சுலபமாகவே மேலேறிச் சென்றான்.

அரை மணி நேரமே ஆகியிருக்கும் அப்பொழுது இரவின் அமைதியைக் கிழித்து இவன் நீந்தி ஏற்படுத்தும் சப்தத்தை அமுக்கி அவன் காதில் நுழையுமாறு, யாரோ நீந்தும் ஓர் ஒலியைக் கேட்டான். கொஞ்ச தூரத்தில் மிகவும் வேகத்துடன் யாரோ கைமாறிப் போட்டு வருவதை அவன் சந்தேகமறக் கேட்டான். திரும்பியும் பார்த்து அதை நிச்சயம் செய்து கொண்டான். தேவப்ரஸாத் உள்ளத்தைப் பல எண்ணங்கள் முற்றுகை இட்டன. நேரம்; கையில் மயங்கிக் கிடக்கும் பெண் கொடி; அவளைக் கரையேற்றத் தான் ஏற்றுக்கொள்ளவேண்டிய உடற் சக்தியின் அளவு. இவ்வளவையும் எடையிட்டு அவன் கரைப்பக்கம் நோக்கி நீந்த அரம்பித்தான். பின் தொடர்பவனை எதிர்க்கும் எண்ணமே அவனுக்கு ஏற்படவில்லை. அவன் கரைப்பக்கம் நீந்திச் சற்று அருகில் வந்தவுடன் நிலவொளியில் சில குதிரைவீரர்களைக் கண்டான். அவர்கள் மண்டலேசுவரன் பக்

கமே முகம் திரும்பியிருந்தனர் என்ற விஷயம் அறிந்த தேவப்ரஸாத் கொஞ்சம் வேகத்தைக் குறைத்தான். அதே சமயம் ஏதோ ஒன்று கடுகி வந்து அவனருகில் நீரில்விழுந்து முழுகிற்று. அது அம்பு! மண்டலேசுவரன் உடல் முழுவதும் கொதித்தது. வேகமாகத் திரும்பி, கரையைவிட்டு, தொலேவில் நதிக்குள் சென்றுன். இரண்டு மூன்று அம்புகள் பின்னும் வந்து விழுந்தன. அம்பு செலுத்துபவர்கள் அசுரர்களா! என்று அந்த நிலேயிலும் சிரித்தான், அந்த வீரன். ஒரு அம்பாவது நல்லகாலமாக இலக்கில் படும்படி அவர்களுக்கு எய்ய முடியவில்லே. ஸரஸ்வதியின் அந்தக்கரை மிகவும் அதிக தொலேவில் இருந்தது. தவிர அங்கே சேறும் அதிகம். போய்க் கரை ஏறுவது கடினம். இதைவிட நேரே நதியில் நீந்திக்கொண்டேயிருப்பது நல்ல தென்றுபடவே அவன் மேலே நீந்திச்சென்று கொண்டிருந்தான்.

மண்டலேசுவரனின் இடது கை மரத்துவிட்டது. ஹம்ஸாவை வலது கையில் மாற்றித் தாங்கிக்கொண்டான். அவளுடைய ஜீவனற்ற, காய்ந்து கருகிய, நிர்மலமான முகத்தைப் பார்த்து, தேவப்ரஸாதின் இதயம் பொங்கி வந்தது. அவளே மார்புடன் இறுகத் தழுவிக்கொண்டு இடது கையின் உதவியால் நீந்த ஆரம்பித்தான். பின்னுல் வருவது எவ்வளவு பேர்? அதையும் அறிய முடியவில்லே. அவர்களுடன் சண்டைதான் இடமுடியுமா என்பது ஒரு பதில் பெருத கேள்வியாக இருந்தது. ஆகவே அவர்களிடமிருந்து தப்புவதற்காக அவன் வேகமாக நீந்த ஆரம்பித்தான். கொஞ்ச நேரத்தில் பின்னுல் கேட்ட நீந்தொலி குறைய ஆரம்பித்தது. தேவப்ரஸாதும் தன் வேகத்தைக் குறைத்துக்கொண்டான். பின்னுல் கோவிலே விழுங்கி நெருப்பு ஆகாயம்வரை எழும்பிக் கொண்டிருந்தது. அவனேப் பின்பற்றிக்

(MADRAS), LTD.

Retail Branches

285, China Bazaar :: 71, Pondy Bazaar T. Nagar,

MADRAS.

கரையூடே பத்துப் பன்னிரண்டு குதிரை வீரர்களும் வந்துகொண்டிருந்தனர். தேவப்ரஸாத் அவர்களைப் பார்த்தான். அவன் முணுமுணுத்துக் கொண்டான். "பரவாயில்லை"! இளம் பருவ முதல் தண்ணீரில் நீந்தும் பழக்கம் அவனுக்கு மிகுந்த ஒத்தாசை தந்தது.

திடீரென்று ஏற்பட்ட ஓர் எண்ணத்தில் அவன் உள்ளம் உடலைப் பிளந்து வெளியேற முயன்றது. ஆவலுடன் 'ஹம்ஸா, ஹம்ஸா!' என்று கூப்பிட்டான். அவள் முகத்தில் விழிகளைப் புதைத்துப் பார்த்தான். அவள் முகத்தில் பொலிவு நீங்கிய அசைவற்ற தன்மையைக்கண்டு உள்ளம் நொந்தான். மிகுந்த கஷ்டத்துடன் மூக்கில் கை வைத்து மூச்சைக் காண முயன்றான். கையில் கை வைத்து நாடியை நாட முயன்றான். ஆனால் பாய்ந்து ஓடும் வெள்ளத்தில் சுமைதாங்கி நீந்தும் ஒருவன் நாடி காண்பது சுலபமான காரியமா? நிலையிட்ட கண்கள்; அலைவு நீங்கிய உதடுகள்; தேவப்ரஸாதுக்கு அலைந்து உளைந்து எழும் தன் உள்ளத்தை வசம் செய்வது மிகவும் கடினமாய்விட்டது. பின்னால் மீண்டும் தொடர்ந்து கேட்ட காலடி ஒலி அவனைத் தன் நிலையைச் சமாளிக்கும்படி செய்யத் தூண்டிற்று. அவன் வேகமாக நீந்த ஆரம்பித்தான். ஹம்ஸாவைப்பற்றி எழுந்த சந்தேகம் அவன் தைரியத்தை முறித்துவ்ட்டது வலிவைக் குலைத்துவிட்டது.

கிழக்கே அருணன் முகம் காட்ட ஆரம்பித்தான். தேவப்ரஸாத் முகம் திரும்பிப் பார்த்தான். ஒரே மனிதன் தான்! அவனும் மண்டலேசுவரனை நெருங்கிவிட்டான்.

"இது யாரை யமன் நெருங்கிவிட்டான்" என்று மண்டலேசுவரன் கேட்டான். பதிலுக்கு, முகத்து நீரைக் கையால் துடைத்துக் கடகடத்துச் சிரித்தார் ஆனந்தசூரி! அவருக்கு யோகாசன சாதகம் செய்த பழக்கம் பளுவற்ற தனியுடல்; உற்சாகம் கொண்ட உள்ளம். கொஞ்சம் கூடக் கலக்கமில்லை. இரண்டு கைமாறுகள்—தேவப்ரஸாத் சமீபத்தில் வந்து சேர்ந்தார்.

"உன்னைத்தான் மண்டலேசுவரா!"

"யதி! ஆனந்தசூரி! சண்டாளா இதுவரை என்னைத் தொடர்கிறாயா? உன் சாவும் சமீபித்துவிட்டது!"

ஆனந்த சூரி அப்பொழுதும் தண்ணீரில் தேவப்ரஸாதுடன் சண்டையிடுவது முட்டாள்தனத்துக்கு மிஞ்சியதில்லை என்று தெளிந்தார். கைகளைத்த மண்டலேசுவரன் கூட ஒரே கொடியில் தன்னைக் கசக்கி விடுவான் என்று அவர் நன்கறிவார். அவர் திரும்பி, கோபம் கொண்ட தேவப்ரஸாதுக்குப் போக்குக்காட்டி, கரைக்கிழுக்க ஆரம்பித்தார்.

"அதோ பார்த்தாயா, அந்தக் குதிரை வீரர்களை?"

"அட, உன்னைப்போன்ற அநேக பேடி வீரர்களைப் பார்த்திருக்கிறேன்."

"நான் தான் சொன்னேனே! குருதேவர் கட்டளையை மறந்துவிட்டாயா?" திடீரென்று வைரத்தை மறந்துதேவப்ரஸாத் கேட்டான்: "ஆம் ஆனந்தசூரி, அன்றொரு வாக்குக் கொடுத்தாயே, நினைவிருக்கிறதா?"

"ஆம் ஞாபகம் இருக்கிறது. ஆனால் உன் உயிரைமட்டும் விட்டு எது வேண்டுமானாலும் கேள், தருகிறேன்."

"என் உயிருக்குப் பிச்சை வாங்க மாட்டேன். சாகும்போதும் சோலங்கி சோலங்கியாகத்தான் உயிர் விடுவான். உனக்கு வைத்யம் வருமே, பார் கொஞ்சம். ஹம்ஸா உயிருடன் இருக்கிறாளா என்று"

"ஏன், ஏமாற்றி வதைக்க உத்தேசமா?"

"நாயே, மண்டலேசுவரன் ஏமாற்றுவானா? நீ பார்த்திருக்கிறாயா? பார் இதோ" அவன் ஹம்ஸாவை யதி பக்கமாக நீட்டினான்.

அருகில் வந்த துறவி அவள் மூக்கில் கை வைத்து. வெறுப்புடன் ஓர் சிரிப்புச் சிரித்து 'இனி இங்கே என்ன இருக்கிறது?' என்று எள்ளினார்.

"ஆ. இறந்து விட்டாளா?" தேவப்ரஸாத் அடியுண்டு இறக்க இருக்கும் சிங்கம்போல் ஆர்த்து எழுந்தான். ஹம்ஸாவின் முகத்தை நோக்கும் அவன் முகம் சற்று நேரம் அங்கிங்கு திரும்பவில்லை. இது வரையில் துறவி பேச்சு வாக்கில் அவனைக் கரைக் கருகில் கொண்டுவந்து சேர்த்து விட்டார். அங்கேயே கைதூக்கி, கரையூடே வரும் வீரர்களை விளித்தார். மூன்று நான்கு அம்புகள் சீறி வந்தன. எல்லாம் தண்ணீரில் விழுந்துமறைந்தன. ஒன்று மட்டும் மண்டலேசுவரனின் கழுத்தில் பாய்ந்து சிக்கி நின்றது. நீரிலேயே குதித்துப்பாய்ந்த மண்டலேசுவரன்—'கடையா, திருடா!' என்று தாவினான்! தப்ப முயன்ற ஆனந்த சூரியின் கழுத்தில் மண்டலேசுவரன் கை விரல்கள் பாம்புபோல் சுற்றிப் பிணைத்தன. விலகத் துடிக்கும் மின் போல் படபடத்த யதி உதவியளிக்க வீரர்களுக்குச் சைகை செய்தார்.

அந்த சமயம் கரையிலே ஓர் சலசலப்பு ஏற்பட்டது. திடீரென்று ஒட்டகைக் கூட்டத்

தின்மேல் வந்திறங்கிய வல்லபசேன் கூட்டத்தினர், 'ஜய் ஸோம்நாத்!' என்று சப்தம் கொடுத்தனர். கரையேறிய மண்டலேசுவரனும் ஒரு கையால் யதிக்குப் பதில் சொல்லிக்கொண்டு மற்றொரு கையால் ஹம்ஸாவைக் கீழே படுக்கவைத்துக்கொண்டே, பதில் சப்தம் கொடுத்தான்.

வல்லபன் பார்த்தான். யதி கழுத்தை முறிக்கும் தன் மரியாதைக்குகந்த மண்டலேசுவரனை அறிந்துகொண்டான். ஒட்டகையிலிருந்து குதித்து, கரைப்பக்கம் ஓடினான்.

கரை ஏறிய தேவப்ரஸாத் உடல் நொறுங்கிக் கொண்டிருந்தது. தலையை வலித்து இடித்தது. கால்கள் நிற்க மறுத்தன. கைகள் பலமிழந்து வருத்தின. நெருங்கிவந்த சாவின் பேய்வலி அவன் உடலைக் கணுக்கணுவாக உடைத்துக் கொண்டிருந்தது. கழுத்தில் பட்ட புண் குபுகுபு என்று ரத்தத்தைக் கக்கிக் கொண்டிருந்தது.

வல்லபன் கத்தினான்: "மகாராஜ்! இதோ வந்துவிட்டேன், வல்லபன்!"

தேவப்ரஸாத் அறிந்துகொண்டான். "வல்லபா! இனி அவசியமில்லை! இங்கே அவசிய

மில்லே. போ, திரிபுவனிடம். அவனைப் பார்த்துக்கொள்."

"ஆனால்...... மஹாராஜா!......"

"இனி ஹம்ஸா இல்லாமல் வாழவா? முடியாது?" என்று சொல்லிக்கொண்டே மண்டலேசுவரன் கிழக்கே கிளம்பிவரும் சூரியனை வணங்கி, ஜய் ஸோம்நாத் என்று ஆர்ப்பரித்தான். பிறகு துடிக்கும் யதியை ஒரு கையிலும், நாடி நின்று அசைவற்றுக் கிடக்கும் ஹம்ஸாவை மற்றொரு கையிலும் எடுத்துக்கொண்டு நதிக்குள் குதித்து முழுகிவிட்டான். 'மகாராஜ், மகாராஜ்!' என்று கத்திவந்த வல்லபன் கரையிலேயே நின்றுவிட்டான். வல்லபன் கண்களும் உள்ளமும் கரைந்து நீராயின. குஜராத்தின் இணையற்ற வீரன் சத்துருக்களின் வஞ்சகத்துக்கும், காதலின் கருத்தழித்த இன்பவெறிக்கும் இலக்காகி உயிரை வெறுத்து உலகைத் தள்ளி ஸரஸ்வதி மாதாவின் மடியிலே சென்று அமர்ந்துவிட்டான். வல்லபசேனும் தொடர்ந்து மூழ்கித் தேடினன். பலன் ஒன்றும் கிட்டவில்லே. நம்பிக்கையிழந்து திரும்பிய வல்லபன் ஏறிய புருவம் கொண்டு இறுக்கி மூடிய வாயுடன் ஓர் வீரனிடமிருந்து அம்புவில்லே வாங்கி, முன்பின் யோசியாமல், யதியின் வீரர்களை அலற அலறத் துளைக்க ஆரம்பித்தான்.

"ஓடுங்கள், அருகிலுள்ள எந்தக் கிராமத்திலிருந்தாவது பிடித்து வாருங்கள் செம்படவர்களை. வலே போடவேண்டும். மூன்று பிணங்களும் கிடைத்தாக வேண்டும்!"

"மகாராஜ்! அதோ பாருங்கள், யாரோ தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுகிறார்கள்...!"

வல்லபன் திரும்பிப் பார்த்தான். உடனே இரண்டு மூன்று துணைவர்களுடன் ஜலத்தில் குதித்தான். அவர் ஆனந்தசூரி. பிடித்திழுத்து வந்தனர், கரைக்கு. மண்டலேசுவரனைப் பிராணயாம பலத்தால் ஏமாற்றிவிட்டு, பிராணயாமம் முடிந்தபிறகு தம்மைத் தனியே கண்டு ஆனந்தம்கொண்டு வெளியேறியிருந்தார் துறவி. வெளியே கொண்டு வந்த சமயம் அவர் களைப்புக் காரணமாகக் கட்டையாகி யிருந்தார். அப்பொழுதும், ஜைன பகவானின் சத்துரு இறந்தான் என்று சொல்ல மறக்கவில்லே. 'குரு தேவரின் வார்த்தை பலித்துவிட்டது'. வல்லபன் ஆத்திரம்கொண்டு அவரைப் பிடித்து நெட்டித் தள்ளிவிட்டான். அவர் தம்மை மறந்து சிரித்துக் கர்ஜித்தார். கோபத்தை அடக்கிய வல்லபன் யதியை அழைத்துவரச் சொல்லி உத்தரவிட்டு, ஒட்டகை மேலேறி மேரளம் பக்கம் செல்ல ஆரம்பித்தான்.

சிலர் நதியில் பிணத்தைத் தேடத் தங்கிவிட்டனர்.

திரிபுவன்பால் மஹாராஜ்கி ஜய்!

வல்லபன் ருத்ர மஹாலயத் தருகில் வந்தபோது அவன் குதிரைவீரர்கள் கலேந்து நிற்பதைப் பார்த்தான். மண்டலேசுவரருடைய பெயர் குஜராத்தின் கிராமங்களில் கூட மந்திரம்போலிருந்தது. அதன் சக்தியால் தான் இதுவரை இரண்டாயிரம் வீரர்களடங்கிய சேனை நிற்க இயன்றது. அந்த மந்திரம் இப்பொழுது இல்லே; அந்த வீர மண்டலேசுவரனுக்காகச்சண்டையிடுகிறோம் என்ற ஆசை இனிகிடையாது. அவனுடைய புயவலியின் பெருமை தீர்ந்துவிட்டது. இதயத்தைத்தூண்டும் தெய்வப்பிறவி தேவப்ரஸாத் மறைந்துவிட்டான். எல்லோருடைய மனதையும் அந்தகாரம் சூழ்ந்தது. வல்லபனுக்கு இவர்களைக் கட்டில் வைப்பது கடினம் என்று தெரியும். இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் மேரளம் செல்லுமாறு கட்டளேயிட்டான். திரும்பும்போது ஐந்நூறு வீரர்கள் க்ஷேமராஜ் தேவர் துறவி வாழ்க்கையைக் கழித்த எந்த இடத்தில் அவருடைய போர் வீரனை புத்திரன் இறந்தானே அந்த இடத்தைப் பார்த்தனர். அவர்கள் கண்கள் நிறைந்தன. பசி, தாகம், சூடு, குளிர், முதலிய யுத்தத்தின் அநேக கஷ்டங்களே முகத்தோற்றம் மாறாமல் சகிக்கக்கூடிய வன்னெஞ்ச வீரர்களினுடைய கண்கள், தலேவன் இறந்ததைக் கேட்டு அழுதன. வாய் மூடி வல்லபசேன் ஒட்டகையில் அசையாமல் அமர்ந்திருந்தான். கிளம்பும் நேரத்தில் தலே குனிந்து ஒரு முறை விக்கினன். அவன் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. அந்த நடுங்கும் கைகளால் பக்கத்தில் அமர்ந்திருந்த கம்பீரமல்லன் கையை அழுத்திப் பிடித்தான். கம்பீரமல்லன் வல்லபசேனுடைய இந்த இதயப் பெருக்கைக் கண்டு அயர்ந்தான்.

"என் தந்தை இறந்து விட்டாரே!" வல்லபன் இதயம் வெடிக்கப் புலம்பினன்.

"தங்கள் தந்தை மட்டுமல்ல, மகாராஜ்! குஜராத் முற்றிலும் இன்று தந்தையை இழந்து நிற்கிறது. தந்தையிறந்தபிறகு தனயன் தேஹஸ்தலம் போய்விடாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். இனி எல்லா எதிரிகளும் தலே தூக்கி விடுவார்கள். மண்டலங்கள்சிதறிவிடும். இனி என்னசெய்வது என்று யோசித்தாக வேண்டும். அங்கே போனதும் 'சேனையைத் துரத்திவிடு. மீனல் தேவியிடம் சரணடைந்து விடு' என்று எல்லோரும் புத்தி சொல்ல வருவார்கள்."

"திரிபுவன்பால் இன்னும் உயிருடன்தானிருக்கிறார்!"

"ஆம், ஆனால் யார் கண்டது? அவனுக்கு என்னவாயிற்றோ? முந்தாநாள் பட்டணில் அவன் கைதாகியிருப்பதாக மண்டலேசுவரர் சொன்னாரே"

"ஆனால் ராணி மதுபுரியில் இருக்கிறாள். ஒருகால் அநேகமாகச் சந்திராவதியின் சேனையும் பட்டண் பக்கம் போய்க்கொண்டிருக்கலாம்."

"இனி செய்யவேண்டியது இரண்டே காரியங்கள் தான். ஒன்று தேஹஸ்தலத்தை மீனல்தேவியின் விழுங்கு முயற்சியிலிருந்து காப்பாற்றவேண்டும். இரண்டாவது உடனே பட்டண் சென்று திரிபுவன் பாலனைப்பார்க்க வேண்டும். அங்கே நமக்கு வேண்டியவர்கள் அநேகர் இருக்கின்றனர். ஆகையால் அவனைக் கொண்டுவருவது கடினமாயிராது!"

"கம்பீர மல்லரே! பட்டண் சிம்மாஸனத்தில் திரிபுவன பாலனையே அமர்த்திவிட்டால்........."

"வல்லபசேன்! தங்களுக்கு இந்த எண்ணம் இருக்கிறதென்று எனக்கு எப்பொழுதுமே தெரியும். ஆனால் தந்தை மறுத்ததைத் தனயன் ஏற்பானா? ஸோலங்கி வீரர்கள் மற்றவர்கள் உரிமையைப் பறிக்க என்றுமே மறுக்கிறவர்களாயிற்றே. அதில் அவர்களை அசைக்க முடியாதே!"

"ஆம், அதை நான் அறிவேன், சரி, நீ இந்த வீரர்களுடன் தேஹஸ்தலத்துக்குப் போ! நான் மேரவத்தைச் சமாளித்துக் கொள்கிறேன்; பட்டண் போகிறேன்."

"சரி, தங்கள் விருப்பப்படியே ஆகட்டும்."

சற்று முன்னேறியதும் ஓர் திறந்த பரந்த மைதானத்துக்கு வந்தனர். அங்கே வீரர்களை நிறுத்திச் சேர்த்து வல்லபன் பேசினான்:

"வீரர்களே! கோழை எதிரிகள் இப்பொழுது நம் தந்தையைச் சூழ்ச்சி செய்து கொன்றுவிட்டனர். அவர் மைந்தனையும் பட்டணில் சிறைவைத்து விட்டனர். மேலும் தேஹஸ்தலக் கோட்டையை உடைக்க முயலமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. இப்பொழுது நாம் வீடு திரும்பக் கூடாது. அரசரின் கொலைக்குப் பழிவாங்க வேண்டும். தேஹஸ்தலத்தைக் காப்பாற்ற வேண்டும். திரிபுவன் பாலனையும் விடுவிக்க வேண்டும். நீங்கள் எல்லாம் தயார்தானா"

எல்லோருடைய உள்ளத்திலும் இரக்கம் நிரம்பிற்று. நம்பிக்கையிழந்த அந்த நிலையிலும் 'தயார்' என்றார்கள்.

"கம்பீர மல்லரே! நீர் இந்த வீரர்களுடன் சென்றுதேஹஸ்தலத்தைக்காப்பாற்றுங்கள். நான் சென்று திரிபுவனை விடுவித்துவருகிறேன்"

அந்த ஒட்டகையிலிருந்து இறங்கி, கம்பீர மல்லன் மற்றொரு ஒட்டகையின்மேல் ஏறினான். ஒரு வீரன் சமயமறிந்து 'வல்லபசேன மஹாராஜனுக்கு........." என்றாரம்பித்தான். மற்றவர் ஜய்! என்று தொடர்வதற்குமுன்னமே வல்லபன் புயற்காற்றைப்போல் சீறினான். "ஏன்? மஹாராஜா வம்சம் அற்றுவிட்டது? சொல்லுங்கள்......... திரிபுவன் பாலனுக்கு......" என்றான். ஒவ்வொரு வீரனும் களைப்பு மறந்து, நம்பிக்கை துளிர்க்க 'ஜே' வீர முழக்கம் செய்தனர். வீரர்கள் கம்பீர மல்லனுடன் தேஹஸ்தலம் சென்ற பிறகு வல்லபன் சில வீரர்களுடன் பட்டண் பக்கம் கிளம்பினான். அவனுடன் கட்டுண்ட யதியும் இருந்தார்.

நடுப்பகல் நேரத்தில்அவன் மேரளம் வந்து சேர்ந்தான். அங்கேயும் அழுகையும் அவநம்பிக்கையும் பரவி நிற்குமோ என்று பயந்து வந்தான். ஆனால் அங்கே எல்லாம் ஆனந்த வெள்ளத்தின் ஆர்வப் பெருக்காகக் காணப்பட்டது. எல்லா வீரர்களும் பட்டண் மேல் படை எடுத்துச்செல்ல ஆயத்தமாகக் காணப்பட்டனர். வல்லபசேன் இல்லாமலிருந்த போதே மதுபுரி, விக்ராட், பட்டணிலிருந்தும் கூட திரிபுவன் வீரர்கள் வந்திருந்தனர். ராணியின் போக்கில் முஞ்ஜால் கைதியாக நேர்ந்ததையும் பட்டண் நகர் எதிர்த்து எழுந்ததையும் சொல்லியிருந்தனர். திரிபுவன் வல்லபனுக்கும் உடனேயே மண்டலேசுவரனுடன் வரும்படி சமாசாரம் அனுப்பியிருந்தான். அந்தச் செய்தியும் அவர்களிடையே உற்சாகத்தை ஊட்டிவிட்டிருந்தது.

வல்லபன் வந்ததைக் கண்ட எல்லோரும் அவனை நெருங்கி, களைத்து வருந்தும் முகத்தைக்கண்டு விஷயம்அறிய ஆவல் காட்டினர்.

"மகாராஜ் இறந்துவிட்டார். இந்தப் பாவி அவரைக் கொலை செய்துவிட்டார்" என்று யதியைச் சுட்டிக் காட்டினான். துறவி ஆத்ம திருப்தியினால் ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தார். அருகில் நின்ற வீரர்களையே வென்றுஎழும்பிய அவர்களுடைய கோபக் குரல் காற்றைக் கிழித்துக் கிளம்பிற்று. அவர்கள் ரத்தவெறிஅதிகரிக்கும் முன்னமேயே வல்லபன் துறவியை அப்புறப்படுத்திவிட்டான்.

ஒரு சிற்றரசர் கேட்டார்: "இனி என்ன செய்யவேண்டும் நாம்?"

"திரிபுவன் பாலனுடைய உத்தரவு தலையால் நிறைவேற்றப்படவேண்டும். கம்பீர மல்லர் தேஹஸ்தலத்தைக் காப்பாற்றச் சென்றுள்ளார். நாம் பட்டண் போவோம்; தலைவருடைய கொலைக்குப் பழி வாங்க முயற்சி செய்வோம்."

இந்த வார்த்தையை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். சற்று நேரத்தில் ஒரு உற்சாகம் கொண்ட சேனை விக்ராட்டை நோக்கிக் கிளம்பிற்று.

அவநம்பிக்கை

மண்டலேசுவரர் சேனை மேரளத்தில் தன் நாயகனுடைய சாவுக்காகச் சோகத்தையும் கோபத்தையும் அடைந்து கொண்டிருந்த அதே சமயத்தில் பட்டண் அரண்மனையில் வருத்தம் தோய்ந்த முகத்துடன் பிரஸன்ன குமாரி அரசமர பூஜை செய்து கொண்டிருந்தாள். ஒரே நாளில் அவள் கண்களின் புயலொளி, ரஸம் பொருந்திய நடை, சிரித்த முகம், ஆசையூட்டக் கூடிய இயற்கைக் குணம் எல்லாம் எங்கோ சென்று மறைந்துவிட்டன. முதல் நாள் நடந்த விஷயங்களுக்குப் பிறகு திரிபுவன் மாறிவிட்டான்; உதட்டைக் கடித்து, வெறிநிறைந்த கண்களுடன் எல்லோரையும் பார்த்துக் கொண்டு, நெற்றியில் மனதின் பலத்தைத் தாங்கிக் காட்டி அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தான்; எல்லோருக்கும் உத்தரவுகள் கொடுத்துக்கொண்டு அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் மிகவும் யோசித்தேபேசிக்கொண்டிருந்தான். களைப்பை ஆற்றக்கூட அவனுக்கு நேரமில்லை. வைத்தியர் எவ்வளவோ சொன்னார். ஆனால் அவன் காயத்தைப்பற்றிக் கொஞ்சம் கூடப் பயப்படவில்லை. பிரஸன்னாவும் முடிந்த வரையில் அவன் கூடவே சுற்றிக் கொண்டிருந்தாள். வேண்டிய பொருள்களைச் சேகரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஆனால் திரிபுவன் பேசியோ அல்லது நகை முகம் காட்டியோ அவளைத் திருப்திப்படுத்த முயலவேயில்லை. திரிபுவனைக் கோபம் தடுக்கிறது என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். திரிபுவன் இப்படி சூரியனாக எரிப்பான் என்று இன்றுதான் அந்தக் கொடி வாடிக் கண்டது. அரசமர பூஜை செய்யும் போதே அவள் கண்கள் நிரம்பி வழிந்தன. 'சந்தோஷ நாட்களும் வருமா? திரிபுவன் இப்படியே இருந்தால் போவதெப்படி?' களைப்படைந்த மனதுடன் பிரஸன்னா திரும்பினாள். திரிபுவனின் வார்த்தையைக் காப்பாற்ற அவள் எதுவும் செய்யத் தயார். ஆனால் திரிபுவன் இப்படி ஒதுங்கித்தனித்திருப்பதை எப்படி சகித்

துக்கொள்ள முடியும்? அவள் இவ்வாறு கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போதே லீலாதர வைத்யன் தலை காட்டினான்.

"வைத்யரே! எங்கே போகிறீர்கள்? ஸோலங்கி எப்படி இருக்கிறார்?"

"நான் களைத்து விட்டேன், பிரஸன்ன குமாரி! அவன் தலையில் பூதம் ஏறிக்கொண்டு விட்டது. எவ்வளவு சொன்னேன்? பிறகு வருவேன் என்று சொல்லியிருக்கிறான். நீ சாப்பிடுவதற்கு ஏதாவது தயார் செய்"

"சரி.' என்று சொல்லி கொஞ்சம் நீங்கிய கவலையுடன் பிரஸன்னா சென்று தன் கையாலேயே எல்லாவற்றையும் தயார்செய்து வழி பார்க்க ஆரம்பித்தாள். கொஞ்சநேரத்திலேயே வைரநெருப்பில் விடாமல் எரிந்துகொண்டிருக்கும் திரிபுவன் பாலன் வந்துசேர்ந்தான். பேசாமலேயே ஆசனப்பலகையில் அமர்ந்தான். கொஞ்சம் சாப்பிட்டு எழுந்து விட்டான். சாப்பிட்ட பிறகு கட்டுக்கட்டவைத்யர் அழைத்துச் சென்றார். பிரஸன்னாவும் பின்னாலேயே சென்றாள். வைத்யர் அவர்களைத் தனியேவிட்டு, சாக்குச்சொல்லி வெளியேறினார். தலையைக் கைகளிலே தாங்கி, திரிபுவன் வாய் அடைத்து அமர்ந்திருந்தான். பிரஸன்ன குமாரி நெருங்கி தலையைத் தன் கைகளால் தாங்கித் தூக்கி, 'ஏன்?' என்று கேட்டாள். உணர்ச்சி உடல் முழுவதும் பாய்ந்து வார்த்தைகள் மூலம் ஓட! தொடர்ந்து,

வார்த்தைகளில் ஏற்பட்ட நடுக்கத்தைநீக்க முயன்று, 'இது மாதிரி, எவ்வளவு நாள் நடக்கும்' என்று கேட்டாள்!

"எது?"

"இப்படி அலக்ஷியமாயிருந்து கஷ்டப் பட்டால் விரதத்தை எப்படிக் காப்பாற்றுவாய்? இரண்டு நாட்களிலேயே மறுபடியும் படுக்கை காலில் விழவேண்டியது தான்."

"என் விரதம் முடிய வேண்டும். அதைத் தவிர வேறே ஒன்றையும்பற்றி எனக்குக் கவலையில்லை."

துக்கத்துடன் சற்றுச்சிரித்து, பிரஸன்னா சொன்னாள்; "இது எனக்குத் தெரியும். ஆனால் படுக்கையில் கிடந்துகொண்டு எந்த விரதத்தைக் காப்பாற்றுவாய்? இப்பொழுது கொஞ்சம் களைப்பாறு. நாளை எல்லாம் சரியாய்விடும். இனி பட்டணில் நுழைய யார்?"

"அப்படியா? இன்று சாந்தி மேத்தா பேசியதிலிருந்து மனதில் சந்தேகமாயிருக்கிறது. பன்னிரண்டு கதவுகள் இருக்கின்றன. ஊதாவை அனுப்பியிருக்கிறேன். என்றாலும் எந்தக் கதவுமூலம் யார் வருகிறார்கள். என்று எப்படிப் பார்க்க முடியும்?" திரிபுவன் இவ்வளவு பேசியவுடனேயே பிரஸன்னா மனம் களிப்புற்றாள். "சும்மா இருப்பதைவிடச்சண்டை போடுவதாகிலும் நல்லது." அவள் பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஆனால் எல்லாக் கதவுகளையும் மூடியாய் விட்டதல்லவா?"

'மூடியதால் என்ன ஆயிற்று? வாயில்களுக்கு எல்லையா? கதவுகளுக்கு எல்லையா? சிற்றப்பாவுக்கென்ன? (கர்ணதேவ்) "உண்டு குடித்தால் போதும்" என்று எண்ணிவிட்டார்! யாரிடம் சாவியிருக்கிறதோ, எந்தக் காவற்காரன் யாருக்கு உட்கையோ, யார் கண்டது?" என்று திரிபுவன்சொல்லி, கூரிய கண்கள் கொண்டு பிரஸன்னாவைப் பார்த்தான்.

"அப்படி யார் நுழைந்துவிடுவார்கள்? நுழைந்துவிட்டால் தான் கைது செய்ய எவ்வளவு நேரமாகும்? ஏன் இப்படி சிந்தனையில் அலைகிறாய்?"

திரிபுவன் பார்வை இன்னும் அதிகக் கூர்மையை யடைந்தது. "மாமா முஞ்ஜாலோ அல்லது ஜயதேவோ வந்துவிட்டால் என் வார்த்தை எப்படித் தங்கும்? எல்லோரும் மாறி விடுவார்கள். திரிபுவன் வீழ்ந்தாலன்றி மீனல் சின்னம்மா இங்கே வரக்கூடாது. அது தானே என் பிரதிக்ஞை"

பிரஸன்னா யோசித்தாள். திரிபுவன் இந்தச் சமயம் அவளிடம் ரகசியம் அறிய விரும்புகிறானா? அவளிடம் சந்தேகம் வந்துவிட்டதா? "ஆமாம் அது எப்படி ஜயதேவன் வர முடியும்?"

"யாராகிலும் அழைத்து வந்தால்?"

"அப்படி இங்கே யாரிருக்கிறார்கள்?"

"ஏன்? சாந்திசந்திரசேட் இருக்கிறார். இன்னும் எவ்வளவோ பேர்? இன்றுதான் யாரும் பட்டணை விற்கத் தயாராகியிருக்கிறார்களே!"

"இல்லை, இல்லை. பட்டண் வாசிகள் வார்த்தையை விட்டுக் கொடுக்கிறவர்களல்ல!" பிரஸன்னா அவனை ஆழமறிய முயன்றாள்.

"இங்கு எல்லாரும் பட்டண் வாசிகளா? மீனல் ராணிதான் வாடகைக் குதிரைகளைக் கொண்டு நகரை நிரப்பியிருக்கின்றாளே?" ஏக்கக் குரலில் வெளிப்படையான திரஸ்காரத்துடன் திரிபுவன் சொன்னான்.

பிரஸன்னா அருகில் வந்தாள். அவன் தோளில் கை வைத்தாள். உணர்ச்சி எழுந்து காட்டும் கண்களில் காதல். கருணை வேண்டும் குரலில், "திரிபுவன்! என்மேல் இன்னும் சந்தேகம் போகவில்லையே?" என்று கேட்டாள்.

திரிபுவன் கொஞ்சம் நகர்ந்து கொடுத்தான். "ஆம், உன்மேல் எனக்குச் சந்தேகம் தான்."



"என் பேரிலா? இவ்வளவு வருஷம் சென்ற பிறகுமா?"

"நீ முதலில் பட்டண் வாசியல்ல?"

பிரஸன்னகுமாரி பொரிய ஆரம்பித்தாள்; "ஆமாம் திரிபுவன்! நான் சந்திரபுரிப்பெண்; ஜைன மதத்தவள். மீனல்தேவியின் மருமகள். அவள் பெண்ணைப் போன்றவள்...... சரிதானே திரிபுவனா! உன் அறிவுக்கு வாழ்த்துக்கள்! ஆனால், என் வாழ்நாள் முழுவதையும் பட்டணிலேயே கழித்தேன் என்பதை மறந்து விட்டாயே! ஸாமல்பார் ஹட்டின் வீரத் த்ன்மையின் பலத்தை நாமிருவரும் சேர்ந்துதான் கற்றுக் கொண்டோம் என்பதும் மறந்து விட்டதோ? நேற்றுத்தானே நான் ஸோலங்கியின் வீரபத்தினி யாவதாக வாக்குத் தந்தேன். அதுகூட மறந்து விடுமா? இவ்வளவு நாளானபிறகும் ஸோலங்கி என்னை வேற்றுத் தேசத்தவள் என்று அழைப்பான் என்று எதிர்பார்க்கவேயில்லை!"

பிரஸன்னாவின் அடங்கியிருந்த கோபம் சீறிக் கிளம்பிற்று. கண்கள் கோபத்தால் சிவந்துகக்கின. வாடிய முகத்தில் கோபம்ஒளி வீசிற்று. மனம் ஒடிந்திருந்த திரிபுவன் கூட அந்த அழகைப் பருக ஆரம்பித்தான்.

"உன்னைக் கணவன் என்று நான் எண்ணி அழுகிறேன். நீ என்னை இப்படி சந்தேகப் பட்டு எரிக்கிறாயே?" என்று முடித்தாள் அவள்.

கொஞ்சம் குளிர திரிபுவன் சொன்னான்: "இல்லை. என் முட்டாள் தனத்தாலேயே என் விரதத்துக்குப் பங்கம் ஏற்படக் கூடாதல்லவா! உன் போக்கும்தான் முன்போல் எங்கேயிருக்கிறது? நீ முன்போலப் பிள்ளை மனதுடனா இருக்கிறாய்? முன்போல அன்பின் சுத்தமான உருவாகவா இருக்கிறாய்?"

"என்ன, நான் திரிபுவனிடம்கூடவா வஞ்சனை செய்கிறேன்? பிறகு என் அன்பு யாருக்கு என்றுதான் ஏற்பட்டிருக்கிறது? அதைப்பெற்று என்னைப் போற்ற உனக்கு நேரம் எங்கே இருக்கிறது? நேற்று நான் தவித்தேன். உருகினேன் உன்னை ஒரு முறை தரிசனம் செய்ய! பிரஸன்னா இருப்பதையே நீ மறந்து திரிந்தாய்!"

"பிரஸன்னா! நான்தான் பித்துப் பிடித்துத் திரிகிறேன். நீ மட்டும் உண்மையைச் சொல். உனக்கு ஒன்றும் தெரியாது? முன்னிருந்தபடியேயா இப்பொழுதும் இருக்கிறாய்!"

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.



N.P.B.

தி
இந்தியன் பாங்க் லிட்.

"இந்தா! இன்னம் ஐந்துமுறை கேள். அப்பொழுதாவது அமைதிகிட்டும். உனக்காகப் பட்டண் நகருக்கு யார் ஓடிவந்தது? ஏன் அடிக்கடி கேட்டு வெட்கத்தை வாங்குகிருய்?"

"அப்படியானுல் நேற்று எங்கே போயிருந்தாய்?"

பிரஸன்னுவின் கோபத்தை இடறிவிட்டுக்கொண்டு சிரிப்பு தலை நீட்டிற்று. வழக்கப்படி சிரிப்பு முகம் மனதை அள்ள, "அட, சண்டை முழுவதற்கும் இதுதான் அடிப்படையா? முன்னமேயே ஏன் சொல்லக்கூடாது?"

"இப்பொழுதுதான் சொல்லேன்!"

"உண்மையைச் சொல்கிறேன். நீ எண்ணுவது சரிதான். மீனல்தேவி இன்று மாலை பிறரறியாமல் வரத்தான் போகிருள். சாம்பானேரி வாயில் வழிதான் வருவாள்."

திரிபுவன் "ஊம்!" என்ருன்.

"அவளை அழைக்க ஒருமனிதன் போவான்"

"அது யார்?"

"இதோ பாரு ஒருவரிடமும் சொல்லாதே. சொன்னுல் காரியம் கெட்டுவிடும். முரார்பாலன்......!"

"ஓ, அதுதான் அந்தத் துஷ்டன் வாயிலில் முன்னுல் நிற்கிருனே! இதோ போய்...... பார்......!"

"இந்தா! அது தானே உன்னிடம் தொல்லை. நீ சும்மா இரு. நானே ஏற்பாடு செய்கிறேன்."

"நீ என்ன செய்வாய்?"

"அதை அறிய நீ ஏன் ஆத்திரப்படுகிருய்? முரார்பால் ஒரு மதிப்புள்ள சிற்றரசன். அவனை ஏதாவது செய்தால் அதற்கும் பலன் ஏற்படும். உன்னைப் பூஜை செய்கிறவர்களே அதைக் கேட்டு உனக்குச் சத்துருவாகி விடுவார்கள். ஆகையால் கொஞ்சம்கூடக் கலகம் ஏற்படக் கூடாது."

ஒருமாதிரி வேற்றுமை காட்டி, சந்தேகம், தோன்றத் திரிபுவன்,

"சரி நீ ஏமாற்றுகிருய். சொன்னுல் சொல். இல்லையானுல் உன் இஷ்டம்!" என்ருன்.

"சரி. மறுபடியும் வந்து விட்டதா! கொஞ்சம் தைரியமாகக் கேட்டுக் கொள். நேற்று மாலை நான் முரார்பாலிடம் சென்றிருந்தேன்."

"எதற்காக? என்னிடம் சொல்லாமலேயா?"

"ஆம்! நான் இன்னும் உன் மனைவியாகவில்லையே! எனக்கும் முரார்பாலுக்கும் இடையே கொஞ்சம் அறிமுகம் ஏற்பட்டிருக்கிறது. முந்தாளுள் இரவு நாங்களிருவரும் தான் சேர்ந்து பட்டண் வந்தோம்."

"ஊம்.!"

"ஆமாம்! உனக்குப் பொருமை ஏற்படுகிறதா! நான் அவனை மயக்கவே போயிருந்தேன்!"

"நீ......?" திரிபுவன் ஆழ்ந்த வருத்தமும் அதை ஒட்டிய கோபமும் அடைவதைவிட வேறென்றும் செய்ய முடியவில்லை.

"ஆம், மயக்கி வேலைநடத்த முடியும் என்ருல் முனிந்து செய்வானேன்? முடிந்தால் அவனையும் வழிப்படுத்தி விடுகிறேன். பிறகு நடப்பது நடக்கட்டும்."

"உண்மையிலா?"

"அட, நீ செய்த விரதம் எனக்கும் இல்லையா? நான் மட்டும் என்ன வேரு? இப்பொழுதுதாவது சந்தோஷம் ஏற்பட்டதா?"

"ஸபாஷ், பிரஸன்னு! தெரியாமல் அவநம்பிக்கை கொண்டு விட்டேன். மன்னித்துவிடு. உடல் நிலை சரியாயில்லையல்லவா.!"

"இதனுல் தானே தூங்குவதேயில்லை. கட்டுக் கட்டக்கூடக் விடுவதில்லை. நான் சொல்வது சரிதானே!"

திரிபுவன் இதயம் மலர்ந்தது. எழுந்து அவள் கைம்மலர்களைத் தன் கைகளில் எடுத்து, "பிரஸன்னு, இந்நிலைக்கு இன்னும் ஒரு காரணமும் உண்டு"

"அது என்ன அது!"

"நீ 'ஸோலங்கி!' என்று ஏன் கூப்பிடுகிருய்?" தேடி அடித்து வம்புக்கு விஷயம் கண்டு பிடித்தான் திரிபுவன்!

இதயத்தைத் துளைக்கும் வேல் விழியைச் செலுத்திய பிரஸன்னு, "பிறகு என்ன சொல்ல?" என்று பாடம் கேட்டாள்.

"ஏன் 'திரிபுவன், சரியில்லையோ?' ஸோலங்கி என்பது வேற்றுமை காட்டுகிருப் போல் தோன்றுகிறது!"

"சரி, இனி சொல்லவில்லை. இன்று மாலை நான் முரார்பாலனைப் பல்லிளிக்க வைக்கப் போகிறேன்; நீயும் வா. இல்லாவிட்டால் வெந்து புட்டாகி விடுவாய்!"

"கண்டிப்பாய்! உனக்கு ஏதாவது நேர்ந்து விட்டாலும்!"

"ஆம். அதுவும் சரிதான். யாராவது தூக்கிக்கொண்டு போய் விட்டால்!" திரிபுவன் இனியாவது கொஞ்சம் அமைதியுடன் தூங்கு.

உபயோகத்திற்குப் பிரசித்தி பெற்றவை

அழகாக எழுதுவதற்கு

PACHOLI HAIR TONIC

பச்சோலி ஹேர் ஆயில்

கூந்தலின் அழகிய வளர்ச்சிக்கு

சிறந்த சுகாதார வசதிகளுக்கு



பிரகாசமான நீடித்த வெளிச்சத்திற்கு

Manufacturers :

RAMAN INKS Co., Regal Agencies,

186, Royapettah High Road, :: MADRAS.

"இல்லை. வா, கொஞ்சம் பேசிக்கொண்டிருப்போம். வா. அருகில் உட்கார். எவ்வளவு நாட்கள் ஆயின?" திரிபுவன் மெதுவாக அவள் கையை அமுக்கினான்.

கொஞ்ச நேரத்தில் லீலாதர வைத்யன் வந்து கவனித்தான். இருவரும் நிம்மதியாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். ஸோலங்கிகளின் மூன்று தலைமுறைக் குழந்தைகளை அவனுக்குத் தெரியும். அந்த வழித்தோன்றல் வீரரத்தினத்தையும் அதற்கேற்ற ஜோடியையும் கண்டு அவன் உள்ளம் பூரித்தது. கொஞ்சநேரம் நீர் சொரியும் கண்களுடன் அவன் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். இருவரும் வேகத்துடனும் உணர்ச்சியுடனும் பட்டண் பெருமையைப்பற்றி, பேசிக்கொண்டிருந்தனர். மீனல் தேவியை இன்னல் செய்யும் வழிகளைப் பற்றியும் யோசித்துக்கொண்டிருந்தனர். பேசிக்கொண்டிருக்கும் போதே பிரஸன்னா திரிபுவன் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். கிழவைத்தியன் கண்களை மூடி அவ்விடமிருந்து நகர்ந்தான்.

மோஹினி.

பகல் ஆகி மாலை நேரம் வந்தது. பட்டண் நகரில் கொஞ்சம் அமைதியும் ஏற்பட்டது. தொழில், வியாபாரம், கேளிக்கை, கூத்து முதலியன முன்போல் நடவாதுபோனாலும் பட்டண் ஜனங்களுக்குத் தங்கள் பெருமைக்கு ஒன்றும் பங்கம் ஏற்படாது என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதைக் காக்க உரிமையும் தகுதியும் உள்ளவர்கள் முன் வந்து விட்டார்கள் என்ற தைரியம் ஏற்பட்டிருந்தது. மாண்டேரி வாயிற்படியில் மண்டலாதிபதி கேங்கார்சிங் தம் படையை நிறுத்தியிருந்தார். அந்த ஒரு கதவு தான் திறந்திருந்தது. ஆனால் போகும் வரும் ஒவ்வொருவன் மேலும் கேங்கார் சிங் கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். அவசியமான செய்திகள் ஏதாகிலும்இருந்தால்அதை திரிபுவனுக்குச் சொல்லிஅனுப்புவார். மீனல் தேவி விக்ராட்டில் சந்திராவதி சேனையுடன் தண்டு இறங்கியிருக்கிறாள் என்ற செய்தி நகரம் முழுவதும் பரவியிருந்தது. ஆதலால் எல்லோரும் அவள் பேரில் கோபமாயிருந்தனர்.

மாலை வந்து விட்டது. அரண்மனையின் பின்பக்கத்திலிருந்து மூன்று மனிதர்கள் வெளியேறினர். முன்னே அழகிய பட்டுச்சால்வையில் மறைந்து சென்ற ஓர் பெண்; பிறகு முகமும் சேர்த்து அணியும் ஓர்வித தலைப்பாகையணிந்து ஓர் சாதாரண ராஜபுத்திரன் போல் தோற்றமளித்த ஒரு யுவன்; அதற்கும் பின்னே மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு டுங்கர் நாயக். மூவரும் வேகமாகச் சாம்பானேரி வாயில் பக்கம் சென்றனர். ஊதா வீட்டு வாயிற்படிக் கெதிரே நின்றனர். பெண் ராஜபுத்திரன் பக்கம் திரும்பிச் சொன்னாள்: "பார். இங்கேயே நில். இதோ போய்த் திரும்பி வந்து விடுகிறேன். இன்று என்னுடைய ராஜ்யம்!" பெண்ணின் கண்கள் விஷமச் சிரிப்புச் சிரித்தன.

அவள் சொல்வதை ராஜபுத்திர யுவன் விரும்பியதாகத் தெரியவில்லை. அவன் கொஞ்சம் கடுமையாகவே பார்த்து, "உன் வார்த்தைக்கு அவன் மதிப்புக்கொடுக்காவிட்டால்? ...மதிக்காவிட்டால் நான் பலம் பிரயோகிப்பேன், சரிதானே!" என்றான்.

"உனக்குக் காரியம் ஜயிக்கவேண்டுமா, வீரியம் காட்டவேண்டுமா? எங்கேயாவது தேவ கன்னிகைகள் தோல்விகண்டதுண்டா?"

"சரி, நான் சற்று விலகியே நிற்கிறேன். அவன் வரும் நாழியாகி விட்டது!" என்று சொல்லிய ராஜபுத்திர இளைஞன் சற்று விலகி நின்றான்.

இப்படி கௌரவத்துக்கு விரோதமாக வேஷம் போடுவதில் பிரஸன்னாவுக்கு வருத்தம் ஏற்படவில்லை என்று நாம் எண்ணிவிடக்கூடாது. ஆனால் அதை அவளுக்குக் கொஞ்சம் மறக்கவேண்டியிருக்கிறது. அவள் எதிரேயுள்ள சிவன் கோயிலினுள் புகுந்தாள். மாலை மயங்கிய பிறகே அவள் முரார்பாலனைச் சந்திப்பதாக வாக்களித்திருந்தாள்.

தாண்ட் பிரதேசத்தின் சேனாதிபதியான இந்த முரார்பாலன் சாம்பானேரி வாயிலைத் தானே காவல் செய்வதாக முன்வந்து ஏற்றுக் கொண்டான். காரணமறியாத கேங்கார் சிங்கும் திரிபுவனும் இதை அனுமதித்திருந்தனர். இவ்வளவில் தன்னை மயக்கிய அந்தச்சிறுமி- மறக்கமுடியாத அந்தப் பெண்- சிவாலயத்தில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தாள். முரார்பாலுக்குச் சந்தோஷம் கரையைக் கிழித்துப் பாய்ந்தது. ராணிக்குக் கதவு திறக்க இன்னம் நேரம் பாக்கி இருந்தது. அந்த ஒரு மணிநேரம் ஒன்றரை மணி நேரம் இந்தப் பெண்ணுடன் வினோதமாய்க் காலம்கழிக்கலாம்! பிரஸன்னா சிவாலயத்தில் புகுந்த சற்று நேரத்துக்கெல்லாம் அவனும் வந்து ஆலயத்துள் புகுந்தான். அவனுக்குத் தன் வீரத்தில் எவ்வளவு பெருமை உண்டோ அவ்வளவு தன் அழகிலும் உண்டு. அழகான வீர உடைக்குமேல் மனதைக் கொள்ளை கொள்ள ஆபரணம் அலங்கார ஆடை அணிந்து உள்ளும் புறமும் மகிழ அவன் கோயிலுக்குள் வந்தான்.

உள்ளே சென்று அங்குமிங்கும் பார்த்தான். கடவுளைத் தரிசித்தான். மேடையிலமர்ந்து, “ஜய, சம்போ! போலாநாத்!” என்று கடவுள் நாமத்தை உரத்த குரலில் ஸ்மரித்தான்.

சிவாலயத்தின் பிராகாரத்தில் பிரதக்ஷிணம் செய்துகொண்டிருந்த பிரஸன்ன குமாரி “கேள், பக்தா! என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறேன்!” என்றாள்.

“ஓ ஹோ, நீங்கள் வந்துவிட்டீர்களா?”

“சொன்ன வார்த்தையை உங்கள் போன்றவர்கள்தான் மீறுகிற வழக்கம்......நான் தடுத்திருந்தபோதும் என்னைப் பற்றி அறிந்துகொண்டீரல்லவா?”

“என் மனம் அடங்கவில்லை. நான் என்ன செய்வது?”

முதல்நாள் பிரஸன்னா அரண்மனையில் கண்டு நாளை இங்கே சந்திப்பதாகச் சொல்லியிருந்தாள். முரார்பாலுக்கு ஆவல் அடித்துக்கொண்டது. ஊதாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான் இந்த அழகி யார் என்று. ஊதா பிரஸன்ன தேவியிடம் அதைச் சொல்லி விட்டான்.

“ஓஹோ! இப்படித்தான் பெரிய மனிதர் வீட்டுச் சமாசாரத்துக்கு மரியாதை கொடுக்கிறீர்களோ? நல்ல வேலையாய்ப் போயிற்று நான் அவசரப்பட்டு ஒன்றும் செய்யாமலிருந்தது!”

பிரஸன்னாவை அமர்த்த எண்ணி முரார்பாலன், “நாம் இருவரும் சேர்ந்துவந்தோம். என்று ஒருவரிடமும் நான்சொல்லவேயில்லை” என்றான்.

அவசரம் காட்டி பிரஸன்னா, “நல்ல வேலையாய்ப் போயிற்று. பெரிய அனுக்ரஹம்! சரி நான் போகிறேன்” என்று அன்ன நடைபோட ஆரம்பித்தாள், முரார்பாலன் ஆகாயத்தைப் பார்த்தான். கவலையினாலல்ல! நேரம் இன்னம் பாக்கி யிருக்கிறது என்று தெரிந்துகொள்ள!

“கூடாது, இப்பொழுதுதான் வந்தீர்கள். உடனே ஓட்டமா? இதற்குத்தான் என்னை வரச் சொன்னதோ?”

“நான் என்ன சொன்னேன் உங்களிடம்? மறுபடி சந்திக்கிறேன் என்றுதானே சொன்னேன்! இதோ செய்துவிட்டேன். இரவில் வீடு திரும்பும்போது என்னை யாராவது பார்த்துவிட்டால் நான் என்ன செய்வேன்?”

“அட, கொஞ்ச நேரம்தான் உட்காரேன். இந்த உபத்திரவ நாளில் யார்தான் இதை எல்லாம் பார்க்க உட்கார்ந்திருக்கிறார்கள். மேலும் உன் அத்தைதான் இங்கே இல்லையே.”

“சரி, கொஞ்ச நேரம் உட்காருகிறேன். கொஞ்ச நேரம் உட்காருகிறேன்!” என்று சொல்லி, இரண்டு தூண்களுக்கிடையே போட்டிருந்த ஓர் மரத்தின் மேல் ஏறி அமர்ந்து, “உம் சொல்லுங்கள். என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?” என்றாள்.

“அன்று ராணியை விட்டு ஏன் ஓடிவந்தாய்?”

“இது சொந்த விஷயம்; பிறரிடம் சொல்லத்தக்கதல்ல!”

“அது சரி, உன் கலியாணம் அவந்தியில் நடக்கப்போகிறதாமே, கேள்விப்பட்டேனே, அது உண்மைதானா?”

பேராசையுற்ற முரார்பாலன் தன் மனதிலேயே சில இன்பக் கனவுகள் காண ஆரம்பித்தான். தன்னுடன் வந்தவள் மீனல் தேவியின் சகோதரன் மகள் என்று அறிந்ததிலிருந்து அவன் கனவின்பப் புயல் எல்லை மீறி அடித்தது. மீனல்தேவிக்கு அதிகாரம் கிடைத்து, தேவப்ரஸாத் பலம் குன்றுவதால் அதுவலுவும் அடைந்துவிட்டால் பிறகு மாளவத்துடன் சண்டைமூளும். அப்பொழுதுதன்னைப்போன்ற அனுபவம் வாய்ந்த வீரனை அவள் மறக்கமாட்டாள். அவனுக்கு முக்கியமான இடம் கிடைக்கும். மாளவ தேசத்தில் கலியாணம் ஆகாவிட்டால் இவள், இந்த உத்சாகம் நிறைந்த வீரனை மணக்க என்ன தடங்கல் சொல்லப்போகிறாள்? தேவப்ரஸாத் பையனை அவள் மணக்க விரும்புகிறாள் என்றும் அவன் கேள்விப் பட்டிருந்தான். ஆனால் மீனல் தேவியின் தலையீட்டில் அது நின்று விட்டது என்றும் அவன் தெரிந்து கொண்டிருந்தான். நல்ல காலமாக, கடவுள் கிருபையால் மீனல் தேவிக்கு உபகாரம் செய்யச் சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. எப்படியாவது ராணியை உள்ளே வர விட்டு அரண்மனையில் வைத்து விட்டால்! பிறகு நகரத்தில் கலவரம் அடங்கி அமைதி ஏற்பட்டு அரசியின் அதிகாரமும் வலுத்து விடும். முரார்பாலன் கூர்ஜரேசுவரியின் வலது கையாகிவிடுவான். பிறகு பிரஸன்ன குமாரியை மணப்பது விளையாட்டுப்போலத் தான்! இந்தக் கனவுகளை உண்மையாக்க அவன் பிரஸன்ன குமாரியை வசப்படுத்த ஆரம்பித்தான். அவள் மாளவ ராஜனை மணக்கப் பிரியம் கொண்டிருக்கிறாளா இல்லையா என்று அறிய விரும்பினான். ஆனால் பிரஸன்ன குமாரி இதற்கெல்லாம் ஏமாறுகிறவளா? அவளும் ‘ஆகாயத்து நக்ஷத்திரங்களைச்’ சுட்டிக் காட்ட ஆரம்பித்தாள்!

கொஞ்ச நேரத்தில் சிவாலயத்தின் சிப்பந்தி விளக்கேற்ற வந்தான். 'சரி கிளம்பு. உனக்கு நேரமாயிருக்கும்,"

"ரொம்ப அழகாயிருக்கிறது! காரியம் ஆகிறவரையில் காலைப்பிடி—தான்! இனி என்ன செய்வேன்? அரண்மனை வாயில்கள் அடைபட்டிருக்குமே! எந்தச் சிறுகதவைத் திறந்து வைக்கச் சொல்லியிருந்தேனே அந்தக் காவற்காரனும் சாப்பிடப் போயிருப்பானே!"

"எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. சொல்லுங்கள், எங்கே போகவேண்டும்? கொண்டு வந்து விடுகிறேன்."

"இந்தச்சமயம் எங்கே போவீர்கள்? உங்கள் வேலை இரவு முழுவதும் சாம்பானேரி வாயிலிலல்லவா? எதிரே ஊதாவின் வீட்டில் தானே தூங்குகிறீர்கள்?"

முரார்பால் விழித்தான். "ஆம், ஆனால் எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது."

இரவு இடித்து மோதிக் கொண்டு வந்தது.

"சரி, நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் சென்று உங்கள் வேலையைச் செய்து வாருங்கள். பிறகு என்னைக் கொண்டுபோய் விடலாம்."

"நான் உடனே திரும்பமுடியாதே!"

பிரஸன்னா கொஞ்சம் கடுகடுத்தாள். "என்ன அப்படி கொஞ்சம்கூட தள்ள முடியாத, வேலை. அப்படி, பிரமாதம்?

"இல்லை......!"

கோபிப்பவள்போல் பாசாங்கு செய்து பிரஸன்னா தொடர்ந்தாள்: "சரிபோங்கள். நான் இங்கேயே இருக்கிறேன். இஷ்டப்பட்டபோது நானாகப் போய்க் கொள்கிறேன். நீங்கள் போகலாம்."

"இல்லை, இல்லை; ஆனாலும்......"

"ஆனால் கீனால் ஒன்றுமில்லை. எனக்குச் சுயநலமிகளின் சகவாஸமே பிடிப்பதில்லை."

"அப்படியா சொல்கிறாய்?"

"போங்கள். போகாமலிருங்கள். எனக்கு முன்னமேயே தெரியும் பட்டண் நாகரிகம் தாண்ட் பிரதேசத்தில் நிறம் மாறித் தூரு ஏறி விட்டது என்று!"

"நான் மிகவும் முக்கியமான ஒரு வேலையாகப்போகிறேன். தெரிந்தால் நீயே போகச் சொல்லுவாய்!"

DON'T WORRY !!

Try **"KUMARI"** (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"RASAYAN" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர்ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா.
5. இங்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

கொஞ்சம் நயம் செய்து பிரஸன்னா கேட்டாள்: "பிறகுகொஞ்சம் சொல்லுமேன். அது என்ன வேலை என்று!" அவள் அழகு நிறம் பொழிந்துநிமிஷத்துக்குநிமிஷம் மெருகேறிக் கொண்டிருந்தது. கிழவன்கூட யௌவனம் அடைந்துவிடுவான். முரார்பால் யுவன். போதாததற்கு ஏற்கனவே பிரஸன்னாவைத் தியம் பிடித்தவன். "என்னை மன்னித்துவிடு. அது சொல்லக்கூடியதல்ல. நாளைக் காலையில் சொல்லுகிறேன். அது தெரிந்தபிறகு என்னைப்பற்றித் தெரிந்து கொள்வாய். நான் போகிறேன். நேரமாகிறது"

"சரி, இதோ கதவு திறந்திருக்கிறது, போங்களேன். உங்களுக்குச் சொல்ல இஷ்டமில்லை என்றால் நான் மட்டும் கேட்கத் துடிக்கிறேனா!"

"பிரஸன்னமுகி! இது என்ன இப்படிப் பேசுகிறாய்? நீ தெரிந்தவள்; கெட்டிக்காரி. இப்படிப் பேசலாமா?"

"என் புத்தி தொலைந்துவிட்டது. போங்கள் ஏன் நிற்கிறீர்கள்?"

"நீ என் இதயத்தைத் துளைக்கிறாய்; தெரியுமா?"

"என் இதயமும் எப்பொழுதோ வெடித்துவிட்டதே, அது தெரியுமா?" சொல்லிக்கொண்டே பிரஸன்னா கீழே குதித்தாள். சிலம்பொலி வீரன் இதயத்தை வென்று நின்றது.

"பிரஸன்னா! நீ என்னை வாட்டுகிறாய். சரி, வெளியே வா சொல்லுகிறேன். ஆனால் பிறரிடம் சொல்லாதே!"

"வேண்டாம். நான் கேட்கத் தயாராயிருந்தால்தானே!" பிரஸன்னா கோயிலுக்குள்ளே போக ஆரம்பித்தாள்.

முரார்பால் குரலிழந்து 'பிரஸன்னதேவி!' என்றழைத்தான். அவள் கழுத்தை வெடுக்கெனத் திருப்பி "ஏன், என்னவாம்?" என்றாள்.

"இங்கே வாயேன் சொல்கிறேன்."

"என்ன சொல்லப் போகிறீராம்?"

"வா, வெளியே வா, சொல்கிறேன்."

இருவரும் சேர்ந்து வெளியேறினர். வாயிற்படி வந்து இருவரும் நின்றனர். பெண் மூக்கை மலர்த்தி, கௌரவம் விளங்க நின்றாள். "பிரஸன்னா, உங்கள் அத்தை என்னிடம் ஒரு அவசியமான காரியத்தை ஒப்புவித்திருக்கிறார்கள்"

" அலக்ஷியம் காட்டியபடியே பிரஸன்னா, "என்ன?" என்று கேட்டாள்.

"அவர்களை நகருக்குள் அழைத்து வர வேண்டியது என் பொறுப்பு. அவர்கள் இப்பொழுது இந்த வாயிற்படிக்கு வருவார்கள்."

பிரஸன்னா ஒன்றுமறியாத குழந்தைபோல் கேட்டாள்: "அது எப்படி உள்ளே வருவார்கள்? கதவு எல்லாம்தான் சாத்தியிருக்கிறதே. சாவிகள் திரிபுவன்பாலனிடம் தானே இருக்கின்றன?"

"என்னிடமும் ஒரு சாவி இருக்கிறது. ஒருவரிடமும் சொல்லாதே."

"உனக்கு எப்படிக் கிடைத்தது?"

"ராணி கொடுத்தாள். சரி வா. கதவருகில் போகலாம். யாராவது வெளியிலிருந்து கதவு தட்டுவார்கள். வாயில் பாராக்காரர்களுக்கு லீவு கொடுத்துவிட்டேன். ஆகவே அங்கே ஒருவரும் இருக்கமாட்டார்கள்."

"ஆனால் கேங்கார் சிங் திரிபுவன் பாலன் முதலியவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?"

"நீ என்ன சொல்லுகிறாய்? இந்த உபத்திரவமெல்லாம் சந்திராவதி சேனை எதிரே இறங்கியிருக்கிறது என்பதால் தானே! ராணி உள்ளே வந்து மக்கள் உண்மையறிந்துவிட்டால் எல்லாம் அமர்ந்து அமைதி ஏற்பட்டு விடாதா? பிறகு திரிபுவன் பாலனிடம் "சரி, போய் நீ காற்று வாங்கு" என்று சொல்லி விடலாம்."

கடைசி வார்த்தையைக் கேட்டுப் பிரஸன்னா அவனை என்ன செய்யலாம் என்று ஆத்திரப்பட்டாள். "நீ பட்டணி தானே?"

"ஆம். ஏழு தலைமுறையாகப் பட்டணி தான். அதனால் என்ன?"

"நீ இந்தச் சமயம் மக்களின் மூக்கை அறுக்கப் பார்க்கிறாயே?"

"மக்களுக்கு மூக்கு என்ன? எனக்கு ராணியின் வார்த்தைகள் சிரமேல் தாங்கத் தக்கவை. இது என்ன இப்படிப் பேசுகிறாய், நீ? உனக்கு ராணி இங்கு வருவது பிடித்தமில்லையா?"

"இங்கிருந்து போகாமலிருந்தால் அது வேறு. துக்கம் காப்பவள் அதைவிட்டு, தீட்டை மறந்து பட்டணைவிட்டு வெளியேறி வேற்றுச் சேனையுடன் சேர்ந்த ராணி, பட்டண் பெருமைக்கு ராணியாவாளா?"

"பிரஸன்ன தேவி! நீ பேசுவது சாமல் பார்ஹட் பேசுவதுபோலல்லவா இருக்கிறது!"

"அவர் கால்தூசு பெறுமான அவ்வளவா வது உனக்குப் பெருமை இருந்தால் எவ்வள வோ நல்லதாயிற்றே!"

"சரிவா. திட்டி வாசலருகில் சென்று நிற் கலாம். கதவை யாராவது தட்டினால் காதில் விழ வேண்டாமா?"

சாம்பானேரி வாயில் பக்கம் நடமாட்டம் அதிகமில்லாததனால் அவர்கள் தைரியமாகப் பேசிக்கொள்ள முடிந்தது.

"முரார் பால்! நீ எந்தப் பக்கம்? பட் டண் பக்கமா? அல்லது ராணியா?"

"பட்டண் ராணி என்னுடைய ராணி!"

"உன் நகரம் விலை போகிறது. நீ பார்த்துக் கொண்டிருப்பாயா? ராஜா ராணிகள் எப் பொழுதும் இருப்பவர்களல்லர். முதலில் உனக்குப் பட்டண் அல்லவா பெரியதாகத் தோன்ற வேண்டும்.?"

"அது சரிதான். அதற்காக ராணியின் வார்த்தைகளை அவமதிக்க முடியுமா?"

"ராணியின் பெருமை நீங்கிய கட்டளைக் காக உயிருடன் இருக்கும் பட்டண் வாசிக ளின் பெருமைக்கு உலை வைப்பதா? அவர் கள் சுதந்திரத்தில் வெந்நீர் ஊற்றுவதா?"

நீ வீணில் கோபித்துக் கொள்கிறாய்? தன் ஸ்வாமியின் கட்டளை தான் ராஜபுத்திரனுக்கு முதல் தெய்வம்!"

"உன் முன்னோர்கள் இந்தப் புத்திசாலிப் பேச்சை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று இங்கே கஜினியின் சிற்றரசர்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருப்பார்கள். முரார் பால்! நீ வீரன், நேர்மை தெரிந்தவன். நானும் தெருவில் சுற்றும் சாமானியப் பெண்ணல்லள், ராஜகுமாரிதான். நான் கை நீட்டிப் பிச்சை கேட்கிறேன். முஞ்ஜாலை மடக்கியவள்; தேவப்ரஸாதை வஞ்சனை செய் வள்; அந்த ராணியை அலைய விட்டு விடு. உன் தாய் நாட்டின் மூக்கை அறுத்து எள்ளும் பொருளாக்கிவிடாதே!"

"அத்தை மருமகள் இப்படி சத்துரு என்று எனக்குத் தெரியாதே!"

"எனக்கும் தாண்ட் சேனாதிபதி இவ்வ ளவு கால்தாங்கி என்று தெரியவில்லை!"

"பிரஸன்னா! நான் எதைப் புகழ? உன் வார்த்தைகளையா, அவைகளின் வேகத்தை யா? வாழ்நாள் முழுவதும் உன் வார்த்தை யடிகளையும் பார்வை யம்பையும் சகிப்பதா னால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று எண் ணுகிறேன்!......"

அந்தச் சமயம் வெளியிலிருந்து கதவு தட் டும் சப்தம் கேட்டது. முரார்பால் திரும்பி னான். காதுகள் கேட்டன! மூளை யாரென்று அறிய முயன்றது. கைகள் சட்டைப் பையில் சாவியைத் துழாவின. பிரஸன்னா தன் தளிர்க் கையால் அந்தக் கையைப் பிடித் தாள்.

"முரார்பால்! நீ பெருமை தெரிந்த ராஜ புத்திரன். இது என்ன செய்யத் துணிந் தாய்?"

"என்னைத் தடுக்காதே. நான் பிறழ மாட் டேன்." அவன் சாவியை எடுத்துப் பூட்டிலே மாட்டப் போனான்.

பிரஸன்னா ஆத்திரப் பட்டாள்: "நீ இந்தப் பாவம் செய்வாயா? கேள் கொஞ்சம்!"

முரார்பால் பூட்டைத் திறந்து விட்டான். கதவு மாட்டப் பட்ட சங்கிலியால்தான் திற வாமல் நின்றது. வெளியிலிருந்த மனிதன் ஓட்டை வழியாக, "யார் முரார்பாலனா?" என்று கேட்டான்!

சங்கிலியில் கையை வைத்து, "என்ன மகா ராணி வந்து விட்டார்களா?" என்று கேட் டான் முரார்பாலன்!

"ஆம், கொஞ்ச தூரத்திலிருக்கிறார்கள். சென்று அழைத்து வருகிறேன்,"

"சரி போ, சீக்கிரம் வா!" என்று முரார் பால் சொல்லி மேலே திறப்பதை நிறுத்தி னான். பிரஸன்னாவுக்கும் தைரியம் வந்தது!

"முரார்பால்! நீ இந்த வேலை செய்து தான் முடிப்பாயா?"

"ஆம்."

"ஏன்? ராணியைத் திருப்தி செய்வதனால் என்ன லாபம்? என்னிடம் சொல். வேண்டி யதை எல்லாம் தருகிறேன்."

"லாபமா?" முரார் கோபித்துக் கொள்ள விரும்பவில்லை. பிரஸன்னாவை விட்டு விட மனம் வரவில்லை. "என் தர்மம்" என்றான்.

பிரஸன்னா இகழும் குரலில் "நகரை இழப் பது, மதிப்பைக் குலைத்துக்கொள்வது, சுதந் திரத்தைக் கொள்ளை கொடுப்பது—இவை தானே உன் தர்மம்?"

முரார்பால் இகழ்ந்து நிற்கும் ஒளி பொருந் திய அழகைப் பருகிக்கொண்டே, "ஆம். நீ எனக்கு என்ன லாபம் தருவிப்பாய்?" என் றான். பிரஸன்னாவுக்கு அப்பொழுதுதான் முரார்பாலின் சுயகலத்தின் மிக ஆழ்ந்த ஆழம் பிடிபட்டது!

"சரி என்ன வேண்டும்? எது என்னல் முடியுமோ தருகிறேன். நான் பட்டண்வாசிகள் பக்கம். நீ ராணியை உள்ளேவிட்டால் நான் உன்னுடன் பேசக்கூட மாட்டேன். கோழை, பிறரை வீணில் புகழ்ந்து ஜீவிக்கிறவன், நகர் விரோதி இவர்களை எனக்குப் பிடிக்காது முரார்பால்! அவர்கள் முகத்தில் கூட விழிக்கப் பிடிக்காது! ராணியைச் சந்தோஷப்படுத்தி என்ன கிடைக்கப்போகிறது? உத்யோகமா? அது கிடக்கட்டும்; அதிகாரம்? அதுவும் தருகிறேன். புகழ்? அது துரோகிகளுக்குக் கிட்டுவதில்லை......"

"சுந்தரி! லாபம் என்றழை. தர்மம், என்று பெயர் சூட்டு. எது வேண்டுமானாலும் சொல். நீ ஏன் என்னை நேர் வழியிலிருந்து விலக்குகிறுய்? உனக்கு என்னலாபம் கிட்டும்?"

"எனக்கா?" அருகேவந்து அழகி கேட்டாள்: "உன்னைப் போன்ற வீரனைத் துரோகியாவதிலிருந்து தடுப்பதுதான், முரார்பால்! அதுதான். ராணி எதுவேண்டுமானாலும் கொடுப்பாள். ஆனல் என் அன்பைநான் தான் கொடுக்கமுடியும், முரார்பால்!"

பிரஸன்னுவின் கண்களைக் கண்டு சுழன்ற முரார்பால் முடியைத் தளர்த்தி, "அது என்ன?" என்ருன்,

பிரஸன்னு பெருமை துள்ளச் சொன்னுள். "ஆம்!"

முரார்பால் திடுக்கிட்டுத் தயங்கிப் பின்னடைந்தான்.

"உன் அன்பா?"

"ஆம். பிரஸன்னுவின் அன்பு. என்ன? வேண்டுமா? உதறப்போகிருயா?" பொல்லாத பிரஸன்னு, தன் கடைசி ஆட்டத்தில் காய்களை எறிந்து கொண்டிருந்தாள்.

"பிரஸன்னு! என்னை எந்த இடத்துக்கு இழுத்துச் செல்கிருய்? நீ பேசுவது உண்மை தானு?"

"சாவியை என்னிடம் கொடுத்துவிடு. பிறகு நீ சொல்வதை எல்லாம் நான் கேட்டு விடுகிறேன்."

பிரஸன்னுவின் பத்மக்கையைத்தன் கையில் எடுத்து, தன்னை மறந்த நிலையில் உடல் உள்ளம் ஆட, "உண்மையா?" என்ருன் முரார்பால்.

"முதலில் கொடு." தயங்கித் தயங்கி, சாவியைக் கொடுத்துவிட்டான்.

"சரி, தாழை இடு"

முரார்பாலின் நடுங்கும் கைகள் அந்த உத்தரவையும் நிறைவேற்றின.

பிரஸன்னு கொஞ்சம் சிரித்து, "இன்று உன் நகரவாசிகளுக்கு உயிரளித்தாய்" என்ருள்.

"சரி, என் உயிரை நீ எப்பொழுது தருவாய்?" என்ருன் முரார்பால்.

பிரஸன்னுவின் தோற்றம் சற்றுநேரத்தில் மாற்றமடைந்தது: "முரார் பால்! எண்பத்து நான்கு ஜன்மத்திலும் அது கிட்டாது" என்ருள். மேலே தொடர்ந்து,

"நீ பட்டண் நகரத்துக்காக, அதன் பெருமையைக் காக்க, தன் முன்னேர்களின் பெயரை நிலை நிறுத்தச் செய்ய மறுத்த வேலையை இந்த அற்ப உடலின் ஆசை கிட்டும் என்ற அவல நம்பிக்கையால் செய்யத் துணிந்தாய்! இனி நீ என்னை மணக்கவா? (யோசித்து யோசித்து நிறுத்தெடுத்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கும் போதே உன் உள்ளம் எப்படித் திரிந்து நிற்கிறது? என்று எனக்குத் தெரிந்துவிட்டது). நான் உன்னைத் தொடக்கூடமாட்டேன். இங்கே உள்ளவர்கள் தாண்ட் பிரதேசத்து பில் ஸ்திரீகள் அல்ல" என்று சொல்லிக் கொண்டே பிரஸன்னு இடுப்பில் கைவைத்து நின்று முரார்பாலை விழுங்கும் விழிகளால் நோக்கினுள்.

வெட்கம், கோபம் அவநம்பிக்கை இவைகளால் உருக்குலையும் முரார் வகையறியாது "நீ, என்ன, உண்மைதான் சொல்கிருயா?" என்ருன்.

"ஆம் உண்மைதான். ஆயிரம் தடவைகள் உண்மை! உன் முகத்தைக்கண்டு என் கண்கள் நாணமுறுகின்றன. உன் போன்ற துரோகிகளைச் செக்கிலிட்டு ஆட்டவேண்டும். நீ என் சொல்லைக்கேட்டுப் பட்டண் பெருமையைக் காப்பாற்றச் சாவியைக் கொடுத்திருந்தால் உன்னை என் சகோதரனுக்கும் அதிகமாக எண்ணி கௌரவித்திருப்பேன்! ஆனல் இப்பொழுது? உன் நிழல்கூட என்னைக் கெடுத்துவிடும்!"

"அடி நன்றி கொன்றவளே! என் நன்னடத்தைக்கு இதுதானு பலன்! அசடே! உன் கையிலிருந்து சாவியைப் பிடுங்க எனக்கு எவ்வளவு நேரமாகும் என்று எண்ணுகிருய்?"

"முடிந்தால் பிடுங்கிக் கொள்ளலாமே! பேசாமல் போய்விடு. இல்லை என்ருல் பிறரெதிரிலும் உன் மானம் பறிபோகும்!"

"அப்படியா?" முரார்பால் பிரஸன்னு விடம் பாய்ந்து செல்ல ஆரம்பித்தான்.

பிரஸன்னுவுக்குத் தெரியும், கதவு மறைவில் திரிபுவன்பாலனும் டுங்கர் நாயக்கும் மெதுவாக வந்து நிற்கிறுர்கள் என்று. அதனுல் அவள் தைரியமாகப் பின்னுல் நழுவினுள். அவளுக்கும் முரார்பாலுக்கும் இடையே திரிபுவன்பாலனின் கத்தி இடைமறித்தது.

திரிபுவன் அமைதியான அதிகாரக் குரலில் சொன்னுன்: "முரார்பால்! ராஜபுத்திரன் செய்கையா இது? பிரஸன்னு உன்னைப்பாவம் செய்வதிலிருந்து காப்பாற்றினுள் என்று ஏன் சொல்லமாட்டேன் என்கிருய்?"

முரார்பாலுக்குத் தன் முட்டாள்தனத்தின் உண்மை சொருபம் தெரிந்தது. இனி என்ன செய்வது என்று யோசித்துச் சொல்ல அவன் அறிவே மறுத்தது.

"திரிபுவன் பால்! என்னை நகருக்கு வெளியே அனுப்பிவிடு. இனி நான் இங்கிருக்க விரும்பவில்லை."

"காலையில் மோண்டேரி வாயில் வழியாகச் சென்று விடு. இப்பொழுது வீடு செல். என்ன பிரஸன்னு, முரார்பாலிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா?"

சற்றுத் தொலைவில் நின்றுகொண்டிருந்த பிரஸன்னு "ஒன்றுமில்லை போகலாம்" என்ருள்.

"டுங்கர் நாயக்! நீ இந்த வாசலில் இரு. ஏதாவது கலவரம் நடக்கலாம் பிரஸன்னு சொன்னுள்: "திரிபுவன், இந்த டுங்கர் நாயக் உனக்கு நல்ல சேவை புரிகிருர். இதெல்லாம் சரியான பிறகு அவருக்கு ஒரு சிறிய ஜாகிர் கொடுத்துவிட வேண்டும்"

பல்லிளித்து டுங்கர் நாயக்—"ராணி நீங்கள் சௌபாக்கியவதியாய் வாழ வேண்டும்!" என்று மலர ஆசிகூறினுன்.

பிரஸன்னுவும் திரிபுவனும் ஒரு பக்கம் சந்தோஷமாய்ச் செல்ல, முரார்பால் மற்ருெரு பக்கம் தலை குனிந்து துக்கம் நிறைந்து மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

சற்று நேரத்தில் யாரோ கதவு தட்டினுர்கள். மறுமுறை தட்டினுர்கள். மீண்டும் தட்டினுர்கள். இங்கே வாயில் கைவைத்து டுங்கர் நாயக் சிரித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் களைத்த கை தட்டுவதை நிறுத்தி விட்டது! (தொடரும்)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

விதியின் - - - விளையாட்டு

கி. ஸந்தானம்

“பார்த்தீர்களா! எனக்குத் தெரியும். இதெல்லாம் தற்செயலாய் நேருகின்றன என்று நீங்கள் சொல்லுவீர்கள். என்னுடைய அனுபவத்தில்—அனுபவமென்றால் சாதாரண அனுபவமா? வசனம் என்று சொல்லுவார்களே அதைப்போல, சொந்த வீட்டின் மேன் மாடியில், நிலவொளியில், ஆனந்தமாய், தங்கக் கிண்ணியில் நான் பாலருந்திய காலமும் ஒன்றிருந்தது. அடுத்த வேளைக்கு அன்னம் எங்கே கிடைக்கப்போகிறதோ என்று நான் அல்லற் பட்டதும் உண்டு. வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்று சொல்லுவார்களே அதைப் போலப் பிறர்களுடைய சிண்டுகளெல்லாம் என் கையிலேயே என்று சொல்லும் படியாய், நாவசைந்தால் நாடசையும் படியாய், நான் அதிகாரம் செலுத்திய காலமும் ஒன்றிருந்தது. இன்னுறென்று தெரியால், நாடோடியாய்த் திரிந்ததும் ஒரு காலம். சுருங்கச் சொன்னால், சென்ற ஐம்பது வருஷத்தில் நான் பல திறப்பட்ட அனுபவங்களை அடைந்திருக்கிறேன். அதனால்தான் சொல்லுகிறேன்—இதெல்லாம் தற்செயலாய் நேருவதில்லை. ஏதோ ஒரு சக்தி நம்மையெல்லாம் இப்படி ஆட்டி வைத்து வேடிக்கை பார்க்கிறது!

அந்தச் சக்தியைக் கடவுள் என்று நீங்கள் சொன்னாலும் சரி. அல்லது சாத்தான் என்றே அழைத்தாலும் சரி. எனக்கு அக்கரையில்லை. மனிதன் திருண மாத்ரம்...... ஆனால் நான் வேதாந்தத்தில் இறங்கப்போவதில்லை. பார்க்கப் போனால் என் போன்ற கிழம்கட்டைகளுக்கு இரண்டே வழிகள் தானிருக்கின்றன, பொழுது போக்குவதற்கு. ஒன்று ஆசாபாசப் படுகுழியில் வீழ்ந்து சுற்றிச் சுற்றி வருவது, மற்றொன்று திண்ணை வேதாந்தம் பேசுவது: வேதாந்தம் பேசுவதற்கு எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆதலால்தான் நான் அதில் இறங்கப் போவதில்லை. நான் சொல்வதெல்லாம்—இன்னதென்று விவரிக்க முடியாத ஒருசக்தி நம்மையெல்லாம் இப்படி ஆட்டம் கண்டு மகிழ்கிறது என்பதுதான். இல்லாவிட்டால் பாருங்களேன்! அன்று நீங்கள் தினசரியில் படித்திருப்பீர்களே, இருபது வருடமாய்ப் பிறவிக் குருடாய் இருந்தவன் கோதாவரியில் மூழ்கி எழுந்ததும் கண் பார்வை பெற்று விடுவதாவது!............

ஏதடா, இந்தக் கிழவன் சள சள வென்று பேசித் தொல்லை கொடுக்கிறானே என்கிறீர்களா? ரயில் வண்டியில் ஏறி, எப்படியோ இடமும் பிடித்து உட்கார்ந்தபின், பேசாமல் என்ன செய்வது!

“தாத்தா! நன்றாய்ப் பேசுங்கள். வேண்டுமானால் இப்படிக் காலையும் நீட்டிக் கொள்ளுங்கள்” என்றான் அவருக்கு முன் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த ஒரு யுவன்.

“நல்ல பையனாயிருக்கிறாயே. நீ யாரோ?”

“என் பெயர் சுவாமிநாதன். வரகூர் சுப்பா சாஸ்திரிகள் குமாரன். விசுவாமித்ர கோத்ரம். மகம் நக்ஷத்ரம். படிக்கிறது பீ. ஏ. ஆனர்ஸ். இரண்டு வேலி பூஸ்திதி உண்டு.... போதுமா விபரம்?”

அவர் சிரித்தார்.

“பேஷ்! எல்லாம் நன்றாயிருக்கிறது. பகவத்கிருபையால்......”

“நீங்கள் ஏதாவது ஒரு கதை சொன்னால் போதாவது போகும்; தூங்கவும் முடியாமல் விழித்துக் கொண்டிருக்கவும் முடியாமல் திண்டாட வேண்டியிருக்கிறது.”

“என் சரித்ரம்தான் ஒரு பெருங்கதை ஆச்சே.”

“சரி அதைத்தான் சொல்லுங்களேன்.” அவர் ஆரம்பித்தார்.

2

எனக்கு அப்பொழுது சிறுவயது. பணத்திற்கு ஒன்றும் குறை வில்லை. ஒரு பிடுங்கலும்இல்லை. அப்புறம், கேட்பானேன்? உல்லாசமாய் ஊர் சுற்றிவரப் புறப்பட்டவன். ஒரு சமயம் வடக்கே லாகூர் சென்றிருந்தேன். மனம் போல் உண்டு உடுத்தி, ஒரு கவலையு மின்றிக் காலம் கழித்தேன். கேவலம் ஒரு ஜெண்பகப்பூவின் வாசனை உள்ளளவுகூட ஒரு மனிதனின் உல்லாச வாழ்வு நீடித்திருப்பதில்லை என்பது எனக்கு அப்பொழுது தெரியாது.

ஒரு நாள் ராவிநதி யோரமாய், ஒரு நோக்கமுமின்றிச்சென்றுகொண்டிருந்தேன். நிலா பால்போல் காய்ந்துகொண்டிருந்தது. வழியில் ஏதோ கூட்டமாயிருந்தது. வேடிக்கை பார்க்கலாமென்று சற்று நின்றேன்.

"உஷா! போகலாமா அம்மா?" என்று என் பக்கத்தில் ஒரு குரல் கேட்டது. "இன்னும் சற்று இருக்கலாம்" என்று ஓர் இனிமையான குரலும் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன்.

"ஓ! நீங்கள் தமிழர்களா?"

"ஆமாம்"

ஒரு தமிழன் எங்கேயிருந்தாலும், அவனுடைய நடையுடைபாவனையிலிருந்தும், முகவெட்டிலிருந்தும் அவனைக் கண்டுபிடித்து விடுவது சுலபம்.

"தமிழர்களை நீங்கள் ஒருவேளை இந்தப்பக்கத்தில் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள், இல்லையா? இந்தப் பக்கம் ஷகருக்கு ரொம்ப எட்டாக்கை. இருந்தால் என்ன?.........மன்னிக்கணும். என் பெயர் சங்கரன். இவள் என் தங்கை. நாங்கள் அதோ தெரிகிறதே மச்சு வீடு, அதில் தங்கியிருக்கிறோம். எங்களுக்கு இந்த ஊரில் ஒன்றும் அலுவலில்லை. சும்மா ஊர் சுற்றவந்தவர்கள். நீங்கள்......"

"நானும் உங்களைப் போல்தான், வெட்டியாள்" என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

"நல்லதாயிற்று. எங்கள் வீடு இதோதானிருக்கிறது. வாருங்களேன்."

நான் ஒன்றும் அங்கே தமிழர்களுக்கு வேண்டிக்கிடக்க வில்லை. இருந்தாலும் சங்கரனைக் கண்டவுடனேயே எனக்கு அவனைப் பிடித்துவிட்டது. சிலபேருக்கு அலாதியான ஒரு முகவெட்டு இருக்கிறது. அவர்கள் பேசினாலே சிரிப்பது போலிருக்கும். முகத்தை ஒருதரம் பார்த்து விட்டால் அப்புறம் அது நம் மனக் கண்ணைவிட்டு அகலாது. சங்கரன் முகமும் இந்த ரகத்தைச் சேர்ந்தது தான்.

உஷா வேறு ஒரு ரகம். ரொம்ப சிவப்பல்ல. இருந்தாலும் முதற் பார்வைக்கு அழகாய்த் தானிருந்தாள். ஆனால் லேசான ஒரு சோகச் சாயை அவள் முகத்தில் படர்ந்திருந்ததை நான் கண்டேன். அவள் நகைத்தாலும் அந்தச் சோகக்கீற்று அவள் முகத்தை விட்டு அகல வில்லை. ஒருவருக்கு உத்ஸாகம் மிகுந்தால் அவருடைய ஒவ்வொரு அங்க சேஷ்டையும் அதை வெளிப்படுத்துகிறது. அதே போல், துன்பத்தின் சாயையும் விழிகளில் மட்டும் தென்படுவது என்பதில்லை. ஒவ்வொரு அங்கமுமே அதன் இருப்பைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. அந்த இளம் பெண்ணின் துக்கத்திற்குக் காரணம் யாதாயிருக்கும்?

3

"வாருங்கள் இது தான் எங்கள் வீடு" என்று என்னை வரவேற்றான் சங்கரன்.

"இல்லை! எங்கள் மாளிகை என்று சொல்லவேண்டும்—உங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றதனால்" என்றாள் உஷா.

"அப்படியானால் இது எத்தனாவது மாளிகையோ" என்றேன் நான். அவர்கள் முகத்திலிருந்து நான் சொன்னதின் அர்த்தம் அவர்களுக்கு விளங்கவில்லை என்று தெரிந்தது. நான் தொடர்ந்து கூறினேன்.

"சுபாவத்தில் நான் நாடோடி. என் கால்களில் சக்கரங்கள் இருக்கவேண்டும். நான் சுற்றாத ஊரில்லை. இப்படி நின்றவிடம் நில்லாமல் பூமிபோல் சுற்றும் சுபாவம் என் இரத்தத்தில் ஊறியிருக்கவேண்டும்......"

"எதற்கும் ஒரு முடிவு உண்டல்லவா? இலைபோட்டுப் பரிமாறும் வரையில் தானே பேச்சுச் சத்தம்?" என்றாள் உஷா.

"இந்த ரீதியில் என் வாயடைக்கப் பிறந்தவள் யாரோ" என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

"அந்தப் புண்ணியத்தை—அல்லது நீங்கள் ஒரு வேளை வேறுவிதமாய் நினைக்கிறீர்களோ?—நான் கட்டிக்கொள்ளுகிறேன்...... இப்பொழுதைக்கு இதோ இலைபோட்டு விட்டேன் வாருங்கள். அண்ணா ஆகட்டும்" என்றாள் அவள். நான் அவர்களிடமிருந்து பிரிந்து என் விடுதிக்குத் திரும்பியபோது வெகு நேரமாய் விட்டது.


G.K.

என் மனதில் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு உற்சாகம் பெருக்கெடுத்தது. நான் சீட்டியடித்தேன். கோணக்கால் நடை போட்டேன். எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தவர்களுக்கு 'அழகு' காட்டினேன், சிறுபிள்ளைபோல. இராஜவிழி விழித்தேன். என் கையை முத்தமிட்டுக் கொண்டேன். தன்வாலையாட்டிக்கொண்டு என்முகம் நோக்கிவந்த ஒரு நாயை 'என்னிடம் வாலாட்டுகிறாயா' என்று விரட்டியடித்தேன். என் அறையை அடைந்தபின், விளக்கை ஏற்றிவிட்டு ஒரு 'பாட்டம்' காட்டிய மாடினேன். எனக்கு என்ன நேர்ந்து விட்டது? இந்த ஆனந்தத்திற்கு என்ன காரணம்? ஒன்றும் விளங்கவில்லை. எனக்கு வெகு நேரம் வரை தூக்கம் வரவில்லை. உஷாவைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டே கடைசியில்கண்ணயர்ந்தேன்.

நான் என்ன இன்பகரமான சொப்பனம் கண்டேனோ தெரியவில்லை. யாரோ......

"அடடா! அது உஷாவைப்பற்றித்தானிருக்கும். அதையும் இட்டுக்கட்டிச் சொல்லக்கூடாதா" என்றான் அந்த யுவன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே.

"நான் சொல்வதெல்லாம் கதையென்று நினைக்கிறாய்? என்றார் கிழவர்.

"யார் சொன்னது? அவ்வளவும் அப்பட்டமான உண்மை. சொப்பனம் தானே. அந்தப் பொய்யை இன்னொருபொய்யால் போர்த்தப்படாதா?" என்றான் அவ்வாலிபன். கிழவர் நகைத்துக்கொண்டே தொடர்ந்தார்: யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தேன். பொழுது புலர்ந்து வெகு நேரம் ஆகியிருந்தது.

"என்ன சார்! சுற்றுவதில் தான் பூமியோடு போட்டியிடுவதாக நேற்றுச் சொன்னீர்கள். இப்பொழுது உறக்கத்தில் கும்பகர்ணனை ஒருகை பார்க்கலாம் என்கிற எண்ணமா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் சங்கரன். உஷாவும் கூடவே வந்தாள்.

"வாருங்கள்! நான் தனி ஆள். உங்களைத் தகுந்த முறையிலே வரவேற்று உபசரிக்க முடியாமலிருப்பதற்குவருந்துகிறேன்" என்று உபசாரம் கூறினேன் நான்.

"ஓ! பரவாயில்லை. பல் தேய்த்துவிட்டு வாருங்கள். பலகாரம் ஆறிவிடப்போகிறது" என்றான் சங்கரன்.

நான்சென்று அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு திரும்பினேன். என்ன ஆச்சரியம்! அது என் அறைதானா என்று எனக்குச் சந்தேகம் வந்து விட்டது படுக்கைசுற்றி ஒருபுறம் வைக்கப் பட்டிருந்தது. அலங்கோலமாய்க்கிடந்த துணிமணிகள் ஒழுங்காய் மடித்து வைக்கப் பட்டிருந்தன. மேஜைமேல் சிதறிக்கிடந்த புஸ்தகங்களும் சில்லறைச் சாமான்களும் அறையின் இரு பக்கங்களிலுமிருந்த அலமாரிகளில் இராணுவதோரணையில் வரிசையாய் "அட்டென்ஷனில்" நின்று என்னை வரவேற்றன. "இந்தக் காப்பியைப் புகையோடும், கமகமவென்ற மணத்தோடும் அடுப்பிலிருந்து இறக்கியவுடன் கொடுத்தாலொழிய உஷாவிற்கு மனச் சமாதானமாவதில்லை. பிளாஸ்கில் போட்டால் ஒரு மாதிரிதான். என்ன செய்வது? வேறு வழியில்லாததால் பிளாஸ்கில் போட்டுக் கொண்டு வரவேண்டியிருந்தது. உஷாவிற்கு அழாக் குறை......"

"உட்காருங்கள், பலகாரம் ஆறியே போய் விட்டது. இந்தக் காப்பியோ..." என்றாள் உஷா.

"ஏதேது! என்வீட்டிலேயே என்னை அதிதியாய் அடித்துவிட்டீர்களே" என்றேன் நான்.

"அப்படியானா ஒரு அசம்பாவிதமான நிலை உங்களுக்கு நேரக்கூடாதென்று தான் மத்தியானச் சாப்பாட்டிற்கு எங்கள் வீட்டிற்கு வந்து விடுங்கள் என்று அழைக்கிறோம்" என்றாள் உஷா.

"பலே உஷா! சரியான போடுபோட்டாய்"

"இந்த அழகு என்று ஒன்றிருக்கிறதே, அதை இந்தப் பெண்தெய்வங்கள் தங்கள் கைகளிலே வைத்து மூடிக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் தொட்ட தொட்ட இடங்களெல்லாம் கவின் பெறுகின்றன எள்று சற்றுமுன் நினைத்தேன் இந்த அறையின் நிலையைக் கண்டு...." என்று நான் சொல்லி முடிப்பதற்குள் சங்கரன் இடைமறித்துக் கூறினான்.

"அடே! அது அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு என்ன பாடுபடுகிறது, படுத்தி வைக்கிறது, தெரியுமா? அதை உதட்டிலே ஏற்றுவிக்கிறார்கள். அங்கே ஒரு புன்சிரிப்பாய்த் திகழ்கிறது. அதை அஞ்சனத்தில் குழைத்துக் கண்ணிலே இடுகிறார்கள். அங்கிருந்து நம்மை ஒரு வெட்டு வெட்டிப் புத்தியைக் கிறுக்கவைக்கிறது. அவர்கள் பேச்சிலே புகுந்து நம்மை வாய் புதைக்கச் செய்கிறது. கன்னத்திலே குழைந்து நம்மைக் குழைய வைக்கிறது......"



"அண்ணுதான் ஒரு கவி என்பதை இப்படி விரயமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிருன்" என்ருள் உஷா.

இப்படியாக எங்களிடையே சிநேகம் வளர்ந்தது. நான் ஏழாவது சுவர்க்கத்தை எட்டிவிட்டதாக எண்ணினேன். சிரித்து மகிழ்ந்து உல்லாசமாயிருந்தும் உஷாவின் முகத்தில் அந்த சோகச் சாயையைக் கண்டேன். ஆனல் அதுவும் அவள் முகத்திற்கு ஒரு சோபையைத்தான் கொடுத்தது.

எனக்குக் காஷ்மீரத்திற்குச் சென்றுவர வேண்டும் என்று ஓர் ஆவல் எழுந்தது. அவர்களிடம் சொல்லிக் கொள்ளச் சென்றேன். ஒரு வேளை அவர்களும்—உஷாவும் கூட வரலாம் என்கிற நப்பாசை.

"என் தெய்வத்தினிடத்தே ஒரு வரம் கேட்க வந்திருக்கிறேன்" என்றேன் நான் உள்ளே நுழைந்துகொண்டே.

எங்கோ கவனித்துக் கொண்டிருந்த உஷா சட்டென்று என் பக்கம் திரும்பினுள். அவள் தலையில் சூட்டியிருந்த ஜெண்பக மலர்களில் ஒன்று உதிர்ந்து கீழே விழுந்தது.

"கடவுள் உத்தரவு கொடுத்து விட்டார்" என்றேன் நான் மகிழ்ச்சியோடு.

உஷா குனிந்து அந்தப் பூவை எடுத்தாள். என் உற்சாகத்திற்கு உலைவைத்த, என்னைப் பித்தனுக்கிய, என் மனக் கோட்டையெல்லாம் ஒரே நொடியில் தகர்த்தெறிந்த, என் வாழ்நாள் முழுவதுமே பாழ்படுத்திவிட்ட அந்தச் சம்பவம் அப்பொழுது நேர்ந்தது. உஷா குனிந்தபொழுது அவள் மார்புத்துணி கொஞ்சம் அகலவே, கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி தன் சிறையைவிட்டு வெளிப்பட்டுக் கீழே தொங்கிற்று. அதன் நுனியில், ஆ! என்னவென்று சொல்வேன்! பளபளவென்று அந்தத் திருமங்கிலியம் என் கண்ணை உறுத்திற்று!

நான் அசந்துவிட்டேன். உஷா அந்த மலரைக் கையில் எடுத்து, "தெய்வ உத்தரவின் அறிகுறியாகக் கருதிய இந்த மலரை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி என்னிடம் நீட்டினுள்.

காதலின் கனிவு, தெய்வீக ஒளி, பரிசுத்த அன்பின் குழைவு—இவைகளை நான் கண்டதில்லை. அவள் முன்னிலையிலே அவைகளை நான் உணர்ந்தேன். அவள் நின்ற நிலை, வதனத்தில் சுடர் விட்ட மந்தஹாஸம், கண்களில் தோன்றிய காதல் ஜொலிப்பு—இவைகள் இன்னும் என் மனக்கண் முன்னே தோன்றி என்னைப் பித்தனுக்குகின்றன.

"அடே பழி! என்னடா மூன்றும் பேஸ் திரி மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு விழிக்கிருய். ஆனந்தமும் அளவு கடந்து விட்டால் மனிதனை அசடாக்கிவிடுகிறது! பெற்றுக்கொள்ளடா பகவத் பிரசாதத்தை" என்ருன் சங்கரன் பரிகாசமாக. நாங்கள் மரியாதை முறைகள் கடந்து நெருங்கி அளவளாவும் தன்மையை ஏற்கனவே அடைந்து விட்டிருந்தோம்.

நான் சொப்பன உலகத்திலிருந்து மீண்டேன். அந்த ஜெண்பகப் பூவை இரு கைகளாலும் ஏற்றுக் கொண்டேன். ஆனல் என் இதயம் என்னவோ நூறு சுக்கலாய் உடைந்துவிட்டது.

"விருந்து எப்படா? எங்கே, பஞ்சாங்கத்தை எடு இப்படி, சொல்லுகிறேன். பொரியிடும் கைக்குப் பொன் இடவேண்டும் ஞாபகம் இருக்கட்டும்......" என்றெல்லாம் இந்த ரீதியில் அவன் கிண்டலாய் மொழிந்து கொண்டிருந்தான். இந்தப் பரிகாசப் பேச்சுக்கள் அசமயத்தில் கூறப்பட்டதால் எனக்கு நாராசம் போலிருந்தன. ஆயிரம் ஈட்டிகள் கொண்டு புண்ணிலே குத்தியதுபோலிருந்தன.

"என்னடா திகைப்பூண்டு மிதித்தவன் போலிருக்கிருய்! சுவர்க்கத்தை விட்டுக் கொஞ்சம் இந்தப்பூவுலகத்திற்கு வா, அப்பா! உஷைதான் ஏதோ நினைத்துக்கொண்டு உள்ளே நகைகிருள் என்ருல் உனக்கென்ன.... அடேடே! ஒரு முக்கியமான விஷயம் உனக்குச் சொல்ல வேண்டுமென்றிருந்தேனே. என் தங்கையினிடத்தில் ஏதோ ஒருவித துக்கம் குடிகொண்டிருப்பதை நீ ஊகித்திருப்பாய். அதன் காரணத்தைத்தான் உனக்குச் சொல்லப்போகிறேன்....."

இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் துடியாய்த் துடித்த காலம் ஒன்றிருந்தது. ஆனல் இப்பொழுது எனக்கு அதில் ருசியில்லை. உஷா இன்னொருவனுக்கு உரியவள் என்கிற எண்ணம் பந்துபோல் எழுந்து என் தொண்டையை அடைத்து மெதுவாக அங்கிருந்து அறுத்துக்கொண்டு போக யத்தனித்தேன். கடைசியில் எப்படியோ சாக்குப் போக்குச் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

"இந்த இன்ப வெள்ளத்தின் வேகத்தை உன்னுல் தாங்கமுடியவில்லை. சரி. கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொண்டு காலையில் வா...." என்றெல்லாம் சங்கரன் அவன் போக்கிலே பேசிக்கொண்டே போனுன். எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை—சங்கரன் அறிந்து கொண்டபடி அல்ல, வேறுவிதத்தில்—உஷா

உணர்ந்திருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அவளுடைய உணர்ச்சிப் பெருக்குகளை அவள் நயனங்களே வெளிப்படுத்தின.

4

உஷா விவாகமானவள். மற்றொருவனுக்கு உரியவள். இந் நினைவு எழுந்து என்னைச் சுமை போல் அழுத்திற்று. உஷா இல்லாவிட்டால் உலகமே அஸ்தமித்து விடுமா? எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒருவருடனும் சொல்லிக்கொள்ளாமல் அன்றே அவ்வூரை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

பல தினங்களுக்கப்பால் எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. விலாசமே தெரியாமல் பல அடித்தல் திருத்தல்களுடனும் பல தபாலாபீசு முத்திரைகளுடனும் அது காட்சி அளித்தது. அது சங்கரனிடமிருந்து வந்திருந்தது என்பதை அறிந்ததும் என் மனம் நிலைகொள்ளவில்லை. கடிதம் இதுதான்:—

பிரிய சுகுமார்,

சத்திரச் சந்திப்புப்போல நம் சினேகம் எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ முடிந்து விட்டது. உஷாவின் விஷயத்தை நான் உனக்கு முன் கூட்டியே தெரிவிக்காதது என்னுடைய பெருந்தவறு. ஆனால் எல்லாம் இவ்விதம் திடீரென்று முடிந்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

விஷயத்தைச் சுருக்கமாய் சொல்லிவிடுகிறேன். நாங்கள் தாய்தந்தையற்றவர்கள். எங்கள் தாயார் மரணப் படுக்கையிலிருக்கும்பொழுது உஷாவிற்கு ஒன்பது வயது. தான் கண் மூடுமுன் அவளை ஒரு கணவன் கையில் ஒப்புவிக்க முடியவில்லையே என்பது அவள் குறை. ஒரு வாரமாய் அவளுக்கு அடிக்கடி பிரக்ஞை தவறிக்கொண்டிருந்தது. உஷா எப்பொழுதுமே மிகவும் சூட்டிகையாயிருப்பாள். அம்மாவின் மனம் சாந்தியடையட்டும் என்று ஒருநாள் தன் கழுத்தில் திருமங்கலியத்தைக் கட்டிக்கொண்டு அம்மாவுக்குப் பிரக்ஞை வந்த சமயம், அவளை நமஸ்கரித்து "அம்மா! உன் மனோரதம் நிறைவேறிவிட்டது, பார் என் கழுத்தை!" என்று காட்டி நின்றாள். எங்கள் தாயார் அவளை மனமார வாழ்த்தி, அந்த ஆனந்தப் பெருக்குத் தாங்க முடியாமலே இவ்வுலகை நீத்துச் சாந்தி எய்தினாள்.

விளையாட்டாக ஆரம்பித்தது வினையாக முடிந்ததுபோல, தன் கழுத்திலிருந்த மங்கல நாணை எடுக்க மறுத்துவிட்டாள் உஷா. இந்தத் தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது? கழுத்திலே தாலியிருந்தும் கன்னிகைதான் என்றால் யார் நம்புவார்கள்?—அதுவும் இந்தக் காலத்தில். இருதலைக் கொள்ளி எறும்பு போல, ஒருவரும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத இந்த அபூர்வ நிலையில் தான் அகப்பட்டுக்கொள்ளும்படி நேர்ந்ததைப் பற்றித் தான் உஷா அடிக்கடி உள்ளூற நைந்துருகினாள்.

விதியென்று ஒன்றிருக்கிறது, அதன் செயலே அலாதிதான். விவாக முடிச்சுகள் நாம் போடுவதில்லை. அவைகள் முன்னாலேயே கடவுளால் போடப்பட்டுவிடுகின்றன. அவைகளை நம்மால் அழிக்கவும் முடியாது; மாற்றிப் போடவும் முடியாது.

அன்று நான் மட்டும் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நிலைமை இப்படி மாறியிராது. ஆனால் அந்த ஒரு வார்த்தை என் வாயை விட்டு வரமுடியாமல் செய்துவிட்டது விதி. உங்கள் நிலையை நான் வேறுவிதமாக அர்த்தம் செய்துகொண்டுவிட்டேன். வெறும் முட்டாள்! உங்களுக்குள் பிரிவு ஏற்பட்டுவிட்டதை உணராமல் மணநாள் குறிப்பிட என் மனம் விரைந்ததை விதியின் விளையாட்டென்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?

புரியாதிருந்த புதிர் புரிந்துவிட்டது. நல்ல வேளை. வேறு ஒன்றும் பிரமாத மோசம் போய்விடவில்லை. உஷாவை, மன வேற்றுமை இன்றி ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று நீ சொல்லலாம். ஆம். அப்படித்தான் நானும் முதலில் நினைத்தேன்.

ஆனால் உஷா சொல்வதில் அர்த்தமிருக்கிறது. சிந்திச் சிதறிய பாலைச் சேர்த்து எடுக்க முடியாது. ஒரு பொட்டென்றாலும் விஷம் விஷம்தான்.

ஏற்கனவே விவாகமாயிருந்த உஷாதான் நம்மிடம் இப்படியெல்லாம் நடந்துகொண்டு ஏமாற்றினாள் என்றுதானே நீ சிந்தித்திருக்கக்கூடும். எங்களிடம் நீ சொல்லிக் கொள்ளாமல் ஊரைவிட்டு உடனே போய்விட்டதே இதை ஊர்ஜிதப்படுத்துகிறதல்லவா? உன்னுடைய இந்த எண்ணமே அவளுக்கு ஒரு களங்கத்தைக் கற்பிப்பதாகிறது என்கிறாள் அவள். இதற்கென்ன பதில் சொல்ல முடியும்?

இதனால்தான் நீ எங்களைத் தேடவேண்டாம், தேடக் கூடாது என்று எங்கள் விலாசம் இதில் கொடுக்கப்படவில்லை.........ஆனால் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. என்றாவது ஒரு நாள்......சரி! விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

உன் நண்பன் சங்கரன்.

இக் கடிதத்தைப் படித்தபின் என் மனம் தவித்த தவிப்பை எப்படி நான் எடுத்துரைப்பேன். அலறினேன், உலறினேன், அழுது புரண்டேன். தேடாத இடமெல்லாம் தேடியலைந்தேன். அவள் கொடுத்த அந்த அன்பின் அடையாளத்தை—அந்த ஜெண்பகப் பூவை—எடுத்து என் கண்களில் ஒற்றிக் கொண்டேன். என்ன செய்தும் என்ன? என் வாழ்க்கையின் ஜீவன் உதயமாகி உடனே அஸ்தமித்துவிட்டது. என் வாழ்க்கையின் மணம் மாறுபட்டுவிட்டது. ஆனால் அந்தப் பூவின் மணம் மாறவில்லை. இதோ பாருங்கள் அவள் கொடுத்த ஜெண்பகப் பூ!"

என்று சொல்லிக்கொண்டே கிழவர் தம் உள் சட்டைப் பையிலிருந்து அதை எடுத்துக் காண்பித்தார்.

"தாத்தா! நீங்கள் கைக்காரப் பேர்வழி தான், சந்தேகமில்லை. இருந்தாலும் என்னிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டீர்கள். உங்கள் உஷாவின் பேரன்தான் நான்!" என்று சுவாமிநாதன் ஒரு போடு போட்டான்.

"பார்த்தாயா! அதனால்தான் நான் சொல்கிறேன் இதுதான் விதியின் விளையாட்டு என்பது!" தன் கண்களிலே கொஞ்சம் கண்ணீரை வரவழைத்துக்கொண்டு கிழவர் தொடர்ந்தார்; "போகட்டும், நாங்களிருவரும் தான் கொடுத்துவைக்கவில்லை. எங்கள் சந்ததிகளாவது ஒன்றுபடட்டும். என் பேத்திக்கு உஷா வென்றுதான் பெயர் வைத்திருக்கிறது. பார்த்தால் கிளிபோலிருப்பாள். உன்னை அழைத்துப் போகிறேன் வா!" என்றார் அவர்.

"மாப்பிள்ளை வேட்டையில் இது ஒரு புது முறையா?" என்று அவன் கேட்கவும் எல்லோரும் நகைத்தனர்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

பருவ மங்கை போன்ற வசந்த காலம். பால் நிலவொளி. தென்றற் காற்றில் கலந்துவரும் தெவிட்டாத மலர்களின் மணம். பூத்துக் குலுங்கும் புஷ்பங்கள். இவ்வளவும் ஏதோ மர்மத்தை மனதிற்கு எடுத்துக் காட்டுகின்றன. இதயக் கம்பிகளைத் தீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறாள் இயற்கை அன்னை. அந்த நாதத்தின் ஒலியிலே நான் மயங்கிக் கிடந்தேன். என்னை அறியாமல் யாரோ ஒருத்தி என் இதயத்தில் புகுந்துகொண்டாள். அதுமட்டுமா! அவள் நடனமாடுகிறாள்; புன்னகை புரிந்து புதிர் போடுகிறாள். என் மனம்தானா அவளுக்கு அரங்கேற்ற அகப்படவேண்டும். அவள் கட்டியிருக்கும் சலங்கைகளின் ஒலி என் இதயத்தை அதிர்ச்சியடையச் செய்கிறதே. அவள் ஒய்யார நடையில் ஒதுங்கிச் சென்று கண்சிமிட்டி அழைக்கிறாளே!

எல்லாம் இயற்கை அன்னையின் மாயை. அவள் என்னை ஆட்டிவைக்கிறாள். இல்லையேல் மாலைப் பொழுது மறைந்தது தெரியாமல் போனதேன்.

அதோ! அவன் வந்துவிட்டான். மாய் மாலக்காரன். நாணிக் கோணிச் செல்லும் நங்கையை இவ்விதம் கண் இமைக்காமல் பார்க்கிறானே! சந்திரன்! அம் மங்கையை 'விடேன் தொடேன்' என்று விரட்டுகிறானே இப்படி! அவள் மேனியைப் பொன்னிறமாக்கினான். அவனைக் கண்டு நாணிக் கோணி நகைத்துக்கொண்டு செல்கிறாளே அந்த நங்கை! அவளும் பொல்லாத குறும்புக்காரிபோல் இருக்கிறதே.

என் மனம் ஒரு விநாடியில் எத்தனையோ கேள்விகளைக் கேட்டது. "இதுதான் உலகம்" என்ற அர்த்தமற்ற பதில் எங்கிருந்தோ என் காதுகளில் ஒலித்தது. அதற்குமேல் உட்கார்ந்திருக்க எனக்குப் பிடிக்கவில்லை. மனம் சாந்தியடையவில்லை. கற்பனை உலகில் திரிய ஆரம்பித்தது. கால்கள் மட்டும் நடந்து கொண்டிருந்தன.

எதிரே தென்பட்டது அந்தக் காதற் கோயில். பால் நிலவொளியில் பளிங்குக் கோயில் பகட்டிக்கொண்டிருக்கிறது. ஓர் அரசனின் உண்மைக் காதல் அங்கே தாஜ் மஹால் என்ற பெயருடன் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது. ஷாஜஹானுக்கு எத்தனையோ நண்பர்கள் இருந்தார்கள். உயிர்த் தோழர்கள் இருந்தார்கள். உருவாக்கிய தாய் தந்தையர் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு சலவைக் கல் மண்டபம் எழுப்பப்படவில்லை. ஒரு பெண். அவளை அழகுத் தெய்வம் என்று தன் மனக் கோயிலில் வைத்து பூஜை செய்தான். அவள் இறந்ததும் அவளுக்காகக் கோயில் கட்டிவிட்டான். இயற்கையின் மாயா ஜாலம் அவனையும் மயக்கிவிட்டது.

அவன் அரசனாயிருந்தாலென்ன? ஆண்டியாயிருந்தாலென்ன? காதற் கோயிலைக் கண்டதும் மேற்கூறிய எண்ணங்கள் அலை மோதி நின்றன. அசையாது அப்படியே நின்றிருந்தேன். மனதில் எழுந்த புயல் அடங்கவில்லை; அதிகரித்தது. மறுபடியும் கால்கள் சென்ற திக்கில் நடந்தேன். யமுனா நதிக் கரையிலே வெகுதூரம் நடந்து சென்றேன். காதற்கோயில் கண்களுக்குத் தென்படவில்லை. எங்கும் அமைதி நிலவியிருந்தது, என் மனதைத் தவிர.

தூரத்திலிருந்து காற்றில் கலந்துவந்த இனிய நாதம் எனக்குப் புதிய உணர்ச்சியைத் தந்தது. என் மனமும் அந்த நாதத்திற்குச் சிறைப்பட்டுவிட்டது. கால்கள் மட்டும் நடந்துகொண்டிருந்தன. உள்ளத்

தைக் கொள்ளை கொள்ளும் அந்த நாதம் எங்கிருந்து வருகிறது என்றறிய மனம் துடித்தது. இயற்கையே அந்த நாதத்திற்கு அடங்கி அமைதியுடன் இருப்பதுபோல் தோன்றிற்று. இயற்கையின் ஒவ்வொரு உறுப்பும் அந்த நாதத்திற்குப் பாவம் பிடித்து நடனமாடுவதுபோல் இருந்தது. என் இதயக் கம்பிகளை அழகாகத் திண்டிகொண்டிருப்பது யார்? ஷாஜஹானுக்கு மும்தாஜ் வாய்த்தாளே! அவ்விதம் என் எண்ணம் சித்தி பெருதா? கொஞ்சம் நேரத்தில் எத்தனையோவித விபரீத எண்ணங்கள். உள்ளத் தடாகத்தினின்றும் எழும் அமுதத் தென்றல்போல் அந்த நாதம் என்னை இன்புறச் செய்தது. ஒரு பேதையின் உள்ளத் துடிப்பு அதில் எதிரொலித்தது.

எவ்வளவு தூரம் நடந்து சென்றேனே, எனக்கே தெரியாது. யமுனை நதியின் ஒரு கரையில் சிறு குடிசை தெரிந்தது. நதியின் கரையிலே ஒரு உருவம் உட்கார்ந்துகொண்டிருந்தது. என் மனம் துடித்தது. ஆர்வமும், அசட்டுத் தைரியமும் அடங்காமல் எழுந்தன. அருகே செல்லக் கால்கள் மறுத்தன. வீணையின் நாதம் இப்போது நன்ருகக் கேட்டது. ஒரு வீணை. அதைத் தேர்ச்சி பெற்ற ஒருத்தி திண்டினால் எவ்வளவு இன்பமான நாதம் உண்டாகிறது. சோக ரசமோ, இன்ப ரசமோ—அது வாசிப்பவளுடைய மனப்பான்மையைப் பொறுத்தது. கவலை தோய்ந்த ஒருத்தி மனதை வீணையின் மூலம் திறந்து காட்டுகிருள். என் இதயக் கம்பிகளையும் இன்னிசை எழத் திண்டும் ஒருத்தி வாய்க்கக்கூடாதா? மனமும் வீணை போன்ற ஒரு நரப்புக்கருவிதானே. சீ, எவ்வளவு விபரீத எண்ணங்கள்!

சற்று நிதானித்தேன். நிற்கவில்லை. 'என்ன நடந்தாலும் சரி'யென்று அசட்டுத் தைரியம் எழுந்தது. வீணை வாசித்துக்கொண்டிருந்த உருவத்தை அணுகினேன். வீணை வாசித்தது 'அவள்' இல்லை. 'அவன்'தான். என் மனப் பிராந்தியிலே தாறுமாருகக் கற்பனை செய்துவிட்டேன்.

அவன் கண்களில் நீர் நிறைந்து ஆடிக்கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் அவன் முகம் கலவரமடைந்தது.

"ஐயா! சீக்கிரம் போய்விடுங்கள். நான் ஒரு பாவி. என் முகத்தில் விழிக்க வேண்டாம்." என்ருன் அவன்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன் நான்.

"ரோகியை இந்தப் பால் நிலவொளியில் பார்க்கவேண்டாம். பளிங்குக் கோயில் அதோ இருக்கிறது." என்று அவன் சுட்டிக்காட்டினன்.

"என்ன? ரோகியா!" என்று என் வாய் முணுமுணுத்தது. மறு விநாடி அந்த வீணையின் நாதம் என் காதுகளில் அழகாக ஒலித்தது.

"உங்கள் வீணையின் நாதம்தான் என்னை இங்கே இழுத்துவந்தது" என்றேன்.

அவன் நகைத்தான். அந்த நகைப்பில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று என் மனம் இடித்துக் காண்பித்தது.

"என் இளமையிலே நடந்த நாடகத்தை இன்று நீங்கள் நினைப்பூட்டிவிட்டீர்கள்" என்ருன் அவன்.

"உங்கள் வீணை வாசிக்கும் திறனை நான் எவ்விதம் சொல்வது, மன அமைதியற்ற என்னை இங்கு அழைத்து வந்தது என்பதைத் தவிர?" என்றேன் மறுபடியும்.

"ஹம்சா அலியின் நாடகத்தை இன்று வரை யாரும் அறியமாட்டார்கள். இன்று உங்களுக்கு நான் சொல்லுகிறேன்." என்று அவன் என்னை உட்காரச் சைகை செய்தான்.

கதை ஆரம்பமாயிற்று.

2

அப்போது நான் ஒரு வாலிபன். என் தந்தை ஒரு வீணை வித்வான். ஹம்சா அலி என்பவர் எங்கள் முப்பாட்டன்களில் ஒருவர். ஷாஜஹானின் காலத்தில் வீணை வாசிப்பில் பிரசித்திபெற்று, பல பரிசுகள் பெற்றவர். எங்கள் பரம்பரை வழக்கமாக நானும் அக் கலையை ஆர்வத்துடன் கற்றேன். சிறுவயதிலேயே நான் நன்ருக வீணை வாசிப்பேன். என் மூதாதைபோல் நானும் பெயர் பெற்று விளங்க என் தந்தை விரும்பினர். ஆகவே என் பெயரும் ஹம்சாஅலி என்று வைக்கப்பட்டது.

என் கலைத் திறனைப் போற்றிப் பரிசளிக்க ஷாஜஹான் வரமாட்டாரா என்று ஏங்கினேன். அதற்குள் என் தந்தையும் இறந்துவிட்டார். உலக வாழ்வே எனக்குக் கசப்பாகக் காட்சியளித்தது.

ஒரு நாள்—ஆம்—அதுவே என் வாழ்க்கையின் சோதனைக் காலமாக அமைந்திருந்தது. அன்றும் இதே பூரண நிலவு. என் உள்ளக் கிளர்ச்சிகள் உருண்டு திரண்டு சந்திரனை ஜொலிக்கிறதென்று எண்ணினேன். இயற்கையின் அன்பணைப்பில் நான் என்னையே

LADIES
look
for...

BEAUTY in a watch...

மங்கையர் விரும்புவது
ஒரு வாட்சின் கண்கவர் வனப்பே!

ஆனால், வெளித் தோற்றத்திற்குக் கவர்ச்சிகரமாக யிருப்பதுடன், நேர்த்தியான வேலைத் திறன், நாணயமான உழைக்கும் சக்தி, முதலியனவும் ஒரு வாட்சில் அமைந்திருக்கவேண்டும். ஒவ்வொரு வெஸ்ட் எண்ட் வாட்சும் எழில் மிக்க அமைப்பு மட்டுமின்றி நெடு நாள் நாணயமாக உழைக்கும் இயல்புடன் கூடியது. விவேகமுள்ள வனிதையர் வெஸ்ட் எண்ட் வாட்சைத்தான் விரும்பி வாங்குகின்றனர். ஏனெனில், ஒழுங்காக மணி காட்டும் திறமையுடன், ஓர் பெருமை மிக்கதும் அழகான அணிகலனாகவும் திகழ்கிறது!

The MINIATURE "P-2" — 18-ct. Gold, Rs. 380.
The MINIATURE "L-2" — 18-ct Gold, Rs. 350.



வெஸ்ட் எண்ட்
வாட்ச் கோ.
பம்பாய் :: கல்கத்தா

The WEST END WATCH Co.
BOMBAY . CALCUTTA

மறந்து உட்கார்ந்திருந்தேன். இயற்கையின் இள நகை என் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. இளமையின் துடுக்கால் தூண்டப்பட்ட என் உள்ளம் வசந்தகாலப் பருவ மங்கையைப் பார்த்து, துள்ளிக் குதித்தது. நேரே குடிசைக்குச் சென்றேன். ஒரு மூலையில் என் வீணை தூசி படிந்து சிந்துவாரற்றுக் கிடந்தது. என் கைகள் துடித்தன. இந்த இடத்தில் அன்று நான் உட்கார்ந்தேன். என் கையில் வீணை இருந்தது. இதற்குமேல் உயர்ந்த ஒரு சபை ஏற்படப்போவதில்லை. என் வீணை வாசிப்பை அரங்கேற்ற இதுவே ஏற்ற இடம் என்று நிச்சயித்தேன். அமைதியுடன் நாதத்தை அனுபவிக்க இயற்கை தூண்டிக்கொண்டிருந்தது.

நாதம் எழுந்தது. எனக்குத் தோன்றிய பல ரசங்களை அப்படியே பிழிந்து கொட்டினேன். பல நாட்களாகத் தேங்கிக் கிடந்த அமுத வெள்ளம் வீணையில் பெருக்கெடுத்தது. இதை நான் அறியவில்லை. எதிரே நின்ற ஒரு பளிங்குப் பதுமை இதை எனக்கு அறிவுறுத்தினாள். அவள் பருவமங்கை. மகுடிக்கு மயங்கிய நாகம்போலத் தன்னையே மறந்து நின்றிருந்தாள். சந்திரனின் பொற்கிரணங்கள் அவள் மேனியைப் பொன்னிறமாக்கின. அழகிய மும்தாஜ் என் வீணையைக் கேட்டு உயிர்பெற்று வந்திருக்கிறாள் என்று நினைத்தேன். ஷாஜஹான் எனக்குப் பரிசாக அளித்த பருவமங்கை என்பதை அவள் தெரிவித்தாள்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்!" என்றாள் அவள். ஒன்றும் புரியாது விழித்துக்கொண்டிருந்தேன். அவள் பேசிய வார்த்தைகள் என்னை என்னவோ செய்தன. மயக்கம் தெளிந்தது. மலர் போன்ற அவள் இன்னும் நின்றுகொண்டிருந்தாள். அவள் கண்கள் அந்த வீணையின்மீது பதிந்து கிடந்தன. கள்ளத்தனமாக அவள் வீசிய கடைக்கண் பார்வை என் இதயக் கம்பிகளைத் தீண்டி மதுர கீதத்தை எழுப்பியது. என் வீணையை விட என் இதய வீணை இன்னிசையை எழுப்பிற்று. என்னை அறியாமல் என் கைகள் மறுபடியும் வீணையில் பதிந்தன. எதிரொலி போன்று இன்னிசை கானம் எழுந்தது. அவள் என் அருகில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தாள். சோபையற்று யமுனா நதியில்போய் மறைந்த என் வீணையின் நாதம் இப்போது அழகுடன் எதிரொலித்தது. நாங்கள் எவ்வளவு நேரம் அவ்விதம் இருந்தோமென்பதை அறிய எனக்குச் சிந்தனையில்லை. என் மனம் அவள் அங்க அமைப்பில் அபிநயம் செய்துகொண்டிருந்தது.

திடீரென இயற்கையில் மாறுதல். இடியும் மின்னலும் சேர்ந்து உலகத்தை அதிர்ச்சியடையச் செய்தன. அவள் கலங்கவில்லை. வானத்தில் மேகங்கள் நிறைந்தன. சந்திரனின் சல்லாபம் சமாப்தியடைந்தது. காற்றுப்பலமாக வீசிற்று. மழைத் துளிகள் மேலே விழ ஆரம்பித்தன. என்னை அறியாமலே நான் அவள் கையைப் பிடித்தேன். அவள் அசையாது நின்றிருந்தாள். அப்போது எழுந்த மின்னலின் வெட்டில் அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. அவள் நாணத்தால் புன்னகை செய்துகொண்டிருந்தாள். என்மனம் புளகாங்கிதம் அடைந்தது. இருவரும் குடிசையை அடைந்தோம்.

தெளிவடைந்த என் மனம் இப்போது அவளை நன்றாகக் கவனிக்கச் சந்தர்ப்பமளித்தது. வைர நகைகளுடன் இருக்கும் அப்பெண் இப்போது எனக்கு நாகம்போல் தோன்றினாள். பணக்காரப் பெண். அவள் பெற்றோர் தேட ஆரம்பித்தால்........மூதாதையரின் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுமே! இவ்விதம் சிந்தனை சிறகடிக்க ஆரம்பித்தது.

"ஒன்றும் கலங்கவேண்டாம்." என்றாள் அவள்.

"உன் பெற்றோர் தேடிவந்தால்...?" என்று ஆரம்பித்தேன்.

"நாங்கள் வெளியூரில் இருந்து தாஜ்மஹாலைப் பார்க்க வந்தவர்கள். உங்கள் வீணையின் நாதம் என்னை மயக்கி விட்டது. உங்கள காதல் கீதம் என் மன மங்கையை ஆட்டி வைத்து விட்டது" என்றாள்.

"பாவம்! அவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள்." என்றேன் பச்சாத்தாபத்துடன்.

"பரவாயில்லை" என்று அவள் அலட்சியமாகக் கூறினாள்.

"இருவருக்கும் ஆபத்து வந்துவிடுமே" என்று என்மனம் துடி துடித்தது.

"என் ஆசையை நிறைவேற்றவே மழை பெய்கிறது." என்றாள் அர்த்தம் புரியாத வகையில்.

"ஏன்" என்று கேட்டுவிட்டேன் அவசரத்தில்.

"இன்னும் புரிந்துகொள்ள வில்லையா! நான் பெற்றோரிடம் போகப் போவதில்லை. இங்கேயே தினமும் பாடி........." என்று வார்த்தைகளை விழுங்கினாள்.

"அப்படியானால் உன் பெற்றோருக்குஎன்ன பதில் சொல்வது?" என்றேன் கலக்கத்துடன்.

"ஒரு நரகத்திற்கு என்னை அர்ப்பணிக்க நினைக்கும் கடமை தவறாத பெற்றோர் எப்படியாயினும் நான் கவலைப்படப் போவதில்லை." என்று வெறுப்புடன் அவள் சொன்னாள்.

பொழுது புலர்ந்தது. நான் தாஜ்மஹாலை நோக்கி நடந்துகொண்டிருந்தேன். யமுனா நதிக்கரையில் கூட்டம்கூடி இருந்தது."ரூஹி" காணவில்லை. மழையில் எங்கே கால்தவறி விழுந்து விட்டாளோ" வென்று தாஜ் மஹாலைக் காணவந்த பெற்றோர் தவித்தனர். நானும் அவர்களுடன் கலந்துநின்றிருந்தேன்.

"ஐயையோ, தலையில் இடி விழுந்து விட்டதே" என்று ரூஹியின் தாய் அலறினாள். ரூஹியின் ஆடைகள் நதியில் மிதந்து வந்ததைக்கண்டு அந்த அம்மாள் அவ்விதம் அலறியதை நான் அறிந்தேன். என் மனம் கலங்கியது. ரூஹிக்குத் துரோகம் செய்ய நினைத்தேன். ரூஹியின் பெற்றோரிடம் விஷயத்தைச் சொல்லவே நான் அங்கே சென்றேன். என்னைக் கோழை என்று நினைத்த அவள் தற்கொலை செய்துகொண்டாளே என்றுஎன் மனம் தவியாய்த்தவித்தது. என் கண்கள் கலங்கின என் மனதில் செதுக்கப்பட்ட ரூஹியை நான் எப்படி மறக்கமுடியும். கால்கள் தடுமாறக் குடிசையை நோக்கி நடந்தேன். பரிதவித்த பெற்றோரின் ஒலியும் மங்கி மறைந்தது.

என் மனச்சாந்திக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. ரூஹி சென்ற இடத்திற்கே செல்ல வேண்டும். தன் மகளின் துக்கத்தைச் சகியாத யமுனாதேவி அவளை மடியில் தாங்கி ஆறுதல் அளித்து விட்டாள். இதை நினைக்கும்போது என்மனம் துடிதுடித்தது. "தூய காதலை உதறித் தள்ளினேன். கிடைத்தற்கரிய வைரத்தை இழந்து விட்டேன்" என்று நினைத்ததும் "ரூஹி"என்று அலறிவிட்டேன்.

"ஏன்" என்று பதில் வந்தது. எல்லாம் மனப்பிரமை. அவள் இறந்தும் என்குரலைப் புரிந்துகொள்கிறாள் என்று நினைத்த வண்ணம் கால்கள் தடுமாறக் குடிசையை அணுகினேன்.

"ஏன் இந்தத் தடுமாற்றம்?"

'அதே குரல். ரூஹி. அவள் அழகு, சாரீரம்' என்று ஏதேதோ உளறினேன். 'கொல்' என்ற சிரிப்பின் ஒலி என்னைத்திடுக்கிடச் செய்தது. அவள் ஆவிதான் இவ்விதம் ஆட்டி வைக்கிறது என்று மனமொடிந்துபோனேன். மனப்பிரமை என்று மண்டையில் அடித்துக் கொண்டேன். அவளைத்தான் அடையாத பாவியானேன். என் வீணை? அதைவிட்டுப் பிரிய முடியாது. அவள் விரும்பியது என்னையா? இல்லை. வீணையின் நாதத்தைத் தானே. என்னுடன் அவளுக்குப் பரிசாக வீணையையும் எடுத்துப்போக வேண்டும், என்று உணர்ச்சியுடன் ஏதேதோ சொன்னேன். பரபரப்புடன் குடிசைக்குள் நுழைந்து வீணையைக் கையில் எடுத்தேன்.

"ஒரு பெண்ணைக் கொன்றீர்கள். இப்போது பேதைப்பெண் வீணையைக் கொல்லச் சதியா?" என்று குரல் எழுந்தது. கலவரமடைந்த என் மனம் சிந்திக்கவில்லை.ரூஹி இல்லாமல் இனி ஒரு நொடிப்பொழுதும் உயிர் வாழ்வதில்லை என்று நிச்சயித்தேன். கால்கள் தடுமாற வீணையுடன் வாசலில் காலை வைத்தேன்.

"எங்கே போகிறீர்கள்?" என்ற அதே குரல்.

"அவள் சென்ற வழிக்கே" என்று சொல்லிக்கொண்டு நடந்தேன்.

"வேண்டாம். தற்கொலை செய்துகொள்ள நீங்கள் கோழையா?" என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

ரூஹி அங்கே நின்று நகைத்துக்கொண்டிருந்தாள்.

'ரூஹி ஏன் இந்த விளையாட்டு?" என்றேன் ஆச்சரியத்துடன்.

"நாடகம் எப்படி? நான் என் உடைகளை நதியில் எறிந்திராவிட்டால் உங்களை இழந்திருப்பேன்." என்று சிரித்தாள்.

நாட்கள் ஓடி மறைந்தன. உலகத்தைக் கண்டு நாங்கள் ஏளனம் செய்தோம். காதலர்கள் ஒன்றுபட்டு வாழச் சகியாத உலகத்தில் நாங்கள் லட்சியக்கோட்டையை அமைத்து அதை அலங்கரித்தோம். என் மனக் கோயிலில் நான் என் அழகுத் தெய்வத்தை வைத்துப் பூசைசெய்து வந்தேன்.

ஒரு நாள் என்னைப் பரிதவிக்கவிட்டு என் ரூஹி மாரடைப்பால் இறந்துவிட்டாள். அன்றுடன் என் உலகம் சமாப்தியடைந்து விட்டது. அவள் ஆவலை நிறைவேற்ற அன்று முதல் இன்று வரை நான் பூரண நிலவில் வீணை வாசிப்பேன். அதைக்கேட்டு அவள் ஆத்மா திருப்தியடைவதாகவே நான் நினைக்கிறேன்.

"என் இதயக் கம்பிகளில் நாதம் இருக்கும் வரை உன்னைப்பற்றியே சதா பாடிக்கொண்டிருப்பேன்." என்று அன்றொரு நாள் நான் அவளுக்கு உறுதியளித்தேன். அதை நிறைவேற்றி வருகிறேன். என் ரூஹியின் கவலையிலேயே நான் என்னைப் பாழ்படுத்திக் கொண்டேன். இனி அதிக நாட்கள் நான் உயிர்வாழ முடியாது. க்ஷயரோகம் என்னை வதைக்கிறது.

முன் இருந்த தெம்பு எனக்கு இப்போது இல்லை. என் பணியை நான் உயிருடன் இருக்கும் வரை சரிவரச் செய்யவேண்டுமே என்ற கவலைதான் அதிகமாக இருக்கிறது.

4

இதைச் சொன்னபோது ஹம்சா அலியின் கண்களில் இருந்து இருநீர்த்துளிகள் உதிர்ந்தன.

என்மனம் தூயகாதலைக் கேட்டுத் துடிதுடித்தது. அன்றுரூஹி அவனுக்குப் பரிசாக வாய்த்தாள். இன்று என் கண்களிலிருந்து உதிர்ந்த இருநீர்த்துளிகள் நிலவொளியில் பரிசளித்த முத்துக்கள்போல் மின்னின. ஷாஜஹான் எழுப்பி இருக்கும் காதல் கோயில் என்மனதில் எங்கோ இடிந்து நொறுங்கி விட்டது. ஏழை ஹம்சா அலி எழுப்பிய மதுரகானம் இன்றும் நாளையும் என் இதயக் கம்பிகளைத்தீண்டிக் கொண்டிருக்கிறது. ஆண்டியான ஹம்சாஅலி கட்டிய காதற்கோயில் என்மனதில் அழகுபெறஅலங்கரிக்கப் பட்டு விளங்குகிறது.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினுல் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினுல் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்திஞல் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணு பதினுன்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினுல் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimathi. BIBI CHARAN PIARI

Jullundar City. Sant Nagar (C. K.)

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

பொன் விழாவின் பொலிவு......

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்றாண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்துவரும் பண்டித டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

1949-50-ல்
என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1949-50க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி. எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri

Swami Satnarayan Jotish Ashram

(C. K.) HOSHIARPUR.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

மைல் கணக்கில் முன்னேற்றம்
புத்தப் புதிய
டன்லப்
ஆர்.எச்.எஸ்.
ட்ரக் &
பஸ் டயர்
DUNLOP
REINFORCED FOR
HEAVY SERVICE
TRADEMARK

DX 335 TAM

Regd. No, M 4405

The Cauveri Colour Press, Kumbakonam.